P. B. 372 விலை பியா 20 ஜேய் ஹிந்த்! ஆட்டோ நெ. 11329

25

ரஸிக ரஞ்சனி

RASIKA RANJANI (P.B.No.372) (TAMIL DAILY) ஏகீஸ்ஷ்ட்

கொடி 25 | சார்வரி௵ ஆனி மீ 29௳ செவ்வாய்க்கிழமை (12-7-60) முஹர்ரம் 17 | மலர் 148

உலகப் பிரசித்திபெற்ற கோல்ட்பிளேக்



20 கொண்ட பா. 1-க்கு கி. 1
10 " " " பி. 50

பட்ஜெட் பார்லிமெண்ட் ஆகஸ்ட் 15-ல் ஆரம்பமாகலாம்

இரங்கூன் ஜூலை 11—

பர்மா பட்ஜெட் பார்லிமெண்ட் சபைக் கூட்டத்தை 1960—ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி திங்கட்கிழமையன்று காலை 11மணிக்கு ஆரம்பித்து வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் சம்மந்தப்பட்ட ஆரசாங்க அதிகாரிகள் இப்பொழுது துரிதமாகச் செய்துவருகின்றனர் என்று தெகிறது.

காங்கோவில் 10,000 பாதிரிமார்கள்

பிரிட்டிஷ் குடும்பங்கள் வெளியேறிவிட்டன

ஆப்ரிக்க சோல்ஜர்கள் ஐரோப்பியர்களை இம்ஸிப்பதாக

புருஸல்ஸ் ஜூலை 11—

காங்கோ தேசத்தைச் சேர்ந்த கலோ என்னுமிடத்தில் ஆப்பிரிக்கா சோல்ஜர்கள் வெறிகொண்டவர்களைப் போல் அலைந்துதிரிவதினாலும், இவர்கள் ஐரோப்பியர்களை இம்ஸித்துக்கொண்டு வருவதினாலும் இதைத்தடுக்க பெல்ஜியம் தேசப்படைகள் கபாலோ தேசத்திற்கு வந்து சேர்ந்துவிட்டன.

கபாலோ என்பது டங்கானிக்கா எல்லையிலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள ஒரு பட்டணமாகும்.

கட்டாங்கா பிரதேசத்தில் வசித்து வரும் தங்களது பிரஜைகளுக்கு பாதுகாப்பளிக்கவேண்டுமென பிரிட்டிஷ், பிரஞ்ச், அமெரிக்கா, இத்தாலி தேசத் தூதர்கள் கட்டாங்கா சர்க்காரைக் கேட்டுக்கொண்டனர்.

காங்கோ தேசத்தில் 80,000 ஐரோப்பியப் பிரஜைகள் வசித்துவருவதால் இவர்களை எவ்விதத்திலும் காப்பாற்றியே தீரவேண்டுமென பெல்ஜியம் தேச மந்திரி சபையில் முடிவு செய்யப்பட்டது. உள்ளூர் சோல்ஜர்களே பல வித அட்டூழியங்களைப் புரிந்துவருவதாகக் கண்டு பிடிக்கப்பட்டதால் இதை உடனே தடுக்க பெல்ஜியம் படைகள் புறப்பட்டன நூற்றுக்கணக்கான பெல்ஜியம் சோல்ஜர்கள் பல்வேறு விமானங்களில் வந்தவண்ணமாய் இருக்கின்றனர் அநேக நூற்றுக்கணக்கான ஐரோப்பிய பிரஜைகள் தாங்கள் அணிந்துகொண்டிருந்த உடைகளுடன் வெளியேறி அங்குள்ள ஆற்றைக்கடக்க ஆரம்பித்தனர்.

இரண்டு அமெரிக்க ராக்ஷச விமானங்கள் திருப்போலிலிருந்து இன்றிரவு பிராஸாவில்லி பட்டணத்திற்கு வந்து அகதிகளை ஏற்றிச்சென்றன. ஒவ்வொரு ராக்ஷச விமானத்திலும் ஒரு ஹெலிகாப்டர் விமானம் இருந்துவருகிறது. பிரிட்டிஷ் ஸ்திரிகளும் குழந்தைகளுமாக சுமார் 60 பேர் பிராஸாவில்லி பட்டணத்திலிருந்து வெளியேறிவிட்டனர். ஆனால் அமெரிக்க பாதிரிமார்கள் சுமார் 100 பேர் காங்கோ தேசத்திலேயே தங்கி இருக்க முடிவு செய்துவிட்டனர். காங்கோ தேசத்தில் கத்தோலிக்-புரோட்டஸ்டன்ட் பாதிரிமார்கள் சுமார் 10000 பேர் வசித்துவருகின்றனர்.

வேலை நிறுத்தக்காரர்களிடம் சமாதானமில்லை

—பந்த்

(கடைசிச் செய்தி)

புதியடெல்லி ஜூலை 11—

வேலைநிறுத்தக்காரர்களிடம் எந்த சமாதானமும் கிடையாது என்றும் அவர்கள் கைது செய்யப்பட்டால் வேலையிலிருந்து சஸ்பண்ட் செய்யப்படுவார்கள் என்றும் நீதிமன்றம் குற்றப் பத்திரிகை வாசித்தால் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்றும இந்திய உள்நாட்டு மந்திரி பந்த் அறிவித்தார் சட்டத்தை அமல்நடத்தும்படி போலீசாருக்கு உத்திரவிடப்பட்டது என்றும் கூறினார்

தொழிலாளர் தலைவர் ஜோஷி கைது செய்யப்பட்டார்

மற்றும் 17 பேர் கைதர்யினர்

(கடைசி செய்தி)

பம்பாய் ஜூலை 11—

வேலைநிறுத்தக்கார தொழிலாளர் யூனியன் பெடரேஷன் தலைவர் ஜோஷி என்பவரை இன்று பம்பாய் நகரில் போலீசார் கைதுசெய்து டெல்லிக்கே கொண்டுவந்து சிறையிலடைத்தனர் மற்றும் 17 தொழிலாளர் தலைவர்கள் புதிய டெல்லியில் கைது செய்யப்பட்டனர்.

எல்லா விமானங்களும் தாராளமாக வரலாம் போகலாம்

இந்திய சர்க்கார் அவசரப் பிரகடனம்

புதியடெல்லி ஜூலை 11—

வெளிநாட்டு விமானங்கள் இந்தியா வருவதற்கும் போவதற்கும் முன்போன்று எல்லா அனுமதியும் உண்டு என்று இந்திய போக்குவரத்திலாக்கா அறிவித்துள்ளது. வேலைநிறுத்த காலங்களில் பீ ஓ ஏ. ஸி விமானங்களும் தாய்-அமெரிக்க பான் ஸர்வீஸ்களும் உள்நாட்டு விமானப் போக்குவரத்தும் கிரமமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

பர்மா இந்தியர்களின் நண்பர்



—5-ம் பக்கம் பார்க்க

சமாதானம் என்கையில் இல்லை அது பிரதமரிடம்தானிருக்கிறது

பிரதமர் சமிக்ஞை காட்டட்டும் வேலைநிறுத்தமே நடக்காது

பார்லிமெண்ட் மெம்பரிடம் ஆழ்வார் விளக்கம்

புதியடெல்லி ஜூலை 11—

கடைசி நேரத்திலும் இந்தியப் பிரதமருக்கும் வேலைநிறுத்தத் தலைவர் ஆழ்வாருக்கும் சமரஸத்தை உண்டாக்க இந்தியப் பார்லிமெண்ட் மெம்பர் காட்கில் முயன்றுகொண்டிருக்கிறார் அவர் இந்தியப் பிரதமரை சந்தித்துப் பேசிய பிறகு வேலைநிறுத்தத் தலைவர் ஆழ்வார் என்பவரை டெல்லி நகரில் பலமணி நேரம் சுற்றி கண்டுபிடித்தார்.

வேலைநிறுத்தம் சமாதானமடைய ஒத்துழையுங்கள் என்று பார்லிமெண்ட் மெம்பர் ஆழ்வாரிடம் கேட்டதற்கு சமாதானப்பேச்சு என்கையில் இல்லை வேலைநிறுத்தம் செய்வதற்குரிய காரணங்களை இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளேன். பிரதமர் கையிலேதான் இப்போது சமாதானமிருக்கிறது இலேசாக சமிக்ஞை காட்டுவாரானால் வேலை நிறுத்தம் நடக்காது அதற்கு இன்னும் 5 மணி நேரமிருக்கிறது என்று அழுத்தமாகத்தெரிவித்தார்.

சிற்சில விஷயங்களில் வேலை நிறுத்தக்காரர்களுக்கு விலக்களிக்கவேண்டும் என்று பார்லிமெண்ட் மெம்பர் கேட்டுக்கொண்டதற்கு தண்ணீர்-விளக்கு ஜலதாரை தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யாமலிருப்பதற்கு ஒப்புக்கொள்கிறேன் என்று வாக்குறுதியளித்தார். அதன் பிறகு மறுபடியும் சந்திப்பதற்கு வாக்குறுதி பெற்றுக்கொண்ட பார்லிமெண்ட் மெம்பர் காட்கில் மீண்டும் இந்தியப் பிரதமரை சந்திக்க சென்றுள்ளார்.

இந்திய முப்படைகளும் எதற்கும் தயாரிலிருக்குமாறு உஷார்படுத்தப்பட்டுள்ளது

புதியடெல்லி ஜூலை 11—

எந்தநேரத்திலும் எல்லா வேலைகளையும் ஏற்று நடத்துவதற்கு முப்படைகளைத் தயாரிலிருக்குமாறு உஷார்படுத்தப்பட்டுள்ளது வேலைநிறுத்தத்தில் எத்தனை லட்சம்பேர் வேலைநிறுத்தம் செய்வார்கள் எத்தனைலட்சம்பேர் வேலைநிறுத்தம் செய்யமாட்டார்கள் என்று நிச்சயமாகத்தெரியவராததால் முன்னெச்சரிக்கைக்காக முப்படைகளையும் உஷார்படுத்தப்பட்டுள்ளது என்று காரணம் கூறப்படுகிறது.

ஆயுதத் தொழிற்சாலை 19-ல் 14 தொழிற்சாலை ஸ்ட்ரைக்கில் கலந்துகொள்ளும்

பாதுகாப்பு இலாக்கா மின்சார தொழிற்சாலை 60-ல் 40 வேலை நிறுத்தம்

ஆயுதப் பிரிவு பி தொழிற்சாலை 32 ல் 22 ஸ்ட்ரைக்

கடற்படை தொழிற்சாலை 7-ல் 4 வேலைநிறுத்தம்

புதியடெல்லி ஜூலை 11—

பாதுகாப்பு இலாக்கா சம்பந்தப்பட்ட எல்லா தொழிற்சாலைகளிலும் வேலைபார்க்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவுசெய்துவிட்டதால் அவர்களின் வேலையை இராணுவம் எடுத்துநடத்தும் என்று இந்தியப் பாதுகாப்பு இலாக்கா அறிவித்துள்ளது. நேற்று வரை பாதுகாப்பு இலாக்காத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதுபற்றி மௌனமாக இருந்துவிட்டு இன்று திடீரென்று வேலை நிறுத்த நோட்டிஸ் கொடுத்ததால் பாதுகாப்பு இலாக்காவே மிகப்பெரிய ஆச்சரியமடைந்துவிட்டதாம்.

ஆயுதத்தளவாடத் தொழிற்சாலை 19-ல் 14 தொழிற்சாலை தொழிலாளர்களும் பாதுகாப்பு இலாக்காவின் மின்சார தொழிற்சாலை 60-ல் நாற்பது தொழிற்சாலை தொழிலாளர்களும், ஆயுதப் பிரிவைச் சேர்ந்த பி. தொழிற்சாலை 32-ல் 22 தொழிற்சாலை தொழிலாளர்களும் கடற்படை தொழிற்சாலையைச் சேர்ந்த ஏழில் நான்கு தொழிற்சாலை தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்திய விமானத்திடல்கள் எல்லாம் இராணுவ மயம்

புதியடெல்லி ஜூலை 11—

டெல்லி பாலம் விமானத்திடல்—கல்கத்தா டம்டம் விமானத்திடல்—சாந்தாகுருஸ் விமானத்திடல்—பேகம்பெட் மீனம்பாக்க விமானத்திடல்— ஆக்ரா—பாரத்பூர் விமானத்திடல்களில் எப்பொழுதும்போல் வேலை நடத்தும் பொறுப்பை இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் விடப்பட்டுள்ளது. அவர்கள் எல்லா விமான போக்குவரத்தையும் தங்கள் கண்ட்ரோலில் வைத்துக்கொள்வார்கள்.

"வேலை நிறுத்தம் வெற்றியானால் என் அரசாங்கம் வீழ்ச்சியடையும்"

நாச சக்திகளையும் சதி சக்திகளையும் ஒழிக்க அரசாங்கத்தை ஆதரியுங்கள்

நாடு செழிக்கவேண்டுமானால் வேலை நிறுத்தம் தோல்வியடையவேண்டும்

இந்திய மக்களுக்கு பிரதமர் நேருஜியின் வேண்டுகோள்

புதியடெல்லி ஜூலை 11—

"வேலை நிறுத்தத்தை வெற்றியாக விடாதீர்கள் நிச்சயமாக அது படுதோல்வியடைந்தால்தான் நாட்டுக்கு நலம் உண்டாகும். பொதுமக்களும் பார்லிமெண்ட் மெம்பர்களும் சர்க்காருக்கு ஆதரவாகயிருந்து சர்க்கார் கொள்கை சம்பூரணமாக வெற்றியடைய உங்கள் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் எங்களுக்குத்தாருங்கள்" என்று இந்திய பிரதமர் நேருஜி பார்லிமெண்டரிபோர்டு கூட்டத்தில் உருக்கமாக கேட்டுக்கொண்டார்.

நாடு நலமடையவேண்டும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சம்பூரண பலனளிக்கவேண்டும். இதற்கு இடையூறாக அரசாங்க சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தை நடத்தப்போகிறார்கள் அவர்கள் வெற்றியடைவார்களானால் நிச்சயமாக எனது அரசாங்கம் வீழ்ச்சியடைந்துவிடும். எனது சர்க்காரின் எண்ணங்கள் செயலில் நடவாது நினைவிலேயே அழிந்துவிடும்.

நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இதுபெரிய சோதனைகாலம் இதில் எனது அரசாங்கம் வெற்றியடைய பொதுமக்கள் பூரண ஆதரவையும் எனக்குத் தந்துவிடுவார்களானால் நாச சக்தியையும் அழிவு சக்தியையும் ஒழித்து இந்த நாட்டின் பொருளாதார வளத்தை—சுபிட்சத்தை உயர்த்திவிடுவேன். வேலைநிறுத்தக்காரர்களால் எந்த நெருக்கடியும் நாசசக்தியும் உண்டாகாதவாறு நாட்டின் சொத்துகளைக் காப்பாற்ற பொதுமக்கள் திரண்டு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

இரங்கூன்—புரோம் ரிஸர்வேஷன் கட்டணம் குறைக்கப்படும்

இரங்கூன் ஜூலை 11—

இரங்கூன் புரோம் மார்க்கத்தில் போய்வந்துகொண்டிருக்கும் 7, 8-ம் நெ. இரவு மெயில்வண்டிகளில் பிரயாணம்செய்யும் உயர்வகுப்பு பிரயாணிகளிடமிருந்து இதற்குமுன் படுத்துக்கொள்வதற்குரிய ஒவ்வொரு இடத்திற்கும் ரிஸர்வேஷன் கட்டணம் 12 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்ததெனினும் இப்பொழுது 6 ரூபாய்தான் வசூலிக்கப்பட்டு வருவதாக இன்று வெளியான பர்மா ரயில்வே அறிக்கையொன்று கூறுகிறது.

இந்திய துறைமுக வேலையை இராணுவம் ஒப்புக்கொண்டது

புதியடெல்லி ஜூலை 11—

கடற்படை முகாம்களிலும் இந்திய நாட்டின் எல்லாத் துறைமுகங்களிலும் சரிவர வேலைநிறுத்த பொறுப்பை இராணுவம் ஏற்றுள்ளது எல்லாத்துறைமுகங்களிலும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை முன்போன்று செவ்வனே நடைபெறக்கூடியவகையில் இராணுவத்திடம் பிரித்து ஒப்படைக்கப்பட்டது.

சென்னை நகரில் போலீஸ் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது

திருப்பரங்குன்றம்-மேலூர்-காரைக்குடி-சிவகங்கை-மானாமதுரையில் 144

ரயில்வரிசையில் ஒவ்வொரு பர்லாங்கும் பாதுகாக்கப்பட்டுள்ளது

சென்னை—மதுரை—திருவாங்கூர் விமானப்போக்குவரத்து நிற்காது

சென்னை ஜூலை 11—

மத்திய அரசாங்க காரியதரிசி ரங்கநாதன் இன்று சென்னைக்கு அவசரமாக வந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைச் சந்தித்து சென்னை ராஜ்ஜிய பாதுகாப்பு விஷயமாக நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். அதன் பிறகு சென்னை ராஜ்ஜிய முதல்வர் காமராஜ் நாடாருடன் கலந்து பேசினார். அதன் பிறகு சென்னை நகரில் பொதுமக்கள் வசதிக்காக பல இடங்களில் வைக்கப்பட்டிருந்த டெலிபோன் நிலையங்கள் எல்லாம் இழுத்து மூடப்பட்டன.

சென்னை ராஜ்ஜியமெங்கும் 350 இடங்களில் தபால் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கும். இவைகளில் வேலைபார்த்த 3600 பேர்கள்ஸ்ட்ரைக்கில் கலந்துகொள்வதால் 3400 பேர்களுக்கு கடந்த இரண்டு நாட்களாக சென்னை நகரில் பயிற்சி அளிக்கப்பட்டு பிரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டது சென்னை நகரின் பாதுகாப்புக்காக பலத்த முன் தீபு செய்யப்பட்டுள்ளது. ஏராளமான போலீஸ் வாகன்கள் நகரை ரோந்து சுற்றி வருகிறது. நகரில் ஜனநடமாட்டம்கூடயில்லாது வெறிச்சோடிக்கிடக்கின்றது. ஜனநடமாட்டமுள்ள மௌண்ட்ரோடு என்றுமில்லாதவாறு போக்குவரத்து நடமாட்டம் குறைந்துள்ளது. ஊர்சுற்றி தபாலாபிஸ்களும்—வீதிகளில் உள்ள தபால் பெட்டிகளிலும் தபால் போடுவது சம்பூரணமாக நிறுத்தப்பட்டுள்ளன.

வாகன்கள் தயார்

தபால்—பத்திரிகைக் கட்டுகளை அனுப்பிவைக்க ரயில்போக்குவரத்து சம்பூரணமாக நிறுத்தப்படுமானால் மோட்டார் வாகன மூலம் திறந்துவைக்கப்பட்டிருக்கும் 350 போஸ்டாபீஸ்களுக்கும் சப்ளைசெய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமானப்போக்குவரத்து

மதுரை—திருவனந்தபுரம—திருச்சி கோவை—சென்னை விமானப்போக்குவரத்தை நிறுத்தாது தொடர்ந்து நடத்தப்படுமென்று ஏர் இந்தியா ஸ்தாபனம் அறிவித்துள்ளது. திருப்பரங்குன்றம்—மேலூர்—காரைக்குடி—சிவகங்கை—மானாமதுரை—பரமக்குடி பகுதிகளிலும் இன்று தடைஉத்தரவு போடப்பட்டுள்ளது. 5 பேருக்குமேல் கூடுவது பொதுக்கூட்டம் நடத்துவது ஊர்வலம் நடத்துவது அனைத்தும் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது. மதுரை—திருச்சி சேலம்—கோவை நகர்களில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து தெற்கு நோக்கிப் போகும் ரயில்பாதைகளில் எல்லாம் ஒவ்வொரு பர்லாங் தூரத்திற்கும் உள்ளூர் பாதுகாப்புப்படை நிறுத்தப்பட்டுள்ளது. அவர்களுடன் ஒவ்வொரு கிராம முனிஸீப்களும் கிராம மக்களுடன் ஒத்துழைக்கின்றனர்.

மாந்தலே நகரில் பிரதம மந்திரி ஊநூ கோஷ்டியினர்

பொங்கிகளுக்காக கட்டப்பட்ட ஆஸ்பத்திரி திறப்புவிழாவில் கலந்துகொண்டனர்

இரங்கூன் ஜூலை 11—

மாந்தலே நகருக்குப் போய்ச்சேர்ந்துள்ள பர்மிய பிரதம மந்திரி கனம் ஊநூ அவர்கள் தமது கோஷ்டியினருடன் நேற்றுக்காலை 8 மணிக்கு மாந்தலே நகரமண்டபத்தில் நடத்திவைக்கப்பட்ட பரோபகார திட்டக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன் மேற்படி கூட்டத்தில் சொற்பொழிவாற்றியதாகவும் தெரிகிறது.

பின்னர் பிற்பகல் 2-30 மணிக்கு மீங்கூன் நகரிலுள்ள டிஸ்பென்ஸரியைத் திறந்துவைப்பதற்காக பிரதமர் ஊநூ அவர்கள் கப்பல்மூலம் தமது கோஷ்டியினருடன் மீங்கூன் நகருக்கு புறப்பட்டுச்சென்றார். அங்கு சுகாதார மந்திரி ஊபாசோ, பார்லிமெண்ட் காரியதரிசி ஊத்தான்செய்ன், சகாயின் ஜில்லா கமிஷனர் ஊத்தெட்டின், ஸ்பெஷல் போலீஸ் கமிஷனர் ஊமவ்ங்மவ்ங் டாக்டர் ஊசோலாக்கைன் ஆகியோரும், யூனியன் கட்சித்தலைவர்களும் பிரதமரை மிகவும் குதூகலத்துடன் வரவேற்றனர், பிரதமர் ஊநூ அவர்கள் அங்குள்ள டிஸ்பென்ஸரியை திறந்துவைத்துவிட்டு உடனே மாந்தலே நகருக்கு திரும்பி வந்து சேர்ந்துவிட்டார்.

இன்று காலை 8 மணிக்கு மாந்தலே ஆஸ்பத்திரி கம்பவுண்டிலுள்ள தர்மசாலையில் 25 பௌத்த குருமார்களுக்கு பிரதமர் நூ அவர்கள் அன்னதானமளித்தார். காலை 9 மணிக்கு மாந்தலேயிலுள்ள பீதூசாந்தா ரைஸ்மில் அதிபர் ஊபாடின், அவரது மனைவி டோஹூன் ஹூன்யீ ஆகியோர் பொங்கிகளுக்காக 2 லட்சம்ரூபாய் செலவில் கட்டியுள்ள ஆஸ்பத்திரி திறப்புவிழாவில் பிரதமர் ஊநூ, மந்திரி ஊபாசோ, போமீங்கவ்ங், பிரதமரின் ஆலோசகர் ஊஒன், பார்லிமெண்டரி காரியதரிசி ஊபாச்சீ, ஊத்தான்செய்ன், பர்மா சர்க்காரின் பிரதம காரியதரிசி ஊசுவேமியா. உள்நாட்டிலாகா காரியதரிசி ஊத்தான்ஏ, ஜில்லா கமிஷனர் ஊவின்மவ்ங், போலீஸ் கமிஷனர் ஊபாயீ, மெடிக்கல் சுப்ரின்டெண்ட் ஊசோமியா அவ்ங் ஆகியோரும் இதர ஏராளமான டாக்டர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி திறப்புவிழாமுடிவடைந்தவுடன் பிரதம மந்திரி கனம் ஊநூ அவர்கள் தமது கோஷ்டியினருடன் சகாயின் நகருக்கு புறப்பட்டுச்செஸ்றார்.

முஸ்லிம் பெரியார் வருகை

இரங்கூன் பிரேசர் வீதியும், மொகல் வீதியும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ள "பக்தாத் ரெஸ்டாரண்ட்" அதிபர் ஜனாப் கே. எஸ். முகமத்சுல்தான் அவர்கள் சமீபத்தில் முஸ்லிம்களின் புண்ணிய க்ஷேத்திரமான மக்கத்திற்கு சென்று ஹஜி என்ற பட்டத்துடன் இவண் திரும்பிவந்து சேர்ந்தார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

3,10,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யமாட்டார்கள்

புதியடெல்லி ஜூலை 11—

வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதில்லை என்று 3 லட்சத்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் மத்திய சர்க்காருக்கு வாக்குறுதியளித்துள்ளனர் கடந்த 24 மணி நேரத்தில் 72000 தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டிஸை வாபஸ் பெற்றுக்கொண்டனர்.

தெஹிரானில் தேர்தல் கலகம்

தெஹிரான் ஜூலை 11—

தெஹிரான் பட்டணத்தின் கிழக்கேயுள்ள கர்மேசால் என்னுமிடத்தில் தேர்தல் சம்பந்தமாக இரு கட்சிகளுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது.

சர்க்காரை ஆதரிக்கும் கட்சியினர் எதிர்க்கட்சியினரை தாக்கிப்பேசியதால் அடிதடி கலகத்தில் இறங்கினர். கலகம் மும்மரமாக நடைபெற்றதால் 34 பேர் காயமடைந்தனர்.

இக்கலகம் சம்பந்தமாக போலீஸார் 21 பேரை கைதுசெய்து கவலில் வைத்தார்கள்.

மறக்கக்கூடாத தியாகிகள் தினம்

ஜூலைமாதம் 19-ந்தேதி

காலஞ்சென்ற மாபெரும் தியாகி போஜோ அவ்ங்சான் முதலிய தேசத்தலைவர்களின் ஞாபகார்த்தமாக 1960-ம் வருடம் ஜூலைமாதம் 19ந்தேதியன்று இரங்கூன் சிட்டிஹாலில் பொதுக்கூட்டமொன்று நடத்திவைக்கப்படுமாகையால் அன்று தினம் காலை 9-30 மணிக்கு பொதுமக்கள் எல்லோரும் நகரமண்டபத்திற்கு விஜயம் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

7—1

இத்தாலி பார்லிமெண்டில் பெரும் கூச்சல்

கம்யூனிஸ்ட் கட்சியினர் கலாட்டா

ரோமாபுரி ஜூலை 11—

இன்றுதினம் நடைபெற்ற இத்தாலி பார்லிமெண்ட் சபைக் கூட்டத்தில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. நேற்றுதினம் ரோமாபுரியில் பாஸிஸ்ட் கொள்கையை எதிர்க்கும் கூட்டத்தாரின் ஆர்பாட்டம் நடைபெற்றபோது மூவர் கொலையுண்டதுடன் 137 பேர் காயமடைந்ததால் அது சம்பந்தமாக இன்றுதின பார்லிமெண்ட் சபைக் கூட்டத்தில் அமளி ஏற்பட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் இருவர் ஒரு டிமாக்ரட்டிவ் கட்சி அங்கத்தினரை தாக்கத் தொடங்கினர் இதனால் பெரிய அமளி ஏற்படவே பார்லிமெண்டைச்சேர்ந்த பாதுகாப்பு ஆபீஸர்கள் அதைத் தடுத்துவிட்டனர் இதிலிருந்து இரண்டு நிமிடங்களுக்குப் பின்னர் மற்றோர் கம்யூனிஸ்ட் மெம்பர் கூச்சலிடத் தொடங்கினார். அந்தசமயத்தில் மற்றோர் கம்யூனிஸ்ட் அங்கத்தினர் ஒருவர் எதிரில் உட்கார்ந்துகொண்டிருந்த மந்திரிமார்களை நோக்கி "அடகொலைகாரப் பாவிகளே" எனக் கூச்சலிட்டார். இதனால் பெரிய அமளி ஏற்பட்டது.

இதற்குள் இத்தாலிதேச உதவி ஜனாதிபதி அங்கிருந்தவர்களை நோக்கி "இது இத்தாலிதேச பார்லிமெண்ட் சபை நீங்களனைவரும் கௌரவமாக நடந்துகொள்ளவேண்டும்" எனக் கூறினார்.

தேசப் பிரச்னைகளுக்கு பரிகாரம் காண

மாந்தலேயில் பிரதமர் ஊநூ உபதேசம்

இரங்கூன் ஜூலை 11—

பர்மா பிரதமர் ஊநூ அவர்கள் கடந்த சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு மாந்தலே போய்ச்சேர்ந்தார் இவருடன் பல மந்திரிமார்களும் காரியதரிசிகளும் சென்றிருந்தனர், பிரதமர் ஊநூ அவர்கள் மாந்தலேயிலுள்ள சிவில் ராணுவ அதிகாரிகளிடம் கலந்து பேசினார். அவர் பேசும்போது இப்பொழுது பாதுகாப்பு கவுன்ஸில் ரத்துசெய்யப்பட்டுவிட்டதால் ஜில்லா அதிகாரிகளுடன் பரஸ்பரம் அடிக்கடி கலந்து பேசவேண்டுமென்ற முடிவைச் செயலாற்றவே தாம் இங்கு வந்துள்ளதாகவும் தமக்கும் ஜில்லா அதிகாரிகளுக்குமிடையே பரஸ்பரம் பிரச்னைகள்பற்றி விவாதிப்பதின் பயனாக பல பிரச்னைகளுக்கு முடிவு காண்பது சாத்தியமென்றும் இதே முறையில் தேசத்தின் முன்னிலையிலுள்ள எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்துக்கொள்வது சாத்தியமென்றும் கூறினார்.

இறுதியாக பேசுகையில் மாந்தலேக்கு போலீஸ் குவார்ட்டரும் போலீஸ் கோர்ட்டுகளும் கட்ட தாம் எண்ணங்கொண்டிருப்பதாகவும் பர்மா யூனியன் அரசாங்கத்தார் தேசம் முழுமையும் உள்ள மக்களின் ஷேமாபிவிருத்தியை லட்சியமாகக்கொண்டிருப்பதால் அரசாங்கத்தாரின் இந்த முயற்சிகளுக்கு மக்கள் விசுவாசத்துடன் ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதமருக்கும் அவர்தம் கோஷ்டியினருக்கும் மாந்தலே சிட்டிஹாலில் விருந்துவைபவம்நடத்திவைக்கப்பட்டது

விற்பனைக்கு கிடைக்கும்

2 பேடண்ட் சப்ரேட்டர் மிஷின்கள்-ஒன்றில் 45 கம்பாட் மெண்ட்டுகள் உண்டு.

1 R. A. அலிஸ்டர் டைனமோ 110 V. DC. 22 K. W. நம்பர் P. 2297 இதற்கு ரோபீ ஸ்டீம் இன்சின் உண்டு.

1 டைனமோ 100 V DC. 15 K. W. நம்பர் 11813 இதற்கு பெல்ஸ் அண்டு மொராக்கன் ஸ்டீம் இன்ஜின் உண்டு,

1 டுப்லக்ஸ் ஸ்டீம் பம்ப்.
1 டிரிங்லக்ஸ் பீட் பம்ப்
10 அங்குல பைப்புகள், 30 அடி நீளம்
10 அங்குலம் கப்லிங்ஸ்
8 அங்குல ,,

இது சம்பந்தமான விபரங்களை கீழே கண்டுள்ள விலாசத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்:-

மெஸர்ஸ் முருகப்பா அண்டு சன்ஸ் எஸ்டேட் கம்பேனி.

நம்பர் 115 மொகல் வீதி, இரங்கூன்.
போன் நம்பர் ஆட்டோ 15374

1—1

வேலைநிறுத்தம் செய்தால் வேலையிலிருந்து விலக்கப்படுவர்

வர்த்தகர்கள் தவறாக நடந்தால் கடுந்தண்டனைவழங்கப்படும்

இந்திய சர்க்கார் அவசரப் பிரகடனம்

புதியடெல்லி ஜூலை 11—

வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டாலும் அவர் மீது குற்றம் ருஜூவாக்கப்பட்டாலும் அவர்கள் பார்த்துவந்த உத்தியோகத்திலிருந்து சம்பூரணமாக விலக்கப்படுவார்கள் என்றும் அவர்களுக்கு அத்துடன் 200 ரூபாய் அபராதமும் 6 மாத சிறைதண்டனையும் வழங்கப்படுமென்றும் இந்திய சர்க்கார் பிரகடனப்படுத்தியுள்ளது.

தூண்டிவிடுவோர் ஆதரிப்போர்களும் கைது செய்யப்படுவர். என்றும் அவர்களுக்கு 1000 ரூபாய் அபராதமும் 1 வருட சிறைதண்டனையும் வழங்கப்படும் வியாபாரிகள் வேலை நிறுத்தத்தை பயன்படுத்திக்கொண்டு முறைக்கேடான முறையில் விற்பனைசெய்தால் அவருக்கும் இந்த தண்டனையும் அபராதமும் வழங்கப்படுமென்று அறிவித்துள்ளது.

அக்யாப் பிரயாணிகள் கடுமையாக சோதிக்கப்படுகின்றனர்

இரங்கூன் ஜூலை 11—

அக்யாப் நகரில் இப்பொழுது அநேக இடங்களில் காலரா வியாதி ஏற்பட்டிருப்பதால் இரங்கூனுக்கு அக்யாப் நகரிலிருந்து விமானம் மூலம் வந்து சேரும் எல்லா பிரயாணிகளையும் மிங்கலாடோன் விமான நிலையத்திலுள்ள சுகாதார இலாகா அதிகாரிகள் மிகவும் கடுமையாகச் சோதனை செய்துவருகின்றனர்.

சிங்கப்பூருக்கு பர்மா உருளைக்கிழங்கு வேண்டாம்

இரங்கூன் ஜூலை 11—

அரசாங்க விவசாய மார்க்கெட்டிங் போர்டு தலைவர் என்ற ரீதியில் வர்த்தக அபிவிருத்தி மந்திரியவர்கள் பிறப்பித்த உத்திரவில் இந்த போர்டார் இந்தியா, பாகிஸ்தான் இலங்கை ஆகிய தேசங்களுக்கு எப்போதும்போன்றே உருளைக்கிழங்கை ஏற்றுமதி செய்யவேண்டுமென்றும் உருளைக்கிழங்கிற்காக சிங்கப்பூர் மார்க்கெட்டை ஊர்ஜிதம் செய்துகொண்டு நஷ்டம் அடைவதில் பிரயோஜனமில்லையெனவும் தெரிவித்திருக்கிறார்.

பர்மாவின் உள்ளூர் தேவைபோக வருஷாவருஷம் 8000 டன் நிறையுள்ள உருளைக்கிழங்கு அதிகமாக இருந்துவருகிறது. கடந்த ஆண்டில் போர்டார் சிங்கப்பூருக்கு 200 டன் உருளைக்கிழங்கை அனுப்பிவைத்தனர். ஆனால் கப்பலில் இந்த உருளைக்கிழங்கில் 60 சதவிகிதம் அழுகிவிட்டது. இந்த போர்டு உதவித்தலைவரான லெப்டினண்ட் கர்னல் மியாத்தான் அவ்ங் அவர்கள் பர்மிய ஏற்றுமதி சரக்குகளுக்கு புதிய மார்க்கெட்டுகளைத் தேடுவதில் கவனமுடன் இருந்து வருகிறார். சிங்கப்பூருக்கு வருஷாவரும் 30'000 டன் முதல் 35,000 டன்வரை உருளைக்கிழங்கு இறக்குமதிசெய்ய வேண்டியுள்ளதென்பது அவருக்குத் தெரியும். சிங்கப்பூருக்கு நெதர்லாந்த், ஜப்பான், சீனா முதலிய தேசங்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்துவருகின்றன.

60,000 ரூபாய் சரக்குகளை கள்ளமார்க்கெட்டில் விற்றுவிட்டதாக

இரங்கூன் ஜூலை 11—

இரங்கூன் 11ம் நெ. கல்லி, 15ம் நெ. இல்லத்தில் வாசம்செய்யும் ஊபாட்டின் என்பவர் பியோபுவே நகரிலுள்ள தம்மாவாயமாவில் மானேஜராக செவை புரிந்துவந்தார். பின்னர் இவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்.

ஆனால் இவர் கடந்த சில தினங்களுக்குமுன் பியோபுவே தம்மாவாயமாவுக்கென்றுகூறி சுமார் 60,000 ரூபாய் பெறுமானமுள்ள சரக்குகளை சப்ளை இலாகாவிலிருந்து வாங்கி அவைகளை பியோபுவேக்கு அனுப்பிவைக்காமல் இரங்கூன் நகரிலேயே கள்ளமார்க்கெட்டில் விற்பனை செய்துவிட்டதாக இங்குள்ள தம்மாவாயமா இலாகா சுப்ரின்டெண்ட் ஊத்தெய்ன் என்பவர் போலீஸ் ஸ்டேஷனில் பிரியாது செய்திருந்தார். இது சம்பந்தமாக சவ்டடா போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

இன்று இரவு 11 மணியிலிருந்து வேலை நிறுத்தம் ஆரம்பமாகும்!

தொழிலாளர் பெடரேஷன் இரவு முழுதும் கூடி தீர்மானித்துவிட்டது

வேலை நிறுத்தத்தை ஊர்ஜிதம் செய்த தலைவர்கள் கைது

ஆழ்வார் செயல்திட்டத்தை நிறைவேற்ற மாயமாக மறைந்தார்

நாடெங்கும் மத்திய சர்க்காரை ஆதரித்து கோரிக்கைகள் குவிகின்றன

சென்னை—கோவை—திருச்சி—சேலம் நகர்களில் கடுமையான பாதுகாப்பு

கேரளம்—வங்காளம்—பஞ்சாப் ராஜ்ஜியங்களில் கடுமையான நிலை

புதியடெல்லி ஜூலை 11—

தேசத் தலைவர்களான இந்தியப் பிரதமர்-ராஜாஜி-ஆகியோர்களின் சிறந்த ஆலோசனைகளையும் புறக்கணித்துவிட்டு இன்று இரவு 11 மணியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்று மத்திய அரசாங்க தந்தி தபால் ரயில்வே இலாக்காத் தொழிலாளர்களின் செயற்குழு தீர்மானித்துவிட்டது. இதன்காரணமாக இன்று இரவு 11 மணியிலிருந்து வேலை நிறுத்தம் நிச்சயம் நடக்கும். அதன் இறுதி முடிவு தேச நிர்வாகத்தை மிக மிக பாதிக்கச்செய்யுமென்று தேசத் தலைவர் நேருஜி கோரிக்கை விடுத்ததின் காரணமாக நாடெங்கும் ஏராளமானமக்கள்-தொண்டர்படையினர்-ரிட்டையர்டான (ஓய்வுபெற்ற) உத்தியோகஸ்தினர் பெண்கள் காங்கிரஸ், மாணவர் பெடரேஷன் ஆகிய தேச விஸ்வாஸிகள் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட வேலைகளைச்செய்வதாக மத்திய சர்க்காருக்கு வாக்குறுதியளித்துள்ளனர். அதன் முழுவிபரமும் வருமாறு:-

வேலை நிறுத்த முடிவு

மத்திய அரசாங்க சிப்பந்திகளின் பெடரேஷன் செயற்குழு இன்று இரவு முழுதும் கூடி வேலைநிறுத்தம் செய்வது பற்றி ஆலோசித்து "ஏகமனதாக இந்தியா முழுவதும் வேலைநிறுத்தம் செய்வது என்று தீர்மானித்தது. ஆனால் "அஸ்ஸாம் ராஜ்ஜியத்தில் மொழிப் போராட்டத்தை மக்கள் துவக்கியுள்ளதால் அந்த ராஜ்ஜியத்துக்கு மேலும் சிரமம் அளிக்கக்கூடாது" என்ற ஒரே நன்னோக்குடன் அஸ்ஸாம்—மணிப்பூர்—திரிப்புரா பிரதேசங்களில் மத்திய சர்க்கார் சிப்பந்திகள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது என்றும் மற்ற எல்லா ராஜ்ஜியங்களிலுமுள்ள மத்திய சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்யவேண்டுமென்றும் ஏகமனதாக முடிவுசெய்தனர். இந்த முடிவை செயல்படுத்தும் பொறுப்பை செயற்குழு உறுப்பினர் ஆழ்வாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இரவு 1 மணிக்கு செய்யப்பட்ட முடிவை இந்தியாவெங்கும் அறிவிப்பதற்காக காலை 7 மணிவரை பஹீரங்கப்படுத்தாது எல்லாப்பகுதி தொழிலாளர் பெடரேஷனுக்கும் அறிவித்தபிறகு காலை 7 மணிக்கு தேசமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வேலை நிறுத்தம் செய்யப்போவது நிச்சயம் என்று பஹீரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

வேலை நிறுத்த ஆக்கப்பணிகளை செயற்குழு உத்திரவுப்படி நிறைவேற்றுவதற்காக ஆழ்வார் பொறுப்பேற்றுக்கொண்டு அதுவரை போலீஸார்களின் கையில் அகப்படாதிருப்பதற்காக காரியாலயத்தைவிட்டு வெளியேறினார். சில நிமிட நேரத்தில் போலீஸார் இந்திய ஜனாதிபதியின் அத்தியாவசிய அவசர காலச் சட்டத்தை அமல் நடத்தினர். இதன்காரணமாக வேலை நிறுத்த உத்தரவுக்கு காரணமாகயிருந்த 5 தலைவர்களை கைதுசெய்து சிறைக்கு அனுப்பினர். அவர்களில் டெலக்கம் இன்ஜினியரிங் தொழிலாளர் யூனியன் தலைவர்—ரெயில்வே யூனியன் தொழிலாளர் தலைமை நிலையத்தின் பிரதான செயலாளர்—ரெயில்வே யூனியன் கிளை ஸ்தாபனத்தின் செயலாளர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

டெல்லி நகர் பாதுகாப்பு

டெல்லி நகர் பாதுகாப்புக்காக 4000 ஹோம் கார்டுகளும் ஏராளமான போலீஸாரும் தந்தி—டெலிப்போன் மார்க்கங்களுக்கு பாதுகாப்பு அளிப்பர். மற்றும் 7000 போலீஸார் நகரின் பாதுகாப்பு-காரியாலயங்களில் வேலை செய்யும் வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்படாதோர் ஆகியோர்களைப் பாதுகாக்கும் பொறுப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ராஷ்ட்ரபதி பயணம் ஒத்திவைப்பு

இந்திய ஜனாதிபதி ஹைதராபாத் நகருக்குச் செல்லும் விஜயத்தையும் ஒத்திவைத்துவிட்டார்—மத்திய சர்க்கார் மந்திரிகளும் தங்கள் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளையும் ஒத்திவைத்துவிட்டு நாட்டின் அன்றாட அலுவலைக் கவனித்து அதற்குத்தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருவர்.

வேலை நிறுத்தத்திற்கு எதிர்ப்பு

அஜ்மீர் ஸி. டி. டபிள்யூ. டி. கல்கத்தா டெலக்கம்ஸ்—எலக்ட்ரிக் சிட்டி ஆர். எம். எஸ். ஸ்தாபனத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் 70 சதம் ராஜஸ்தானைச் சேர்ந்த போஸ்டல் கிளார்க் யூனியன்—போஸ்டல் எம்லாயி யூனியன்—கிழக்கத்திய ரயில்வே யூனியனைச்சேர்ந்த தொழிலாளர்களில் பலபிரிவினர்-இந்திய தபால் யூனியனைச்சேர்ந்த மூன்றாவது-நான்காவது பிரிவினர்—அஸ்ஸாம் ராஜ்ஜியத்தைச் சேர்ந்த எல்லாப் பிரிவு தொழிலாளர்களும் வேலை நிறுத்த முடிவை எதிர்த்து அறிக்கை விடுத்துள்ளனர்.

ஒத்துழைப்புக் குவிகிறது

இந்திய ஜனாதிபதி—பிரதமர் நேருஜி வேண்டுகோளுக்கு ஆதரவாக நாடெங்கிலுமிருந்து ஒத்துழைப்புத் தருவதாகக் கூறி அநேக ஆதரவுத் தந்திகள் வந்து குவிகின்றன. உத்தரப் பிரதேசம்—மத்திய பிரதேசம் ராஜஸ்தான்—பம்பாய்—குஜராத் மகாராஷ்டிரா—ஆந்திரா—ஒரிஸ்ஸா—பீஹார்—வங்காளம்—சென்னை—கேரளம்—மைசூர்—முதலிய ராஜ்ஜியங்களின் மக்கள் அந்தந்த ராஜ்ஜிய சர்க்காரிடம் வேலைநிறுத்தக்காலங்களில் எந்த வேலையிலும் மத்திய சர்க்காருக்கு ஆதரவாகத் தங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அறிவித்தனர்.

இந்திய சர்க்கார் எச்சரிக்கை

இருப்புப்பாதைகள்—பாலங்கள்—தந்தி டெலிப்போன் ஓயர் மார்க்கங்கள் முதலியவைகளைச் சரியான முறையில் பாதுகாக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. மத்திய சர்க்காரின் எல்லாச் சொத்துக்களையும் ராஜ்ஜிய சர்க்கார் சரியான முறையில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடு

நாட்டில் உள்ள மெடிக்கல் ஆபிஸர்கள் தங்கள் தங்கள் அன்றாடவேலையைச் சரிவரக் கவனித்துவரவேண்டும். அதேபோன்று டெக்னிகல் (தொழில் நுட்ப) டிபார்மெண்டு தொழிலாளர்கள் உணவுப்பொருட்களை அங்கும் இங்குமாக மாற்றும் தொழிலாளர்கள்—தண்ணீர் ஸப்ளை—ஜலதாரைத் தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் அன்றாட வேலையைச் சரிவரச் செய்துவர வேண்டுமென்று கடுமையாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கர்னூல்—ஹைதராபாத்

கர்னூல் தலைமைத் தபால் நிலையத்தில் 1100 பேர் வேலை பார்ப்பதாக மக்கள் தங்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என்று கர்னூல் போஸ்ட் மாஸ்டர் அறிவித்துள்ளார். ஹைதராபாத் நகரை அடுத்துள்ள ரயில்வேப் பாதைகளையும் தந்தி—டெலிப்போன் மார்க்கங்களையும் பாதுகாப்பதற்கு மக்களிலிருந்து உள்ளூர் பாதுகாப்புப்படை நியமிக்கப்பட்டுள்ளது.

நாக்பூர்

நாக்பூர் விமான நிலையம் தென்னிந்தியா, மத்திய இந்தியா விமான நிலையங்களுக்குத் தலைமை நிலையமாகயிருப்பதால் அங்கு வேலைசெய்யும் சிப்பந்திகளை பாதுகாக்க சர்க்கார் பேதிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது எல்லா விமானப் போக்குவரத்தும் செம்மையாக நடப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

பீஹார்

பீஹார் ராஜ்ஜியமெங்கும் வேலை நிறுத்தத்தின்போது மத்திய சர்க்கார் சொத்துக்களைச் சிறந்த முறையில் பாதுகாக்க எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துவிட்டன. ரயில் போக்குவரத்து மார்க்கங்களுக்கும் தந்தி டெலிப்போன் ஓயர்லஸ் போக்குவரத்து மார்க்கங்களுக்கும் மக்கள் பாதுகாப்பளிப்பதாகப் பொறுப்பேற்றுள்ளனர். ஒவ்வொரு கிராம மக்களும் போக்குவரத்து மார்க்கங்களில் ஒவ்வொரு பர்லாங் தூரத்திற்கும் காவல் கோஷ்டி நிறுத்தப்பட்டுள்ளன.

பம்பாய்

பம்பாய் வித்தியாபவனத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் தந்தி தபால் காரியாலயங்களில் வேலை பார்க்க முன்வந்துள்ளனர். வர்த்தகச் சேம்பர்களும்கூட தபால் நிலையத்தின் முக்கியமான அலுவலைக் கவனிப்பதற்கு முன்வந்தனர். பம்பாய் தபால் தந்தி வேலைகளில் எந்தவிதக் கஷ்டமும் ஏற்படாது என்று தந்தி தபால் டைரக்டர் அறிவித்துள்ளார்.

ஆந்திரா

ஆந்திரா ராஜ்ஜிய முழுவதும் யுவர் காங்கிரஸைச்சேர்ந்த மெம்பர்கள் மத்திய சர்க்கார் வேலையைச் செய்வதற்கு முன்வந்துள்ளனர். ஆந்திரா கவர்னர் பீம் சேன சர்க்கார் வேண்டுகோள் விடுத்த 24 மணி நேரத்தில் யுவர் காங்கிரஸைச்சேர்ந்த பதினாயிரக்கணக்கான அங்கத்தினர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர். பாலங்கள்-ரயில் போக்குவரத்து மார்க்கங்கள் தந்தி—டெலிப்போன் போக்குவரத்து மார்க்கங்கள் அனைத்தும் பாதுகாக்கும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆந்திராவிலுள்ள முனிஸிப்பல்—கார்ப்பொரேஷன் சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதில்லை என்று முடிவுக்கு வந்துவிட்டனர்.

சென்னை

சென்னை-கோவை-சேலம்-திருச்சி-வேலூர்-விழுப்புறம்—மதுரை—திருநெல்வேலி-இராமநாதபுரம் முதலிய நகர்களில் எல்லாம் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. தந்தி தபால் ரயில்வே நிலையங்களின் முன்பு ஆர்பாட்டக்கூட்டம் ஊர்வலம் நடத்தக்கூடாது என்று அந்த தடைச்சட்டம்கூறுகிறது. சென்னை நகரில் விசேஷப்போலிஸ் சுற்றிச்சுற்றிவருகிறது. சென்னை நகரின் எந்தப்பகுதி எல்லையிலும் பொதுக்கூட்டக்களோ ஆர்ப்பாட்ட ஊர்வலங்களோ நடத்தக்கூடாது என்று போலிஸ் கமிஷணர் மகாதேவன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம்லீக்

இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தலைவர் காயிதேமில்லத் முஹம்மது இஸ்மாயில் ஸாஹிப் "வேலைநிறுத்தம் செய்வதால் நாட்டுக்குபேராபத்து சூழும்" என்றும் ஆகவே இந்திய ஜனாதிபதி நேருஜி ஆகியோர்கள் வேண்டுகோளுக்கு இந்திய முஸ்லிம் தொழிலாளர்கள் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும் அறிவித்ததற்குக்கிணங்க சென்னை ராஜ்ஜியத்தில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் மத்திய சர்க்கார்வேலையை இலவசமாகச்செய்வதற்கு முன்வந்துள்ளனர். சுதந்திரகட்சி-காங்கிரஸ் காங்கிரஸைச் சேர்ந்த ஸ்தாபனங்கள் மாணவர்தேசிய காங்கிஸ் யூனியன் மாதர்கள் தேசிய ஸ்தாபனம் யூத்காங்கிரஸ் மெம்பர்கள் பல்லாயிரக்கணக்கில் சர்ககாருக்கு ஆதரவாக ஒத்துழைப்பதாக அறிவித்துள்ளனர்.

சென்னை பெரம்பூர் ரயில்வே பெட்டிதொழிற்சாலைகளில் பெரும் பகுதிப்பேர் வேலைக்கு ஆஜராவதாக வாக்குறுதியளித்துள்ளனர்—திருச்சி பொன்மலை ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிப்பர் என்று அப்பகுதியில் பலமான பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன் அந்தபகுதி முழுவதிலும் 144 தடைச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கோவைமாவட்டம்

கோவைமாட்டத்தில் வேலைநிறுத்தத்தால் பெரியசங்கடம் விளையுமென்று நம்பப்படுகிறது. ஆகவே அப்பகுதியில் மேட்டூர்—உடுமலைப் பேட்டைப்பகுதிகளில் வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளாத தொழிலாளர்களுக்கு அத்யாவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோவை—மதுரை திருச்சி—சென்னை நகர்களுக்கு போலிஸ் மூலம் ஓயர்லஸ் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இரகசிய ஏற்பாடுகள்

சென்னை ராஜ்ஜியத்திலுள்ள எல்லாத்தந்திதபால் நிலையங்களிலும் வேலை சரிவரநடத்துவதற்கு முடியாதபோனாலும் முக்கியமான நிலையங்களிலெல்லாம் அன்றாடவேலை சரிவர நடப்பதற்கு சர்க்கார் தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளனர் வேலைநடக்கும இந்த இடங்களிலெல்லாம் இரகசியப்போலிஸார் நிலைமையைக்கவனித்துவருவர்.

கேரளம்

கேரளத்தில் வேலைநிறுத்தத்தால் பல சங்கடங்கள் தலை தூக்கலாம் என்று நம்பப்படுகிறது. லட்சக்கணக்கான கம்யூனிஸ்ட்கள் கேரள ராஜ்ஜியம் முழுவதும் வசிப்பதால் மிகப்பெரிய அபாயங்களெல்லாம் உண்டாகலாமென்று எர்ணாக்குளம்-திருவனந்தபுரம்-கோழிக்கூடு கொச்சி-ஆலப்புழை முதலிய நகர்களில் ஆயிரக்கணக்கில் ஸ்பெஷல் போலீஸ் ரெஸர்வ்போலிஸ்-மலபார் விசேஷப்போலிஸ் படையினர் காவலில் நிற்கின்றனர். பாலங்கள்-ரயில்வேபாதைகள் தபால் தந்தி நிலையங்களையும் ஓயர்மார்க்கங்களை பாதுகாக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மைசூர்

மைசூர் ராஜ்ஜியத்தில் நிம்மதி நிலவுகிறது. பிராந்திய தட்சன ரயில்வே தொழிலும் ஹிந்துஸ்தான் விமான இயந்திர தொழிலும் கிரமமாக எப்போதும் போல் நடைபெறுமென்று நம்பப்படுகிறது. தந்தி தபால் நிலையங்களைப் பாதுகாக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஏராளமான மக்கள் தந்தி தபால் வேலையைக் கவனிப்பதற்கு முன்வந்துள்ளனர்.

பெங்கால்-பஞ்சாப்

பெங்கால் ராஜ்ஜியத்திலும் பஞ்சாப் ராஜ்ஜியத்திலும் இந்தியக் கம்யூனிஸ்ட்களும் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சியினரும் வேலைநிறுத்தக்காரர்களுக்கு ஆதரவாக நிற்பதால் நிலைமை முற்றிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டு கடுமையான பந்தோபஸ்த்தளிக்கப்பட்டுள்ளது-

ஜல்பூரியில் கலாட்டா

ஜல்பூரி நகரில் வேலைநிறுத்தக்காரர்கள் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். இதன் காரணமாக போலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் நடந்த மோதலில் ஒருவர் மாண்டு 3 பேர் படுகாய மடைந்துள்ளனர். நகரில் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது கல்கத்தா தாமஸன் வீதியில் மத்திய சர்க்கார் அலுவலகங்களை எல்லாம் துருப்புகளும் போலிஸாரும் கடுமையாகக் கண்காணிக்கின்றனர்.

வேலைநிறுத்தக்காரர்கள் வலிமை

இந்தியா முழுவதிலும் தந்தி தபால் சிப்பந்திகளில் 21 லட்சம் தொழிலாளரும் ரயில்வேத் தொழிலாளர்கள் 10 லட்சம் பேரும் வேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்ததுபற்றியும் வேலைநிறுத்தத்திற்கு எதிர்ப்பாக நிற்கும் தொழிலாளர் பற்றியும் தொழிலாளர் பெடரேஷன் செயற்குழு மெம்பர் ஆழ்வார் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அது வருமாறு:—

இந்தியா முழுவதிலும் $3\frac{1}{2}$ லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு எதிர்ப்பாக அறிக்கை விடுத்துள்ளனர். பெரும்பகுதி தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர் பெடரேஷன் செயற்குழு கூட்டம் வேலைநிறுத்தம் செய்வதை ஆதரித்து ஏகமனதாக எதிர்ப்பின்றி முடிவுசெய்துவிட்டது. வேலை நிறுத்தம செய்யும் தொழிலாளர்கள் பலாத்காரத்திலிறங்காதும் பொது மக்களின் நலனுக்குக குந்தகம் விளைவிக்காதும் வேலைநிறுத்தம் செய்து பிரச்னையில் வெற்றியைக் காணவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

வாசவதத்தா

ரயில்வே தேசிய தொழிலாளர் பெடரேஷனைச்சேர்ந்த தலைவர் வாசவதத்தா வேலைநிறுத்தத்தை எதிர்த்து அறிக்கை விட்டுள்ளார். "வேலைநிறுத்தக்காரர்களுக்கு நல்ல புத்தி ஏற்படட்டும்" என்று பிரார்த்தித்துள்ளார். இன்றைய போராபத்து நிலையில் இந்தியாவின் ஒற்றுமையை ஆக்ரமிப்பாளர்களுக்குக் காட்டவேண்டியதிருக்க பிளவு மனப்பான்மையைக் கிளப்பக்கூடாது என்று அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

சர்க்கார் அறிவிப்பு

சம்பளக் கமிஷன் சிபாரிஷை மத்திய சர்க்கார் அப்படியே அமல் நடத்துமென்றும் பிரதமர் நேருஜியின் ஆலோசனையை அப்படியே ஏற்றுக்கொண்டு நடத்தப்படும் சம்பாஷணை சமரஸத்திற்கு சர்க்கார் தயாராகயிருக்கிறது என்றும மறுபடியும் இன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 1947-ம் ஆண்டில் 55 ரூபாயாகயிருந்த சம்பளத்தை 1957-ம் ஆண்டில் 70 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது 70 ரூபாய் சம்பளத்தை 80ரூபாய்யாகவழங்க சர்க்கார்தயாராகயிருப்பதுடன் கிராஜுவேடிக் (சம்பள உபகாரப்படி) தொகையை மும்மடங்காக உயர்த்தவும் சம்மதித்துள்ளது. இந்த வகையில் ஆண்டு ஒன்றுக்கு 40—50 கோடி ரூபாய் அதிகமாக செலவு ஆகும் இதைவிடுத்து வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கைப்படி 125 ரூபாய் சம்பளம் கொடுப்பதாகயிருந்தால் 150 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு செலவாகும் என்றும் ஐந்து ஆண்டுகளில் 700 கோடியிலிருந்து 750 கோடி ரூபாய் சம்பளம் அளித்தால் நாட்டின் திட்டங்களெல்லாம் சீர்கெட்டுப்போய் விடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதைகளை பொது மக்கள் பாதுகாக்கவேண்டும்

அம்பாலா ஜூலை 11—

10,000 க்கு அதிகமான மக்களைக் கொண்ட நகரத்தில் மத்திய சர்க்கார் கட்டடங்கள் கிடங்குகள் தந்தி டெலிபோன் ஸ்தம்பங்கள் முதலியவைகளைப் போலீஸார்கள் பாதுகாப்பார்கள் என்றும் மற்ற இடங்களில் இருப்புப்பாமார்க்கங்கள் டெலிபோன் மார்ககங்களை பொதுமக்கள் காவல்செய்யவேண்டுமென்று அம்பாலா ஜீல்லா நீதிபதி அறிவித்துள்ளார்.

ரஸிக ரஞ்சனி

சார்வரி ஹூ ஆனி மீ 29-ந் தேதி (12—7—60) செவ்வாய்க்கிழமை

ஆக்கவும் அழிக்கவும் வல்லவன்

ஆக்கவும் அழிக்கவும் வல்ல சக்திவாய்ந்தவன் ஒருவனே. அவனே பரம்பொருள். அவன் யாருடைய கண்களுக்கும் புலப்படாதவன். ஒவ்வொருவரும் அவரது வாழ்கையின் போக்குகளைக் கவனிக்கும் பொழுது நம்மை அறியாமலேயே சில நிகழ்ச்சிகள் நடப்பதைக் காண்கிறோம் அத்தகைய நிகழ்ச்சிகள் நம்மால் ஏற்படுவதல்ல, அது நம் வாழ்வினை ஏற்றவும், தாழவும் செய்யும் ஓர் மாயாசக்தியின் மூலமாக ஏற்படுகிறது. அந்த மாயாசக்தி இன்னதென்பதைத்தான் அறிய பலர் தவங்கிடக்கிறார்கள்.

விஞ்ஞானத்தின் பயனாக மனிதன் அழிவு சக்தியைத் தேடிவைத்துக்கொண்டிருக்கின்றான். ஆனால் அதேபோன்று அவன் அழித்ததை சிருஷ்டி செய்யமுடியுமா? என்றால் இயலாது.

இப்பொழுது உலகம் ஜூலை மாதம் 14ந்தேதி அழியப்போகிறதென பிரஸ்தாபிக்கப்பட்டதை மக்களிடையே எங்கு பார்த்தபோதிலும் பேச்சு, உண்மையாக ஆகிவிடுமோவென்ற ஏக்கம். உலகமே அழியும் பொழுது நாம் மாத்திரமா உயிர்வாழப்போகிறோம். பிரதர் எம்மன் என்னும் மாயாவியே இந்தச் செய்தியைப் பரப்பியவர் இப்பொழுது அவர் எதிர்பார்த்தபடி சின்னங்கள் தோன்றுததால், உலகம் அழிவதற்கில்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக்கவும், அழிக்கவும் சக்திவாய்ந்தவன் ஆண்டவனே என்ற மேல் நம்பிக்கையுடையவர்கள், இத்தகைய 'புஸ்' வாணச் செய்திகளில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள், அதைப் பற்றி சிந்திக்கவும்மாட்டார்கள். ஆண்டவன் உலகத்தையும் அதில் நிறைந்திருக்கும் ஜீவராசிகளையும் படைத்தான். ஆகவே அதை முழுமையும் அழிக்க வல்ல சக்திவாய்ந்தவன் அவனேயாவன். அவனுடைய சிருஷ்டிகளாகிய நாம், அந்த ஆண்டவனின் உள்ளத்தை எப்படி அறிய முடியும்? அத்தகைய சக்தி நமக்கேது?

சில ஆண்டுகளுக்கு முன்னரும் இதே மாதிரி உலக அழிவு பற்றிய ஓர் செய்தி வெளிவந்தது அது பற்றிய பரபரப்பும் சிந்தனையும் உலகமெங்கும் ஏற்பட்டது. ஆனால் அது ஓர் கனவாகிவிட்டது

இத்தாலியில் விளாங் மலையடிவாரத்தில் எம்மன் பாதிரியாரின் கோஷ்டியினர் உலகஅழிவை ஜூலை மாதம் 14ந்தேதி எதிர்பார்த்த வண்ணம் காத்துக்கொண்டிருக்கிறார்களென்ற செய்தி வெளிவந்தது. பின்னர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டபடி சின்னங்கள் தோன்றுததால் உலக அழிவு கிடையாதென்ற அர்த்தப்படுத்தப்பட்டது. எம்மன் பாதிரியாரும், அவரது சீடர்களும் செய்த இந்த திருவிளையாடலின் பயனாக ஓர் இத்தாலிய தொழிலாளி மனமுடைந்து தனது வீட்டின் தாழ்வாரத்தில் உள்ள ஓர் தூணில் தூக்கிலிட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான். இவன் தற்கொலை செய்துகொள்வதற்கு முன் இரண்டு நாட்கள் வீட்டை விட்டு வெளியில் இருந்தான். முதல் நாள் சான்பெர்மோ குன்றுக்கு அருகாமையில் உள்ள ஓர் சிலுவைக்கு அருகாமையிலும், மறுநாள் அடர்ந்த காட்டுப்பிரதேசத்திலும் காலம் கழித்தான். மூன்றும் நாள் வீடு திரும்பி, தற்கொலை செய்துகொள்வதற்கு முன் எழுதிய கடிதத்தில் பிரதர் எம்மன் குறிப்பிட்ட மோசமான நிலைகளில் பரிதாபகரமாக உயிரிழப்பதைவிட தூக்கிலிட்டுக்கொண்டு உயிரிழப்பதே மேல்" என்று குறிப்பிட்டுவிட்டு தூக்கிலிட்டுக்கொண்டான் பொதுஜன அமைதிக்கும் ஒழுங்கிற்கும் பங்கம் விளைவித்ததாக இச்செய்தியைப் பரப்பிய பிரதர் எம்மன் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

நிற்க உலகம் அழிவதும், நிலை நிற்பதும் நம் கையிலில்லை. சிருஷ்டித்தவனுக்கு அழிக்கத் தெரியும். அழித்தவனுக்கு சிருஷ்டிக்கத் தெரியும. ஆனது அவனுல், அழிவதும் அவனுல்? அகிலம் வல்ல ஆண்டவன்பால் மேய் நம்பிக்கையுடையவர்கள், இத்தகைய உலக அழிவு உபதேசங்களைப் பொருட்படுத்தவும் மாட்டார்கள். உலகில் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் நம்மை சிருஷ்டித்த இறைவனிடம் அன்பு வைத்து சதா சர்வகாலம் அவனைத் தியானித்து வருவதே நமது கடமையாகும். உலக அழிவுச் செய்தி உலக மக்களை ஓர் கலக்கு கலக்கிவிட்டது ஆனால் மெய்யன்பர்கள் கலங்கவில்லை அவனன்றி ஓரணுவும் அசையாதென்பதின் உண்மையை அவர்கள் அறிவார்கள்

பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி வேலைநிறுத்தத்தை ஆதரித்துள்ளதா?

பம்பாய் ஜூலை 11—

பஞ்சாப் வேலைநிறுத்தக்காரர்களுக்கு பிரஜா சோஷயலிஸ்ட் கட்சி ஆதரவு அளித்துள்ளதா என்பதுபற்றி ஒன்றும் தெரியவில்லை என்று பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரான எஸ். எம் ஜோஷி அறிவித்தார் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி அறிவித்திருப்பது ஆதரவு என்ற கருத்தைத் தராது. வேலைநிறுத்தக்காரர்கள் பணக்காரத்தை கைவிடக்கூடாது என்பதுதான். இந்த வேண்டுகோள் ஆதரவு ஆகமாட்டாது என்று அழுத்தமாகத் தெரிவித்துக் கொண்டார்.

ஏர்லன் விமானங்கள் திட்டப்படி வேலைநிறுத்த காலங்களில் செல்லும்

புதய டெல்லி ஜூலை 11—

வேலைநிறுத்தகாலத்தில் ஏர்லன்ஸ்-லைகளுக்கு விமானம் போக்குவரத்துக்கள் திட்டமிட்டபடி பறக்கும் என்றும் ஆனல் காலநேரம் சிறு மாற்றப்படலாம் என்று இந்திய ஏர்லன் ஸ்தாபனம் அறிவித்துள்ளது டகோடா விமான மட்டும் விமானத்திடலில் வசதி கிடைக்காது என்ற காரணத்தால் நிறுத்தப்படும் என தெரிவித்தார்.

பார்லிமெண்ட் தேர்தலில் கலந்த 937 அபேட்சகர்கள்

103 பேர்கள் தேர்தல் பட்டியலை அனுப்பிவைக்கவில்லை

தவறியவர்களுக்கு 5 வருடகாலம் தேர்தல் உரிமை கிடையாது

இரங்கூன் ஜூலை 11—

சமீபமாக பர்மா பார்லிமெண்டுக்கு 937 அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள். இவர்களில் 103 பேர் தமது தேர்தல் சம்பந்தமான செலவு விபரங்களை தேர்தல் சட்டங்களின்படி காலகாலத்தில் குறிப்பிட்ட முறையில் தாக்கல் செய்யவில்லை. ஜில்லாக்களில் இருந்து மற்றும் பலரின் தேர்தல் செலவு விபரபட்டியல் வந்தசேரவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட இரு பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் தேர்தல் செலவு பட்டியல் இன்னும் கிடைக்காததால் இவர்களது விஷயம் தேர்தல் நீதி விசாரணை சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

பர்மா தேர்தல் சட்டங்களின்படி சட்டபூர்வமாக குறிப்பிட்ட காலத்திலும் குறிப்பிட்ட முறையிலும் தேர்தல் செலவு சம்பந்தமான விபரங்களை தாக்கல்செய்ய தருணம் அவர்களுக்கு ஒட்டு உரிமை கிடைக்காது. அதோடுகூட 5 ஆண்டுகளுக்கு மேற்றத் தேர்தலில் அபேட்சகராக நிற்க உரிமையும் கிடையாது.

சம்பந்தப்பட்ட தேர்தல் தொகுதிக்கு தேர்தல் முடிவுகள் வெளியான தேதியிலிருந்து 75 நாட்களுக்குள்ளாக அபேட்சகர்கள் தமது தேர்தல் சம்பந்தமான விபரங்களை ரிட்டர்னில் ஆபிஸர்களுக்கு அனுப்பிவைக்க தவறியவர்களின் நாமதேயங்களை ரிட்டர்னில் ஆபிஸர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அரசாங்கத்திற்கு தெரிவித்துவிடவேண்டும்.

பர்மா பார்லிமெண்ட் கீழ்சபைத் தேர்தலில் 937 அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள் இவர்களில் 103 பேர் தமது தேர்தல் சம்பந்தமான செலவு விபரங்களை குறிப்பிட்டகாலத்திற்குள்ளாக அனுப்பிவைக்கவில்லை. பக்கோ, தட்டோன், எமதீன், சன்யீ, ஏப்பேர (மேற்கு, தெற்கு, கிழக்கு) யேமெய்க், கெண்டங், மெடின்டம் கரீன், சமன்தானங்களின் தேர்தல் விபர செலவு விபரப் பட்டியல் இரங்கூனுக்கு வந்தசேரவில்லை.

பர்மா பார்லிமெண்ட் மேல்சபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நின்றவர்களில் 28 பேர் இன்னும் தேர்தல் செலவு ஜாபிதாவை அப்பிவைக்கவில்லை காயா சமஸ்தான மேற்கு பிரிவு பார்லிமெண்ட் அங்கத்தினரான ஹலோயோத்தெய்ன் அவர்கள் தமது தேர்தல் செலவு ஜாபிதாவை அனுப்பிவைத்தார். ஆனல் அது குறிப்பிட்ட முறைப்படி இல்லை. தாராவடி மாநிய பகுதிக்கு பர்மா பார்லிமெண்ட் மேல்சபை அங்கத்தினரான ஹச்சிப்பே அவர்கள் தமது தேர்தல் செலவு ஜாபிதாவை சமர்பித்தார். ஆனல் குறிப்பிட்ட தவணைக்கு மேல் இரு நாட்கள் கழிந்துவிட்டன. இந்த இரு பார்லிமெண்ட் அங்கத்தினர்களுடையவும் விஷயங்களை பரிசீலனைக்கு தேர்தல் நீதி விசாரணை சபைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

மாந்தலேயில் அமெரிக்க ஸ்தானிக ஸ்தலம்

இரங்கோன் ஜூலை 11—

அடுத்த மாதத்தில் மாந்தலேயில் அமெரிக்க ஸ்தானிக ஸ்தலமொன்றை அமைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன இது சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கத்தார் விடுத்த வேண்டுகோளுக்கு பர்மா அரசாங்கத்தார் இசைந்துவிட்டனர். மாந்தலேயில் அமெரிக்க ஸ்தானிக ஸ்தலமொன்றை அமைக்க எல்லா வசதிகளையும் செய்து தருவதாகவும் வாக்களித்துள்ளனர்

ஜூலை மாதத்தின் 2-வது ரேஸ்

டிரிபிள்டோட் பங்கீடு

3,129 ரூபாய்

இரங்கூன் ஜூலை 11—

ஜூலை மாதத்தின் 2-வது ரேஸ் நேற்றுதினம் இரங்கூன் ஸைக்ஸான் குதிரைப்பந்தய மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றுதினம் நடைபெற்ற மொத்தம் 10 ரேஸ்களில் 4-வது, 8-வது, 9-வது ரேஸ்கள் டிரிபிள்டோட் ரேஸ்களாக நடத்திவைக்கப்பட்டன.

இதில் லாலா (அவ்ண்ட்டோர), நுயேநுயேஸான் (சோஸான்), பீட்டர்ட்டே (டென்மியன்) 13—17—8-ம் நெ. குதிரைகள் வெற்றி குதிரைகளாக வந்தன.

நேற்றுநடைய டிரிபிள்டோட்மொத்தவசூல் 215,680 ரூபாய். இதில் 67 வெற்றி டிக்கட்டுகளுக்கு டிக்கட் 1-க்கு 3,219 ரூபாய் வீதம் பிரித்து கொடுக்கப்பட்டது.

700 ஆண்டுகளுக்கு முன்பே சீனர் ராக்கெட் பாணத்தை உபயோகித்தனராம்

இடி முழக்கம்போன்ற சப்தத்துடன் நெருப்பை கக்கும்

1274-ம் ஆண்டில் நடைபெற்ற ஜப்பானியர் மங்கோலியர் யுத்த விபரம்

டோக்கியோ ஜூலை 11—

700 ஆண்டுகளுக்கு முன்னர் மங்கோலியர் படைகள் சீனு மீது படை யெடுத்தபோது சீன சோல்ஜர்கள் ராக்கெட் பாணத்தைப்போன்ற சக்திவாய்ந்த அம்புகளை உபயோகித்தார்களாம். இதுபற்றி டோக்கியோவிலுள்ள ஆராய்ச்சி கழகத்தின் தலைவரான மிஸ்டர் இட்டோஷி அக்கரவா எனும் ஜப்பானிய விஞ்ஞானி டோக்கியோவில் நடைபெற்ற அகில தேச ராக்கெட் பாண ஆராய்ச்சியாளர் கூட்டத்தில் பேசியபோது தெரிவித்ததாவது:—

சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் மங்கோலியா தேசப் படைகள் ஜப்பான்மீது படை யெடுத்தபோது இவ்விதமான பாணங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. 1232ம் ஆண்டிலேயே சீனர்கள் இதுபோன்ற ராக்கெட் பாணங்களை உபயோகித்ததாக சில தேச சரித்திரங்கள் கூறுகின்றன. சீன பாஷையில் இந்த பாணங்களின் பெயர் 'செந்தின்லாய்' இவ்விதமான பாணங்கள் உயிர்ச்சேதங்களை அதிகமாக உண்டாக்காதபோதிலும் அக்கினியை கக்கிக்கொண்டு பயங்கர சப்தத்துடன் பகைவர்கள் மீது பாயக்கூடியவை, இவ்விதமான சப்தத்தை கேட்டமாத்திரத்தில் மங்கோலியர் மனம் மயங்கி ஓட்டமெடுத்தார்களாம். இதே பாணங்கள் அக்னி அஸ்திரங்களாகவும் அக்காலத்தில் உபயோகப்படுத்தப்பட்டன. 1274ம் ஆண்டில் மங்கோலியர் ஜப்பான்மீது படையெடுத்தபோது இவ்விதமான பாணங்கள் பிரயோகிக்கப்பட்டனவாம் அதேசமயத்தில் 'டெப்போ' எனும் ஓர் வித்தை கருவி உபயோகப்படுத்தப்பட்டது. இது ரஸாயன லஸ்தக்களால் செய்யப்பட்ட குண்டுகளை இந்த குண்டுகளை இரும்புமீது பிரயோகித்தால் இரும்பு உருகி நெருப்பையும் புகையையும் உண்டாக்கியதாம்.

போர்க்களத்தில் பிரகாசம்

மேற்படி 1274-ம் ஆண்டில் இரு தரப்பு ராணுவங்களும் அமோகமாகத் தாண்டு பேரிகை சப்தத்துடன் வான் சண்டையில் இறங்கியபோது ஒரு சார்பார் மேற்படி 'டெப்போ' எனும் பாணத்தை விட்டதும் இவை பளிச்சென ஒளிவிசிக்கொண்டு ராத்தின் சக்கரங்கள் மேடான இடத்திலிருந்து பள்ளத்தை நோக்கி வந்துகொண்டிருந்தால் அவை எவ்வளவு பயங்கரமான சப்தத்துடன் வருமோ அதேவித சப்தத்துடன் இந்த டெப்போ பாணத்தின் நெருப்பு பாணங்கள் போர்க்களத்தில் விழுந்த வண்ணமாக இருக்கும் அதசமயம் இடி முழக்கம்போன்ற சப்தமும் இளம்பும் எகாலத்தில் இதுபோன்ற ஆயிரக்கணக்கான பாணங்கள் விடப்பட்டதால் இவை ஜப்பான் சோல்ஜர்களை சூழ்ந்துகொண்டு எரிந்து பஸ்மமாக்கிவிட்டன. இதை தடுக்க ஜப்பானிய சோல்ஜர்களால் அமைக்கப்பட்டிருந்த எல்லா சாதனங்களும் நாசமடைந்தனவாம்,

கரீன் ராஜ்ஜியத்தில் சமூக அபிவிருத்தி திட்டம்

கரீன் மந்திரி சோலாட்டுனின் சீரிய முறைகள்

இரங்கூன் ஜூலை 11—

கரீன் சமஸ்தானத்தில் விரைவினில் சமூக அபிவிருத்தி திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்படும் இந்த லட்சியத்துடன் கரீன் சமஸ்தான மந்திரி டாக்டர் சோலாட்டுன் அவர்கள் மத்திய அரசாங்கத்தாருக்கு விடுத்த வேண்டுகோளின்படி கரீன் ராஜ்ஜியத்தில் சமூக அபிவிருத்தி திட்டத்தை செயலாற்றுவதற்கு பயிற்சிபெற்ற அதிகாரிகளை அனுப்பிவைக்கவேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டமொன்றை அமைத்த அதன்படி தட்டோன சேர்ந்த பாஹான் என்னுமிடத்தில் செவரண்ட்ஹாமியா என்பவர் தனிப்பட்ட ரீதியில் 3 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த செயலாற்றை ரோமப்புற அபிவிருத்தி திட்டத்தின் வெற்றிகண்டு கரீன் மந்திரி அவர்கள் உணர்ச்சியடைந்ததாக தெரிகிறது.

முதன் முதலாக இப்பாதிரியார் ஓர் கிராமாரி பாடசாலையை ஆரம்பித்தார். பின்னர் தெரிய அளவில் விவசாயப் பயிற்சி பண்ணை ஒன்றை அமைத்தார். அதன் பின்னர் ஆரம்ப சிகிட்சை நிலையம் ஒன்றையும் அமைத்தார்.

மந்திரி அவர்கள் கரீன் ராஜ்ஜியத்தின் தலைவரான பின் மேற்படி இடத்திற்குச் செல்லும்பொழுது இந்த கிராமாரி பாடசாலை மாணவர்கள்—ரோமவாசிகள் ஆபேரின் முயற்சியால் ஓர் உயர்தரப் பாடசாலையாக அமைக்கப்பட்டிருப்பதை கண்டார், இந்த பாடசாலையை அடுத்த ரோம மக்களால் தயாரிக்கப்பட்ட செங்கல், ஓடுகள் ஆலையைக்கண்டு 400 பேர் உட்காரக்கூடிய ஓர் தேவாலயம் அமைக்கப்பட்டிருப்பதை கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

விவசாய பயிற்சி பண்ணை பெரிய அளவில் ஓர் விவசாயப் பண்ணைபாக ஏமாறிவிட்டது, அங்குராளமான காய்கறிகளும், பழங்களும் பாடசாலைகளின் மாணவர்களின் உபயோகத்திற்காக பயிரிடப்பட்டன. டாக்டர் சோலாட்டுன் அவர்கள் இந்த அபிவிருத்தி வேலைகளை கண்டு உணர்ச்சிகொண்டு இதே போன்ற சேவையை கரீன் ராஜ்ஜியம் முழுமையும் செய்வதற்கு சமூக சேமாபிவிருத்தி டைரக்டர்களுடன் தொடர்பு கொண்டார். மந்திரியவர்கள் பாஹான் லெய்புவே, தாண்டான் ஆகிய இடங்களை சமூக அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்த வைப்பதென முடிவுகட்டியுள்ளனர், பூனிவர்ஸிட்டியில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது கோடை கால, மாரிகால விடுமுறை நாட்களில் இந்த சமூக சேமாபிவிருத்தி திட்டத்திற்கு உதவி புரியவேண்டுமென கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஸ்ரீநகரில் வெடிவிபத்துக்கள்

ஸ்ரீநகர் ஜூலை 11—

நேற்றிரவு ஸ்ரீநகரைச்சேர்ந்த லால்மண்டி என்னுமிடத்தில் அநேகவெடிவிபத்துக்கள் ஏற்பட்டன அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதமோ அல்லது பொருட்சேதமோ ஏற்படவில்லை.

இந்த வெடிவிபத்துக்களுக்கு காரணம் யார் என்பதையும் காஷ்மீர் சர்க்கார் விசாரிக்க உத்தரவிட்டனர்

ராக்ஷச ஆமை 660 பவுண்டு

வியட்னாம் ஜூலை 11—

வியட்னாமைச்சேர்ந்த நத்தாரம் என்னுமிடத்திலுள்ள செம்படவர்கள் ராக்ஷச ஆமை ஒன்றைப் பிடித்துள்ளனர் இதன் எடை 660 பவுண்டு, இதன் நீளம் 7 அடி.

இந்த ஆமையை வியட்னாம் அதிகாரிகள் அதிக ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வருகின்றனர், வியட்னாம் மக்கள் இதை அதிக ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டுவருகின்றனர்.

நமது டெல்லித் தபால்

பர்மாவில் செட்டியார்களின் நில பிரச்னை தக்க பலனளிக்காதது ஏன்?

பர்மா இந்தியர்களின் குரலுக்கு இந்தியசர்க்கார் செவி சாய்க்கவேண்டுமானால்?

தமிழர் சங்கத் தலைவர்களுக்கு டாக்டர் கிருஷ்ணன் வேண்டுகோள்!

"ரஸிகன்" ஆசிரியர்—டாக்டர் கிருஷ்ணன் பேட்டி விபரம்

கடந்த சில வாரங்களாக புதியடெல்லியில் தங்கியிருந்து அங்குள்ள மத்திய மாகாண சர்க்கார் சம்மந்தப்பட்ட உயர்தர அதிகாரிகளையும், அரசியல் தலைவர்களையும், பிரமுகர்களையும் பேட்டி கண்டு பர்மாவாழ் இந்தியர்கள் நிலைபற்றி விளக்கிவந்த நமது 'ரஸிகன்' ஆசிரியர் திரு எஸ். பி. ரத்தினம் அவர்கள் சென்ற வாரத்தில் பிரபல விஞ்ஞானியும், பர்மாவாழ் இந்தியர்கள்மீது பேரபிமானமுடைய டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களை பிரத்தியேகமாக பேட்டிகண்டு பேசியபோது அவர் பர்மாவாழ் இந்தியர்களுக்கு விடுத்த அரிய ஆலோசனைகளைக் கீழே காணலாம்:—

பர்மா தமிழர்களுக்கு ஆலோசனை

"பர்மா தேசத்தில் வாழும் சுமார் 7 லட்சம் இந்தியர்களுள் ஏறக்குறைய 4½ லட்சம் மக்கள் தமிழர்கள் எனத் தெரியவந்தேன். இவர்களுள் மிகப் பெரும்பாலோர் போதிய வருமானம் இல்லாத விவசாயி—தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களெனவும் தெரியவருகின்றது. தமிழர்கள் சுறண்டும் மனப்பான்மை உடையவர்கள் அல்ல சுறண்டும் நோக்கத்துடனும் அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறவில்லை உழைப்பாளிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். சென்ற நாடுகளில் செல்வம் தழைத்தோங்க உழைத்தனர். பிறருக்கு உழைப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த தமிழர்கள் உலக மாறுதல்களை-அரசியல் மாறுதலை-பிரஜா உரிமைகள் மாறுவதை உணரவில்லை. இவ்வித மாறுதல்களை அவர்களுக்கு உற்ற காலத்திலே உணர்த்திக்காட்டவும் அக்காலத்திய தமிழ் தலைவர்கள் முற்படவில்லை. அறியாமையின் விளைவால் மக்கள் இன்று நாடற்றவர்களென்றும் வேறு பல நிலையிலும் அல்லல்படுகின்றனர் என்பதை அறிய பெரிதும் வருந்துகிறேன். இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் வித்தியாசம் உண்டு. இந்தியர்கள் வெளிநாடுகளில் குடியேறுவதில் அரசியல் நோக்கம் அறவே இல்லை சீனர்கள் ஆங்காங்கு பரவி குடியேறுவதிலும்; குடியேறும் நாடுகளின் பிரஜா உரிமைகளை எடுத்துக் கொள்வதிலும் கலப்புமணம் செய்து கொள்வதிலும் இரட்டைப் பிரஜா உரிமைகளை நாட்டில் மறைமுகமாகவிடைக்கப்பெறுவதிலும் அர்த்தம் இருக்கின்கின்றது அந்தரங்க அரசியல் நோக்கமும் இருக்கின்றது. இந்தியாவுக்கோ இந்திய மக்களுக்கோ அவ்வித அந்தரங்க நோக்கம் கிடையாது. பண்டைய காலத்தின் சூழ்நிலையில் கடல்கடந்த நாடுகளுக்குச் சென்று குடியேற நேரிட்டது அக்காலம்முதல் அப்படியே ஆங்காங்கு நிரந்தரமாக வாழ்ந்துவருகின்றனர் இவர்கள் வாழும் அநேக நாடுகள் இன்று தனித்த சுதந்திர நாடுகளாகிவிட்டன. சுதந்திர நாட்டு சர்க்கார்கள் தத்தமது நாட்டு மக்களின் நலனுக்கான காரியங்களில் தீவிரமாக பாடுபட்டுவருகின்றன. இதன் விளைவாக அன்னியர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது. இந்தியாவிலும் இன்று இதே நிலைதான், சுதந்திர நாட்டு சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு அன்னியர்கள் கட்டுப்பட்டு வாழவேண்டியது மிகமிக அவசியம் அதற்காகவேண்டி பர்மாவாழ் தமிழர்கள் நாடற்றவர்களென்ற ரீதியில் வாழவேண்டுமென்பது அல்ல, பர்மா நாட்டையே நிரந்தர வீடாக கருதி வாழும் மக்கள் பர்மா நாட்டிலேயே சாஸ்வதமாக தங்கிவிட தீர்மானித்துள்ள மக்கள் கூடுமானால் விரும்பினால் பர்மிய நாட்டுப் பிரஜைகளாக ஆகிக்கொள்வது உசிதம் அப்படி விரும்பாத நம் மக்கள் இந்திய பிரஜா உரிமை சட்டங்களின்படி இந்தியப் பிரஜைகளாகிக்கொள்ளவேண்டும். இந்தியப் பிரஜைகளாக அங்கு வாழும் மக்கள் பர்மா அரசாங்க சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டும். வெளிநாடுகளில்வாழும் இந்திய மக்களுக்கு ஆங்காங்கு குடியேறி வசிப்பதில் அரசியல் நோக்கம் கிடையாது என்பது நிரூபித்து காட்டப்படவேண்டும். இதுதான் இந்திய சர்க்காரின் கொள்கை, பர்மாநாட்டில் குடியேறிவாழும் சீனர்களுக்கு தொழில்கள் நடத்த சீன சர்க்காரின் மறைமுகமான உதவியும் உற்சாகமும் கிடைக்கின்றது; சீன பாங்கிகள் தாராளமாக பண உதவிகள் கடனாக கொடுக்கின்றன. இதேபோன்று இந்திய சர்க்காரும், பர்மாவிலுள்ள இந்திய பாங்கிகளும் ஏன் உதவி செய்யக்கூடாது என பர்மா இந்தியர்கள் சார்பில் கேட்கப்படுகின்றது. சீன சர்க்காரும்-சீன பாங்கிகளும் இவ்வாறு உற்சாகம் அளிப்பதில்தான் அரசியல் அந்தரங்க கருத்து பொதிந்து கிடக்கின்றது. நமக்கு அவ்வித கொள்கை கிடையாது பர்மாவாழ் இந்தியர்கள் பர்மிய மக்களின் அன்மைப்பெற்றவர்களாக அங்கு வாழவேண்டும். பர்மாவாழ் இந்தியர் பிரச்னைகள் சகோதர வாஞ்சையில் தீர்க்கப்படவேண்டும். பர்மாவில் குடியேறிய இந்தியர்கள் அங்கேயே நிரந்தரமாக வசித்துவருவதில் அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது என்பதை பர்மிய மக்களும், பர்மா சர்க்காரும் உணரும்படி மக்கள் வாழ்ந்துவரவேண்டும். பர்மா இந்தியர்கள்பற்றி இங்கு அதிக மக தகவல் கிடைப்பதில்லை. "பர்மாவில் வாழும் இந்தியர்கள் அந்த நாட்டிலேயே நிரந்தரமாககுடியேறிவிட்டனர்-கலப்பு விவாகங்கள் செய்துகொண்டு அங்கேயே நிரந்தரவாசிகளாகிவிட்டனர்-பர்மா பிரஜைகளாகிவிட்டனர்" என்ற அபிப்பிராயம்தான் இங்கு பொதுவாகத் திகழ்கின்றது. இவ்வித நிலையில் "பர்மா இந்தியர்கள் நாடற்றவர்களாக திகழ்கின்றனர்; பலபிரச்னைகள் தோன்றியுள்ள" என்ற தற்சமய தகவல்கள் எனக்கு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் தருகின்றது. இந்த நிலையிலே பர்மாவாழ் இந்தியர்களுக்கு குறிப்பாக நம் தமிழர்களுக்கு சில ஆலோசனைகள் கூற விரும்புகிறேன். பர்மா இந்தியர் பிரச்னைகள் பற்றிய விபரங்கள் இங்குபெரும்பாலும் எவருக்கும் சரிவரத் தெரியவில்லை. அயல்நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் சம்பந்தப்பட்ட மத்திய சர்க்கார் இலாகா அதிகாரிகளுக்குக்கூட பர்மாவாழ் இந்தியர் பற்றிய முழு விபரங்கள் சரிவரத் தெரியவில்லை எனத் தோன்றுகிறது. காரணம் இப்பிரச்னைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு சரிவரக் கிடைக்கவில்லை. இதற்குப் பொறுப்புதாரி பர்மாவாழ் இந்தியர்களேயாகும். தமது பிரச்னைகளை-தமது தேவைகளைசம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளின் கவனத்துக்கு வரும்படி செய்யவேண்டிய பொறுப்பு பர்மா இந்தியர்களைத்தான் பொறுத்ததாகும். ஏதோ ஓரிருவர் தனித்தனியாக வந்து யார்யாரைபோ கண்டுபேசி விட்டுச் செல்வதில் ஒரு பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை. இந்தமாதிரி வந்து சொல்லிப்போகும் விஷயங்களை அதிகாரிகள் ஊர்ஜிதமான தகவலாக எடுத்துக் கொள்ளவோ—அவற்றிற்கு உத்தியோகரீதியான கவனம் செலுத்தவோ போவதுமில்லை. முன்பு செட்டியார்கள் நில சம்பந்தமான பிரச்னையும்கூட சரியான பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தால்தான் இங்கு முக்கிய கவனம் செலுத்தப்படாமல் போய்விட்டதெனத் தெரியவருகிறது. ஏதோ ஓரிருவர் மத்திய அரசாங்கத்திடம் நிலப் பிரச்னை சம்பந்தமாக தூது வந்தனர். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் தத்தமது சொந்தப் பிரச்னையாகவே வந்ததாகத் தோன்றுகிறது. எல்லோருக்கும் பொதுவாக ஒரு பிரதிநிதித்துவம் வாய்ந்த தூதுகோஷ்டியாக வந்து பேசியதாகத் தெரியவில்லை. ஆகவே பர்மாவாழ் இந்தியர்—குறிப்பாக தமிழர்களுக்கு இந்த உண்மையான நிலையை விளக்கிக் கூற விரும்புகிறேன். தமிழர்கள் எல்லோரும் ஐக்கியப்படவேண்டும் எல்லோரும் ஒன்றுபடாதவரையில் உங்கள் குரலுக்கு எவரும் செவிசாய்க்கவில்லை. ஒரே சங்கம்—தமிழர் சங்கத்தின்கீழ் தமிழர் அனைவரும் திரளவேண்டும். தமிழர் சங்கத்தின்—பர்மா இந்தியர்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

பர்மா சர்க்காரின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்ட பர்மா இந்தியர்களுக்கு அத்தியாவசியமான தேவைகள் என்னவென்பதை திட்டவட்டமாக நீங்கள் முடிவு செய்துகொள்ளவேண்டும், சட்டத்திற்கு உட்பட்ட ஒரு உருப்படியான கோரிக்கையுடன் பொதுமக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த தூதுகோஷ்டியொன்றை இந்திய அரசாங்கத்திடம் அனுப்பிவைக்கவேண்டும் இத்தகைய தூதுகோஷ்டிகள் வந்தால்தான் இங்கு மதிப்பும் கௌரவமும் கிடைக்கும் பலனுக்குரிய வழியும் பிறக்கும் தூதுகோஷ்டிகள் இங்கு வந்து நிலைமைகளை விளக்கிக்காட்டவேண்டும். அப்பொழுதுதான் அதிகாரிகள் உண்மை உணர்வார்கள் முக்கிய கவனமும் கொடுப்பார்கள் உங்களுடைய நியாயபூர்வமான பிரச்னைகள் தீரவேண்டுமானால் இந்த முறையை கையாளுங்கள் தூதுகோஷ்டிகளை அநுப்பிவையுங்கள் நானும் (டாக்டர் கே. எஸ் கிருஷ்ணன்) இருக்கின்றேன் இப்பிரச்னைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளான தேஸாயைப் பார்ப்போம் என். ஆர், பிள்ளையையும் பார்ப்போம் தேவைப்பட்டால் நேருவையும் பார்ப்போம் ஏதாவது வழி பிறக்கும்.

தமிழர்களுள் கட்டுப்பாடுடன் இவ்வித முறையை கடைப்பிடியுங்கள். புதியடெல்லியில் நானும் சில நண்பர்களும் எங்களால் இயன்ற ஒத்துழைப்பையும் உதவியையும் தாராளமாகத் தருகின்றோம் என்பதாக டாக்டர் கே. எஸ் கிருஷ்ணன் தெரிவிக்கின்றார். டாக்டர் கிருஷ்ணன் இந்திய சர்க்காரில் மட்டுமல்ல இந்திய அரசியல் தலைவர்களிடையேயும் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளவர் சொன்ன காரியத்தை செய்துமுடிக்கும் ஆற்றல் படைத்தவர் பர்மாவாழ் இந்தியர்கள் குறிப்பாக தமிழர்களின் பிரதிநிதித்துவம்வாய்ந்த அகில பர்மா தமிழர் சங்கத் தலைவர்கள் இத்திக்கில் கவனம்செலுத்தி டாக்டர் கிருஷ்ணன்போன்ற சேவையும் செல்வாக்கும் மிகுந்தவர்களின் உதவியை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எனது ஆசை"

—ரஸிகன்

ஜனாதிபதி பிரஸாத் வழிகாட்டுகிறார்

சம்பளத்தைக்குறைத்துக்கொண்டார்

புதியடெல்லி ஜூலை 10—

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரஸாத் தனது சொந்தச்சம்பளத்தை மட்டும் குறைத்துக்கொள்ள முன்வந்துள்ளார். இவரது சம்பளத்தை ஏற்கனவே இருதடவைகளில் குறைத்துக் கொண்டுள்ளார். இப்பொழுது இவர் சம்பளத்தைக் குறைத்துககொள்வது 3 வது தடவையாகும்.

இப்பொழுது இவர் 2500 ரூபாய் தான் சம்பளமவாங்குவார் இந்திய அரசாங்கத்தின் ஓர் சாதாரண மந்திரியின் சம்பளம் 2500 ரூபாயாகும்.

1952-ம் ஆண்டில் டாக்டர் பிரஸாதின் சம்பளம 10,000 ரூபாயாகும் இந்தச்சம்பளத்திலிருந்து இவர் 4000 ரூபாய் குறைத்துக்கொண்டார். 1956-ம் ஆண்டில் இவர் தமது சம்பளத்தில் மற்றும் 1000 ரூபாயைக்குறைத்துக்கொண்டார்.

இந்திய ஜனாதிபதி மதப்பற்றுடையவர் காய்கறிகளைத்தவிர்த்து இவர்வேறு ஆகாரம் புசிப்பதில்லை. எளிய முறையில் துறவிபோன்று வாழ்க்கை நடத்திவருகிறார்.

உலகப் புகழ்வாய்ந்த விஞ்ஞானி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

டாக்டர் கிருஷ்ணன்

அறுபத்திண்டு ஆண்டுகளுக்கு முன்—ஆம், ஏறத்தாழ பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய சரித்திரம்-குறிப்பாக, தமிழகத்தின் சரித்திரப்பொன்னேடுகள் புகழ்மணக்க—உலகின் கண், நம்பெருமையை எடுத்துக் காட்ட வல்ல, ஒரு பேரறிஞரை கரிய மாணிக்கம் சீனிவாஸகிருஷ்ணனை தமிழன்னை நமக்களித்ததை, நாம் அன்று உணராவிடினும், இன்று உணர்கிறோம்.

வறட்சிமிக்க முகவை மாவட்டம் (இராமநாதபுரம் ஜில்லா) சீவில்லிப்புத்தூர் வட்டம் (தாலுகா) வத்திராயிருப்பு கிராமம், பேரறிஞர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களை நமக்களித்ததின் மூலம், வறண்ட நிலையிலும், தனது அறிவு வளத்தை நிலை நாட்டியுள்ளது.

டாக்டர் கிருஷ்ணன் புகழ்மிக்க ஒரு விஞ்ஞானமேதை. அகிலமும் அவர் ஆற்றல்கண்டு பெருமிதம் கொள்கிறது—பாராட்டிப்பெருமைப்படுகிறது.

விஞ்ஞான மேதை சர் சி. வி. ராமன் அவர்களின் "ராமன் எபெக்ட் ((Raman Effect)) உலகிற்கு அறிவிக்கப்பட்டதன் காரணத்தால், அன்னவருக்கு "நோபல் பிரிவு" கிட்டியது மேற்படி "கண்டுபிடிப்பு"க்கு டாக்டர் கிருஷ்ணன் அவர்களின் ஆராய்ச்சிபெருமளவு உதவியது என்றுகூறினால் மிகையாகாது,

நல்ல தமிழறிஞர் தெள்ளத்தெளிய தூய தமிழில், அவர் விஞ்ஞானக்கருத்துக்களை விளக்கும்வகையே புதுமைகண் மிகச்சிறந்த எழுத்தாளர்—பேச்சாளர் அவருடைய மேடைத்தமிழில் தென்பாண்டி மண்டலத்தைக்காண்கிறோம்—சங்கம்வளர்த்த மதுரைத், தமிழ் மணம் தமிழக்காண்கிறோம்.

ஆழ்ந்த பக்தி சிரத்தையுள்ளவர் இதிகாசிபுராண மாண்புகளை எடுத்தியம்புவதில் வல்லவர். கம்பன் கவிதைகளில் அதிக ஈடுபாடு உள்ளவர். தமிழார்வமிக்க சிலரின், இடைவிடா முயற்சியும், ஆதரவுமே, இன்று டில்லி தமிழ்ச்சங்கம், நல்லபடி பணியாற்ற முடிகிறது, டில்லி தமிழ்ச்சங்கத்தின் அரும்பெரும் தலைவராயமர்ந்து, தமது தமிழிலக்கிய அறிவை வரை வாரிவாரி வழங்குவர்.

கற்றறிந்தவர்களுக்கேகூட விஞ்ஞானத்தைப்பற்றி புரிந்துகொள்ள சற்று கடினமாகவே இருக்கும்-அதுவும் ஆங்கிலத்தில் எடுத்துக்கூருவதாக இருந்தால்மட்டும். ஆனால் நமது டாக்டரவர்களோ நல்ல தமிழில் பாமரர்களுக்கு புரியும்வண்ணம் விஞ்ஞான விந்தைகளை விபர விளக்கங்களை எடுத்துக்கூறும் அழகே தனித்தன்மையானது.

அமெரிக்க தலை நகரான வாஷிங்டனில் அமெரிக்க தேசிய விஞ்ஞான சபையின் பிரதம பேச்சாளராக டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் விசேஷமாக அழைக்கப்பட்ட சமயம் அவர் ஆற்றிய சொற்பொழிவைக்கேட்டு அமெரிக்க விஞ்ஞானமேதைகள் அன்னவரை பெரிதும்பாராட்டினர். இச்சபையில் வெளிநாட்டவர்கள் குறிப்பாக இரண்டொருவருக்குத்தான் பங்கேற்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது. அவர்களில் நம் டாக்டரவர்களும் ஒருவர் என்ற எண்ணம் நம்மிடையே பெருமகிழ்வு ஊட்டுகிறது.

1956ம் ஆண்டு நேஷனல் அகடமி ஆப் ஸயன்ஸஸ் (National Academy of Scieivces) என்ற ஸ்தாபனத்தில் நியமனம பெற்றார். இந்த ஸ்தாபனத்தின் மொத்த அங்கத்தினர் தொகை 60 தான் அதிலும் பௌதீகத் துறையினர் 9 பேர்களே தான் அவர்களில் ஒருவர் நம்டாக்டரவர்கள்.

தற்சமயம் டாக்டரவர்கள் இந்திய தேசிய பௌதீக ஆராய்ச்சிக்கூட டைரக்டராகவும், சர்வதேச பூபௌதீக ஆண்டின் இந்திய தேசிய குழுவின் தலைவராகவும் பணியாற்றிவருகிறார். இந்திய சர்க்கார் நமது டாக்டரவர்களை 'நேஷனல்-புரோபஸர்' (National Proffessor) ஆக நியமித்துள்ளனர் இத்தகு பெருமை முன்பு டாக்டர் இராமன், புரோபஸர் எஸ் என். போஸ் ஆகிய இருவருக்கு மட்டும் கிட்டியுள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக விஞ்ஞானக் கழகங்களில் சர்வதேசக் கௌன்சிலின் வைஸ்-பிரஸிடென்டாக சேவை செய்து வருகிறார். சர்வதேச பூபௌதீக ஆண்டின் ஆராய்ச்சிகளில் இவராற்றியுள்ள சேவைகள் இந்நாநிலம் அறியும். இவர் பெற்றுள்ள விருதுகளையும்; பாராட்டுகளையும்; விரிவிற்கஞ்சி விடுக்கிறோம்.

வானொலியில் இவராற்றிய 'விஞ்ஞானத்தில் புதிய சகாப்தம்' என்ற சொற்பொழிவுத் தொடர்கள் அரிய பொக்கிஷங்களாகும் இங்கிலாந்தின் விஞ்ஞானக்கூடும் நமது டாக்டரவர்களுக்கு F. R. S. என்ற பட்டத்தை வழங்கி தன் நிலைமையை உயர்த்திக் கொண்டன. ஒவ்வொரு அயல்நாடும் டாக்டரவர்களின் திறமையை வியந்து; பாராட்டி கௌரவிக்க தவறவில்லை.

எளிமையான குடும்பத்தில் பிறந்தும் தன் உழைப்பாலும், முயற்சியாலும் முன்னேறி சர்வதேச அரங்கின் புகழேணியில் இருக்கும் டாக்டரவர்களுக்கு இந்திய சர்க்கார் அறிவித்துள்ள 'பத்ம விபூஷன்' என்ற விருதுபோன்று மேலும் பல கிடைத்து நாடும் மக்களும் நலம் பெற விஞ்ஞானம் ஆற்றவேண்டிய பகுதியில் நமது டாக்டரவர்களின் சேவை பெருமளவு கிடைக்கவேண்டும் என்ற நன் நம்பிக்கையுடன் அவர் நீடூழி காலம் வாழவேண்டும் என்றும் அகில உலகும் செய்யும் பிரார்த்தனையில் நாமும் பங்கேற்போமாக.

ஜப்பானில் அமெரிக்கரின் உளவறியும் விமானங்கள் இருக்கக்கூடாது"

அவைகளை அப்புறப்படுத்த ஜப்பானிய மாணவர்கள் விண்ணப்பம

டோக்கியோ ஜூலை 11—

டோக்கியோவிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஆசூஜி என்னுமிடத்தில் அமெரிக்கரின் கடற்படைக்குச் சொந்தமான நிலயம இருந்துவருகிறது. இந்த இடத்தில்தான் அமெரிககரின் 'யு—2' என்ற உளவறியும விமானங்கள் இருந்துவருகின்றன.

இவ்விடத்தில் ஜப்பானிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் அதில் தலையிடக்கூடாதென அமெரிக்க சர்க்கார் அங்குள்ள அமெரிக்க படைகளுக்கு உத்திரவிட்டுள்ளனர்.

இன்று பகல் சுமார் 10,000 ஆர்பாட்டக்காரர்கள் மேற்படி ஆசூஜி பட்டணத்தில் ஆர்பாட்டம செய்தனர். நாளைக்கு நாங்கள் 30,000 பேருடன் இங்குவந்து ஆர்பாட்டம செய்வோம் என்பதாக மேற்படி ஆர்பாட்டக்காரர்களின் தலைவர்கள் தெரிவித்தனர். 'யூ—2" இங்கு வேண்டாம் உளவாளி விமானங்கள் வெளியே போய்விடவேண்டும் என்பதாக மேற்படி ஆர்பாட்டக்காரர் கூச்சலிட்டனர். ஆர்பாட்டக்காரர்கள் ஆசூஜி கிராமத்திற்கருகில் கூட்டம் கூடி கீழ்கண்ட தீர்மானத்தை வெளியிட்டனர். ஜப்பானில் தங்கியிருந்துவரும் அமெரிக்கரின் உளவறியும விமானங்களை உடனே வெளியேற்றவேண்டுமென இக்கூட்டம் ஜப்பானிய சர்க்காரை கேட்டுக்கொள்கிறது. ஏனெனில் எந்தெந்த நாடுகளில் மேற்படி அமெரிக்கரின் உளவறியும் விமானங்கள் தங்கி இருக்குமோ அந்த இடங்களை தாக்கப் போவதாக ருஷ்ய சர்க்கார் சமீபத்தில் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். ஆனதால் அமெரிக்காரலோ அல்லது மற்ற தேசத்தாராலோ ஜப்பான் தேசத்திற்கு அழிவு ஏற்படக்கூடாதென்பது எங்களது எண்ணமாகும்.

இந்தியாவில் ஐட்ரஜன் உற்பத்தி தொழிற்சாலை

100,000,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது

பம்பாய் ஜூலை 11—

இந்தியாவில் இரண்டாவது ஐட்ரஜன் உற்பத்தி யந்திரசாலையொன்று அமைக்கப்பட்டுள்ளது கொளும்பு திட்டத்தின்படி இந்தியா சர்க்காரும் கனடா சர்க்காரும சேர்ந்து மேற்படி தொழிற்சாலையை அமைந்துள்ளனர்.

இதற்காக 100,000,000 ரூபாய் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொழிற்சாலையில் நேற்றுதினம் வேலை ஆரம்பமாயிற்று இந்த இரண்டாவது தொழிற்சாலை ஆசியாவிலேயே மிகப் பெரிதாகும் இதற்கு முன்பும் 1956ம் வருடம ஆகஸ்டு மாதத்தில் பம்பாயை சேர்ந்த அதே வட்டாரத்தில் இதுபோன்ற தொழிற்சாலையொன்று அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி இரண்டாவது தொழிற்சாலை 'ஐஸோடோப்) எனும ரஸாயன வஸ்துக்கள் ஏராளமாக உற்பத்திசெய்யப்படுமாம்.

பத்திரிகைக்காரர்களுக்கு இறக்குமதி லைசென்ஸ்கள்

இரங்கூன் ஜூலை 11—

இதன் கீழ்கண்ட 38 பிரஸ்களுக்கும், 5 வியாபாரிகளுக்கும் அயல் நாடுகளிலிருந்து நியூஸ் பிரிண்டுகளைத் தருவித்துக்கொள்வதற்காக பர்மா சர்க்கார் இறக்குமதி லைசென்ஸ்களை வழங்க முடிவு செய்துவிட்டனர். இதில் "ஏ", "பி", "ஸி" என்று 3 பிரிவாக பிரிக்கப்பட்டிருப்பதாகவும் "ஏ" பிரிவுக்கு 50,000 ரூபாய்க்கும், "பி" பிரிவுக்கு 30,000 ரூபாய்க்கும், "ஸி" பிரிவுக்கு 12,000 ரூபாய்க்கும் இறக்குமதி லைசென்ஸ்கள் வழங்கப்படும் என்று தெரிகிறது. எனவே லைசென்ஸ் கிடைக்கப்பெறுபவர்கள் செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

இறக்குமதி லைசென்ஸ் வழங்கப்படவிருக்கும் பிரஸ்—கம்பேனிகளின் விபரம் வருமாறு:—

1 ஹந்தாவடி பிரஸ், 53 பார்க்ஸ்லேன்
2 நியூலைட்—ஆப்—பர்மா பிரஸ் லிமிட்டெட், 58, சர்ச்சில் ரோடு
3 இரங்கூன் டெய்லி, 209-211, கெனால் வீதி
4 பம்மாகிட் பிரஸ், 253, பவுண்டரி வீதி
5 கார்டியன், லிமிட்டெட், 392, மெர்ச்சன்ட் ரோடு
6 தி மிரர் டெய்லி, 398, போலேன்
7 தி நேஷன், 290, 40-ம் நெ. கல்லி
8 பீடவ்ங்சூ டெய்லி, 397 புரோம் வீதி
9 பஹோ ஸி டெய்லி, மாந்தலே
10 லூ டெய்லி, மாந்தலே
11 நியூ சைனாபோ, 107 லாட்டர் வீதி
12 ஸின்மினபோ, 121, மவ்ங்கைன் வீதி
13 தி பர்மன், மொகல் வீதி
14 தி சன் டெய்லி, மாந்தலே
15 ரஸிக ரஞ்சனி பிரஸ், 317-323, மவ்ங்தாலே வீதி
16 தி டிரிபியூன், 62, 45-ம் நெ. கல்லி
17 தி மியம்மாலான் ஸின் டெய்லி
18 சைனா கமர்ஷியல் டைம்ஸ், 73, லாட்டர் வீதி
19 டூன் டெய்லி லிமிட்டெட், 194, பூர்தட்டான் பகோடா ரோடு
20 மீடொவ் டெய்லி, 4, 30-ம் கல்லி
21 கபா அல்லின், 137, 42-ம் நெ. கல்லி
22 தி கான்டிட் டெய்லி (புவின்புவின்) 121, அநோரட்டா வீதி
23 ஸீட்டைப்பூ டெய்லி, 42-ம் நெ. கல்லி
24 கிட்திஸ்ஸா 6, பைன்ரோடு, கீமந்தான்
25 பிராச்சி பிரகாஷ், 65-69, 31-ம் நெ. கல்லி
26 மாண்டைங் டெய்லி, 155, சுவே கொவ்ங்டைன் ரோடு
27 பாத் டெய்லி, 99, மாந்தலே வீதி
28 மான்கிட் பிரஸ், மாந்தலே
29 ரெட்ஸ்டார், 39-ம் நெ. கல்லி
30 தொண்டன், 216, ஸ்ட்ராண்டு ரோடு
31 பீரசோ டெய்லி, 5, 87-ம் நெ கல்லி
32 பிரீடம் போ, 156, மவ்ங்கைன்வீதி
33 பர்மா ஸ்டார், 206, ஸ்ட்ராண்டு ரோடு
34 சுவேமவ்ங் கமர்ஷியல் நியூஸ், 50, போஜோ வீதி
35 பர்மா கமர்ஸ், 325, மவ்ங்தாலே வீதி
36 நியூ இரங்கூன் ஈவினிங் போஸ்ட், கெனால் வீதி
37 தௌரேஜதீத், 251, 39-ம் நெ. கல்லி
38 ஜிங்போபிராட், 4 விண்டர்மியர்

வியாபாரிகளின் விபரம்

கோர்ட்

1 லாலாத்தெய்ன் அண்டு கம்பேனி, லிமிட்டெட், 140. கெனால்ரோடு
2 கின்தான்லுவின் கம்பேனி, 43, மவ்ங்கைன் ரோடு
3 ஊபோனீ அண்டு பிரதர்ஸ் கம்பேனி, 50, 27-ம் நெ. கல்லி
4 அவ்ங் டிரேடிங் கம்பேனி, 68, காட்வின் ரோடு
5 ராயல் ஸ்டேஷனரி சப்ளை ஹவ்ஸ், 408-410, டல்லவுஸி ரோடு

மாஸ்கோ ஜெயில்களில் கைதிகள் இல்லை

ஜெயில்கள் நந்தவனமாக மாறும்

மாஸ்கோ ஜூலை 11—

மாஸ்கோவில் உள்ள ஒருபெரிய ஜெயில் இன்று காலியாகிவிட்டது. ஒரு கைதிகூட இல்லாததால் ஜெயில் மூடிவிடப்பட்டது.

இதேவிதம் மூன்று ஜெயில்களில் கைதிகள் இல்லாததால் ருஷ்ய சர்க்கார் இவைகளையும் மூடிவிட்டனர். மேற்படி ஜெயில்களை இடித்துத்தள்ளி அவ்விடங்களில் நந்தவனங்களை அமைக்க ருஷ்ய சர்க்கார் முடிவுசெய்துள்ளனர்.

பாரதி பாடசாலை, இன்சீன்

ஆசிரியை தேவை

மேற்காணும் பாடசாலைக்கு பாலர்-முதல்-இரண்டாம் வகுப்புகளுக்கு தமிழ், பர்மா, ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதற்கு திறமையுள்ள ஆசிரியை ஒருவர் தேவை. விரும்புவோர் மனுக்களை "துணைச்செயலாளர், பாரதி பாடசாலை, இன்சின் ரயில்வே டீசாப், இன்சீன்" என்ற முகவரிக்கு 30-7-60க்குள் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

இப்படிக்கு
நிர்வாகிகள்,
2—2 பாரதிபாடசாலை, இன்சீன்.

உணவு-தண்ணீர்-வெளிநாட்டு தந்தி தபால் விஷயத்தில் இந்திய சர்க்கார் உத்தரவு

புதிய டெல்லி ஜூலை 11—

உணவு சேமிப்பு அதை ராஜ்ஜியங்களுக்கு மாற்றுவது இடத்துக்கு இடம் மாற்றுவது ஜலதாரையை சுத்தம் செய்வது தண்ணீர் சப்ளை-முதலிய இடங்களில் வேலை செய்வோர் எவரும் நிலை நிறுத்தம் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு தந்தி தபால் அனுப்புவது அவைகளை பெறுவது குறிப்பிட்ட விலாசதாருக்கு அனுப்பிவைப்பது முதலிய விஷயங்கள் ஒழுங்காய் நடைபெற மத்திய சர்க்கார் தகுந்த ஏற்பாடுகளை செய்து இது சம்மந்தமாக ராஜ்ஜிய சர்க்காருக்கும் அவசரமான உத்தரவுகளை அனுப்பிவைத்துள்ளது.

சீன சோல்ஜர்கள்—தீபேத் புரட்சிப் படைகள் போராட்டம்

சீன சோல்ஜர்கள் ஏராளமாக மாண்டு மடிந்தனர்

சீன சர்வே கோஷ்டி நேப்பாளத்திற்குள் நுழைந்துவிட்டார்களாம்

காட்மாண்டு ஜூலை 11—

நேப்பாள எல்லையிலிருந்து 40 மைல் தூரத்தில் சேகர்—சாங் என்னும் ஓர் இடம் இருந்துவருகிறது இந்த இடம் சீன ராணுவங்கள்வசம் இருந்துவந்தது தீபேத் புரட்சிப் படைகள் இந்த இடத்தை சீனரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டதால் இதை தீபேத் புரட்சி கூட்டத்தாரிடமிருந்து கைப்பற்றியே தீரவேண்டுமென சீன தளகர்த்தர்கள் உத்தரவிட்டனர்.

இதன்பேரில் ஷீகாசே, டிங்காய் காத்தகீகா முதலிய 3 பிரதேசத்திலிருந்து புறப்பட்ட சீன ராணுவங்கள் மேற்படி சேகர்சாங் பட்டணத்தை 3 திசைகளில் வளைத்துக்கொண்டு போரில் இறங்கின ஆரம்பத்தில் தீபேத் புரட்சி போர்வீரர்கள் சீன சோல்ஜர்களை சம்மாரம்செய்து கொண்டே வந்தனர். எனினும் சீன ராணுவங்கள் மலைபோல் திரண்டு 3 வார காலம் தீபேத் புரட்சிப் படைகளைத் தாக்கி போர்புரிந்து மேற்படி சேகர்சாங் பிரதேசத்தை தீபேத்தியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். மேற்படி 3 வார போராட்டங்களில் இருதரப்பிலும் ஏராளமானோர் மாண்டு மடிந்தனர்.

நேப்பாளத்தின் வடமேற்கிலுள்ள முஷ்டாங் பட்டணத்திலிருந்து வடக்கே 50 மைல் தூரத்திலுள்ள சாகா எனுமிடத்தில் சீன ராணுவங்களுக்கும் தீபேத் புரட்சிப் படைகளுக்குமிடையே இப்போதும் போராட்டம் நடைபெற்றுவருகிறது. முதல்நாள் போராட்டத்தில் 200 சீன சோல்ஜர்கள் மாண்டு போயினர். தீபேத் புரட்சிப் படைகளுக்கு அதிக சேதம் ஏற்படவில்லை ஏனெனில் இவர்கள் சீன சோல்ஜர்களை திடீர் திடீரெனத் தாக்கிவிட்டு மறைந்துவிடுகிறார்களாம்.

சீனர்கள் திண்டாட்டம்

சாகாப் பிரதேசத்தில் உள்ள பாதைகளை புரட்சிப் படைகள் சேதப்படுத்திவிட்டன. இதனால் அம்மார்க்கத்தில்போய்வந்த சீனர்களின் சாமான்களை வழிமறித்து புரட்சிப் படையினர் அவைகளை கைவசப்படுத்திக் கொண்டனர். ஆனால் இரண்டொரு சமயங்களில் சீன சோல்ஜர்கள் நேப்பாளத்திற்குள் நுழைந்துவிட்டதாக காட்மாண்டு பட்டணத்திற்கு தகவல் கிடைத்தன. சீன சிப்பந்திகள் நேப்பாள எல்லைக்குள் நுழைந்து அங்குள்ள இடங்களை சர்வே செய்துகொண்டு வருவதாகவும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. தீபேத் எல்லையில் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. சென்ற சில தினங்களுக்குள் சுமார் 5000 அகதிகள் தீபேத் எல்லையைக் கடந்து நேப்பாள எல்லைக்குள் வந்துள்ளனர். இவர்களை பாதுகாக்க உடனே ஏற்பாடுசெய்தனர்.

கே. என். டி. ஓ. அட்டகாசம்

கிராமத்தை சூரையாடினர்

ஸட்டோன் ஜூலை 11—

40 கே. என் டி. கலகக்காரர்கள் பீலிங்டவுன்ஷிப்பில் உள்ள மெய்ங்குபுன் கிராமத்தில் ஜூலை மாதம் 5-ந் தேதி முற்றுகையிட்டனர். இந்த கிராமத்தை லூட்டடித்ததோடு 3000 ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை எடுத்துக் கொண்டனர். 6 ஸ்திரிகளையும் ஓர் குழந்தையையும் தம்முடன் ஈடாக அழைத்துச்சென்றனர்

அன்றுதினம் இரவு 8 மணிக்கு கலகக்காரர்கள் பிரஸ்தாபக் கிராமத்தில் புகுந்தார்கள். கிராம பாதுகாப்பு படையினர் இந்த கலகக்காரர்களை எதிர்த்தார்கள் கலகக்காரர்களின் தொகை அதிகமாக இருந்ததால் கிராம பாதுகாப்பு படையினர் பின்வாங்க நேரிட்டது. கிராம பாதுகாப்பு படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோதிலும் கலக கோஷ்டியினர் எந்திர பீரங்கிகளை கொண்டு தாக்கி கிராமத்திற்குள் புகுந்து பல சொத்துக்களை கொள்ளையடித்தனர். 3000 ரூபாய் மதிப்புள்ள 5 குதிரைகளையும் இரண்டு கால்நடைகளையும் கைப்பற்றி சென்றனர்,

விமானத்தில் பிரயாணம் செய்யவேண்டுமா?

சகல பணிகளுக்கும் நம்பிக்கை, நாணயம், உண்மை உத்திரவாதத்திற்கு ஒரே இடம்.

கார்டியன் டிராவல் ஏஜென்ஸி,

ஆட்டோ:- 11818 299, பார்வீதி, இரங்கூன்

பொறுப்பாளன்:- செ. முகம்மது யூனூஸ்

அரசாங்க பஞ்சு நெசவாலை
(கைத்தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷன்) தம்மைங்

டெண்டர் அறிக்கை

தம்மாங்கியிலுள்ள பர்மா சர்க்காருக்குச் சொந்தமான பஞ்சு நெசவாலையில் உற்பத்தி செய்யப்படும் இதன் கீழ்க்கண்ட துணிகளை வாங்கிக்கொள்வதற்கு டெண்டர்கள் தேவை. இத்தகைய டெண்டர்களை இதன் கீழ் கையொப்பமிட்டுள்ள அதிகாரியின் காரியாலயத்திற்கு நிகழும் 1960-ம் வருடம் ஜூலை மாதம் 20-ந்தேதி புதன்கிழமையன்று மாலை நான்குமணிக்குள் அனுப்பிவைத்துவிட வேண்டும். இந்த டெண்டர் சம்மந்தமான பாரம், விபர லிஸ்ட் முதலியவைகளை செட் 1-க்கு இரண்டு (2 ரூபாய் வீதம் இதன் கீழ்க்கண்ட அதிகாரியின் காரியாலயத்தில் காரியாலய வேலை நேரங்களில்வந்து வாங்கிக்கொள்ளலாம்.

துணிகளின் விபரம்	கெஜம்
1. ஸ்டைல் நெ. 1, சாம்பல் நிறத்துணி, அகலம் 41"—43"	200,000
2. பி-6 சாம்பல் நிறத்துணி, அகலம் 36"	304,000

ஒப்பம் (அவ்ங்மின்)
பிரதம நிர்வாக அதிகாரி,
3—2 அரசாங்க நெசவாலை (ச. ட. ல க) தம்மைங்.

உங்களுடைய வலியைப்போக்கஉயர்ந்த "பாம்" வேண்டுமா?

அது தான்

'ஓரல்டுஅண்டு'டிராகன் மார்க்கா பாம்'

இது சர்வரோக நிவாரணி என்பதைமறந்துவிடக்கூடாது



சிறிய போத்தல் 1-க்கு அணா 6
மத்திபமான போத்தல் 1-க்கு அணா 12
பெரிய போத்தல் 1-க்கு ரூபாய் 1-8-0

ஓரல்டு அண்டு டிராகன் என்ற பெயரை கேட்டு பார்த்து வாங்குங்கள்

எங்ஹாங்டங் மெடிகல் ஹால்,
நெ. 654, டலவுசி வீதி, இரங்கூன்.

யூனியன் கட்சி அமைப்பாளர் பயிற்சி பூர்த்திபெற்றது

கல்வி மந்திரி டாக்டர் ஏமவ்ங் உபதேசம்

இரங்கூன் ஜூலை 11—

ஜூலைமாதம் 4 ந் தேதியன்று கபாயேபய்யாவில் ஆரம்பமான யூனியன் கட்சி அமைப்பாளர் பயிற்சி வகுப்பு ஞாயிறன்று முடிவுபெற்றது. இதற்கென ஓர் விசேஷ வைபவம் கல்வி நீதி இலாகா மந்திரி டாக்டர் ஏமவ்ங் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மொத்தம் 119 அமைப்பாளர்கள் தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டார்கள். இவ்வைபவத்தில் டாக்டர் ஏமவ்ங் அவர்கள் பேசியதாவது:—

நீங்களனைவரும் தலைமைக் காரியாலயத்தின் பிரதிநிதிகள் ஆகவே யூனியன் கட்சி தலைமைக் காரியாலயத்தின் கொள்கைகளை செயலாற்றுவது உங்களைப் பொருத்திருக்கிறது. இப்பொழுது நீங்களனைவரும் ஸ்தாபன அமைப்புக் கொள்கைபற்றிய கொள்கைகளை அறிந்திருக்கிறீர்கள். ஆனால் இக்கொள்கைகளை செயலாற்றுவதில்தான் அதிக சிக்கல்கள் ஏற்படக்கூடும்.

கடந்த 10 வருடகாலமாக பஸபலா ஆட்சியில் பல தவறுதல்கள் ஏற்பட்டுள்ளன' அத்தகைய தவறுதல்களை நீங்கள் செய்யலாகாது. அமைப்பு வேலைகளை கவனிக்கும்பொழுது நீங்கள் எதிர்ப்பு உணர்ச்சியிலும அபிப்பிராய மோதுதலிலும் ஈடுபடக்கூடாது.

தக்கின்டின்டின் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு சர்டிபிகேட்டுகள் வழங்கினார். அவர் பயிற்சியாளரிடையே பேசுகையில் கூறியதாவது:—

நீங்கள் அமைப்பு வேலைகளை அதிக ஆர்வத்துடன் கவனிக்கவேண்டும். கற்பாதை போன்ற உறுதியான கற்களைக் கொண்டு கட்டிடத்தைக் கட்டவேண்டு மேயொழிய மணலைக்கொண்டு கட்டடம் கட்டக்கூடாது. உலகம் சதா மாறிக் கொண்டேவருகிறது. அரசியல் என்பது ஓர் பரந்த விஷயம்' அரசியலில் ஈடுபடும் போது சதா சர்வகாலம் படிப்பும், ஆராய்ச்சியும் அதிகம் தேவைப்படும்.

இந்த பயிற்சி பூர்த்தி வைபவத்திற்கு மந்திரி ஊத்துவின் பார்லிமெண்ட் காரியதரிசி ஊட்டின்ஊ, தக்கின் சோடூன், தக்கின் தெய்ன்மவ்ங் ஆகியோரும் மற்றும் யூனியன் கட்சித் தலைமைக் காரியாலத்தைச் சேர்ந்த பலரும் விஜயம் செய்திருந்தனர்.

மேற்கு நியூகினிக்கு ராணுவங்களை அனுப்பிவைப்பதேன்

சோஷலிஸ்ட் கட்சியினரின் கண்டனம்

ஹேக் ஜூலை 11—

டச்சுக்காரரின் ஆதிக்கத்தில் இருந்துவரும் மேற்கு நியூகினி பிரதேசத்திற்கு டச்சு சர்க்கார் ராணுவங்களை அனுப்பிக்கொண்டுவருவதை கண்டித்து இன்றுதினம் இங்கு ஆர்பாட்டம் நடைபெற்றது.

சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுமார் 150 பேர் இன்றுதினம் ஊர்வலமாகச் சென்று இங்குள்ள டச்சு சர்க்காரின் பாதுகாப்பிலாக்கா மந்திரியின் காரியாலயத்திற்கருகில் உட்கார்ந்து கொண்டு ஆர்பாட்டம் செய்தனர். மழை பெய்துகொண்டிருந்தும் இதை பொருட்படுத்தாது இவர்கள் 3 மணிநேரம் ஆர்பாட்டம் செய்தனர். மேற்கு நியூகினியில் டச்சுக்காரரின் ராணுவ பந்தோபஸ்துகளை கண்டித்து மேற்படி ஆர்பாட்டக்காரர்கள் டச்சு சர்க்காரின் பிரதம மந்திரி புரோபஸர் ஜான்கி என்பவருக்கு நாளையத்தினம் ஒரு மகஜரை சமர்ப்பிக்க முடிவுசெய்துள்ளனர்.

மாந்தலே டிப்டி கமிஷனருக்கு புதிய பதவி

இரங்கோன் ஜூலை 11—

பர்மா மந்திரி சபையின் கூட்டம் கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் தற்சமயம் மாந்தலேயில் டிப்டி கமிஷனராகவிருக்கும் ஊவின்மவுங் அவர்களை தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனுக்கு உதவி டைரக்டர் ஜெனரலாக நியப்பதென முடிவுகட்டப்பட்டது. ஊபாஸான் அவர்கள் தொழில் அபிவிருத்தி கார்ப்பரேஷனின் டைரக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டது அனைவருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அல்ஜீரியா பாழுங்கிணற்றில் விழுந்துவிடக்கூடாது

25,000 பேர் கூட்டத்தில் ஜெனரல் டீகால் கர்ஜனை

ரூஹான் ஜூலை 11—

பிரான்ஸ்தேச ஜனாதிபதி ஜெனரல் டீகால் கடந்த நான்கு நாட்களாக பிரான்ஸ்தேசத்தைச் சேர்ந்த நார்மண்டி பட்டணப்பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து நேற்றிரவு பிரான்ஸ் தேசத்தின் சரித்திரசம்பந்தமான ரூஹான் பட்டணத்திற்கு விஜயம் செய்தார்.

இவரைக் கண்டுகளிக்க சுமார் 25,000 பிரஞ்ச் பிரஜைகள் இங்குள்ள டவுன்ஹாலுக்கு முன்னிலையில் குழுமி இருந்தனர். ஜெனரல் டீகால் இங்கு வந்துசேர்ந்ததும் மக்கள் ஆனந்தம் அடைந்து அநேக நிமிடம்வரை கரகோஷம் செய்தனர். ஜெனரல் டீகால் இக்கூட்டத்தில் அல்ஜீரியா பிரச்னைகள் பற்றி பேசியபோது தெரிவித்ததாவது:—

அல்ஜீரியாவின் அரசியல் நாடகம் ஆறுவருடகாலமாக நடைபெற்றுவருகிறது. இந்த அரசியல் நாடகத்தை இத்துடன் ஓர்முடிவுக்கு கொண்டுவர பிரஞ்ச் சர்க்கார் விருப்பங்கொண்டுள்ளனர். தவிர இதுசம்பந்தமாக நடைபெறும் சம்பாஷணைகளில் அல்ஜீரியா பிரஜைகள் கலந்துகொள்ளவேண்டுமென்பது பிரஞ்ச் சர்க்காரின் விருப்பமாகும் இல்லையேல் இப்பிரச்னையில் ஓர் முடிவைக்காண்பது சாத்தியமல்ல அல்ஜீரியா பிரச்னையில் முடிவுகாணவேண்டுமானால் முதலில் அங்கு அமைதி ஏற்படவேண்டும். பிரஞ்ச் சர்க்கார் இதைப் பலதடவைகளில் தெரிவித்துள்ளனர் அல்ஜீரியாவில் அமைதி ஏற்படவேண்டுமானால் அங்கு நடைபெறும் படுகொலைகளும் பயங்கரச்செயல்களும் அடியோடு நிற்கவேண்டும். மேற்கொண்டும் மக்கள் படுகொலைப் புரியப்படுவதை நாம் ஒருபோதும் விரும்பமாட்டோம். வெகுசீக்கிரத்தில் அல்ஜீரியாவில் அமைதி ஏற்படப்போவது நிச்சயம். அரசியல் வெறிகொண்ட கூட்டத்தாருக்கு அல்ஜீரியாவில் இடமில்லை. அல்ஜீரியா பிரஜைகளனைவரும் ஒரே உறுதியுடன் நிகழ்ந்தால், அல்ஜீரியாவின் எதிர்காலம் சர்வஜன ஓட்மூலம் நிர்ணயிக்கப்படும்.

அல்ஜீரியாவின் எதிர்காலத்தை அல்ஜீரியாதேசமக்களே நிர்ணயித்துக்கொள்வது நலம். அல்ஜீரியா பாழுங்கிணற்றில் விழுமென நாம் நினைக்கவில்லை எதிர்காலத்தில் அல்ஜீரியாவுக்கும் பிரஞ்சுக்குமிடையே நெருங்கிய உறவு இருந்துவருமென்பது எனது நம்பிக்கையாகும்.



காலேஜ்-சப்ளைஸ் டீமை வெற்றிகண்டது

நேற்றுதினம் நடைபெற்ற லீக் போட்டியில் காலேஜ் சிவில் சப்ளைஸ் டீமை (4—1 கோல்களுடன் வெற்றி கண்டது

இன்றுதினம்

கஸ்டம்ஸ்—யூ. எம். பி. போட்டி நடைபெறும்.

இந்திய முக்கிய நகரின் உடைமைகளை பாதுகாக்கும் பொறுப்பு

புதியடெல்லி ஜூலை 11—

டெல்லி-பம்பாய்-கல்கத்தா ஹைதராபாத்-சிக்கந்தராபாத் ஆந்திரா ராஜ்ஜியத்திலுள்ள மற்ற நகர்கள் சென்னை—கோவை—சேலம்—திருச்சி—மதுரை எர்ணாக்குளம்-திருவாங்கூர் முதலிய நகரங்களில் உள்ள மத்திய சர்க்கார் உடைமைகளை காப்பாற்றும் பொறுப்பை விசேஷப் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயுதந்தாங்கிய விசேஷ போலீஸ் படையினர் இன்று பகல் 12 மணிக்குமேல் காவல் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

சட்டத்தை மீறிய 23 பேர்கள் கைது

இரங்கூன் ஜூலை 11—

சட்டவிரோதமான முறையில் இரங்கூனில் கீலி விற்பனை செய்த இருவர், ரோடோர ஜலக்குழாய்களில் ஸ்நானம் செய்த இருவர், விளக்கில்லாமல் சைக்கிள் சவாரி செய்த ஒருவர், ரஸ்தாக்களை அடைத்துக்கொண்டிருந்த 6 பேர்கள், சூதாடிய 12 பேர்கள் ஆகமொத்தம் 23 பேர்களை இரங்கூன் போலீஸ் கோஷ்டியினர் இன்றுதினம் சட்டப்படி கைது செய்தனர்.

சுவீடன் டென்னிஸ் போட்டி

விம்பில்டன் போட்டி செமி பைனலில் கிருஷ்ணனை வெற்றிகண்ட சாம்பியன் நீல்பிரேஸரை

சுவீடன் போட்டியில் கிருஷ்ணன் வெற்றிகண்டு பைனலுக்கு வந்துவிட்டார்

பாஸ்டாட் (சுவீடன்) ஜூலை 10—

விம்பில்டன் டென்னிஸ் போட்டியில் செமிபைனல்வரை பலதேச ஆட்டக்காரர்களை வெற்றியடைந்து செமிபைனலில் ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த நீல் பிரேசரிடம் இந்தியா சாம்பியனான ஆர். கிருஷ்ணன் தோல்வியுற்றது ரஸிகன் வாயிலாக ரஸிகர்கள் நன்கறிந்ததேயாகும். இதே பிரேஸர் விம்பில்டன் பைனலில் மற்றொரு ஆஸ்திரேலியாகாரரை வெற்றியடைந்து இவ்வருடத்திய சாம்பியனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன்பிறகு விம்பில்டன் டென்னிஸ் போன்றே அகிலதேச ஆட்டக்காரர்கள்கொண்ட சுவேடிஷ் இண்டர் நேஷனல்லான் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றுவந்தது. இப்போட்டியில் ஆர். கிருஷ்ணனும் கலந்து விளையாடி பலதேச ஆட்டக்காரர்களை வெற்றியடைந்து செமிபைனலுக்கு வந்தார்.

ஆர். கிருஷ்ணனுக்கும் இவ்வருடத்து விம்பில்டன் சாம்பியனும் விம்பில்டன் போட்டி செமிபைனலில் ஆர். கிருஷ்ணனை தோற்கடித்தவருமான ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த நீல் பிரேஸருக்குமிடையே நேற்றுதினம் முதலாவது செமிபைனல் ஆட்டம் நடைபெற்றது. இப்போட்டியில் ஆர். கிருஷ்ணன் அதே நீல்பிரேஸரை 6-3, 1-6, 6-1, 3-6, 6-4 பாய்ண்டுகளுடன் வெற்றியடைந்து பைனலுக்கு வந்துவிட்டார். சுவீடனில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் இப்போட்டிபோன்று எந்த போட்டியும் நடைபெறவில்லையாம் அவ்வளவு பலம் பொருந்திய போட்டியாக இப்போட்டி விளங்கியது. இவ்வாட்டத்தை பல ஆயிரக்கணக்கான ரஸிகர்கள் பார்த்து இந்திய ஆட்டக்காரரின் திறமையை மிகவும் பாராட்டியுள்ளனர்.

பிரதமர் வருகையில் ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

மாந்தலே ஜூலை 11—

நேற்றுமுன்தினம் பர்மா பிரதமரும், யூனியன் கட்சியின் தலைவருமான கனம் ஊநூ அவர்கள் மந்திரி போமூ அவுங், போமிங்கௌங், மந்திரி ஊபாசோ ஆகியோருடன் இவண்வந்தடைந்தார். அவர் தம் கோஷ்டியினருடன் மாந்தலே சான்மியாதாஸி விமானத்திடலிலிருந்து நகரைநோக்கி வந்துகொண்டிருக்கையில், பாதையின் இருபுறங்களிலும் பர்மா முஸ்லிம்கள் சுமார் ஆயிரம் பேர்கள் கைகளில் போஸ்டர்களுடன் நின்று பல சுலோகங்களை கோஷித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேற்கண்ட ஆர்ப்பாட்டத்தின் காரணத்தை விசாரிக்கையில் கடந்த குர்பானி தினத்தன்று மாந்தலே செச்சாலுவேஸின் அம்மியவ்ட்டானில் அரசாங்கத்தின் அனுமதிக்குமேல் மூன்றுமாடுகளை அதிகமாக குர்பானி செய்ததை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சட்டப்படிக்கு நடவடிக்கை எடுத்து அதில் சம்பந்தப்பட்ட 21 பேர்களை கைதுசெய்து சமீபத்தில் ஜாமீனில் விடுதலை செய்திருந்ததானது அவர்களுக்கு அதிருப்தியை கொடுத்துவருவதால் அவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்ததாக கூறப்படுகிறது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதமர் கனம் ஊநூ அவர்களை இங்குள்ள பர்மா முஸ்லிம் முக்கியஸ்தர்கள் கண்டு சம்பாஷிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

யூனியன் கட்சி தலைவர் பதவியை ஊநூ ராஜிநாமா செய்வாரா?

இரங்கூன் ஜூலை 11—

பர்மாவில் ஆளும் கட்சியான யூனியன் கட்சி புதிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி யூனியன் கட்சிக்கு தலைவராகவும், காரியதரிசி, பொக்கிஷாதிபர், நிர்வாக மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் எல்லோரும் தற்காலிகமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர். எனவே மேற்படி ஆளும் கட்சிக்கு நிரந்தரமான தலைவரையும், நிர்வாக கமிட்டி மெம்பர்களையும் யூனியன் கட்சியின் சட்டதிட்டப்படி தேர்ந்தெடுப்பதற்காக அகில பர்மா யூனியன் கட்சி மகாநாடு ஒன்று விரைவில் நடத்திவைக்கப்படும் என்றும் இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் சம்பந்தப்பட்ட தலைவர்கள் துரிதமாகச் செய்துவருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

1961-ம் வருடத்தில் நடைபெறவிருக்கும் அகில பர்மா யூனியன் கட்சி மகாநாட்டில் நிரந்தர தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனினும், கனம் ஊநூ அவர்கள் யூனியன் கட்சியின் தலைவர் பதவியை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளாமல், யூனியன் கட்சியின் தற்காலிக தலைவர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்துவிடுவார் என்றும், ஆனால் பிரதமர் பதவியை கைவிட்டுவிடமாட்டார் என்றும் நம்பத்தகுந்த அரசியல் வட்டாரச் செய்தியொன்று கூறுகிறது.

பிரதம மந்திரி கனம் ஊநூ அவர்கள் யூனியன் கட்சி தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளமாட்டாராகையால் புதிய தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க யூனியன் கட்சியினர் ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர்.

இந்திய வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத ஸ்தாபனங்கள்

புதியடெல்லி ஜூலை 11—

மத்திய மராமத்து இலாகா ஊழியர்கள் அகில பாரத மராமத்து இலாகா ஊழியர்கள் எஸ்டேட் காரியாலய இலாகா ஊழியர்கள் ஆகியோர் வேலை நிறுத்தத்தில் சேரவில்லை என்று அறிக்கை விடுத்துள்ளனர்.

லூதியானா தபால் டெலிபோன் மூன்றாவது பிரிவுத் தொழிலாளர்கள் அஜ்மீர் டெல்லி மின்சாரத் தொழிலாளர்கள் காஷ்மீர் தந்தி தபால் ஊழியர் மூன்றாவது நான்காவது பிரிவினர் பம்பாய் தேசிய மஜ்தூர் ரயில்வே பிரிவினர் முதலியவர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளமாட்டார்கள்.

மத்திய அரசாங்க ஊழியர்களில் ஆயிரக்கணக்கானபேர் வேலைக்கு வரதிரேக நிலை இடமகொடுக்கவில்லை என்று அறிவித்துள்ளனர் இவர்கள் டாக்டர் சர்ட்டிபிகேட் அநுப்பிவைக்காதபோனால் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வார்கள் என்று தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாம் மாகாணத்தில் படுகொலைகள்

வீடுகள் லூட், தீவைக்கப்பட்டது

ஷில்லாங் பட்டணத்தில் மோசமான நிலைமை

காமரூப கிராமங்களில் 5 பேர் கொல்லப்பட்டனர்

கல்கத்தா ஜூலை 11—

கடந்த சில தினங்களாக அஸ்ஸாம் மாகாணத்தில் கொலைகளும் கொள்ளைகளும், தீவைத்தலும் அளவு கடந்துவிட்டதால் இந்திய ராணுவங்கள் ஆயுத பலத்தால் இதைஅடக்க ஆரம்பித்துவிட்டனர். இவ்விதக் கலகங்களில் 11 பேர் மாண்டுமடிந்தனர், அநேக ஆயிரம்பேர் காயமடைந்தனர். தவிர அஸ்ஸாம் மாகாணத்தில் தந்தி—தபால் போக்குவரத்து, ரயில்போக்குவரத்து, மோட்டார் போக்குவரத்து முதலியவை அடியோடு நின்றுவிட்டது.

அஸ்ஸாமியர்களுக்கும் பெங்காளிகளுக்குமிடையே பல தடவைகளில் மோதுதல் ஏற்பட்டதால் பெங்காளிகளுக்கு பெருத்தசேதம் ஏற்பட்டது. அநேக ஆயிரம் பெங்காளிகள் நேற்றுதினம் அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்குள் நுழைந்துவிட்டனர். இந்தியா ஏர்லைன்ஸ் விமானக் கம்பேனியைச் சேர்ந்த இரண்டு ஸ்பெஷல் விமானங்கள் கோஹத்தியிலுள்ள பெங்காளிகளை மேற்கு வங்காளத்திற்கு கொண்டுவந்து சேர்த்தன.

வீடுகளுக்குத்தகனம்

அஸ்ஸாம் மாகாணத்தின் தலைநகரான ஷில்லாங் பட்டணத்திலும் கலகம் ஆரம்பமாகிவிட்டது. பிரம்மபுத்ரா நதியோரத்தில் காமரூப கிராமங்களில் 5 பேர் கொல்லப்பட்டனர், அநேகம் பேர் காயமடைந்தனர். மேற்கொண்டும் கலகம் ஏற்படாமலிருக்க உள்ளூர் அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டனர்.

நேற்றிரவு அஸ்ஸாம் எல்லையில் கலகக்கூட்டத்தார் கையோங்கிவிட்டனர். இவர்கள் அநேக வீடுகளுக்குள் நுழைந்து எல்லா சொத்துக்களையும் லூட்டடித்துக்கொண்டு அவ்வீடுகளுக்கு தீவைத்துவிட்டனர். அதுசமயம் ஏறபட்ட அடிதடி கலகத்தில் 12 பேர் காயமடைந்தனர். போலீஸ் படைகள் அப்பகுதிக்கு விரைந்துசென்று கலகத்தையடக்கி அநேகமபேரை கைது செய்து காவலில்வைத்தனர். பாஷைத் தகராறுக்கு பக்கபலமாக இருந்தவர்கள் இன்றுதினம் பலமாகத்தாக்கப்பட்டனர். ஷில்லாங் பட்டணத்தில் கலகத்தை முன்னிட்டு ஊரடங்குச் சட்டம் அமலுக்குக்கொண்டுவரப்பட்டது. இமமாகாணத்தில் ரயில் போக்குவரத்து, மோட்டார் போக்குவரத்து, டெலிபோன் போக்குவரத்து தடுமாறிவிட்டது. மேற்படி போக்குவரத்துகளுக்கு பக்கபலமாகவிருந்த உத்தியோகஸ்தர்களனைவரும் பீதியடைந்து நாலாதிசைகளுக்கு தப்பி ஓடிவிட்டதால் இவ்வித நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அஸ்ஸாமைச்சேர்ந்த எல்லா முக்கியமான இடங்களில் இராணுவங்கள் இடைவிடாது பாராகொடுத்து வருகின்றன. அஸ்ஸாம் மாகாண கவர்னர் இம்மாகாண நிகழ்ச்சிகளை நிமிஷத்திற்கு நிமிஷம் விசாரித்துக்கொண்டு வருகிறார். ராணுவங்களின் உதவியால் மேற்படி கலகத்தை ஒடுக்கிவிட முடியுமென அதிகாரிகள் நம்புவதாக உள்ளூர் தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அமெரிக்கரின் சொத்துகளை தேசியமயமாக்கு

இந்தோனேஷியா தொழிலாளர் யூனியன் ஆலோசனை

ஜாகர்தா ஜூலை 11—

மேற்கு நியூகினியில் நடைபெற்றுவரும் டச்சுக்காரரின் முஸ்தீபுகளை அமெரிக்க சர்க்கார் ஆதரித்தால் இந்தோனேஷியா மக்கள் அமெரிக்கர்மீது துவேஷங்கொண்டுவிட்டனர். இந்தோனேஷியாவில் உள்ள அமெரிக்கரின் சொத்துகளை தேசியமயமாக்கிவிடவேண்டுமென இந்தோனேஷியா தொழிலாளர் யூனியன் நிர்வாகஸ்தர்கள் இந்தோனேஷியா சர்க்காருக்கு சிபார்சு செய்துள்ளனர். இந்த சிபார்சின் விபரம் வருமாறு:—

டச்சுக்காரர் மேற்கு நியூகினியில் ராணுவ முஸ்தீபுகளை செய்துகொண்டு வருகின்றனர் இதை இந்தோனேஷியா சர்க்கார் கண்டித்துக்கொண்டுவந்த சமயத்தில் அமெரிக்கர் டச்சுக்காரரின் செயலை ஆதரிக்க முன்வந்தனர் ஆனதால் அமெரிக்கருக்கு இந்தோனேஷியா மீது நல்லெண்ணம் கிடையாது. எனவே இந்தோனேஷியாவில் உள்ள அமெரிக்கர் சொத்துகளை சர்க்கார் தேசியமயமாக்கவேண்டும்.

இந்திய யுத்தக் கப்பல்கள் தயார்

விமானங்கள் வட்டமிட்டவண்ணம் இருக்கும்

புதியடெல்லி ஜூலை 11—

இந்தியாவில் வேலைநிறுத்தம் ஏற்பட்டால் அதுசமயம் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு அவசரமாக உதவிபுரிய இந்திய கடற்படை கப்பல்களுக்கு உத்தரவு கிடைத்துள்ளது.

ஐ. என். எஸ். டெல்லி ரஞ்சிட், ராணா முதலிய மூன்று யுத்தக் கப்பல்கள் சென்னை பம்பாய் கொச்சி, விசாகப் பட்டணம் மார்க்கங்களில் நடமாடிக் கொண்டிருக்கும் இதேபோன்று இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் அடிக்கடி வட்டமிட்டவண்ணமிருக்கும். இந்தியாவில் வைக்கவுண்ட் விமானங்கள் வழக்கம்போல் போய்வரும். ஏதேனும் ஓர் இடத்தில் அசம்பாவிதம் ஏற்பட்டால் அதை ரேடியோமூலம் தெரிவிக்க மேற்படி யுத்தக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் உத்தரவு கிடைத்துள்ளது.

நேப்பாள மன்னர் புதியடெல்லி வருகிறார்

சீனா—நேப்பாள எல்லைத் தகராறுபற்றி பேசுவார்

புதியடெல்லி ஜூலை 11—

நேப்பாள் தேசத்தின் மகேந்திர மன்னர் ஜூலை 20-ந் தேதியன்று புதியடெல்லி வந்துசேருவார். இவர் சீனா—நேப்பாள் எல்லைத்தகராறுபற்றி இந்தியா பிரதமர் பண்டிதநேரு அவர்களைச் சந்தித்து சம்பாஷிப்பார். மகேந்திர மன்னர் புதியடெல்லியில் 4 நாட்கள் வரை தங்கி இருப்பார்.

இவர் இந்தியா சர்க்காரின் பாதுகாப்பிலாகா மந்திரி ஸ்ரீ கிருஷ்ணமேனன் அவர்களையும் மற்றும் பல மந்திரிமார்களையும் சந்தித்து சம்பாஷிப்பார்.

இதுபற்றி புதியடெல்லியிலுள்ள நேப்பாள் தூதர் காரியாலயத்தின் பேச்சாளர் ஒருவர் அபிப்பிராயம் கூறியபோது, சீனா-நேப்பாள எல்லைத்தகராறு பிரமாதமான நிலைமைக்கு வந்துவிட்டதால் இதன் விபரங்களை இந்தியா பிரதமரிடம் முறையிட்டுக்கொள்ளவே மகேந்திர மன்னர் புதியடெல்லிக்கு விஜயம் செய்ய முடிவுசெய்ததாகவும், கம்யூனிஸ்ட் சீனாவின் ராணுவங்கள் திடீரென நேப்பாளத்திற்குள் நுழைந்தால் இதை எவ்விதம் சமாளிக்கவேண்டும் என்பதுபற்றி நேருஜியுடன் கலந்தாலோசிப்பதற்காகவும் மகேந்திர மன்னர் புதியடெல்லிக்கு வருகிறார் என்பதாகத் தெரிவித்தார்.

பரம்பரை ஜோஸியர்

வருங்காலத்தை முன்னெச்சரிக்கையுடன்சொல்பவர். காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்க்கலாம்.

முத்தளகு பிள்ளை

325 ஸ்பார்க்வீதி இரங்கூன்

2-வது மகத்தான வாரம்
தேவானந்த், நூட்டன் நடித்த "மன்ஸில்"
ராக்ஸி சினிமாவில் ROXY
15-7-60 வெள்ளி முதல்


நடிகர்கள்:—அதிசய குழந்தை ஈரானி, ராஜேந்திரகுமார், காமினி கதம், ராதாகிஷன், யசோதா கட்ஜுசஜன், மற்றும் பலர் நடித்தது
"தலாக்"
இப்பொழுதே உங்கள் இடங்களை பதிவு செய்யுங்கள்

2-வது மகத்தான வாரம்
ஜோதி சினிமாவில் JYOTI
"சுஜாதா"
நூட்டன், சுனில்டட், சஷிகலா, மற்றும் பலர் நடித்தது.
காக்ஷி நேரம் வழக்கம்போல்
வருகிறது:— ஏ. வி. எம். "பர்க்கா"

இன்றே கடைசி நாள்
கமாயுட் மியானான் தெய்ன்ஜி சினிமாவில்
"பாகப் பிரிவினை"
சிவாஜி கணேசன், சரோஜாதேவி, டி. எஸ். பாலையா
மற்றும் பலர் நடித்தது
தினசரி 2 காக்ஷிகள் 6-15, 9-30 மணிக்கு

பெல்ஜியம் படைகள் வந்துவிட்டன

காங்கோ சோல்ஜர்கள் சரணடைந்துவிட்டனர்

அகதிகளின் உதவிக்கு பிரிட்டிஷ் ராணுவ விமானங்கள்

புரூசல்ஸ் ஜூலை 11—

பெல்ஜியம் காங்கோ தேசத்தில் ஏற்பட்ட குழப்பத்தையக்க பெல்ஜியம் தேச சோல்ஜர்கள் அனேக ஆகாய விமானங்களில் லியோபோல்வில்லி பட்டணத்திற்கு வந்து சேர்ந்துவிட்டனர்

மேற்படி பெல்ஜியம் தேச பிரஜைகள் துப்பாக்கி பிரயோகம் செய்யாமலேயே கலகம் அடங்கிவிட்டது.

தற்போது காங்கோவில் 2500 உள்ளூர் சோல்ஜர்கள் இருந்துவருகின்றனர். இவர்களுக்கு 1000 பெல்ஜியம் தேச ஆபீஸர்கள் இருந்துவருகின்றனர். காங்கோ தேச மாஜி மந்திரி ஜோசப் மவுங்பாட்டோ என்பவர் காங்கோ புதிய ராணுவங்களின் சேனாதிபதியாக இன்று நியமிக்கப்பட்டார். இவர் இப்பதவிக்கு வந்ததும் அவசர அறிக்கையொன்றை விடுத்தார். காங்கோ தேசம் நமது சொந்த நாடாகிவிட்டது. ஆனதால் காங்கோ தேசத்தை சோந்த எல்லா நாடுகளிலும் பூர்ண அமைதி நிலவி இருக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் காங்கோ தேச சோல்ஜர்கள் இவர்கள் இஷ்டப்படி தங்களுடைய கமாண்டர்களை தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமெனவும் இவர்கள் இஷ்டப்படாத கமாண்டர்கள் டிஸ்மிஸ் செய்யப்படுவார்களெனவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது ராணுவங்களிலிருந்து விலக்கப்பட்டவர்கள் அவரவர்களின் இல்லத்திற்கு ராணுவபாராவுடன் கொண்டுபோய் சேர்க்கப்படுவர். உள்ளூர் படைகளின் அதிகாரத்தின் கீழ் உத்தியோகம்புரிய இஷ்டமில்லையென பெல்ஜியம் ஆபீஸர்கள் தெரிவித்துவிட்டனர்.

இத்தாலி தூதர் படுகொலை

நேற்று இரவு காங்கோ சோல்ஜர்கள் எலிஸபேத் வில்லி எனுமிடத்தில் பெரும் குழப்பத்தில் இறங்கிவிட்டனர். அதுசமயம் ஏற்பட்ட பயங்கரமான நிலைமையில் பெல்ஜியம் ஆபீஸர்கள் இரண்டுபேரும் ஐரோப்பிய சிவில் பிரஜைகள் இரண்டுபேரும் கொல்லப்பட்டனர். இத்தாலிதேச தூதரும் கொல்லப்பட்டார்.

4 பிரமாண்டமான விமானங்களில் பெல்ஜியம் தேச சூராவளி படையைச் சேர்ந்த 300 பேர் இன்று காலையில் எலிஸபெத் வில்லிபட்டணம் வந்துசேர்ந்தனர் இவர்களைகண்டதும் காங்கோ சோல்ஜர்கள் தங்கள் வசமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்தனர். ஆனால் சிலர் ஆயுதங்களுடன் கம்பி நீட்டிவிட்டனர்.

கட்டாங்பிரதேசத்தில் வசித்துவந்த வெள்ளையர்கள் அனேக மோட்டார் வண்டிகளில் ரொடிஷியா தேசத்திற்கு புறப்பட்டுவிட்டனர்.

பெல்ஜியம்தேச சூராவளி படைகளும், குடைதுருப்புகளும் காங்கோவுக்கு வந்துசேர்ந்ததும், காங்கோவில் உள்ளூர் சோல்ஜர்களின் அட்டகாசம் அடங்கிவருவதாக உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கிழந்தான் சுல்தான் அடக்க வைபவம்

சுல்தானின் புதல்வர் சுல்தானானார்

கோட்டாபாரு ஜூலை 11—

மலாயாவைச் சேர்ந்த கிழந்தான் ஸ்டேட் சுல்தான் இப்ராஹிம் இப்னி-அல்-மர்ஹும் சுல்தான் முகமது அவர்கள் நேற்று முன்தினம் கோட்டாபாரு பட்டணத்திலுள்ள இவருடைய மாளிகையில் காலமானார். இவருக்கு வயது 63.

முஸ்லிம் மன்னர் பரம்பரையான சடங்குகளுடன் சுல்தானின் சடலம் நேற்றுதினம் அடக்கம் செய்யப்பட்டது சில தினங்களுக்கு முன் இவருக்கு மூளை கொதிப்பு ஏற்பட்டது. அனேக டாக்டர்கள் இவருக்கு எவ்வளவோ சிகிச்சை புரிந்தும் குணமடையாது உயிர்நீத்தார். மலாயா தேச மன்னரும் பிரதம மந்திரியும் மற்றும் முக்கியமான மௌலவிமார்களும் தலைவர்களும் பிரேத அடக்க வைபவத்தில் கலந்து கொண்டனர்.

தாய்லாந்துஎல்லையிலுள்ள மலாயா ஸ்டேட் சிற்றரசரான யாந்தராமத் மூலியா துங்குயாகியா பெட்ரா இப்னி-அல்-மர்ஹும் சுல்தான் இப்ராஹிம் (காலஞ்சென்ற சுல்தான் புதல்வர்) அவர்கள் மேற்படி கிழந்தான் எஸ்டேட் சுல்தான் என பிரகடனம் செய்யப்பட்டது. இவருக்கு வயது 42. இவருடைய தந்தையைப் போலவே இவரும் இங்கிலாந்தில் கல்வியில் பயிற்சி பெற்றவர்.

குப்பை கூட்டிகளுக்கு குறுகிய கைப்பிடியுள்ள விளக்குமாறுகளா?

இந்திய பிரதமர் ஸ்ரீ நேருவின் ஆலோசனை

புதியடெல்லி ஜூலை 11—

இந்தியா பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியா யூனியனைச் சேர்ந்த 15 மாகாணங்களின் முதல் மந்திரிமார்களுக்கு ஓர் விசேஷ அறிக்கையை அனுப்பிவைத்துள்ளார். அதில் இவர் தெரிவித்திருப்பதாவது:—

இந்திய முனிஸிபாலிட்டிகளில் வேலை செய்யும் குப்பை கூட்டிகளுக்கு தற்போது மிக குட்டையான கைப்பிடியுள்ள விளக்குமாறுகள் சப்ளை செய்யப்பட்டு வருகின்றன. இதுநாட்டின் கௌரவத்திற்கு பாதகமாகும் தவிர இவ்வித குட்டையான கைப்பிடிகள் உள்ள விளக்குமாறுகளை உபயோகிக்க வேண்டுமானால் குனிந்துகொண்டு கஷ்டமாக குப்பைகூட்ட நேரிடுகிறது. இதனால் குப்பை கூட்டிகள் கஷ்டப்படுவது ஓர்புறமிருக்க இது பெரிய அடிமைத்தனத்தை காண்பிக்கிறது. புராண காலத்திய அர்த்தமற்ற பழக்கவழக்கத்தை நாம் ஏன் பின்பற்றவேண்டும் ஆனதால் எல்லா முனிஸிபாலிட்டிகளிலும் வேலை செய்யும் குப்பை கூட்டிகளுக்கு நீண்ட விளக்குமாறு கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாட்டிறைச்சியுடன் மாஞூன் கைது

இரங்கூன் ஜூலை 11—

கீமந்தான் கூன்யுவேடான் வீதியில் நேற்றுதினம் இரகஸியமாக மாட்டிறைச்சி விற்பனை செய்துகொண்டிருந்த டல்லா அல்லாச்சவ்ங் கிராமவாசி மாஞூன் என்பவனை கீமந்தான் போலீஸ் கோஷ்டியினர் சட்டப்படி கைது செய்தனர். இவளிடமிருந்து 4 விசை மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டது.

இளம் பெண்களை விபசாரத்திற்காக விற்றவர்கள் கைது

இரங்கூன் ஜூலை 11—

கிராமப்புறங்களிலிருந்து இளம் பெண்களைப் பலவகையிலும் ஏமாற்றி இரங்கூனுக்கு அழைத்துக்கொண்டு வந்து விபச்சார விடுதிகளில் விற்பனை செய்துவந்த தெங்காஞ்சூன் பவுட்டோவில் வாசம்செய்யும் மாப்பியூ, டாமுவே அஞாசூவில் வசிக்கும் மாஓன்ச்சீ ஆகிய இருவரையும் நேற்றுதினம் போலீஸ் கோஷ்டியினர் சட்டப்படி கைது செய்தனர்.

நகரிலே சிறந்த படமென படித்தவர்கள்
பாராட்டும் பண்புக்காவியம்
2-வது வாரம் ASHOK

ஜுபிலி பிலிம்ஸ்
கல்கியின்
பார்த்திபன் கனவு
டைரக்ஷன்
யோகானந்த்
வருகிறது அசோக்கில்
கண்ணதாசன் தயாரிப்பு
எம். ஆர். ராதா, டி. ஆர். மகாலிங்கம், சந்திரபாபு, பாலையா, மாலினி, ராஜசுலோசனா எம். என். ராஜம் ஆகியோர் நடித்த
கவலை இல்லாத மனிதன்
விஜயா தயாரிப்பு
ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். நம்பியார், ஜமுனா தங்கவேலு ஆகியோர் நடித்த
கடன் வாங்கி கல்யாணம்
எஸ் என். ராஜேந்திரன், சரோஜாதேவி, பிளாட்பாரம் ராஜகோபால், டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியோர் நடித்த
பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்
எம். ஆர். ராதா, குசலகுமாரி பத்மினி டி ஆர் மகாலிங்கம் ஆகியோர் நடித்தது விநாயகா பிக்சர்ஸ் தயாரிப்பு
இரத்தினபுரி இளவரசி

இப்பொழுது நடைபெறுகிறது
ரிட்ஸ் சினிமாவில் காட்சிநேரம் வழக்கம்போல் RITZ
உங்களின் கனவு நக்ஷத்திரம் தேவ் ஆனந்த், சுசீத்ராசென் (தேவதாஸ் புகழ்) நடித்த
"பம்பாய் கா பாபு"
மற்றும் துமல், நஸீர் உஸேன், அச்லாசச்தேவ், ரஷித்தகான் நடித்தது
திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் வழக்கம்போல் ஸ்திரீகளுக்கு தனி இடவசதி உண்டு
இன்றே உங்கள் இடங்களை முன்பதாக பதிவுசெய்து கொள்ளுங்கள்

இப்பொழுது நடைபெறுகிறது
ரீஜண்ட் சினிமாவில் THE REGENT
நர்கீஸ், ராஜ்கபூர் நடித்த ஏ. வி. எம். "சோரி சோரி"
15—7—60 வெள்ளிக்கிழமை முதல்
"சாந்தன்" (கலரில்நடனம்)
கிஷோர்குமார், நூட்டன், மாலாசின்ஹா, ஜானிவாக்கர் நடித்தது

கெயிட்டி
தமிழ் நாட்டிலுள்ள சிற்றரசர்களை எல்லாம் ஒன்று திரட்டி அழகாபுரி சாம் ராஜயத்தை கவிழ்க்க திட்டமிட்டான் சர்வாதிகாரி நஞ்சப்பன்
இந்த சதிகாரர்களை ஒழிக்க வாளெடுத்தான் "விஜயபுரி வீரன்"
மக்களின் ஏகோபித்த பாராட்டுதலுடன் நடைபெறுகிறது!
"விஜயபுரி வீரன்"
மின்னல் வேகத்தில் பாய்ந்து தாக்கினான் வீழ்ந்தது சதிக்கும்பல்கள் வெற்றி பெற்றான் விஜயபுரி வீரன் இவைகளை குடும்ப சகிதம் கண்டுகளியுங்கள்
GAIETY தினசரி 4 காட்சிகள்
12-15 3-30 6-30 9-30 மணி
நடிகர்கள்: சி. எஸ். ஆனந்தன், எஸ். ஏ. அசோகன், எஸ். வி. ராமதாஸ், பாண்டி செல்வராஜ், திருச்சி கணேசன், எஸ். ராமராவ், பி. பி, வைரம் ஸ்டண்ட் சாமிநாதன் மாஸ்டர்கோபால் எம். ஹேமலாதா, காமினி, ஆர். சந்திர காந்தா, டி. சண்முக சுந்தரி, மற்றும் பலர் நடித்தது

Printed and Published By K. S. P. Pillay at Rasika Ranjani Press, No. 317-323 Mg Taulay Street Rangoon. (Editors R. S. Pillay and S P. Ratnam)

பாக். ஆட்சியிடம் பிரிட்டிஷ் கரிசனை: நேரு வருத்தம்

கி. பாக். எல்லையில் சில சம்பவங்கள்
குட்டி ஆக்ரமிப்புகளே

மார் தட்டிக் கொள்ளும் முயற்சியாக இருக்கலாமென்கிறார் நேருஜி

போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்

புதுடில்லி, டிச. 10—கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் சில சம்பவங்கள் உண்மையிலே குட்டி ஆக்ரமிப்புச் செயல்களேயாகும் என்று இன்று நிருபர்கள் கூட்டத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ. நேரு எடுத்துரைத்தார்.

பாகிஸ்தானியர் ஏன் அவ்விதம் நடந்துகொண்டார்கள்? என்னால் காரணம் கூறமுடியாது. ஒருவேளை மார்தட்டிக் கொள்ளும் முயற்சியாக இருக்கலாம் என்றும் ஸ்ரீ. நேரு கூறினர்.

ஸ்ரீ. நேரு மேலும் சொன்னார்:

எல்லைப் பகுதிகள் போதிய அளவு காக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அடி மண்ணையும் பாதுகாப்பதென்பது முடியாத காரியம். ஆயினும் பந்தோபஸ்துக்குக் குறைவில்லை. ஸ்தல மக்களே ஆயுதபாணிகளாக்கலாம் என்று சிலர் யோசனை கூறுகிறார்கள். அது பலனளிக்காது. மீனவர் போன்ற வர்களே அந்த எல்லைப் பகுதிகளில் வசிக்கின்றனர். இதுவரை துப்பாக்கியை காணாதவர்கள் அவர்களே ஆயுதபாணிகளாக்கினால் வேறொரு ஆபத்து இருக்கிறது. எல்லை மீறிவரும் பாகிஸ்தானியர் அவர்களது ஆயுதங்களைப்பறித்துச் சென்றுவிடலாம்.

எட்டு ஆதிவாசிப் பெண்களை பாகிஸ்தானியர் கடத்திச் சென்று கொன்றுவிட்டதாக லோக சபையில் ஸ்ரீ ஜெய்பால் சிங் புகார் செய்தது குறித்து நிருபர்கள் கேள்வி கேட்டனர். சமீப காலத்தில் பலர் கடத்திச் செல்லப்பட்டது வாஸ்தவம். ஆனால் எனக்குத் தெரிந்தவரை இரண்டு பேர்களைத் தவிர மற்றவர்க ளெல்லோரும் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். அந்த இரண்டு பேரைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று பாகிஸ்தான் சர்க்கார் கூறியது. இரண்டு, மூன்று வருஷங்களுக்குமுன் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருக்கலாம் ஸ்ரீ ஜெய்பால்சிங் என்றார் பிரதம மந்திரி.

திட்டங்கள் பரிவர்த்தனையில் லாபம் இந்தியாவுக்கே

நேரு — நூன் ஒப்பந்தத்திலும், எல்லைத் திட்டங்கள் பரிவர்த்தனையிலும் பிசகு கிடையாது என்று பிரதம மந்திரி விளக்கினார்.

கூச் பிஹார் எல்லைத் திட்டங்களில் [illegible] ஏகரா பூமி மற்ற இடங்களில் ஒரு சில சதுர மைல் நிலம், இவை நான் பாகிஸ்தானுக்கு லாபம். மற்றபடி லாபமெல்லாம் இந்தியாவுக்கே என்று அவர் கூறினார்.

மேற்கு எல்லையில் சமீப காலத்தில் அத்துமீறல் சம்பவங்கள் நிகழவில்லை என்று ஸ்ரீ. நேரு குறிப்பிட்டார். அந்தப் பக்கத்தில் தகராறு இரண்டு விதம். சில சிறு பகுதிகள் குறித்துச் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் தரப்பிலிருந்து பத்து, பனிரெண்டுபேர் அவ்விடங்களில் வேண்டுமென்றே நுழைவார்கள். சண்டித்தனம் செய்வார்கள். ராஜஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் தரப்பிலிருந்து கொள்ளைக்காரர்கள் புகுந்து ஒட்டகங்களையும், மற்ற வளர்ப்புப் பிராணிகளையும் கவர்ந்து செல்வர். ஆனால் மொத்தத்தில் சமீப காலத்தில் மேற்கு எல்லையில் தகராறு இடையாதென்றே சொல்லவேண்டும் என்றார் ஸ்ரீ நேரு.

புதுவை ராஜ்ய வாக்காளர் ஜாபிதா
திருத்தியமைக்க உத்தரவு

(தினமணி நிருபர்)

காரைக்கால், டிச. 10—புதுவை ராஜ்யத்தின் வாக்காளர் ஜாபிதாவைப் பொதுவாகத் திருத்தியமைக்க புதுவை ராஜ்ய பிரதம தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார். இதற்கென சர்க்காரால், வாக்காளர் ஜாபிதா தயாரிப்பவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வாக்குரிமைக்கு யோக்கியதையுள்ளவர்களின் விவரங்களைக் குறித்துக் கொள்வதற்காக இவர்கள் 5-ந் தேதியிலிருந்து வீடு வீடாகச் சென்று தகவல் எடுத்து வருகிறார்கள். 20-ந் தேதிவரை இவர்கள் இவ் வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். 1-12-58-ல் 21 வயதுக்குக் குறைவில்லாதவர்களும் 30-11-58-ல் முடிவடையும் ஒரு வருஷ காலத்தில் 181 நாட்கள் புதுவை ராஜ்யத்தில் வசித்தவர்களுமாகிய பிரெஞ்சு அல்லது இந்திய பிரஜாவுரிமையுள்ளவர்கள் வாக்காளர்களாக இருக்க யோக்கியதை உள்ளவர்களாவார்கள்.

'சரித்திரத்தின் எச்சரிக்கைகள்'

பிரதி புதன் இரவு ரேடியோ பிரசங்கங்கள்

புதுடில்லி, டிச. 11—"சரித்திரத்தின் எச்சரிக்கைகள்" என்ற தலைப்பில் ஆறு அறிஞர்களின் பேச்சுகளை அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பும்.

நேற்று தொடங்கிய இந்தப் பிரசங்கத் தொடர் அடுத்துவரும் ஆறு புதன்கிழமைகளில் இரவு எட்டரை மணிக்கு இச்சொற்பொழிவுகள் ஒலிபரப்பப்படும். ஆகாசவாணியின் எல்லா நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

இன்று இரவு ஸ்ரீ. கே. எம். முன்ஷி பேசுவார்.

"சர்வாதிகாரிகளும், கொடுங்கோல் மன்னர்களும் தோன்றிய தெப்படி?" போராசிரியர் முஜீப் டிசம்பர் 17-ந் தேதி இரவு இதனை விளக்குவார்.

பாரபட்சமின்றி நீதி வழங்குவதும், நிர்வாகத்தவர் நெறி தவறுது நடப்பதும் எத்தனை அவசிய மானவை என்பதை எடுத்துரைக்க "காவலரும், சேவகரும்" என்ற தலைப்பில் டிசம்பர் 24-ந் தேதியன்று பேராசிரியர் சத்தியநாத அய்யர் சொற்பொழிவாற்றுவார்.

பிளவு சக்திகளுக்கும், ஒற்றுமை சக்திகளுக்கும் ஓயாத போராட்டம்: வரலாறு கற்பிக்கும் படிப்பினை என்ற தலைப்பில் டிசம்பர் 31-ந் தேதியன்று எடுத்துக்காட்டுவார் டாக்டர் தாராசந்த்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வு"; சரித்திரத்தின் எச்சரிக்கையை சுட்டிக்காட்டி 1959 ஜனவரி 7-ந் தேதியன்று சொற்பொழிவாற்றுவார் டாக்டர் மோதிசந்த்.

நாட்டின் நலிவு நீங்க, மக்கள் வாழ்வு மலர இராமங்கள் சுபிட்சமடைவதன் அத்தியாவசியத்தை விளக்கி 'அரண்மனை வாழ்வும், குடிசையில் அவதியும்' என்ற தலைப்பில் ஜனவரி 14-ந் தேதியன்று சர்தார் கே. எம். பணிக்கர் பிரசங்கம் புரிவார்.

கடுமையாக உழைபுங்கள்

நேருஜியின் புது வருஷ செய்தி

புதுடில்லி, டிச. 10—நாட்டுக்கு புது வருஷச் செய்தி அளிக்கும்படி இன்று நிருபர்கள் மகாநாட்டில் நேருஜியை ஒருவர் கேட்டார். "திடமாக இருங்கள், கடுமையாக உழையுங்கள்" என்று நேருஜி பதிலளித்தார்.

காரைக்குடி தேர்தல் வழக்கு

மதுரை, டிச. 9—காரைக்குடி தேர்தல் வழக்கில் நேற்று விசேஷ டிரிப்யூனல் ஸ்ரீ பி. கே. சுப்ரமண்ய அய்யர் முன்பு எதிர் மனுதார் வக்கீல் ஸ்ரீ ஆர். ஹரிஹர அய்யர் தொடர்ந்து வாதாடினார். பணங்குடி கிராமத்தில் மனுதாருக்கு தேர்தல் வேலை செய்த ஸ்ரீ கே. ஆர். ஏ. வேலு அம்பலத்தை இரு தினங்களில் எதிர் மனுதாரின் ஆதரவாளர்கள் மனுதாருக்கு வேலை செய்யக் கூடாதென தடுத்து பயமுறுத்தியதாகச் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு உண்மைச் சம்பவங்களில்லை என்றும் இவை பற்றி விடப்பட்டருசுக்கள் ஏற்கக்கூடியதன்மையில் சாட்டப்பட்ட குற்றம் ருசுப்பிக்கப்பட்ட விஷயமும் முரண்பாடாயுள்ள தென்றும் எடுத்துக் காட்டினார்.

வேலைக்குச் சரியாக வராததால் காரைக்குடி அழகப்பா டிரஸ்டில் வேலை பார்த்த ஸ்ரீ பி. எம். கிருஷ்ணபிள்ளையை அந்த டிரஸ்டின் காரியதரிசியும் எதிர்மனுதாரின் சகோதரி கணவருமான ஸ்ரீ சி. வி. சி. டி. வெங்கடாசலம் செட்டியார் வேலையிலிருந்து நீக்கிய சம்பவத்தை மனுதார் தனக்கு சாதகமாக பயன் படுத்திக் கொண்டு தனக்கு வேலை செய்ததற்காக ஸ்ரீ கிருஷ்ணபிள்ளையை ஸ்ரீ வெங்கடாசலம் செட்டியார் வேலையிலிருந்து நீக்கினர் என்ற குற்றச்சாட்டை மனுதார் ஜோடித்துள்ளார் என்றும் வாதாடினர். எனவே இந்தச் சம்பவத்துக்கும் எதிர் மனுதாருக்கும் எவ்விதத் சம்பந்தமும் கிடையாதென்றும். இது உண்மையற்ற குற்றச்சாட்டு என்றும் காட்டினர்.

எதிர்மனுதாரின் ஆதரவாளர்களான நாச்சியாபுரம் ஸ்ரீ சொக்கலிங்கஞ் செட்டியாரும் ஸ்ரீ ஆர். சாமிநாத அய்யரும் காரைக்குடி முனிசிபல் கவுன்சிலர்கள் இருவரிடம் போட்டர்களுக்கு தொடுப்பதற்காக தலா ரூ5000 கொடுத்தனரென்பதும் மற்றுமிரு கவுன்சிலர்களுக்கு இதே மாதிரி கொடுக்க முயற்சித்தனரென்று கூறப்படுவதும் நடைபெறுதற் நிகழ்ச்சிகள் என்றார். இம்மாதிரி நடந்ததாக சாட்சியம் கூறியுள்ள மனுதாரின் ஒரு சாட்சி காரைக்குடி கவுன்சிலர் ஸ்ரீ கண்ணப்பன் என்றும், இவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரென்றும் ஆரம்பம் முதல் இவர் மனுதாருக்கு தேர்தல் வேலை செய்தவரென்றும் இப்படிப்பட்ட ஒரு நபரிடம் எதிர் மனுதாருக்காக லஞ்சம் வழங்கப் பணம் கொடுக்கப்பட்ட தென்றும் ஏற்கமுடியாத ஒரு கூற்று என்றும் சொல்லி இந்தச் சம்பவம் பற்றி தேர்தல் மனுவில் குறித்திருப்பது வேறு, சாட்சிகள் வாக்குமூலம் அளித்திருப்பது வேறு என்று வக்கீல் எடுத்துக் காட்டினார்.

தஞ்சையில் ஆயிரக்கணக்கில் பீரங்கிக் குண்டுகள்!

சரபேந்திரராஜபுரம் அருகே பெரும் புதையல் கண்டுபிடிப்பு

விற்பனைக்காக லாரி நிறைய போய்க்கொண்டிருந்த 2000 குண்டுகளை தாசில்தார் கைப்பற்றினார்

(நமது நிருபர்)

தஞ்சாவூர், டிச. 10—சரபேந்திர ராஜபுரம் அருகே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதையலில் ஏராளமான பீரங்கி குண்டுகள் கிடைத்துள்ளன.

இப் பீரங்கி குண்டுகள் ஒவ்வொன்றும் 4, 12, 22 ராத்தல் எடை இருந்தன.

நெப்போலியனைத் தோற்கடித்து பிரிட்டிஷார் அடைந்த வெற்றியின் ஞாபகார்த்தமாக 1814-ல் சரபோஜி மகாராஜா அதிராமபட்டணம் கடற்கரையில் கட்டியுள்ள 'மனோரா'வுக்கு அருகே இப்புதையல் கிடைத்துள்ளது.

குடியானவர்கள் வயல்களைக் கொத்திக் கொண்டிருக்கையில் உருக்கும், உருக்குக் கலவையும் கலந்த பீரங்கி குண்டுகள் ஆயிரக்கணக்கில் கிடைத்திருப்பதாகவும் இவைகளைக் குடியானவர்கள் இவற்றின் உலோக மதிப்பாதலால் வண்டிகளிலும், லாரிகள் நிறையவும் ஏற்றி விற்றுக் கொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்ததன்பேரில் பட்டுக்கோட்டை தாசில்தார் ஸ்ரீ. பத்மரங்கையர் உடனே அக்கிராமத்திற்கு விரைந்தார். 2000 பீரங்கி குண்டுகளைக் கைப்பற்றினார். பிள்ளையார் திடல் கிராமத்தில் புதைப்பட்டிருந்த 600 பீரங்கி குண்டுகளையும்கைப்பற்றி புதையல் கிடைத்த இடத்தை சீல் வைத்து விட்டார். இங்கு ஏராளமான பீரங்கி குண்டுகள் புதைந்து கிடக்கு மென்று எதிர்பார்க்கப்படுகிறது.

போரா ஊரணி போலீஸாரும் ஒரு லாரி நிறைய பிரங்கி குண்டுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

இக்கண்டுபிடிப்பு பற்றி அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர். இப் பகுதியில் இன்னும் தோண்டினால் மேலும் பல சரித்திர முக்யத்வம் வாய்ந்த பொருட்கள் கிடைக்கலாம். (ந-தி)

என். ஜி. ஓ.வினருக்கு கிறஸ்மஸ் 'அட்வான்ஸ்'

சென்னை, டிச. 10—கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த என். ஜி. ஓ. வினருக்கு இவ்வருஷம் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக இரண்டு மாத அடிப்படைச் சம்பளம், அல்லது ரூ.120, இதில் எது குறைவோ அத்தொகையை முன் பணமாக (அட்வான்ஸ்) கொடுக்க சென்னை சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

இத்தொகை 10 மாத தவணைகளில் மீட்டுக் கொள்ளப்படும்.

இ. நா. டிச. 9—இ. நா.வில் இட மளிக்க பந்தோபஸ்து சபை மறுத்தது. தென் கொரியாவுக்கு இடமளிக்கும்படி மேற்கத்தியர் கொண்டுவந்த பிரேரணை ரஷியாவின் ரத்து அதிகார பிரயோகத்தால் தோற்கடிக்கப்பட்டது.

இ. நா.வில் இடம் தரும்படி தென் கொரியா சமர்ப்பித்த மனு மீதும் ரஷியா ரத்து அதிகாரத்தை பிரயோகித்தது.

ராணுவ சர்வாதிகாரத்தை ஆதரிப்பது தவறு என்கிறார்

"காமன்வெல்த்--ஜனநாயகத்துக்கு முரண்"

புதுடில்லி, டிச. 10—"காமன்வெல்த் நாடுகளில் சில முக்ய நாடுகள் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சிக்கு ஆதரவளிப்பது தவறான போக்கு என்பது உண்மையே. ஆனால் அதற்காக காமன்வெல்த்தாக ஆட்சி அமைப்பிலிருந்து கூட்டிலிருந்து இந்தியா விலகக் வேண்டுமென்பது சரியல்ல" என்று இன்று நிருபர்கள் மகாநாட்டில் பிரதம மந்திரி நேருஜி கூறினார்.

நேருஜி மேலும் சொன்னதாவது: பாகிஸ்தானிலுள்ள ராணுவ சர்வாதிகாரத்துக்கு ஆதரவளிப்பது காமன்வெல்த் உறவின் அடிப்படை ஜனநாயக தத்துவத்துக்கு முரணது.

"ஜனநாயகத்திலிருந்து விலகுவது கண்டு மனவருத்தம் அடைவதற்குப் பதிலாக அதை சிலகாமன்வெல்த் நாடுகள் வரவேற்பதுபோல் பேசுகிறார்கள்" என்றார்.

பாகிஸ்தான் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் சில நாட்களுக்குமுன் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஜனநாயக நாடுகளும் சர்வாதிகார நாடுகளும் கூட வாழ்வதில் ஆட்சேபமிருக்க முடியாதென்று பொருள் படும்படி பேசினார். அது நேருஜியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

நேருஜி மேலும் சொன்னதாவது: எல்லாவிதமான கூட்டு வாழ்வினும் இந்தியாவுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவைகளுடன் கூடி வாழ்வதா இல்லையா என்ற பிரச்னையல்ல. அவைகளுடன் கூடித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இப் பிரச்னை அதைவிட விரிவானது. சமீபகாலமாக ஜனநாயகம் அல்லது பார்லிமெண்டரி ஆட்சிமுறை சில நாடுகளில் கைவிடப் படுகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நாடுகள் வருத்தப்பட வேண்டியது தான் சகஜமாக இருக்கும். ஆனால் இப்போக்கை அவை வரவேற்பது போல் பேசுகின்றன. ஜனநாயகத்துக்கு விரோதமான போக்கிற்கு ஊக்கமளிப்பதாக ஏற்படுகிறது. தவறான போக்குக்கு ஊக்கமளிப்பது தவறான செயல் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

காமன்வெல்த்தை இரு உணர்ச்சிகள் இணைத்து வைக்கின்றன.

"மகத்தான தேச நல சக்தி"

வினோபாவின் பெருமை பற்றி நேரு

புதுடில்லி, டிச. 10—இந்தியாவின் நன்மைக்கான மகத்தான சக்தி ஆசார்ய வினோபா என்று நேருஜி இன்று நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

வினோபா பற்றி நேருஜி பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.—

"வினோபாஜியை நான் சிக்கிரத்தில் சந்திக்கப்போகிறேன். அவரைச் சந்திப்பது என்பது எப்பொழுதுமே எனக்கு மகிழ்ச்சியளிக்கும் விஷயம். சில விஷயங்களில் வினோபாஜியின் கருத்துக்கள் எனக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதாவது வாழ்க்கை பற்றிய எனது கருத்து வேறாக இருக்கலாம். ஆனால் வினோபாவை நான் பெரிதும் மதித்துப் போற்றுகிறேன். இந்தியாவின் நன்மைக்கான மகத்தான சக்தி அவர் என நான் நினைக்கிறேன். முடிந்தபொழுதெல்லாம் அவரிடமிருந்து நான் ஏதாவது கற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன்.

மத்திய சர்க்காரைவிட ராஜ்ய சர்க்கார்களின் வினோபாவின் தத்துவம் அதிகம் சுவர்ந்துள்ளனவே என்று ஒரு நிருபர் கேட்டதற்கு 'அப்படி இருந்தால் ரொம்ப நல்லது' என்று நேரு பதிலளித்தார்.

பொன்னுடை போர்த்த நிதி திரட்டியவர் கைது

திண்டுக்கல், டிச. 10—திண்டுக்கல் நகராட்சி உப தலைவர் ஸ்ரீ எம். எஸ். டி. பாலசுப்ரமண்யத்துக்கு பொன்னுடை போர்த்துவதாக நகரில் அநேக பிரமுகர்களை ஒன்றாற்றிப் பணம் வசூலித்த ஸ்ரீ கருப்பையா என்பவரை நேற்று, டவுன் வடக்கு சரகம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ செளந்தரபாண்டியன் கைது செய்து இ. பி. கோ. 420 பிரிவின் கீழ் வழக்குத் தாக்கல் செய்து புலன் விசாரணை செய்து வருகிறார்.

கொலை வழக்கு எதிரி தப்பி ஓடினார்

மதுரா, (ஆந்திரா), டிச. 10—கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட பாசம் ராமய்யா என்பவர் (வயது 25) சப்-ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவிட்டார். அவனை காவல் காப்பதற்காக வைக்கப்பட்டிருந்த நான்கு கான்ஸ்டேபிள்கள் 'சஸ்பென்ட்' செய்யப்பட்டனர். தப்பி ஓடியவர் திவிரமாக தேடப்பட்டு வருகிறார்.

ரஷியாவிடம் 8000 மைல் செல்லக்கூடிய பறக்கும் குண்டு

மிக மிக சக்தி வாய்ந்த அணுகுண்டும் இருக்கிறதாம்

வாஷிங்டன், டிச. 9—ரஷியாவிடம் 8000 மைல்வரை செல்லக் கூடிய பறக்கும் குண்டு இருக்கிறதாம். இத்தகவலை செனட்டர் ஹிம்ரேயிடம் ரஷிய பிரதமர் குருஷ்சேவ் தெரிவித்தாராம். செனட்டர் சில தினங்களுக்குமுன் குருஷ்சேவுடன் 8 மணி நேரம் சம்பாஷணை நடத்தியபொழுது இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ரஷியாவிடம் 50 லட்சம் டி. என். டி. சக்தியுள்ள அணுகுண்டு இருப்பதாகவும் குருஷ்சேவ் கூறினார். இன்று இத்தகவல்களை ஐஸன ஹவரிடம் செனட்டர் தெரிவித்தார்.

"மாணவரிடை கட்டுப்பாடின்மைக்கு உபாத்யாயர்கள் முக்ய காரணம்"

நேருஜியின் கருத்து

புதுடில்லி, டிச. 9—மாணவர் கலந்து கொள்கின்றனர். கள் உபாத்தியாயர்களால் நேரான முறையில் கட்டுப்படுத்த முடியாததுதான் மாணவர்களிடையே காணப்படும் கட்டுப்பாடின்மைக்கு முக்கிய காரணமென்று நேருஜி ஆதாரக் கல்வி நிர்வாகம் பற்றி பயிற்சி பெறுவதற்காக கூடியுள்ளோர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இதில் பல்வேறு ராஜ்யங்களிலிருந்து பலர் கலந்து கொள்கின்றனர்.

உபாத்தியாயர்கள் அடிக்கடி புது பாடிகளை பெற்றும், மகாராஷ்டிரா நடத்தியும் திறமையை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்றும், ஆதாரக் கல்வி மூலம்தான் குழந்தைகள் மனம் எல்லா வழிகளிலும் வளர்ச்சி பெறுமென்றும் கூறினார்.

நமக்குள்ள சொல்ப வசதியை வீண்விரயமாக்குந்த கட்டிடங்கள் கட்டுவதில் செலவிடக் கூடாதென்றும் புத்திமதி கூறினார்.

என். ஜி. ஓ.வினருக்கு கிறஸ்மஸ் 'அட்வான்ஸ்'

சென்னை, டிச. 10—கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த என். ஜி. ஓ. வினருக்கு இவ்வருஷம் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக இரண்டு மாத அடிப்படைச் சம்பளம், அல்லது ரூ.120, இதில் எது குறைவோ அத்தொகையை முன் பணமாக (அட்வான்ஸ்) கொடுக்க சென்னை சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

இத்தொகை 10 மாத தவணைகளில் மீட்டுக் கொள்ளப்படும்.

பழமையுடன் புதுமைத் தொடர்பு கொண்ட கவிஞர்

பாரதி விழாவில் குன்றக்குடி அடிகள் பாராட்டு

சமயத்தையும் அரசியலையும் குழப்பாதிருக்க ஸ்ரீமதி. கே. பி. எஸ். வேண்டுகோள்

கரூர், டிச. 8—கரூர் பாரதி கழகத்தின் சார்பில் "பாரதி விழா" நேற்று கரூரில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நகர மன்ற உயர்நிலைப்பள்ளி வைரவிழா மண்டபத்தில் பாரதியின் திருவுருவப் படம் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒளி பொருந்தியபாரதியின் திருவுருவின் கீழே காலை நிகழ்ச்சியாக 'கவி அரங்கம்' நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடந்த கவி அரங்கத்தில் திருச்சினுப்பள்ளி பாரதன் (ரா. தங்கவேலன்) "குழந்தை உள்ளம்" என்ற தலைப்பிலும் புதுக்கோட்டை குமாரி பிருந்தாதேவி "பெண்ணுரிமை" என்ற தலைப்பிலும், பிறு கதை ஆசிரியர் லால்குடி-கிருஷ்ணமூர்த்தி "காதல் கவிதை" என்ற தலைப்பிலும், திரைப்படக் கவிதை இயற்றும் ஸ்ரீ என். ராகவன் "கற்பனை" என்ற தலைப்பிலும், ஸ்ரீ சே. ரா. குமாரசாமி "தேசியம்" என்ற தலைப்பிலும், சக்தி சரணன் "தெய்வ [illegible]" என்ற தலைப்பிலும் தாங்கி [illegible] கவிதைகளை அரங்

[illegible] முன்னுரையில், [illegible] கால புதுமை [illegible] வேண்டு [illegible] ஒதுக்கிப் [illegible] வதில் [illegible] பழ [illegible] டை [illegible] ன் [illegible] மை [illegible] ரமாக தேவாரம், கம்ப [illegible] வேக சிந்தாமணி— [illegible] ருந்து மேற்கோள் [illegible] (ந- தி)

கே. பெரியசாமிக் கவுண்டர் முன் வந்தார்.

மாலை நிகழ்ச்சி

மாலை பேரவைக் கூட்டம் நடைபெற்றது. இலக்கிய ரசிகர் ஸ்ரீ. ஆதி. வெ. சூரியநாராயண செட்டியார் தலைமை வகித்தார். மாணவ-மாணவிகளுக்கு சிறந்த பேச்சுகளுக்காகவும், கவிதை பாடியதற்காகவும் பரிசுகளை நகர மன்றத் தலைவர் ஸ்ரீ என். ராமானுஜம் வழங்கினார். கரூர் ஸ்ரீ சுப. அருணாசலம் "பாரதியார்?" என்ற தலைப்பில் பாரதியின் கவிதைகளை எடுத்துக்கொண்டு பல கோணங்களிலே ஆராய்ந்து சொற்பொழிவாற்றினார். திருச்சி வித்துவான் ஸ்ரீ டி. இயன்பெருமாள் கோனார் "தெய்வத் தமிழ்" என்ற தலைப்பில் பேசுகையில், 'பண்டைய காலத்துப் புலவர்கள் தெய்வத்தையும் தமிழையும் எவ்வாறு இணைத்து வருவது காங்கிரஸே; சோஷலிஸ் சமுதாயம் அமைக்கவே அது பாடுபட்டு வருகிறது; மக்கள் இதை இன்று சிறிது சிறிதாக உணர்ந்து வருகின்றனர் என்றார் ஸ்ரீ. அபிட் அலி.

பக்கவாதம் உண்டு பண்ணும் கொசுக்கள்

செக் நிபுணர்களின் கண்டுபிடிப்பு

பிரேக், டிச. 11—மக்களுக்கு ஜுரத்தையும், கடும் தலைவலியையும் பக்கவாத்தையும் உண்டு பண்ணக்கூடிய 'விரஸ்கிருமிகள்' சில கொசுக்களிடம் அமைந்திருப்பதாக செக்கோஸ்லேவேகியா நாட்டைச் சேர்ந்த டாக்டர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கிழக்கு செக்கோஸ்லேவாகியாவில் ஆங்காங்கு சிலருக்குஇத்தகைய நோய்கள் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. செக்கோஸ்லேவேகியா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த உயிரியல் நிபுணர்கள் 20,000 கொடுக்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் அவற்றில் சிலவற்றில் மேற்கூறிய 'விரஸ் கிருமிகள்' இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இது பற்றிய விவரங்கள் அந்நிய நாடுகளின் வைத்ய ஆராய்ச்சி ஸ்தாபனங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

ஜனநாயகத்தில் ஆபத்தான சக்திகள் கம்யூனிஸ்ட்கள்

மத்திய உதவி மந்திரி எச்சரிக்கை

தொழிலாளரைச் சுரண்டுவதில் முதலாளிகளுக்கு மட்டமில்லை என்கிறார்

இந்தூர், டிச. 9—"ஜனநாயகத்தில் ஆபத்தான சக்திகள்": இந்திய கம்யூனிஸ்ட்களே இவ்விதம் வர்ணித்தார் மத்திய சர்க்கார் தொழிலாளர் நல இலாகா உதவி மந்திரி ஸ்ரீ. அபிட் அலி.

இதுவரை ஒரு சில முதலாளிகள் சுரண்டி வந்திருக்கின்றனர் தொழிலாளரை. அது போதாதென்று இப்போது கம்யூனிஸ்டுகளும் நாட்டைப் பற்றிப் பாடினர்கள் என்பது பற்றிக் கூறினர்.

திருச்சி ஸ்ரீ. திருலோக சீதாராம் ஒரு செய்தி" என்ற தலைப்பில் பேசினர். ஸ்ரீ கே. பி. சுந்தராம்பாள் எம். எல். சி. "அருள்வாக்கு" என்ற தலைப்பில் அடுத்தபடியாகப் பேசினர். அவர் பேசுகையில் பாரதி அருள்வாக்குப் பெற்றவர் என்றும் அதனால்தான் பின்னல் வரப் போகும் சுதந்திரத்தை முன்கூட்டியே உணர்ந்து "ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே— ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" எனப் பாடியதாகவும், தமிழ் மக்கள் ஜாதி, மத, மொழித் துவேஷமின்றி, ஒன்றுபட்டு வாழ வேண்டுமெனவும் கூறினர். மேலும் தமிழ் மக்கள் அரசியலையும் மயத்தையும் ஒன்றாக நினைத்து, நற்காக சூழ்ச்சிகள் செய்யாது புரிய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

[illegible] சியாக குன்றக்குடி அடிகள் [illegible] யில், நமது பண்டைய தமி [illegible] றிவியல் [illegible] முயற்சிகளில் [illegible] விளங்கினர் [illegible] ள் என்ப

பிரிட்டிஷ் அரண்மனை ரகசியம் அம்பலமான கதை

ராணியின் தாயார் குறி கேட்டது உண்மையா?

லண்டன், டிச. 10—ஸ்ரீ. கார்பெட் என்னும் குறிகாரரைச் சமீபத்தில் எலிஜபெத் ராணியின் தாயார் பக்கிங்ஹாம் அரண்மனைக்குத் தருவித்து தனது மகள் மார்கரெட் இளவரசியின் விவாக விஷயத்தைப் பற்றியும் ராஜகுடும்பத்தின் மற்ற விஷயங்களைப் பற்றியும் ஜோசியம் கேட்டதாக 'சண்டே பிக்டோரியல்' சில ரஸமான விவரங்களைச் சமீபத்தில் பிரசுரித்தன.

இந்தச் செய்திக்கு அரண்மனை விளம்பர காரியதரிசி ஒரு மறுப்பு அனுப்பியிருக்கிறார். அதாவது எலிஸபெத் ராணியின் தாயாருக்கு குறிகாரர் கார்பெட்டைத் தெரியாதென்றும், கார்பெட் அரண்மனைக்கு தருவிக்கப்படவில்லை யென்றும், அவரிடம் ஜோஸியம் கேட்கப்படவில்லை யென்றும் மறுப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

'சண்டே பிக்டோரியல்' நேற்று இந்த மறுப்புக்கு மறுப்பை வெளியிட்டிருக்கிறது. குறிகாரர் கதையைதான் சிருஷ்டிக்கவில்லை என்றும், அந்தத் தகவல் எவ்வாறு கிடைத்ததென்பதற்கு ஆதாரம் இருப்பதாகவும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

'சண்டே பிக்டோரியல்' மேலும் கூறுவதாவது:—"அரண்மனைக்குச் சென்று ஜோஸியம் கூறிய ஸ்ரீ. கார்பெட் இந்தப் பத்திரிகையில் வெளியான விவரம் உண்மையென்று கூறுகிறார். அரண்மனைக்குச் சென்று ஜோஸியம் கூறியவற்றிற்கு ருசுக்கள் ஆஜர் செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறுகிறார். இந்தப் பத்திரிகையில் வெளிவந்த விவரங்கள் யாவும் உண்மையென்று அவர் வற்புறுத்துகிறார்.

படகு - கப்பல் மோதி 9 பேர் பலி

பாகிஸ்தானில் சம்பவம்

டாக்கா, டிச. 9—கடந்த வெள்ளிக்கிழமையன்று சூல்ஹவி விருந்து 40 மைல்களுக்கப்பாலுள்ள மொலார்ஹத் அருகாமையில் துமதி நதியில் பிரயாணிகள் படகும் சாமான் கப்பலும் மோதுண்டு 9 பேர் கொல்லப்பட்டனர்.

இன்ஜின் கோளாறு காரணமாக பிரயாணிகள் படகு நங்கூரம் போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் சணல் ஏற்றி வந்த கப்பல் அத்துடன் மோதியது. அதன் அதிர்ச்சியில் பிரயாணிகள் படகு கவிழ்ந்தது. அதிலிருந்த 70 பேரும் நீரில் விழுந்தனர். 9 பேர் மூழ்கி மாண்டனர். மற்றவர்கள் நீந்திக் கரை ஏறினர்.

உணவுதானியம் மீது ராஜாங்க வர்த்தகம் இப்போது வராது

அடுத்த வருஷம் அமலாக்க திட்டம் உருவாகிறது

புதுடில்லி, டி



படர்தாமரையா?



கெம்ப் கம்பெனியின்
ரிங்வார்ம்
ஆயின்ட்மென்டை
போடுங்கள்

தகுணமே ரிங்வார்மனிக்கும் அசல் படர் தாமரை ஆயின்ட்மென்ட்.

படர்தாமரை, வண்ணுடைபடை, உடம்பில் வெடிப்புகள், மற்றும் இதர சருமவியாதி களுக்கு ஹாலியில்லாமல் நிவாரணம் — குணப்படுத்திக் கொண்டிருக்கும்பொழுது. இதமும் அளிக்கிறது.

தயாரிப்பாளர்கள்:

கெம்ப் & கோ. லிட்

பம்பாய் - கல்கத்தா
டெல்லி - மதராஸ்



KC-R/4 T

எழும்பூர், தாய், சேய் க்ஷேமநல நிலையம்

ஸ்ரீமதி. இந்திரா காந்தி விஜயம்

சென்னை, டிச. 9—ஜெனரல் ஆஸ்பத்திரி, இளம் குழந்தைகள் சிகிச்சை இன்ஸ்டிட்யூட் டைரக்டர் டாக்டர் எஸ். டி. ஆச்சாரு டன் ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று காலை எழும்பூர் லாங்ஸ் கார்டன் ரோட்டிலுள்ள கார்ப்பரேஷன், தாய், சேய் சேஷமநல செண்டருக்கு விஜயம் செய்தார்.

கார்ப்பரேஷன் தாய், சேய் சேஷம நல சென்டர்களின் சூபரிண் டெண்ட் காப்டன் (குமாரி) ஸி. என். ருக்மிணி, ஸ்ரீமதி இந்திரா காந்தியையும் டாக்டர் ஆச்சாரை யும் வரவேற்றார்.

இங்கு ஸ்ரீமதி இந்திராகாந்தி அரை மணி நேரம் தங்கியிருந்தார்.

பன்றிமலை சுவாமிகள்

பச்சையப்பன் கல்லூரி பள்ளியில் வரவேற்பு

சென்னை, டிச. 6—சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பள்ளியின் மாணவர்களும், ஆசிரியர்களும் ஸ்ரீ பன்றிமலை சுவாமிகளுக்கும் அவரது மௌனியாருக்கும் மகத்தான தொரு வரவேற்பளித்தனர்.

பிரார்த்தனைக்குப் பிறகு பள்ளி யின் தலைமையாசிரியர் ஸ்ரீ. டி. செங்கல்வராயப் பிள்ளை, சுவாமி ஜியை வரவேற்றுப் பேசுகையில் சுவாமிஜியின் உயர்வையும், அவ ரது அற்புத சாதனைகளையும் பாராட் டிப் பேசினார்.

சுவாமிகளுக்கு தமிழில் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக் கப்பட்டது.

வரவேற்புக்குப் பிறகு பிரார்த் தனை மண்டபத்தில் சுவாமிஜி பூஜை செய்தார். தங்கள் குடும்பங்களு டன் வந்திருந்த நூற்றுக்கணக் கானவர்களை சுவாமிகள் ஆசி கூறி, விபூதிப் பிரசாதத்தையும் பழங்க ளையும் வழங்கினார்.

சுவாமிஜியின் சிஷ்யர்களான ரேகை சாஸ்திர நிபுணர் ஸ்ரீ. அனந் தன் உதவி மாகாண போஸ்ட் மாஸ் டர் ஸ்ரீ. சுப்ரமண்யம், மயிலாப்பூர் அட்வகேட் ஸ்ரீ. டி. கே. சுப்பிரமண் யப் பிள்ளை ஆகியோர் பேசுகை யில் சுவாமிஜியைப் பற்றிய தங் கள் சொந்த அனுபவங்களை எடுத்து கூறினர்.

கஷ்டப்பட்டு உழைக்குமாறும், பச்சையப்பனின் உயர்ந்த மரபு களை நிலை நிறுத்துமாறும் சுவாமிஜி மாணவர்களுக்கு உபதேசம் செய் தார். கடவுளிடம் நம்பிக்கை வைத்து, பக்தியை வளர்த்தால் அவர்கள் தாங்கள் வேண்டியதை யெல்லாம் அடையலாம் என்று சுவாமிஜி உறுதி கூறினார்.

சென்னையில் 4வது 'டெஸ்ட்' கிரிக்கெட்

ஜனவரி 21ல சர்க்கார் ஆபீஸ்களுக்கு விடுமுறை

சென்னை, டிச. 9—மேற்கிந்தீஸ் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியா வுக்குமிடையே சென்னையில் நடை பெறப் போகும் 4-வது டெஸ்ட் கிரிக்கெட்டை ஒட்டி ஜன. 21ந் தேதி புதனன்று சென்னை நகரிலும் செங்கல்பட்டு ஜில்லாவிலும் உள்ள எல்லா சர்க்கார் காரியாலயங்களுக் கும் விடுமுறை விடப்படுமென்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளது. இத ற்கு பதில் 1959ஜ பிப்ரவரி மீ 21ல மூன்றாவது சனிக்கிழமை ஆபீஸ்கள் உண்டு.

மீனவர் சங்கக் கூட்டம்

சென்னை, டிச. 8— நேற்று சென்னை சைதாப்பேட்டை கூத்தா டும் பிள்ளையார் கோவில் தெரு, 42 நெ. இல்லத்தில் உள்ள நாட்டு மீனவர் பொதுக் கூட்டம் ஸ்ரீ. ஏ. கோவிந்தசாமி நாட்டார் தலை மையில் நடைபெற்றது. தலைவர் பேசுகையில், உள் நாட்டு மீனவர் சங்கத்தின் அவசியத்தை விளக்கிய பின்னர் தொழில் அடிப்படையில் வேலை செய்ய சைதையில் உள்ள மீனவர் கிளைக் கழகம் அமைக்கப் பட்டது. ஸ்ரீமான்கள் ஏ. கோவி ந்தசாமி நாட்டார் தலைவராகவும், எஸ். கண்ணு நாட்டார் உப-தலைவரா கவும், ஜி. கிருஷ்ணசாமி நாட் டார் செயலாளராகவும், வி. ரத்ன நாட்டார் உதவிச் செயலாளராக வும், எம். நடேச நாட்டார் பொருட் காப்பாளராகவும் மற்றும் 4 பேர் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்க ளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார் கள்.

சைதாப்பேட்டை உள் நாட்டு மீனவர் சங்கத்தின் கிளைக் கழகமாக இருந்து, அதன் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப் பட்டு இயங்குமென்று ஒரு தீர் மானமும் மற்றும் பல தீர்மானங் களும் நிறைவேற்றப்பட்டன.



மந்த உணர்ச்சியா?

பெரியவர்களுக்கு ஒரு வில்லை

ஸாரிடான்

சாப்பிட்டால் போதும்

Saridon

★ வலியை நிறுத்துகிறது
★ விசர்ந்தியளிக்கிறது
★ புத்துணர்ச்சியூட்டுகிறது

12 நயா பைசா

குழந்தைகளுக்கு ½-½ வில்லை போதும்

சோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:
வால்டாஸ் லிமிடெட்



YT-6291

ஹோமியோபதி

வைத்திய சாஸ்திரத்தை மிகக் குறைந்த செலவில் தங்கள் வீட் டில் இருந்தபடியே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ படித்து சிறந்த முறையில் டாக் டராகத் தொழில் நடத்தலாம். முழு விபரங்களையும் இலவச மாகவே அனுப்பித் தருகிறோம்.

பாரதத்தின் பிரதான
ஹோமியோபதி ஸ்தாபனம்

இந்தியன்
ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட்
கும்பகோணம்

மனித உரிமைப் பிரகடனத்தின் சக்தி பற்றி ஐ. நா. காரியதரிசி

நல்லுறவுகளைத் தூண்டவல்லது என்கிறார்

ஐ. நா., டிச. 10—மனிதர்களி டையே நேச உறவுகளைத் தூண்டு வதற்கும், மாபெரும் லட்சியங் களை அடைவதற்குப் புதிய முயற்சி களை ஊக்குவதற்கும் வேண்டிய நிரந்தர சக்தி, இந்த மனித உரிமை கள் பற்றிய உலகப் பிரகடனத்தில் இருக்கிறது'' என்று ஐ. நா. தலை மைக் காரியதரிசி ஹாமர்ஷீல்ட் இன்று மனித உரிமைகள் தினம் பற்றிய ஒரு அறிக்கையில் கூறினார்.

பிரஸ்தாபப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டு பத்தாண்டு நிறைவு தினத்தில் இவ்வறிக் கையை அவர் விடுத்தார். இது பின்வருமாறு:

''மனிதனின் எழுதப் பெற் றுள்ள வரலாற்றிலே காணப்படும் சில ஏடுகள், மனித நேச உறவு உணர்ச்சியைத் தூண்டி விடுவதற் கும், மாபெரும் இலட்சியங்களை அடையப்பெற புதிய முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் வேண்டிய நிரந் தர சக்தி மூலம் ஒலிக்கின்றன.

இத்தகைய ஏடுகளில் ஒன்று ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் அளித்த தாகும். பத்து ஆண்டுகளுக்கு முன் னால் இந்த ஸ்தாபனம் மனித உரி மைகள் பற்றிய உலகப் பிரகட னத்தை விடுத்தபோது, இது ஏற் பட்டது.

மனித உரிமைகள் பற்றிய முத லாவது உலக சாஸனம் வரையப் பெற்றும் அது ஏற்றுக்கொள்ளப் பட்டதுமான காரியம் ஐ. நா. வின் மிகச் சிறந்த சாதனைகளில் ஒன்றாக கொள்வது முற்றிலும் சரியே. பிரகடனத்தின் அபிலாஷைகளுக் கும், வாழ்க்கையில் நாம் அனுஷ் டிப்பதற்குமிடையே ரொம்ப தூரம் இருக்கிறதை இந்தப் பிரகடனம் நினைவூட்டுவது அதைவிட முக்கிய மாகும்.

நியாய புத்திக்கும் மனசாட்சிக் கும் உகந்த முறையில் மனிதனின் கவுரவத்தைக் கடைப்பிடிப்பதற் கும் பாதகாப்பதற்கும் இந்தப் பத் தாண்டு நிறைவு விழா நமக்கு ஊக்க மூட்டுவதாக. எல்லா மனிதர்களுக் கும் நியாய புத்தியும், மனச்சாட்சி யும் இருக்கின்றனவென்றே இந்தப் பிரகடனம் உறுதியளிக்கிறது. மற்றவர்களின் உரிமைகளுக்கு அதிகம் மதிப்புக் கொடுத்துச் செயல் புரிவதற்கும் இதன் மூலம் உலக நல்லுணர்வுக்கும் உலக சமாதானத்துக்கும் ஸ்திரமான அஸ்திவாரம் ஒன்றை ஏற்படுத்து வதற்கும் இது உதவி புரியட்டும்.''

3-வது ஐந்தாண்டு திட்டம் நேருஜியின் சிந்தனைகள்

"அத்யாவசியத் தேவைகள் தான் முக்யமாக கவனிக்கப்படவேண்டும்"

தாமதம் செய்தால் தேவைகள் நம்மை விழுங்கிவிடுமென எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 10—மக்களின் தேவைகளைக் கவனித்து மூன்று வது ஐந்தாண்டுத் திட்டம் வகுக் கப்பட வேண்டுமென்று நேருஜி இன்று நிருபர்கள் கூட்டத்தில் கூறி னார்.

நேருஜி மேலும் கூறியதாவது: ''ஜனத் தொகையும், மக்களின் தேவைகளும் அதிகரித்துக்கொண் டே இருக்கிறது. மூன்றாவது திட் டத்திலேயே மக்கள் அனைவரின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்வது முடியாத காரியம் என்று லும் கூட ''தேவைப்'' பிரச்னையை சர்க்கார் முழு மூச்சுடன் பெரும் அளவில் சமாளித்துதான் ஆக வேண்டும். இல்லா விட்டால் தேவைகள் நம்மையே விழுங்கி விடும்; கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போய் விடும். மக்க ளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் இப்போது கொஞ்சம் தாமதம் செய்தால் பின்னால் பலு ஏகமாக அதிகரித்து விடும்.

தாமதம் செய்தால் ஆபத்து

இப்போது தாமதம் செய்தால் பின்னால் எப்படி செலவு அதி கரிக்கும் என்பதை நேரு உதாரணம் மூலம் விளக்கினார்.

''முதல் ஐந்தாண்டுத் திட்டத் திலேயே சர்க்கார் ஒரு உருக்கு ஆலை நிறுவ விரும்பியது. ஆனால் இத் திட்டம் நிறைவேறவில்லை. பிற் பாடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருக்கு ஆலைகள் நிறுவுவதால் செலவு அதிகமாகி விட்டது'' என்றார்.

3-வது திட்டம்: அளவு தெரியாது

மூன்றாவது திட்டத்தின் அளவு பற்றி இப்போது தான் ஒன்றும் கூற முடியாதென்றும் அளவை இனிமேல்தான் நிர்ணயிக்க வேண்டு மென்றும் நேரு கூறினார்.

நேருஜி மேலும் கூறியதாவது: ''ஆனால் இப்போதுள்ள நிலையில் இங்கேயோ, அங்கேயோ பாக்டரி நிறுவ வேண்டுமென்ற கண்ணோட் டத்துடன் மூன்றாவது திட்டத்தை வகுக்கக் கூடாது. நிலைமையின் தேவையை சமாளிக்கும் கண்ணோட் டத்துடன் திட்டத்தை வகுக்க வேண்டும். பாதுகாப்புத் தேவை கள் நீங்கலாக மக்களின் மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வது தான் முக்கியம். மக்களின் தேவை களை மதிப்பிடும்போது தற்போ தைய ஜனத்தொகையை மட்டும் கணக்கெடுத்துக் கொண்டால் போ தாது. 10 அல்லது 15 வருடங்க ளுக்குப் பிறகு இருக்கப் போகிற ஜனத்தொகையையும் கருத்தில் கொள்ள வேண்டும். மக்களின் அத்யாவசியத் தேவைகள் உணவும் உடையும்தான். இந்த அத்யாவசி யத் தேவைகளை நாடு சமாளித்துத் தான் ஆக வேண்டும். நல்ல விதை களையும் ரசாயன உரங்களையும் உப யோகித்துப் புது சாகுபடி முறை கள் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். எனவே ரசா யன உரத்தையும் பசுந் தழை உரத்தையும் இந்தியா உற்பத்தி செய்ய வேண்டும்.

சிறு யந்திரங்கள் தயாரிக்க பெரிய யந்திரங்கள் வேண்டும்

தொழில்களைப் பொறுத்த வரை யில், சிறு யந்திரங்களும் சுரங்கத் திற்கான சாதனங்களும் உற்பத்தி செய்ய பெரிய யந்திரங்கள் நமக் குத் தேவை. சிறு யந்திரங்களை நமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியாவிடில் நமது அந்நிய நாண யச் செலாவணி மேலும் விரயமாகி விடும். எனவே யந்திரங்களை இந்தியா உற்பத்தி செய்ய வேண் டும்''

அதிக உணவு உற்பத்தி, அதிக உரங்கள், யந்திரங்கள் உற் பத்தி, கச்சாப் பொருட்களையும் தயாரான பொருட்களையும் எடுத் துச் செல்ல அவசியமான போக்கு வரவு வசதி ஆகியவைகளை இணை த்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று நேருஜி வற்புறுத்தினர்.

மெர்க்கண்டைல் மரீன் இலாகா யூனியன்

சென்னை, டிச. 8—சென்னைத் துறைமுகத்திலுள்ள மெர்க்கெண் டைல் மரீன் இலாகா சிப்பந்திகள் த. நா. கா. க. தொழிலாளர் பிரிவு வுடன் இணைக்கப்பட்ட யூனியன் அமைத்துக் கொண்டுள்ளன. த. நா. கா. க. தொழிலாளர் பிரி வுக்குப் பொறுப்பான ஸ்ரீ கே. டி. ஸ்ரீனிவாசன் தலைவராகவும், த. நா. கா. ச. தொழிலாளர் பிரிவு ஆர்கனைசர் ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாசன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளார்கள்.

சோஷலிஸம் வர பல திட்டங்கள் வேண்டும்

---நேரு

புதுடில்லி, டிச. 10—மூன் றாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் நாட்டில் பூரண சோஷ லிஸம் ஏற்பட்டு விடுமென்று தான் சொல்லவில்லை என்றும் பூரண சோஷலிஸம் ஏற்படப் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் வேண்டுமென்றும் நேரு இன்று நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

கோபால்புரம் மாதர் சங்கக் கிளை ஆண்டு விழா

சென்னை, டிச. 8—இந்திய மாதர் சங்கம், கோபால்புரம் கிளையின் 12-வது வருஷாந்திரக் கொண்டாட்டம் நேற்று மாலை சங்கக் கூட்டிடத்தில் நடைபெற் றது.

விழாவுக்குத் தலைமை வகித்த ஸ்ரீமதி லலிதா பாலகிருஷ்ண செட் பேசுகையில், தேசிய அபிவிருத்திக் குத் தங்கள் பணியைச் செய்யு மாறு அங்கத்தினர்களைக் கேட் டுக் கொண்டார். வரப் போகிற வருஷங்களில் சங்கத்தின் நடவடிக் கைகள் பெரிய அளவில் இருக்கு மென்று தாம் நம்புவதாகக் கூறி னர்.

ஸ்ரீமதி நிர்மலா ராமச்சந்திரனின் பிரார்த்தனையுடன் விழா ஆரம்ப மாயிற்று.

சங்கத் தலைவர் ஸ்ரீமதி பாலம் மாள் கிருஷ்ணஸ்வாமி யாவரை யும் வரவேற்றார். காரியதரிசி ஸ்ரீமதி நாயுடு, ஆண்டு அறிக்கை யைச் சமர்ப்பித்தார். பின்னர் சுதம்ப நிகழ்ச்சியொன்று நடை பெற்றது. இளம் விதுஷி குமாரி காத்யாயினிக்கு தங்கப் பதக்க மும், ஹிந்தி ஆசிரியை ஸ்ரீமதி கோமளம்மாளுக்கு ஓர் மலரும் வழங்கப்பட்டன.

ஸ்ரீமதி இந்திரா ராமதுரை சொற் பொழிவாற்றினர். உப தலைவர் ஸ்ரீமதி யு. ஆர். ராவ் நன்றி கூறி னர்.

புளியந்தோப்பு பகுதியை மேயர் பார்வையிட்டார்

சென்னை, டிச. 9—உதவி கமிஷ னர் ஸ்ரீ என். சங்கரன், என்ஜினீ யர் ஸ்ரீ. பாஸ்கரன் ஆகியோருடன் மேயர் ஸ்ரீ கே. காமலக்கண்ணன், சமீபத்தில் பெய்த மழையின் பொழுது தண்ணீர் தேங்கியிருந்த புளியந்தோப்புபிரதேசத்தை இன்று காலை பார்வையிட்டார்.

இது தாழ்வானப் பிரதேசமாக இருப்பதால் இங்கு பெரிய பாதாள சாக்கடைக்கு வகை செய்யப்பட வேண்டுமென்று மேயர் அப்பிபி ராயப்பட்டார். இது விஷயத்தில் அவசியமான நடவடிக்கையை எடு க்குமாறு கமிஷனரைக் கேட்டுக் கொண்டார்.

பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் பகல் உணவு

சென்னை, டிச. 5—ஆயிரம்விளக் கிலுள்ள டி. நாராயணசாமிநாய கர் ஆரம்பக் கல்வி பாடசாலையில் படிக்கும் ஏழை பிள்ளைகளுக்கு இல வச பகல் உணவு 'ஆனந்த விக டன்' போர்மெனும் கோவில் தர்ம கர்த்தருமான ஸ்ரீ எம். மாணிக்க நாயகர் முன்னிலையில் வழங்கப்பட் டது. தற்சமயம் தினசரி 15 பிள்ளை களுக்கு இலவச பகல் உணவு வழங் கப்படுகிற தென்றும் மே பள்ளி நிர்வாகி டி. என். லட்சுமிபதி தெரி வித்தார். பள்ளியின் தலைமை ஆசிரியை வி. குணமணி நன்றி கூறினர்.

பூவிருந்தவல்லியில் கொடி தினம்

சென்னை, டிச. 11—பூவிருந்தவல்லி தேசிய வளர் ச்சித் திட்டத்தின் ஆதரவில் 7-12-58 அன்று காலை ''கொடி தினம்'' கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீ எம். சேஷாச்சாரி யார் எம். எல். சி. தலைமையில் வி க் நே சு வரா தியேட்டரில் ''ஒளவையார்'' படம் திரையிடப் பட்டது. திரைப் படக் கட்டணம் மூலம் வசூலான தொகை ரூ. 1700 ஜில்லா மாஜி ராணுவத்தினர் நிதிக்குத் தரப்பட்டது.

ஸ்ரீ எஸ். பி. சினுவாசன், மக் களின் நன்கொடையைப் பாராட்டி இது மாதிரி நன்கொடைகளின் அவசியத்தைப் பற்றி விரிவாகப் பேசினார்.

கார்ப்பரேஷன் தேர்தல் தேதிகள்

சென்னை, டிச. 11—சென்னை கார்ப்பரேஷன் தேர்தல்களுக்கான தேதிகள் பின்வருமாறு நிர்ணயிக் கப்பட்டுள்ளன: அபேட்சைப் பத் திரங்கள் பெற கடைசி தேதிகள்: பிப்ரவரி 25, 26, 27; அபேட் சைப் பத்திரங்கள் பரிசீலனை மார்ச் 6, 7, வாபஸ் பெற கடைசித் தேதி மார்ச் 10 உ காலை 3 மணி; வோட்டுப் பதிவு ஏப்ரல் 4, 6, 7; வோட்டு எண்ணிக்கை ஏப்ரல் 9, 10 11, 12.

புதிய கவுன்சிலர்கள் ஏப்ரல் 14உ தமிழ் வருஷப் பிறப்பன்று பதவி யேற்பார்கள். அது வரையில், இப் போதைய கவுன்சிலர்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனசங்கம் போட்டியிடும்

சென்னை, டிச. 10—சென்னை கார்ப்பரேஷன் தேர்தல்களில் போட்டியிடுவதென்று பாரதீய ஜன சங்கம் தீர்மானித்திருக்கிறது. பெது நல உணர்ச்சியும், நாணயமும் உள்ளவர்களையே கட்சி அபேட்சகர் களாக நிறுத்தப்படுவார்களாம்.

கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத் தில் குறிப்பிட்டுள்ளபடி, சென்னை கார்ப்பரேஷனை திறம்படவும் சிக்க னமாகவும் நிர்வகித்து ஒரு ஆதர்ச ஸ்தல ஸ்தாபனமாக்குவதே நோக் கம் என்று ஒரு சங்கப் பிரமுகர் கூறினார்.

ராஜ்ய மின்சார ஆலோசனை கவுன்சில்

சென்னை, டிச. 11—சென்னை ராஜ்ய மின்சார ஆலோசனை கவுன்சிலுக்கு மேற்க்கண்ட பிர முகர்கள் ஜனவரி முதல் ஓராண்டு காலத்திற்கு மெம்பர்களாக சர்க் காரால் நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்ரீமான்கள்: கே. என். பழனிசாமி கவுண்டர், எம். எல். ஏ., ஸி. ஆர். ராமசாமி எம். எல். ஏ., வி. பாண்டுரங்கையா, ஆர். வெங்கிட சாமி (தென்னிந்திய மில் முதலாளி கள் சங்க தலைவர்) ஆர். கோபால் (த. நா. கா. க. தொழிலாளர் பிரிவு) எஸ். ராமஸ்வாமி நாயடு எம். எல். ஏ., டி. புருஷோத்தம், எம். எல். ஸி., முகம்மது ரஜாக் கான் எம். எல். ஸி., தட்சிண ரயில்வே பிரதம உதவி மின்சார என்ஜினீயர், விவசாய இலாகா டைரக்டர்.

மைசூர் கவர்னருக்கு குன்னூர் நகரசபை வரவேற்பு

குன்னூர், டிச. 8—மைசூர் கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜ உடை யாருக்கு குன்னூர் நகர சபையின் சார்பில் வரவேற் பளிக்கப்பட்டது. நகர சபைத்தலைவர் ஸ்ரீ.பி. எஸ்.ஏ. சலாம் கவர்னரை வரவேற்றார். உபதலைவர் ஸ்ரீ. கே. வி. சொக் லிங்கம் செட்டியார் வரவேற்புப் பத்திரத்தை வாசித் தளித்தார். மைசூர் மவர்னர் பதிலளிக்கையில் இந்நகர சபை 92 வருடங்களாகச் செய்து வரும் சேவையைப் பாராட் டினர். இவை உண்மை உணர்ச்சி யுடன் சுகாதாரத் துறையிலும் நகர வாசிகளின் வசதிக்கும் பாடுபட் டால் நாம் ஜனநாயகத்தின் நோக் கத்தை நிறைவேற்றலாம் என்று கூறினர். நகரசபை மெம்பர் ஸ்ரீ ராமையா நன்றி கூறினர்.

கார்ஞ்சி மெய்கண்டார் வாரவழிபாடு

காஞ்சிபுரம், டிச. 7— காஞ்சி யில் பிராத்தனைத் தலமாகிய கச்சபேசத் திருக்கோயிலில் ஆட்ட சித்தீசப் பெருமான் சந்நிதியில் வழிபாடு நடை பெற்றது. சிவ ஞான போதக் கூட்டுப் பிராத்த னைக்குப் பின் பிரசங்கமணி ஸ்ரீ மா. சுந்தரமூர்த்தி முதலியார் சொற்பொழிவாற்றினர். நகரப் பிரமுகர்களிற் பலர் விஜயஞ் செய்தனர். கர- நடேச முதலி யார் தருமபரிபாலகர் ஸ்ரீ அர காலே முதலியார் நன்றி கூறினர். கழகச் செயலாளர் ஸ்ரீ திருஞான சம்பந்த முதலியார் இத்தீசர்க ளின் சிறப்புப் பற்றிக் கூறி முடித் தார்.

மாலை வழிபாடு

கச்சபேசர் கோயில் சதுர்முருகப் பெருமான் சந்நிதியில் வழி பாடும் ஸ்ரீ திருஞானசம்பந்த முத லியாரின் ஆனை நாயனார் புரா ணச் சொற்பொழிவும் மாலையில் நடைப்பெற்றன. ஸ்ரீ கணபதி (பனையாட் கம்பெனி உரிமை யாளர்) நன்றி கூறினர்.

திருக்கழுக்குன்றத்தில் 1008 சங்காபிஷேகம்

திருக்கழுக்குன்றம், டிச. 10— திருக்கழுக்குன்றம் ஸ்ரீ வேதகிரீஸ் வரர் தேவஸ்தானத்தில் டிச. 15உ திங்கட்கிழமையன்று ஸ்ரீ வேத கிரீஸ்வர சுவாமியாருக்கு திருமலை யில் 1008 சங்காபிஷேகம் நடை பெறும்.

திருமலையில் ஸ்ரீ கச்சாபாலய முதலியார் டி. சுப்பிரமணியம், ஸ்ரீமதி. சரஸ்வதி அம்மாள், குழுவி னரால் தேவார பாராயணமும், நாதஸ்வர வித்வான் ஆதிமூலம் கோஷ்டியாரால் நாதஸ்வரக் கச் சேரியும் நடைபெறும்.

தபால் சேமிப்பில் 'செக்' முறை

செங்கல்பட்டில் துவக்கம்

செங்கல்பட்டு, டிச. 9—''செக்'' மூலம் தபால் சேமிப்பு பாங்கிலி ருந்து பணம் பெற்றுக் கொள்ளும் வசதி செங்கல்பட்டு தலைமை தபால் காரியாலயத்தில், சூபரின்டெண்ட் ஸ்ரீ. ஜே. ஜி. சற்குணரால் இன்று காலை துவக்கி வைக்கப்பட்டது. காஞ்சீபுரம், திருவள்ளூர், தாம் பரம், மதுராந்தகம், செங்கற்பட்டு உவன் ஆகிய இடங்கள் உள்பட செங்கல்பட்டு டிவிஷனில் 10 இட ங்களில் இவ் வசதி ஏற்படுத்தப் படும்.

மின்சார ரயிலிருந்து விழுந்து மரணம்

சென்னை, டிச. 10—இன்றுகாலை சென்னை பூங்கா ஸ்டேஷனில் ஒரு மின்சார ரயிலிலிருந்து இறங்க முயற்சித்த இளைஞரொருவர் தடுக் கிவிழுந்து படுகாய மடைந்தார். அடையாளம் தெரியாத அந்த 25-வயது நபர் விரைவில் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். என்ன சிகித்ஸ யளித்தும் பய னில்லை. சிறிது நேரத்தில் அவர் மாண்டார்.

இன்ஷூரன்ஸ் ஊழியர் போனஸ்

இம்மாதக் கடைசி வாரத்தில் முடிவாகலாம்

புதுடில்லி, டிச. 10—ஆயுள் இன் ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் சிப்பந் திகளுக்குப் போனஸ் வழங்குவதைப் பற்றி, இம் மாதக் கடைசி வாரத் தில் கார்ப்பரேஷன் ஒரு முடிவு க்கு வரக் கூடுமென நம்பத் தக்க வட்டார தகவல் ஒன்று கூறுகிறது.

போனஸ் சம்பந்தமாக இந்திய சர்க்கார் அறிக்கையொன்று ஆ. இ. கா. வுக்கு கிடைத்துள்ளது. ஆ. இ. கா. வின் நிர்வாக போர்டு இம் மாத கடைசி வாரத்தில் கூட இருக்கிறது. அப்போது போனஸ் வழங்குவதைப் பற்றி முடிவு ஏதேனும் செய்யப் படலாம் என அறியப்படுகிறது.

1 மாத போனஸ் வழங்கினால், ஆ. இ. கா. வுக்கு 30 லட்சம் ரூபாய் தேவைப்படுமென சொல்லப் படுகிறது.

சர்க்காரின் முடிவு விளக்கம்

புது டில்லி, டிச. 10—இந்திய ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷ னின் சிப்பந்திகளுக்கு இரண்டு மாத சம்பளத்தை ''போனஸாக'' வழங் க மத்திய சர்க்கார் முடிவு செய்தி ருக்கின்றனர் என்பதாக பத்திரிகை களில் பலவிதமான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இன்று லோக் சபாவில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளபடி, செலவு வரம்பு விஷயத்தில் 1938ம் வருஷத்திய இன்ஷூரன்ஸ் சட்ட ஷரத்துகளுக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்பட்டு லாபத்தில் பங்கு கொள்ளும் அடிப்படையில் அல்லா மல் அதன் நிர்வாகத்துறைச் சிப் பந்திகளுக்கு கார்ப்பரேஷன், அதன் இஷ்டத்தைப் பொறுத்து, ஒரு போனஸ் வழங்கலாம் என்றுதான் முடிவு செய்திருக்கிறார்கள் என்ப தைத் தெளிவு படுத்த சர்க்கார் விரும்புகின்றனர். எனவே, போனஸ் வழங்குவது அல்லது அதன் அளவை நிர்ணயிப்பது சம்பந்தமாக சர்க் கார் ஒரு முடிவை மேற்கொள்ள வில்லை என்பதும், ஆனால் அந்த விஷ யம் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்ப ரேஷனின் யுக்தானுசாரத்துக்கு விடப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகிறது. சமீபத்தில் நிதி மந்திரி, லோக் சபாவில் ஒரு கேள் விக்குப் பதிலளிக்கையில், சென்ற வருஷம் போனஸ் வழங்க வேண் டாமென்று ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனுக்கு சர்க்காரால் ஒரு உத்தரவு அனுப்பப்பட்டது என்று கூறியிருப்பது ஞாபகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது: தற்போ தைய முடிவு இந்த முந்திய உத்த ரவை ரத்து செய்வதை மாத்திரமே செய்கிறது.

மாதர், இளைஞர் காங்கிரஸை பலப்படுத்துதல்

ஸ்ரீமதி, இந்திரா காந்தி வற்புறுத்தல்

வருங்காலத்திற்கு அவசியமென்கிறார்

சென்னை, டிச. 11—தமிழ் நாடு காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த மாதர், இளைஞர் பிரிவு களை பலப்படுத்தி, இதர இளங் கூலிப் போல, இதுபும் நாட்டிற்கு வழி காட்டியாக அமைந்துள்ள தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியை ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று பாராட்டியுள்ளார்.

தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்த மாதர், தொண்டர்கள் கூட்டத்தில் அவர் பேசுகையில், காங்கிரஸ் ஸ்தாப னத்தில் பெண்கள் அதிக அளவில் சேர வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தினர். காங்கிரஸ் ஸ்தாப னத்தின் வருங்காலம் வளமாக இருக்க, மாதர், இளைஞர் பிரிவு களை பலப்படுத்துவது மிக அவசிய மாகிறதென்றும் ''மக்கள் - சர்க் கார்'' என்ற பாகுபாட்டை போக்கை பெரு முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும் சொன்னார். சர்க்கார் செய்யும் எல்லா காரியங்களும், எல்லா மக் களுக்கும் பிடித்ததாக இருக்காது என்றும், இம்மாதிரியான நிலைமை சமாளிக்க காங்கிரஸ்காரர்கள் தயா ராக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

உத்திர பிரதேசத்தில் ஏற் பட்ட அனுபவம் ஒன்றைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், ''பெண் கள் கதர் புடவையைத்தான் அணிய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என அங்கு விதியைதளர்த்தியதும், ஆயிரக்கணக்கில் பெண்கள் காங் கிரஸில் சேர்ந்தனர். ஆனால் 5 வருட காலத்திற்குள் அவர்களே தானாக கதர் புடவை உடுக்க ஆரம்பித்து விட்டனர். ஒரு பெண் காங்கிரஸில் சேர்ந்தால், அவள் குடும்பம் பூராவுக்கும் காங்கிரஸ் ''மோகம்'' ஏற்பட்டு கதர் உடுக்க ஆரம்பித்து விடுவர்'' என்றார்.

பேச்சு முடிவில் ''வணக்கம்: ரொம் சந்தோஷம்'' என தமிழில் சொன்னதும் கரகோஷம் வானைப் பிளந்தது. பல காங்கிரஸ் கமிட்டி கள் சார்பில் ஸ்ரீமதி இந்திராவுக்கு ம

தெருக் குப்பையில் ஒரு யானை!

சிட்னி நகரத்தின் எல்லையிலுள்ள பீல்டர்ஷாம் என்ற சிற்றூரில் வசிப்போர் தமது நகர சபையின் மீது மிகவும் கோபத்தோடு இருக்கிறார்கள். தெருக் குப்பைபை யெல்லாம் ஊரின் மத்தியில் ஒரு பெரிய பள்ளத்தில் ஆறு வருஷமாகக் கொட்டி வருகிறார்கள். இதை நிறுத்த வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை.

பள்ளத்தில் கொட்டிய குப்பையில் இருப்பவை: 60 டன் அழுகியழும், கணக்கிலடங்காக் குப்பை, செத்த நாய்கள் 500; இறந்து போன ஒரு சர்க்கஸ் யானை.



தாயே! மகனை பாராதே!

தனது நாலு வயதுக் குழந்தையைப் பார்க்க ஒரு தாய் ஆசைப் பட்டாள். சிறுவனின் தந்தை அதற்கு இணங்கவில்லை. "அடிக்கடி நீ வந்து தொந்தரவு செய்தால் அவன் மனம் கலங்கி விடுகிறான்" என்றார் தந்தை.

குழந்தை பிறந்த சில மாதங்களில் வேறு மணம் புரிந்துகொண்டவள் அவள்.

குழந்தையைப் பார்க்கும் உரிமை கோரி அவள் வழக்கு தொடுத்தாள். ஆனல் நீதிபதிகள் தந்தையின் கருத்தையே ஒப்புக்கொண்டனர்.

சத்தியசோதனை

அப்பால் என்ன?

ஆர். ரங்காச்சாரி
(நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்ட நிர்வாக அதிகாரி)

1. (அ) Death is the end of life; Ah, why should life all labour be?
Oh,..to live and lie reclined
On the hils like Gods together, careless of mankind.
The Lotus Eaters—Tennyson
(b) I am going a longway
with these thou see'st—if indeed I go—
(For all my mind is clouded with a doubt)
To the island valley of Avillon
Where falls not hail or rain or any snow.
(Mort D'Arthur—Tennyson.)

2. நாமார்க்கும் குடியல்லோம்-நமனை அஞ்சோம் (அப்பர்)

3. (அ) வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே.

(பி) சூழ்ந்து,அகன்று, ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும்பாழே! ஓ!
சூழ்ந்து, அதனில் பெரிய பரநல்மலர்ச் சோதி! ஓ!
சூழ்ந்து, அதனில் பெரிய கூடர்ஞான இன்பமே! ஓ!
சூழ்ந்து, அதனில் பெரிய என் அவா அறச்சூழ்ந்தாயே.
(நம்மாழ்வார்)

1. கடோப நிஷத் முதலாம் படர்கோடி

நமனுலகில்

"அப்பா என்னை யாருக்கு அளிப்பீர்!" என்று ஆர்வத்துடன் வினவினன் சிறுவன் நசிகேதஸ். 'உன்னை எமனுக்கு அளித்தேன்" என்றார் அவன் தந்தையாம் வாஜச்ரவஸ்- இப்படி, திடுக்கிடத் தொடங்குகின்றது கடோபநிஷத்.

அந்தணனும் வாஜச்ரவஸ் வானுலக இன்பம் வேண்டி ஒரு வேள்வி செய்து, அதன் இறுதியில் தன்னிடம் உள்ள பொருள்களை வழங்கலுற்றார். தானமாய்க் கொடுத்த வைகளில் பல பசுக்கள் இருந்தன. "இப்பசுக்கள் நீர் பருகும், புல் புசிக்கும். ஆனல் கறவைக் காலம் கடந்தவை; பெறுபவர்களுக்கு இவைகளால் என்ன பயன்? ஐயோ, இவைகளை அளிப்பவனுக்கு ஆனந்தமில் பல்உலகே கிட்டுமன்றே" என வருந்தினன், சிரத்தை மிக்க மைந்தன் நசிகேதஸ்.

பீதோதகா ஜக்தத்ருணா துக்ததோஹா நிரிந்திரியா:
அனந்தா நாம தே லோகா: தான் ஸ கச்சதி தா ததத்

"குளிக்கப் போய்ச் சேற்றை பூசிக் கொள்வது போல், என் தந்தையின் செய்கை ஆகலாமா!? அவர் தம் தூய நற்பொருளாம் என்னைத் தக்கவருக்கு அளித்தால், அவருக்கு நற்பேறு ஒரு வேளை கிடைக்கலாம்" என எண்ணினன் நற்பிள்ளையாம் நசிகேதஸ். ஆகவே அவர் "என்னை யாருக்கு அளிப்பீர் (கஸ்மை மாம் தாஸ்யஸி) என்று தன் அப்பனை வேண்டினன். மும்முறை விடாது இப்படிக் கேட்ட போது, அவன் தந்தைக்குச் சினம் பொங்கியது. இந்நிலையில் "உன்னை எமனுக்கு அளித்தேன்" (ம்ருத்யவே த்வா ததாமி) என்றார் அவர். இதனை செவியுற்ற நசிகேதஸ் சிந்தனை முகத்தில் தேக்கினன். "நமனுலகை இன்று நான் முதலாய் அடைந்த போதிலும் பின்னர் பலர் அங்கு சேருவர்; எனக்கு முன்னரும் அங்குற்றனர் அநேகர்; ஆகவே நான் நடுவனுய்த்தான் அங்குச் செல்வேன். இந்நிலையில் என்னுல் யமன் பெறும் பயன்யாது?"

பஹூநாம் ஏமி ப்ரதமோ பஹூநாம் ஏமி மத்யம:
கிம் ஸ்வித்யம் அஸ்ய கர்த்தவ்யம்யந் மயாத்ய கரிஷ்யதி

ஒருபொருள் ஒருவனிடம் இடையூறு சேர்ந்துகொண்டிருக்கும்போது அப்பொருளின் திவலே ஒன்றையே அவனுக்கு அளித்தல் பயனுடையதாகுமோ? தன்னை இப்படி யமனுக்குத் தானம் செய்து, தன் பிதா வேண்டும் நற்கதி பெறுவரோ?— என்பதே அவன் ஏக்கம் ஆயிற்று. ஆயினும் முந்தியவர் கதியும் பின்னவர் நிலையும் அவனுக்குத் தெளிவாகியது" "பயிர் முற்றி அறுவடையாகின்றது; மீண்டும் (விதையாய்) நிலம் சேர்ந்து உயிர் பெறுகின்றது. இவ்விதமே மானிட வாழ்க்கையின் திறமும்" என்று கண்டான்.

அனுபச்ய யதா பூர்வே ப்ரதிபச்ய ததா பரே
ஸஸ்யமிவ மர்த்ய: பச்யதே ஸஸ்யமிவ அஜாயதே புன:

இவ்வெண்ணத்துடன் அவன் யமனுலகம் சேர்ந்தான். வெளியில் சென்றிருந்த யமனின் வருகைக்காக அவன் காத்துக் கிடந்தான். மூன்று பகலும் மூன்று இரவும் அவ்விருள் சேர் உலகத்தில் கேட்பாரற்று இருந்தான்—அவனுடைய வாழ் நாள் கணக்கு முடிந்து யமதூதரால் எதிர் பார்த்து இழுக்கப்பட்டு வந்தவன் அல்லனே!—அவன் அழையா விருந்தன்றே!—யமன் வந்தான்; நசிகேதஸைக் கண்டான். அழையாமல் வந்த விருந்தினனைத் தெய்வமெனப் போற்ற வேண்டும் (அதிதி தேவோ பவ) என்னும் மறை மந்திரம் நினைந்தான். அப்போது ஒரு குரல் அவன் அகத்தே ஒலித்தது—

"யமதர்மராஜனே (எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகும்) எனக்கு மங்களம் உண்டாகட்டும்; அதுவேண்டி பிரதியாய் உமக்கு நான் மூன்று வரங்கள் தருவேன்; கேட்க வேண்டும்."

திஸ்ரோ ராத்ரீ: யதவாத்ஸீ: க்ருஹேமே அநச்நன், பிரம்மன், அதிதி: நமஸ்ய நமஸ்தே அஸ்து, பிரம்மன், ஸ்வஸ்தி மே அஸ்து தஸ்மாத் பிரதி த்ரீன் வரான் வ்ருணீஷ்வ.

[குறிப்பு: யமலோகத்தில் இரவில் ஒரு வேளைமட்டும் புசிப்பது போலும்! ஆகவே தான் யமன் மூன்றிரவுகள் உண்ணுமல் இருந்தீர் என வருந்துகிறுனே!]

நசிகேதஸ்: "தர்மராஜனே, நீர் இங்கிருந்து என்னை அனுப்பி, நான் மீண்டும் பூவுலகு சேர்ந்தால், என் தந்தையாம் "கௌதமர்", தன் விருப்பம் கைகூடி, சினமகன்று, அமைதியுடன் என்னை ஏற்கவேண்டும். இதுவே நான் விரும்பும் முதல் வரம்.

யமன்: "அந்தகன் வாயினின்றும் மீண்ட உன்னைக்கண்டு, அவர்முன் போல் உன்னிடம் மகிழ்ச்சியுறுவர்; அந்த அணுமும் அதிதி இல்லங்களில் செந்தீ என நுழைகிறுன், விருந்தோம்பினுல் அத்தீ அணைகின்றது. சிற்றறிவினுல் அவனைப் போற்றாது பட்டினி போட்டால் எதிர்பார்க்கும்நன்னிலையாவும் பொதுநலவாழ்வும் மகிழ்ச்சியும், வேள்வியின் வினைவும் மற்ற நல் வினைப்பயனும் மக்களும் சுற்றமும் பெற்றமும் முற்றிலும் அழியும்; ஆகவே தூய நீர் கைக்கொண்டு இவ் வுயர் விருந்தினனை வரவேற்பாய்"

பின்னர் யமனுக்கும் நசிகேதஸுக்கும் பேச்சுத் தொடர்ந்தது.—

யமன்:- "பிரம்மனே வணங்கத்தகும் அதிதியாம் நீர் என் இல்லத்தில் மூன்று இரவுகள் ஊணின்றித் தங்க நேர்ந்தது குறித்து வருந்துகின்றேன். உம்மை வணங்குகிறேன். எனக்காக இக் கேள்வியை விட்டு விடு."

நசிகேதஸ்:- "விண்ணவர்க்கும், இவ்விஷயத்தில் ஐயம் இருந்திருக்கலாம்; காலனும் நீரே இதை அறிவது எளிதன்று என்கிறீர். (இதனை விள்ளுவதற்கு) உம்மிலும் அறிஞராம் ஆசானைக் காண முடியுமோ? இதனைத் தெளிவதற்கு ஈடாம் வரம் வேறு இல்லை."

யமன்: "பல்லாண்டு வாழும் மைந்தர், அவர் தம் மைந்தர்; பலவாம் பெற்றம், புழைக்கை, பொன், புரவி இவைதனை நாடு; புவி எலாம் ஆளும் பெருமையைக் கேள்; நீ விரும்பும் வரை உலகினில் வாழ்வாய். சரியாம் வரம் எனத் தோன்றினுல், பொருளும் நீள் வாழ்வும் வேண்டு; அகல் உலகில், நீ செழித்து ஓங்குவாய், நசிகேதலே! நீ விழையும் இன்பமெலாம் துய்க்கச் செய்வேன். மாந்தர் உலகில் எவை, எவை பெறுதற்கு அரியவையோ-அவ் வின் பங்கள் யாவையும் நீ உன் மனம் போல் கேட்கலாம். இதோ பார்-அழகே உருவெடுத்த அணங்குகள், வானூர்தியில் அமர்ந்து மீட்டிய இன்னிசைக் கருவிகளுடன் ஒளிர்கின்றனர். இந்தகையோரை மண்ணில் பிறந்தவர் அடையார்- அவர்களை உனக்கு அளிப்பேன்; அவர்கள் உனக்கு நன்கு பணி புரியட்டும். நசிகேதலே, இதை விட்டு, ஏன் மரணத்தைப் பற்றிக் கேட்க வேண்டும்?"

(பெற்றம்-மாடு; புழைக்கை-யானை; புரவி-குதிரை; வானூர்தி-ஆகாய விமானம்.)

நசிகேதஸ்: நிலையாப் பொருள்கள்! அந்தகனும் நீர் ஆளும் மாந்தர்நிலை என்ன! அவர்தம் உயர் நிலையை அழிப்பவையன்றே (நீர் கூறும்) இன்பங்கள்: நீள் வாழ்வும் சீறிய தேயாம்! வானூர்தியையும், (பல் அணங்கின்) ஆடல் பாடலையும், நீரேவைத்துக்கொள்ளும்!"

ச்வோபாவா மர்த்புஸ்ய யதந்தகைதத் ஸர்வேந்த்ரியாணாம் ஜரயந்தி தேஜ
அபிலர்வம் ஜீவிதம் அல்பமேவ தவைவ வாஹா: தவ நிருத்ய கீதே

"பொருளால் மானிடனுக்கு நிறைவு இல்லை; உம்மைக் கண்டபின், பொருளும் வேண்டுவதோ? நம் ஆளுகை உள்ள வரையில், எம் வாழ்வும் வாழ்வாமோ? ஆதலே, நான் கேட்ட உண்மையையே எனக்கு அளிப்பீர் வரமாய்!"

ந வித்தேந தர்ப்பணீயோ மனுஷ்யோ லப்ஸ்யாமஹே வித்தமத்ராக்ஷ்ம சேத்வா
ஜீவிஷ்யாமோ யாவதீஷ்யஸி த்வம் வரஸ்து மே வரணீய: ஸ ஏவ

"மண்ணில் வாழ்ந்து அழிவதை அறியும் எம்மானிடன், மூப்பிலா அமரரை அடைந்தும், புவியில் சிறிது நிலவும் அழகும் இன்பமும் எண்ணி, நீள் வாழ்வில் உவகை கொள்வன்?"

அஜீர்யதாம் அம்ருதானாம் உபேத்ய ஜீர்யன் மர்த்ய: க்வதஸ்த: ப்ராஜ்ஞோனன் அபித்யாயன் வர்ணரதிப்ரமோதா நதி தீர்க்கே ஜீவிதே கோ ரமேத

"ம்ருத்யுவே, நீத்துப் போரும் பெரிதாம் அக்கரையில் உள்ளது எதுவோ என மாந்தர் ஐயம் உறுகின்றனர்; அதனை உரைப்பீர்; மறைவாம் அதனை விளக்கும் வரமே வேண்டுவான் இந்த நசிகேதஸ்."

யஸ்மின்னிதம் விசிகித்ஸந்தி ம்ருத்யோ யத்ஸாம்பராயே மஹதி ப்ரூஹி நஸ்தத்
யோ அயம் வரோ கூடம் அனுப்ரவிஷ்டோ நான்யம் தஸ்மாத் நசிகேதா வ்ருணீதே



இரண்டாம் படர் கொடி

இனியவையும் நல்லவையும்.

யமன்: "நன்மை தருபவை வேறு, இனியவை வேறு; வெவ்வேறு நோக்குடைய இவை இரண்டும் மானிடனைப் பிணிக்கும்; ஆயினும், நன்மை பயக்கும் அவையை ஏற்பது நல்லதாகும்; இனியவை தம்மை வேண்டுபவன் நற்பயனின்றும் நழுவுகிறுன்;"

அந்யத் ச்ரேயோ அந்யதுதவ ப்ரேய: தே உபே நானார்த்தே புருஷம் ஸினீத: தயோ: ச்ரேய ஆததானஸ்ய ஸாது

(7-ம் பக்கம் பார்க்க)

வங்கமும் வங்காளிகளும் - 7

நவீன வங்க இலக்கியம், வசனம்

வங்கத்தமிழன்

ஆங்கில அரசாட்சி ஆரம்பமான திலிருந்து நிகழும் காலம் வரை, வங்க இலக்கியம் தனி வளர்ச்சி அடைந்து வரும் காரணத்தால், இதனை நவீன வங்க இலக்கிய காலம் அல்லது சகாப்தம் எனச் சொல்வது சாலப் பொருந்தும். பரத் சந்திர ராயும் ராம்பிரசாத் சென்னுமே இச் சகாப்தத்தைத் துவக்கிவைத்த மூல கர்த்தாக்களாவர்.

அப்பொழுது போர்த்துகீஷிய -ஆங்கில பாதிரிகள் கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்யத்தொடங்கி இருந்தனர். ராஜா ராம்மோகன் ராய் தலைமையில் பிரம்ம சமாஜத் தாரும் அவர்களுக்கு எதிராக, பிரம்மஞான தருமப் பிரசாரம் செய்து வந்தனர். அவ்வமயம், ஒரிரு தினசரிகளே நிலவி வந்தன. அவற்றிலேதான் ராஜாராம் மோகன்ராயின் பிரசார உரைகள் எல்லாம் வெளியாகி வந்தன.

ராஜாராம் மோஹன் ராயின் வசனம்

அவரது எழுத்துக்கள் வசன நடைக்கு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கின. அதற்கு முன்பெல்லாம் பத்திரிகைகளில் வசனங்கள் நீண்ட வாக்கியங்களையும் இன்னும் சில குறைபாடுகளையும் கொண்டிருந்தன வங்க. மொழி பயின்று அதில் தேர்ச்சி பெற்ற ஆங்கிலேயரும் வசனங்கள் எழுதி வந்தனர். மூக்கியமாக கேரி மார்ஷ்மேன் போன்றோரின் வசனங்கள் நிறப் பிடத்தக்கவை. ராஜாராம்மோகன் ராயின் சட்டுரைகள் மூலம் வங்க மொழி வசன நடைக்குத் தொடக் கம் ஏற்பட்டது என்பது எல்லோ ராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. காரணம் அவர் பத்திரி கையில் வசனங்கள் எழுதுவது சம்பந்தமாக-பல வழி வகைகள்-குறிப்புக்கள் ஆகியவற்றை அடிக் கடி எழுதிவந்தார். உதாரணமாக ''எந்த எந்த இடங்களில்'' ''எப் பொழுது'' ''எவை'' ''எவ்வி தம்'' என்ற பதங்கள் வரும்போ தெல்லாம் அவ் அவற்றின் மாற் றுப் பதங்களாம் 'அப்பொழுது'', ''அவை'' ''அவ்விதம்'' ஆகிய வற்றை உபயோகித்து முழு அருத் தம் தரும்படி வாக்கியத்தை எழு யாகப் பல குறிப்புக்கள் கொடுத்து வந்தார். அதன் பயனை பழைய வசன நடை திருத்தம் பெற்று, புத்துயிருடன் பொலிந்து வரலா யிற்று. இது பண்டிதர்களையும், படித்த மக்களையும் விழித்தெழச் செய்தது. ராம்மோகன் ராய் வகுத் துத் தந்த சரியாய் வசனங்கள் எழு தும் முறையை, பலரும் விரும்பிப் பின்பற்றி வரத் தலைப்பட்டனர்.

தேவேந்திரநாத் டாகூர்

மகரிஷி தேவேந்திரநாத் டாகு ரின் வசனங்கள் இன்று நிலவிவரும் வசனங்களை ஒத்திருந்தது என்பது நன்கு குறிப்பிடத்தக்கது. அதா வது அவை இலக்கணப் பிழை யின்றி எளிய நடையில் சின்னஞ் சிறு வாக்கியங்களாக விருந்தன. பின்னர் காளிசிங்கரின் மகாபாரத மொழி பெயர்ப்பும், ஹேமசந்திர வித்யாரத்தினத்தின் ராமாயண மொழி பெயர்ப்பும் மிக எளிய நடையைத் தாங்கி விளங்கின.

கிறிஸ்தவ பாதிரிகள் பைபிளை வங்க மொழி ஆக்கம் செய்தனர். வங்கமொழி இலக்கண நூலும், பேரகராதியும் தொகுத்து வெளி யிட்டனர். தமிழுக்கு வீரமாமுனி செய்த தொண்டினைப் போன்றது இப் பாதிரிமார்கள் வங்க மொழிக்கு ஆற்றிய பணி. ஆகவே இவர்கள் வங்க மொழி வளர்ச்சிக்குச் செய்த சேவை போற்றத்தக்கது. வங்க மக்கள் அவர்களுக்குப் பெரிதும் கடமைப் பட்டவர்களாவர். கிறிஸ்தவ பாதிரிகள் அப்பொழுது கல்கத்தாவை அடுத்துள்ள ஸ்ரீராம் பூரில் இருந்துகொண்டு அங்கோர் அச்சகம் நிறுவி அந்த நூல்களை எல்லாம் பிரசுரம் செய்து வந்த னர். அதற்கு முன்னர் வங்க மொழியை ஆங்கிலத்தில் எழுதி நூல்களை லிஸ்பனிலிருந்து வெளி யிட்டு இங்கு மக்களுக்கு வழங்கி வந்தனர்.

ஈசுவர சந்திர வித்யா சாகரர்

அந்தக் காலத்திலே வங்கமொழி வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றிய பெருமை ஈசுவர சந்திர வித்தியா சாகரருக்கும், அக்ஷயகுமார் தத்த ருக்குமே உரித்தது. ஈசுவர சந்தி ரர் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஏற்ற பாட புத்தகங்கள் முதல், அரிய போதனைகள் கற்பிக்கும் பற்பல நூல்கள்வரை இயற்றித் தந்து வங்க மொழியை வளர்த்து வந்தார். வங்க இலக்கிய உலகிலே அக்ஷயகுமார் தத்தரும் ஈஸ்வர சந்திரரும் முதன்மையான இடம் வகித்திருப்பவர்களாவர்.

சாட்டர்ஜியும், பங்கிம்

பங்கிம் சந்திர சட்டோபாத்தி யாயர் (சாட்டர்ஜி) வங்க இலக்கி யத்திலே புரட்சி உண்டாக்கிய பெருந்தகை. 'வங்க தர்சனம்' என்ற அவரது மாசிகையிலே முதன் முதலில் 'சுபால குந்தலா' நாவலை எழுதி வந்து மக்களின் மனத்தைக் கவர்ந்தார். வசன நடையிலே புதுமையைப் புகுத்தி, வங்க மக்க ளின் மனத்தைக் கவர்ந்தார். வசன நடையிலே புதுமை யைப் புகுத்தி வங்க மொழிக் கும் புத்துயிரளித்த புண்ணியர் எனப் பல்லோராலும் பாராட்டப் படுபவர் பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்' 'துர்கேஷ்நந்தினி' 'கிருஷ்ணகாந்தனின் உயில்' ஆகிய நாவல்கள் உலகப் பிரசித்தம். அவர் 'வங்க தர்சனத்திலே' நாவல்கள் மட்டும் எழுதி வரவில்லை; அரசியல் முதல் எத்தனையோ பொது-சமூக விஷயங்கள் பற்றிய கட்டுரைகளும் எழுதி அழியாப் புகழ் பெற்றார். அன்னை இன்றும் வங்க மக்கள் 'நாவல் இலக்கிய சக்ரவர்த்தி' -'ஸர் வால்டர் ஸ்காட் ஆப் பெங் கால்' (Sir Walter Scott of Bengal) என்று அழைத்து வருகின்ற னர்.

பண்டித மும்மணிகள்

ராஜ்நாராயண் வசு, ராஜ்கிருஷ் ணமுகர்ஜி பூதேவ் முகர்ஜி என்ற பண்டித மும்மணிகள் உச்சதர வங்க இலக்கிய சிருஷ்டிகர்த்தாக் கள் எனப் பிரபலமானவர்கள். இவர்களுக்கெல்லாம் முன்பாக, 'அலாலின் மகன் துலால்' என்ற நாவலை உருவாக்கியவர் ஸ்ரீ டெக் சந்த் கபூர் என்பார். அவரது நாவ லிலே வங்க மொழியோடு பல பிற மொழிப் பதங்கள் நிறையக் கையா ளப்பட்டிருந்தாலும், தமிழிலே வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு' எவ் வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு மதிப்புள்ள ஆதி நாவல் இலக்கியம் அதுவேயாகும். இச் சந்தர்ப்பத் திலே இதனைக் கூறுமலிருப்பது பெரும் குற்றமுமாகும்.

கவிதைகள் - காவியங்கள்

அநேகமாய் எல்லா மொழிகளி லும் ஆதி இலக்கியங்கள், கவிதை-காவிய உருவிலேயே இலங்கி வந் தன. காரணம், பாட்டில் மயங்காத வர் யார்? பாட்டு இதயத்தைத் தொடும் தன்மைகொண்டதல்லவா? ஆதலால், வங்கத்திலே, கதைகள், புராணங்களைப் போல், பொது மக் களை முன்னிட்டு, அவர்களை வியாஜ மாகக் கொண்ட சமூக-சம்பவங் களைச் சித்திரிக்கும் கதைகள் காவிய உருவிலே நிறைய எழுந்தன. கதைகள் என்ற, இம்மனகள இலக்கியச் சிருஷ்டிகள் மைமன்சிங் மாவட்டத் திலே மிக மிகப் பிரசித்தம். அவை ஒவ்வொன்றும் காவிய இலட்சணங் களில் சிறிதும் குன்றுத குறையாத முழுமைக் காப்பியம்; கிராமக் கவி ஞர்களால் பாடப்பட்டவை. அவற் றில் காணும் நடை, வர்ணனைகள், கருத்து, பொருள் அத்தனையும் அற் புதமாயிருக்கும். சந்திராவதி என் பது அத்தகையதோர் சிறந்த காவியம்.

கதைச் சுருக்கம்

புல்லேஸ்வரி நதிக் கரையிலுள்ள பாகுதியா கிராமத்தைச் சேர்ந்த வள் சந்திராவதி. அவளது வாழ் க்கை துயர் மிகுந்தது. இளமையி லிருந்தே ஜயசந்திரனோடு இணை பிரியா நட்புக் கொள்ளுகிறாள். இறுதியில் அது முற்றி, காதலாக மாறுகிறது. அவர்கள் கல்யாணத் திற்கும் ஏற்பாடாகிறது. முகூர்த் தமும் வைத்தாகி விடுகிறது. கல்யாண தினத்தன்று ஜயசந்திரன் காணமற் போய்விடுகிறான். காரணம், அவன் தனது காதலி முக மதிய மாதொருத்தியை மணம் செய்துகொண்டு எங்கோ வாழ்ந்து வருகிறான். சந்திராவதியின் ஆசை நிராசையாகி, மிக்க மனமுடைந் தவளாகிவிடுகிறாள். இனி, கல் யாணமே செய்துகொள்ளப் போவ தில்லை என்றும் சபதம் செய்து கொள்கிறாள். தன் தந்தை மாபண் டிதர் பங்ஸீதரருக்குப் பணிவிடை கள் செய்வதிலும் அவரது நூல் களை எழுதி வருவதிலுமாகக் காலம் கழித்து வருகிறாள்.

சில தினங்களுக்குப் பிறகு ஜய சந்திரன், சந்திராவதியைக் காண வருகிறான். அப்பொழுது அவள் சிவன் கோவிலில் தியானத்தில் அமர்ந்திருக்கிறாள். பன்முறை அவளை அவன் அழைக்கிறான். அது அவள் காதில் விழவில்லை. பிறகு, கோயிலின் வாயிற்கதவிலே 'என்னை மன்னித்துவிடு சந்திரா' என்று எழுதிவிட்டுத் திரும்பு கிறான் ஜயசந்திரன். தியானம் கலைந்து கோயிலை விட்டு வெளிவரு கையில், கதவின் மேல் எழுதியிருக் கும் அவ்வார்த்தைகளைக் காணும் சந்திராவின் கண்கள் நீரைக் கக்கு கின்றன. துக்கம் தொண்டையை அடைக்க, துடி துடிக்கும் உள்ளத் தோடு ஓடுகிறாள் வீடு நோக்கி.

அன்று மாலை இடுப்பில் குடத் துடன் நீர் மொண்டு வர நதிக் கரை அடைகிறாள் சந்திரா. என்ன ஆச்சர்யம்! தன் ஆருயிர்க்காதலன் ஜயசந்திரனின் சவம் ஆற்று நீரிலே மிதந்து செல்வதைப் பார்க்கிறாள். எப்படி இருக்கும் அவளுக்கு? துயர்க் கடலிலே மூழ்கிறாள். பித்துப் பிடித்தலைகிறாள்; இக் கதை, திரைப்படமாகவும் வெளி வந்து எண்ணிறந்தோர் உள்ளத் தையும் கவர்ந்திருக்கிறது என்ப தைச் சொல்லாமல் இருக்க முடிய வில்லை.

கிழக்கு வங்க கீதிகா

கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த கீதிகா ஒன்றைப் பார்ப்போம். காஞ்சனமாலை தன் கணவனை நனி காதலித்து வந்து-கண்கண்ட தெய் வமாக அவனை வழிபட்டு வருகிறாள். கணவனை வியாபார நிமித்தம்வெளி யூர் செல்வதாகப் பொய்யுரைத்து வேறு நாடடைந்து, ஓர் அரச குல மாதைக் கல்யாணம் செய்து கொண்டு இன்ப வாழ்க்கை நடத்தி வருகிறான். காஞ்சனை, கணவனைக் காணமல் கதறியவாறு காலம் கழித்து வருகிறாள். சில வருடங்கள் சென்றதும், கணவனைப் பற்றிய விவரம் அறிகிறாள். உடனே அவ னைத் தேடி அந்நாட்டை அடைந்து அரசியைக் காணச் செல்லுகிறாள். அவள் முயற்சி முறிந்து விடுகிறது. இதய வேதனை மிகுந்து ஆற்றங் கரையில் அந்திப் பொழுதிலே அங்கலாய்த்து அவலக் குரல் எழுப் புகிறாள். இறுதியில் நீரின் தன்மை யால் ஆற்றில் குதித்து ஆற்று நீரோடு ஒன்றுகிறாள். இத்தகைய [illegible] வங்கத்திலே ஏராளம். இவைபற்றி முன்னமேயே குறித்துள்ளோம். இவை, மிகப் மையமான காலத் தவை என்றும் சமீப காலத்தியவை என்றும் இரு வகைகளாகப் பிரிக் கப்பட்டு நூல் உருவிலே வெளியாகி யிருக்கின்றன.

பரத்சந்திரர் ஈசுவர குப்தா

நவீன இலக்கிய முதல் சிருஷ்டி கர்த்தா பரத் சந்திரரின் காவியங் களில் புதுமையிருந்தும் அவர் கையாண்ட பாஷையில் நிறைய வடமொழிப் பதங்களைக் காணலாம் என்றாலும் அவரது காலத்திலே சுத்த-தனி வங்க மொழியிலே பல இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன. அந்த வகையில் ஈசுவர குப்தர் வழி காட்டினார். கருத்தாழம், பொருள் செறிவு, எளிய நடை நிரம்பிய அவரது கவிதைகளே அதற்குச் சான்று கூறும். அவரது அடிச் சுவட்டிலே அநேகர் கவிதை கள் எழுதி வரலாயினர். ஈசுவர குப்தர் சின்னஞ் சிறிய விஷயத்தை யும் கவிதையிலே மிகப் பெரிதாக்கி கூறும் திறன் படைத்தவர். அவர் 'ஸம்வாத பிரபாகர்' என்ற தரும விளக்கப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்து வந்தார். ஈசுவர குப்தர் ஹாஸ்யக் கவிதை புனைவதிலும் சமர்த்தர். அந்தக் காலத்திலேயே ஆங்கிலப் படிப்பை இடித்துக் கூறும் அவரது கவிதை ஒன்றைப் பாருங்கள்.

பாயே தியே பாங்கா பூட்ஸை
பாதத்திலே, வளைந்த பூட்ஸை
கோடு ஹெல் டேம் ஹூட்
போ நமனுலகம் டேம் ஹூட்
மா பாபா போல்சே
என்றம்மா அப்பா கூற்று,
ஏர் சேயே சுகோதய்
இதைவிட சுக எழுச்சி
கோரே ஆர் கார் ஹோய்
பின் யாரிடமது எழுந்திடுமாம்!
தேகோ ஆர் மஹஷாய்!
நோக்கும் ஐயா பெரியாரே
ஆசா தரு ப்வல்சே!
நம்பிக்கை மரம் பழுப்பதனை!

இது ஆங்கில மோகத்தில் ஊறிய பெற்றோர்கள் மகனுக்குப் பயிற்சி அளிப்பதைப் பழிப்பது என்று சொல்லாமலே விளங்கும். இப்படி யாக எத்தனையோ மணிப்பிரவாள ஹாஸ்யக் கவிதைகள் இயற்றியிருக் கிறார். பிறர் கவிதைகளும் பல உள. ரூப்சந்த் பக்ஷி என்பவர் நித்தாஸ்துதி பாடுவதில் காளமேகப் புலவரைப் போன்றவர் எனலாம்.

மதுசூதன தத்தர்

பிறகு, மைகேல் மர்சூதன தத் தர் கவிதை-காவிய உலகிலே ஏன் நாடகத் துறையிலும் பெரும் புரட்சியை உண்டாக்கினர். அவ ரது மேகநாத் காவியம் (இராவண னின் மகன் மேகநாதன்) முதன் முதலில் வெளிவந்ததும் வங்கத்

(7-ம் பக்கம் பார்க்க)

தோழியின் பொருட்டு வேலையைத் துறந்தாள்

கச்சிதமான சிறு கதை போல விளங்கும் இச் சம் பவம் உண்மையில் நிகழ்ந் தது.

இங்கிலாந்தில் கம்பர்லி என்னும் இடத்தில் ஒரு சிறு பள்ளிக்கூடம். சிக்கன நட வடிக்கைக்காக கடைசியாக வேலையில் சேர்ந்தவர்களை முத லில் நீக்குவது என்று அங்கு முடிவாயிற்று.

ஆனல் பாதிக்கப் படுபவன் ஸ்ரீமதி மிடில்டன் என்ற வய தான விதவை. அதே பள்ளி யில் இருக்கும் ஸ்ரீமதி. சிம் சன் வேலையை இழக்க மாட் டாள். அவள் பல்லாண்டு காலமாக இப் பள்ளியில் பணி புரிந்தவள்.

''நமக்கோ கணவர் இருக்கிறார். இளவயது. ஆனல் மிடில்டனுக்கு இந்த வேலையை விட்டால் வேறு கதியில்லை' என்று உணர்ந்து ஒரு முடிவு க்கு வந்தாள். அதிகாரிகளி டம் சென்று, 'மிடில்டனுக்கு பதில் நான் விலகுகிறேன். அவளை வேலையிலிருந்து நீக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாள்.

டெய்லி ஹெரால்ட் என்ற பத்திரிகையில் இந்த அம்மாளை இந்த ஆண்டின் ''நல்ல அண் டையாள்,(Good Neigh bor) பட்டத்துக்கு சிபாரிசு செய் தது.

கதை இதோடு முடியவில்லை அந்தப் பள்ளியில் மிடில்ட னும் சிம்சனும் இன்னும் வேலை செய்கின்றனர். சிக்க னமோ ஊதாரித்தனமோ-இரு வரும் பள்ளிக்கூடத்துக்கு மிக வும் அவசியம் என்று அதிகாரி கள் கருதுகின்றனர்!

சூரிய சக்தி:

முக்கிய விசைசப்ளை மூலமாகலாம்

சூரிய சக்தியை ஒரு முக்கிய விசை சப்ளை மூலமாகப் பயன்படுத் திக் கொள்வது ஏதிர்கால வான வெளி ஆராய்ச்சியின் முக்கிய முயற்சிகளில் ஒன்றாக இருக்கும் என்று பெரிய ஆராய்ச்சித் திட் டங்கள் ஸ்தாபனத்தின் டைரக் டர் ராய் டபிள்யூ ஜான்ஸன் இன்று கூறினார்.

அபரிமிதமாக இருக்கும் இந்த சக்தியைப் பயன் படுத்திக்கொள்வ தானது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் மிக துரிதமாகக் குறைந்து வரும் சக்தி சப்ளை மூலங் களைச் சேமித்து வைக்கவும் பயன் படும் என்றார்.

நோபெல் ஞாபகார்த்த விருந்துப சாரத்தில் பேசுகையில் ஜான்ஸன் இவ்வாறு சொன்னார்.

தாராளமாகக் கிடைக்கும் சூரிய சக்தியைப் பயன் படுத்துவதும், அணு சக்தி மூலங்களிலும் ரசாயன சக்தி மூலங்களிலும் ஏற்பட்டு வரும் புதிய முன்னேற்றங்களும் இவை இல்லாவிடில் எதிர் காலத் தில் ஏற்படும் விசைச் சக்திக் குறையைச் சமாளிக்கப் பயன்படும் என்றார் ஜான்ஸன்.

சூரிய ஒளியை பிரதிபலிக்கும் சாதனங்களை வான வெளியில் உப யோகிப்பதன் மூலம் அபிவிருத்திக் குறைவான நாடுகளுக்கு விசை சப்ளை செய்வதற்கும் உலகம் முழு வதிலும் அநேக நாடுகளில் வாழ் க்கை தரத்தை விருத்தி செய்யும் வழி காணலாம் என்றும் ஜான்ஸன் சொன்னார்.

"ஆசிய இலக்கியக் களஞ்சியம்"

கீதை, பாரதம், சாகுந்தலம் இடம் பெற்றுள்ளன

நியூயார்க், டிச. 8—மகாபரத பஞ்ச தந்திரம் சாகுந்தலம்போன்ற மாபெரும் புராதன இந்திய இலக் கியங்களிலிருந்து சில தொகுப்பு கள் புதிதாக வெளியிடப்பட்டுள்ள ''ஆசிய இலக்கியக் களஞ்சியத் தின் முக்கிய அம்சங்களாக விளங்கு கின்றன.

ஜான் டே கம்பெனி பிரசுரித் திருந்த அசல் புத்தகத்தின் புதுப் பதிப்பே இந்த வெளியீடு.

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை யின் புத்தக விமரிசனப் பிரிவில் சாந்தா ராமராவ் இதைப் பற்றி எழுதுகையில் ''கருத்துடன் செய் யப்பட்ட விரிவான ஒருதொகுப்பு'' என்று கூறியிருக்கிறார்.

நியூ அமெரிக்கன் லைப்ரெரி இந் தக் ''களஞ்சியத்தை'' பிரசுரித் துள்ள ஆசிய மதங்களையும் கலா சாரங்களையும் பற்றி வெளிவர இருக்கும் மென்டோர் புத்தக களில் இது ஒன்றாகும்.

இதில் இந்தியா சீனு அரேபியா, ஈரான், ஜப்பான் நாட்டுப்பாடல் கள் கதைகள் சமய நூல்கள் முதலியன உட்பட்டுள்ளன.

இந்தக் ''களஞ்சியத்தில்'' ஆசிய மத இலக்கியங்களிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட தொகுப்புகள் கொண்ட ஒரு பிரிவு இருக்கிறது. இதில் பகவத் கீதையின் சில அத் யாயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின் றன.

மென்டார் புத்தகத் தொகுப் பில் வெளியிடப்படும் இதர பிர சித்தமான புத்தகங்களில் சம்பூர்ண பகவத் கீதை உபநிஷத்துக்கள், காருண்ய புத்தரின் உபதேசங்கள் ஆகியவையும் உட்படும்.

காதலியை அடைய வழுக்குமரம் ஏறு!

மத்தியப் பிரதேச ராஜ்யத் தில் வாழும் கோண்டுகள் என்ற ஆதிவாசிகளிடம் இருக்கும் விந் தைப் பழக்கங்களில் ஒன்று இது. 'வீரமிக்க இளைஞரே அழகிகளை மணக்க ஏற்றவர்! என்ற கொள் கையைக் கொண்டவர் அவர்கள்.

ஒரு பண்டிகை நாளில் உயர மான ஒரு கம்பத்தில் வாலிபர்கள் ஏற வேண்டும். அந்தக் கம்பத்தில் சுலபத்தில் ஏற முடியாது. வழுக்க நிறைய நெய் தடவி யிருக்கும். அதோடு கம்பத்தைச் சூழ்ந்து கொண்டு அழகிய பெண்கள் அதில் ஏறுபவனை குச்சிகளால் அடித்துத் தொந்தரவு செய்தபடி இருப்பார் கள். இந்தத் தடைகளையெல்லாம் தாண்டி, எந்த வீர புருஷன் கம்பத் தின் உச்சிக்குச் செல்கிறானே அவன் போற்றப்படுகிறான். அவன் ஆசைப் படும் அழகியை ஒரு தடையும் சொல்லாமல் அவனுக்கு மணமுடிப் பார்கள்.

பத்தொன்பது ஆண்டு படிதாண்டா மாப்பிள்ளை

மாட்ரிட் நகரிலிருந்து 34 மைலில் உள்ள குவாதலல்ஜாரா என்ற ஊரில் தாமஸ் ஜுவராஜ் என்பவர் அண்மையில் போலீ சில் சரணடைந்தார்.

1939ம் ஆண்டில் அவர் மீது ஓர் அரெஸ்ட் வாரண்ட் இருந்த தாம். உடனே அவர் தம் மாமியார் வீட்டில் ஒளிந்து கொண்டாராம். அன்று முதல் இதுவரை அவர் வீட்டைவிட்டு வெளியேறுமல் ரேடியோ கேட் டுக் கொண்டும் புத்தகம் படித் துக் கொண்டுமே பொழுது போக்கினாராம்.

பாகவதக் கதைகள்:

சங்கு சுப்பிரமண்யம்

சிறந்த தான பரம்பரைகள்

தீய காரியங்களாலும் எண்ணங்களாலும் ஒரு பாரம்பரியமே கெட்டு விடுவது போல நல்ல எண்ணங்களைக் கொண்டு நற் காரியங்களையே இயற்றியவரின் சந்ததியில் பல தலைமுறைகள் நல்லவர்களே வரிசையாகப் பிறந்த மேன்மையான வம்சங்கள் உண்டு.

இதற்கு உதாரணமாக விதேக வம்சத்தினரை சுகப்பிரும்மம் விரிவாக வர்ணித்திருக்கின்றார்.

நிமி என்ற மன்னவனின் கதை ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. பிராணிகளின் கண்களை மூடவும், திறக்கவும் ஒரு தனி அதிகாரத்தைப் பெற்று அந்த மன்னன் ஆவி உலகில் ஆட்சி செலுத்தப் போய் விட்டானென்று அந்தக் கதையில் சொன்னோம். அந்த நிமியின் உடல் யாகசாலையில் கிடந்தது. தேசத்துக்கு அரசன் என்று ஒருவனில்லா விட்டால் அதனால் குடி மக்களுக்கு கஷ்டமேற்படுமென்று நினைத்த பெரியோர்கள் ஒரு அரச குமாரனை யடையவேண்டினர். மந்திரங்களைச் சொல்லி நிமியின் சரீரத்தைக் கடைந்தனர். அந்த க்ஷத்திரியன் உடலினின்றும் அற்புதமான குமாரன் ஒருவன் பிறந்தான்.

அப்படிப் பிறந்தவனை 'ஜனகன்' என்று பெரியோர் அழைத்து அவனுக்குப் பயிற்சியும் அளித்து நாளடைவில் பட்டாபிஷேகமும் செய்வித்தனர்.

ஜீவனில்லாத தேகத்தினின்றும் பிறந்தவனுகையால் 'விதேகன்' என்று அவன் அழைக்கப்பட்டான்.

கடைந்ததன் பயனுகப் பிறந்தவனதலின் 'மிதிலன்' என்றும் சொல்லப் பெயரிட்டு அழைத்தார்கள். அவன் ஆண்டு வந்த ராஜதானி நகரம் 'மிதிலை' என்று பெயர் பெற்றிருந்தது. அந்தத் தேசமும் மன்னனின் பெயரை யொட்டி 'விதேக நாடு' என்று வழங்கப்பட்டது.

அப்பேர்ப்பட்ட ஜனகன் ஆன்மீகத் துறையில் மிகமிகப் புகழ் பெற்றவன். அந்த ஜனகனுடைய சபையில்தான் வேதாந்த விஷயங்களைப் பற்றி பல முனிவர்கள் சர்ச்சைகள் செய்து, சித்தாந்தங்களை நிர்ணயம் செய்தார்கள்.

சீதையின் தகப்பனார் சீரத்வஜன்

அந்த வம்சத்தில் பிறந்த அரசர் களுக்கெல்லாமே ஜனகன் என்ற பட்டப் பெயரும் கூடவே வந்து கொண்டிருந்தது. அந்த சந்ததியில் பிறந்த 'ஸீரத்துவஜன்' என்ற மன்னன் ஒரு யாகம் செய்யவேண்டி பூமியைக் கலப்பையினுல் உழுதான். அந்த ஏரின் கொழுமுனையில் சாட்சாத் லட்சுமியே ஒரு குழந்தை வடிவத்தில் வந்து தோன்றினுள். அவள்தான் ஸீதை.

விதேக நாட்டில் பிறந்ததால், 'வைதேகி' என்ற பெயர் கொண்டும், மிதிலா பட்டணத்தின் இரத்தினமாய்த் திகழ்ந்ததால் 'மைதிலி' என்றழைக்கப்பட்டும், ஜனக வம்சத்தில் தோன்றியதால் 'ஜானகி' என்ற பெயர் கொண்டும் வளர்ந்த திருமகள், ஸ்ரீ ராமனைத் திருமணம் செய்து கொண்டாள். அந்த ஜானகி இராமாயணத்தின் கதாநாயகியாகி என்றென்றும் பசுமையாக நம் நினைவில் இருந்து கொண்டிருக்கிறாள்.

அந்த ஜனகனின் வம்சத்தில் உதித்த கேசித்வஜன் என்ற மன்னன் பிரும்ம வித்தையில் வல்லவனுயிருந்தான். அவனுடைய ஒன்று விட்ட சகோதரனை காண்டிக்யன் கர்ம யோகத்தின் உண்மை தெரிந்தவனுயிருந்தான்.

அந்த வம்சத்தில் தோன்றிய ஒவ்வொரு மன்னனுமே ஆன்ம வித்தையில் கரை காண்பவர்களாயிருந்ததால்தான் ராஜ யோகிகளின் வாஸஸ்தானமாக, அந்த மிதிலை அரண்மனை இருந்தது.

சுகப்பிரும்மம் பின்வருமாறு அதை வர்ணித்திருக்கிறார்.

"அந்த வம்சத்து அரசர்கள் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாயிருந்த போதிலும் ஒரு தேசத்தையே ஆட்சி செய்தவர்களாக இருந்தபோதிலும், நெறி தவறுமல் யோகேச்வரனுகிய பகவானுடைய அனுக்கிரகத்தைப் பெற்று ஆத்மானந்தத்தில் ஆழ்ந்தவர்களாயிருந்தனர். சுகமென்பதும் துக்கமென்பதும் இந்த விதேக மன்னர்களைத் துளிக்கூட அசைத்தது கிடையாது" என்று வர்ணித்திருக்கின்றார்.

இப்படி சுகதேவர் வர்ணித்திருப்பதால் ஒரு சிறு விளக்கமும் தர நினைப்பு ஏற்படுகிறது. இராமாயணத்தினின்றும் ஒரு எடுத்துக் காட்டு கிடைக்கிறது.

சீதா பிராட்டியை ஸ்ரீராமன் திருமணம் செய்து கொள்கிறவரையில் அந்த ஜனகனைப் பற்றி இராமாயணம் விரிவாகச் சொல்கிறது. பிறகு ஜனகனைப் பற்றி ஒரு வரியும் சொல்லப் படவில்லை. ஸ்ரீராமனுடைய கஷ்டங்கள், சீதையுடைய வனவாசம்-இவைகளைப் பற்றி அந்த ஜனகன் வியாகுலப் பட்டதாகத் தெரியவில்லை. ராம பட்டாபிஷேக வைபவம், ராமராஜ்ய ஆனந்தம் இவைகளைக் கேட்டு குதூகலமடைந்ததாகவும் கதையில்லை. அவ்வாறு சீதையின் கதை இருந்ததற்குக் காரணம் அவர் விதேக வம்சத்து ராஜயோகியின் பண்புடன் இருந்ததேயாகும்.

க்ஷத்திரிய - பிராம்மண உறவு

தந்தையினுலும் தாயினுலும் துறக்கப்பட்டு அனுதையாகக் கிடந்தது ஒரு பிள்ளை. 'த்வாஜம் பர' என்று தாய்-தந்தையர் விவாதித்து விட்டு விட்டுச் சென்றதால் அந்தப் புதல்வனை மருத்துக்கள் போஷித்து பரத சக்ரவர்த்திக்குப் பிள்ளையில்லாததால் அவருக்கு புத்திரனுகக் கொடுத்தார்கள்.

அந்தப் பரத்வாஜன் பெற்ற பிள்ளைகளில் நரன், சர்க்கன் என்ற இருவரும் முக்கியமானவர்கள். நரனுடைய பிள்ளையே ஸங்க்ருதி என்பவர். (பிராம்மணர்களில் ஸங்க்ருதி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் அநேகர்). நரனுடைய பேரனை மகாத்மா ரந்தி தேவனின் சரிதை ஏற்கெனவே வந்திருக்கிறது. கர்க்கன் என்பவருடைய பேரனே கார்க்யன். 'அவனிடத்தினின்றும் ஒரு பிராம்மண குலம் உண்டாயிற்று' என்று சுகர் விவரித்திருக்கிறார். அஜமீடனுடைய வம்சத்தில் பிறந்த பிரியமீடன் முதலியவர்களும் பிராம்மணர்களானார்கள் என்பது சுகதேவரின் வாக்கு. அடையாளங்களாக இன்றைக்கும் இருப்பன பாரத்வாஜ கோத்ரம், ஸங்க்ருதி கோத்ரம், கர்க்க கோத்ரம் முதலிய பெயர்களாகும்.

பாரத்வாஜனைப் பற்றி அறியுமுன், அவன் 'தாத்தா' துஷ்யந்தனைப் பற்றியும் சிறிது தெரிந்து கொள்ள வேண்டும்.

சுகர் தந்துள்ள சாகுந்தலம்

பூருவின் வம்சத்தில் பிறந்தவன் துஷ்யந்த மன்னன். அவன் வேட்டையாடித் திரிந்து கொண்டு ஒரு தடவை, கண்வ மகரிஷியின் ஆசிரமத்துக்குப் போனன். அங்கு ஒரு மடந்தையைக் கண்டு மோக முற்றான். அவள் தேக காந்தி இலக்குமியின் மேனியொளி போலவும் அவளது ஆகர்ஷண சக்தி தேவ மாயையுடையது போன்று மிருந்ததாம்.

ஏதோ சில சேவகர்களோடு மட்டும் வந்திருந்த துஷ்யந்தன், தன்னை உபசரித்து வரவேற்ற அந்தப் பெண்மணியிடம் மனம் விட்டுத் தனது ஆசையையும் தெரிவித்தான்.

"தாமரைப்பூவின் உட்புற ஒளியைப் போன்ற வனப்புடன் மின்னும் பெண்ணரசே! நீ யாரென நான் தெரிந்து கொள்ளலாமா? நீ என் மனதுக்கு இனியவளாகி விட்டனை. என் மனம் என்னை அதர்மத்தில் ஒருபோதும் இழுத்துச் செல்லாது. உன்னை என் மனம் விரும்புவதால் நீ ஒரு ராஜ வம்சத்துக் கன்னிகையாகவே இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்" என்றெல்லாம் பேசினன்.

அந்த மடந்தை சகுந்தலை, பின் வருமாறு மறுமொழி பகன்றுள்: "நான் விசுவாமித்திரருக்கு மேனகையிடத்தில் பிறந்தவள். ஆகையால் ராஜ வம்சத்துக் கன்னிகைதான். வீரனே! உனக்குப் பணிவிடை செய்ய நான் சித்தமாயிருக்கிறேன். தாமரைக் கண்ணனுகிய நீ என் பூசையை அங்கீகரிக்க வேண்டும். எங்கள் ஆசிரமத்தில் செந்நெல் முதலிய தானியங்கள் உள. அவைகளை உண்பது தங்களுக்குருசிக்குமாயின்தாங்கள் இங்கு வசிக்கலாம்" என்று உரைத்தாள்.

பிறகு துஷ்யந்தன் அந்த ஆசிரமத்தில் தங்கினன். காந்தர்வ விவாக விதியின்படி சகுந்தலை என்னும் பெயருடைய அந்த யுவதியை மணம் புரிந்து கொண்டான். அந்த உறவின் பயனுக சகுந்தலை கர்ப்பமுற்றுள். மன்னன் ராஜதானி நகருக்குத் திரும்பி விட்டான்.

மனைவியையும் புத்திரனையும் திரஸ்கரித்தான்

சகுந்தலை நாளடைவில் ஒரு நல்ல புதல்வனைப் பெற்றுள். அந்தச் சிறுவன் உலகிலேயே மகா கீர்த்திவானுக, விளங்கப் போகிறு னென்பதை அறிந்த கண்வரிஷி அவனுக்கு வனத்திலேயே ஜாதகரணம் முதலிய சடங்குகளைச் செய்தார்.

பகவானுடைய அம்சாம்சத்தினுல் பிறந்த பையனுதலால் பரதன் சிறு வயதிலேயே மகா பராக்கிரமமுடையவனுக இருந்தான். சிங்கத்தைக் கட்டிப் பிடித்து ஆசிரமத்துக்கு இழுத்து வந்து அதனுடன் விளையாடுவான். அந்த வீரத்தைக் கண்டு சகுந்தலை மனமகிழ்ந்தாள்.

சகுந்தலை தன் புதல்வன் பரதனை அழைத்துக்கொண்டு தனது கணவரான துஷ்யந்த மன்னனை அடைவதற்காக அஸ்தினபுரம் வந்தாள். அந்த மனைவியையும் புத்திரனையும் அரசன் அங்கீகரியாது மறுத்து விட்டான்.

நிந்தைக்கிடமில்லாத சகுந்தலையையும் பரதனையும் அரசன் ஏற்றுக் கொள்ளாது போகவே இயற்கையே கோபித்தது. அசரீரி வாக்கொன்று எழுந்தது. துஷ்யந்தனுக்கு ஞாபக முணர்த்திற்று.

"தந்தையைக் காட்டிலும் தனயன் வேறுபட்டவனல்லன். இப்புதல்வனைப் பிறப்பித்தவன் நீயே யென சகுந்தலை சொல்வது சத்தியமே" என்றது அந்த ஆகாசவாணி.

பின்னர் துஷ்யந்தன் சகுந்தலையையும் பரதனையும் ஏற்றுக்கொண்டான். இவ்வளவுதான் பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ள சகுந்தலைச் சரித்திரம். இந்தக் கதையை வைத்துக் கொண்டு காளிதாஸ மகாகவி கற்பனைச் சம்பவங்கள் பலவற்றையும் அழகுறச் சேர்த்து, (மோதிர சம்பவம் முதலியன) 'சாகுந்தலம்' என்ற மகத்தான நாடகத்தை இயற்றியிருக்கிறார். சுகர் பாகவதப்படி. இளங் காளையான பரதனே தனது தாயாருடன் துஷ்யந்தன் தர்பாரில் வந்து நிற்கிறான் என்று காட்சியிருக்கிறது! நிற்க.



பரத சக்கரவர்த்தி

துஷ்யந்தனுக்குப் பிறகு பரதன் மகா கீர்த்திவானுக இந்த பாரத தேசத்தை ஆண்டு வந்தான். எந்த அரசனும் செய்யாத அளவுக்கு 250 அசுவமேத யாகங்கள் செய்தவன் பரதன்!

அந்தப் பரத மன்னனுக்கு மூன்று குமாரர்களிருந்தனர். ஒரு குமாரனுக்காவது பரதனின் சாயல் இல்லையாம்! அதை மன்னர் சொன்னரென்ற காரணத்துக்காக அந்த மூன்று பிள்ளைகளையும் அரண்மனையினர் அழித்து விட்டார்களாம்! என்ன கஷ்டம்! பரதனுக்கு வேறு பிள்ளையே பிறக்கவில்லை. அதனைப் பிள்ளையாகக் கிடைத்த பரத்வாஜனைத் 'தத்து' எடுத்துக் கொள்ள வேண்டி வந்தது. அந்த வம்சத்தில் தோன்றியவர்களே பாண்டவர் களும் துரியோதனுதியரும். ஆகவே அந்த வம்சாவளியில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய படி வருமாறு:—

ஹிருதீகன்
|
(பிள்ளை) தேவமீடன்
|
(பிள்ளை) சூரசேனன்
|
பத்து பிள்ளைகளும் ஐந்து பெண்களும்

அவர்களில் மூத்த பிள்ளையின் பெயர் வசுதேவர். அவர் பிறந்த போது தேவதைகள் வானத்தினின்றும் துந்துபி வாத்தியங்களையும் தங்கத் தம்பட்டங்களையும் முழக்கினார்கள். அப்படி வசுக்களில் ஒருவரே பிறந்திருப்பதால் இப்படி வானமண்டலம் அவருக்கு மரியாதை செய்தது. ஆகவே வசுதேவருக்கு 'ஆனக துந்துபி' என்ற ஒரு பெயருண்டு.

வசுதேவருக்கு ப்ருதை என்று ஒரு சகோதரி யிருந்தாள். அவளுடைய குடும்ப சிநேகிதர் குந்தி போஜ நாட்டான் ஒன்னன். அவருக்குப் பிள்ளை போ-பெண்ணே பிறக்கவில்லை. ஆகவே சூரசேனன் தனது பெண் ப்ருதை என்னும் நண்பனுக்கு ஸ்வீகாரமாகக் கொடுத்தான்.

வசுதேவரின் சகோதரி குந்தி போஜ நாட்டுக்குப் போனதும், குந்தி யென்ற பெயரை ஏற்றுக் கொண்டாள். அவள் பாண்டு என்ற மன்னனுக்கு வாழ்க்கைப் பட்டு பாண்டவர்களைப்பெற்றுள் என்பதை உலகம் அறியும்.

உலகை யெல்லாம் தன் பிறப்பினலேயே உய்விக்க எண்ணி பரப்பிரும்மம் வசுதேவரின் புத்திரனுக வந்து உதித்தது. அதுவே ஸ்ரீகிருஷ்ணன் என்ற கண்ணன்.

இவ்வாறு குந்தி தேவி கண்ணனுக்கு அத்தை முறை ஆகவேண்டும். பாண்டவர்களுக்கு அம்மாஞ்சி ஸ்ரீ கிருஷ்ணன்!

கண்ணனுக்கு மற்றொரு அத்தையான சுருத்தேவை த்ருடவன்மன் என்ற சிற்றரசனை மணந்து வந்தவத்திரன் என்ற பிள்ளையைப்பெற்றிருந்தாள். இன்னொரு அத்தை சேதிநாட்டு அரசனை தமகோஷனை மணந்து சிசுபாலனைப் பிள்ளையாகப் பெற்றிருந்தாள். ஆகவே சிசுபாலனும் தந்தவக்தரனும்கூட கண்ணனுக்கு அத்தான்களேதான்.

வைகுண்டத்தில் வாசல் காப்பவர் சபையிலிருந்து சனகாதி முனிகளின் சாபத்துக்கு ஆளாகி, ராவண கும்பகர்ணர்களாக பிறந்தார்களே அவர்களே, இப்போது மூன்றுவது முறை பிறந்திருக்கிறார்கள். சிசுபாலன் தந்தவக்திரன் என்று இப்போது பெயர்கள்!

வசுதேவருக்கும் தேவகிக்கும் மகத்தான கல்யாணம் நடந்ததே அதுவே ஒரு பெரிய அலங்கோலமாக முடிந்தது. அவர்களுக்கு பிறந்த எட்டு பிள்ளைகளில் கண்ணனையும் பலராமனையும் தவிர ஆறு குழந்தைகள் பால பருவத்திலேயே மாமனுல் கொல்லப்பட்டார்கள்.

அப்படிக் கொல்லப்பட்டார்களாயினும்அவர்களும்கண்ணனின்சகோதரர்கள் தானே. அந்தக் குழந்தைகளின் பெயர்களையும் சுகதேவர் தந்திருக்கிறார். (1) கீர்த்திமான் (2) சுஷேணன் (3) பத்ரசேனன் (4) ருஜு (5) ஸமதனன் (6) பத்திரன், ஏழாவது குமாரன் சங்கர்ஷணன் என்று சொல்லப்பட்ட பலராமன். கண்ணனுக்கு ஒரு தங்கையும் பிற்காலத்தில் பிறந்தாள். அவள்தான் சுபத்திரை.

அந்த சுபத்திரையை அர்ஜுனனுக்கு கண்ணன் மணம் செய்வித்துத் தந்தான். சுபத்திரையின் பேரப்பிள்ளைதான் பரீட்சித்து மன்னன்.

பாகவதம் என்ற இந்த அமிர்த ஊற்று உலகத்துக்குக் கிடைப்பதற்குக் காரணமாயிருந்த பரீட்சித்து மன்னனை பாரத மக்களால் மறக்க முடியுமா!

அவனைக் கர்ப்ப காலத்திலேயே காத்து, ரட்சித்தவன் கண்ணன். ஆகவே அந்தக் கண்ணனின் கர்ப்ப வாசக் கதையிலிருந்து ஒருவிவரமும் விடாமல் சுகப்பிரும்மம் சொல்ல வேண்டுமென்று, பரீட்சித்து மன்னன் கேட்டுக் கொள்ளவே சுகப் பிரும்மம் கண்ணன் பிறந்த வைபவக் கதையை சவிஸ்தாரமாகக் கூறினர்.

யது வம்சம்

"யது வம்சம் மிகவும் பிரசித்தமானது. பரம புருஷன் இந்த வம்சத்தில் மானிட உருவமேற்று, அவதரித்தானுகையினுல் இந்த வம்சத்தைப் பற்றிக் கேட்கிற மனிதனுக்குப் பாவங்கள் விலகும்" என்று ஒரு பூர்வ பீடிகையோடு சுகப் பிரும்மம், இந்த வம்சாவளியைச் சொல்கின்றார்.

யயாதியின் பிள்ளைகளில் ஒருவன் யது. அந்த வம்சம் யாதவ வம்சம் என்று அழைக்கப்படும். அந்த வம்சத்தில் ஏற்கெனவே பிறந்த மகாவீரன் கார்த்த வீரியார்ஜுனன். அவனையும் அவன் குமாரர்களையும் பரசுராம அவதாரம் அழித்து விட்டதே! பரசுராமனின் கணைக்குத் தப்பி யோடிவிட்ட ஐந்து பிள்ளைகளில் ஒருவர் மது. அவன் வம்சத்தினராதலால் 'மாதவர்' என்ற பெயரும் உண்டு. வ்ருஷ்ணி என்ற பெயர்கொண்டு, அதேக அரசர்கள் அந்த சந்ததியில் பிறந்ததால் வ்ருஷ்ணி வம்சம் என்ற கீர்த்திப் பெயரும் உண்டு. அவர்களைப் பற்றிய நூலுக்குப் 'பாரதம்' என்ற பெயரும் ஏற்பட்டது.

கலை அரங்கம்

ஸுபத்ரா - அர்ஜுனை

எழும்பூர் நாடக சபை (எக்மூர் டிரமடிக் ஸொஸைட்டி) சிறுமியர் பிரிவு அங்கத்தினர்கள் ஸுபத்ரா கல்யாண நாடகத்தைச் சமீபத்தில் மியூஸியம் தியேட்டரில் நடித்தனர். எழும்பூர் நாடகசபை, ஜகந்நாத பக்தசபை ஆகியவற்றின் கூட்டு ஆதரவில் நாடகம் நடந்தது.

கதையில் அர்ஜுனனும் ஸுபத்ரையும் காதல் புரிந்து கல்யாணம் செய்து கொள்கின்றனரென்றாலும் கிருஷ்ணன்தான் இதில் உண்மையான கதாநாயகன். அவர் திருவிளையாடலுக்குப் பயன்படும் பொம்மைகளே அர்ஜுனனும், ஸுபத்ரையும் மற்றெல்லாப் பாத்திரங்களும். இவ்வளவு முக்கியமான பாத்திரத்தை ஏற்ற குமாரி மாலதி அற்புதமாக நடித்தார். கிருஷ்ண வேஷத்திற்குப் பொருத்தமான அவர் தோற்றமும், குறும்புப் பார்வையும், பதட்டமற்ற சாந்தமான நடிப்பும் சேர்ந்து இந்த நாடகத்தில் கிருஷ்ணன் பாத்திரத்தை முதல்தரமாகச் செய்து விட்டன.

அர்ஜுனன் பாத்திரத்தை ஏற்ற குமாரி ராதாவும் மிகவும் திறம்பட நடித்தார். அர்ஜுனன் சன்யாசி வேஷம் பூண்டு, குகையில் தங்கியிருக்கும்பொழுது பலராமன், கிருஷ்ணன், ருக்மிணி, ஸுபத்ரை முதலியோர் அவனை வணங்க வரும் கட்டத்திலும், சுபத்ரையைத் தனக்கு மணம் முடித்து வைக்குமாறு கிருஷ்ணனிடம் மன்றாடும் சமயத்திலும், அவர் நடிப்பு குறிப்பிடத் தக்கதாக இருந்தது.

ஸுபத்ரையாக நடித்த குமாரி இந்திராவின் நடிப்பு விசேஷமாகப் பாராட்டத்தக்கது. ஸுபத்ரை, அர்ஜுனன் மீது ஏற்பட்ட காதலால், நினைவிழந்து தன் மதனி ருக்மிணியிடம் தன் எண்ணத்தையெல்லாம் கொட்டி உளறும் கட்டம் ரஸமாக இருந்தது.

ருக்மிணி பாத்திரத்தை ஏற்ற குமாரி கிரிஜாவின் நடிப்பு உயர்தரத்தைச் சேர்ந்தது. ஸுபத்ரையின்மீது ருக்மிணிக்கு உள்ள அனுதாபமும் பரிவும் தம் ஒவ்வொரு பார்வையிலும், தொனியிலும் வெளியாகும்படி நாஸுக்காக நடித்தார்.

சகுனியாகத் தோன்றிய சிறுமி பாரதி, சபையோர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டாள். மற்ற உபபாத்திரங்களை ஏற்ற கல்பகம், மீரா, மைதிலி, கல்யாணி, பானு, ஜயா, உஷா, ப்ரதீபா, சேது, சுமதி, ஜானகி முதலியவர்களும் திறம்பட நடித்தனர்.

நாடகத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ. பி. சந்தானத்தின் கற்பனையும், உழைப்பும்தான் நாடகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று கூற வேண்டும்.



"ஸுபத்ரா-அர்ஜுனை" நாடகத்தில் கிருஷ்ணனாக நடித்த குமாரி மாலதியும், ருக்மிணியாக நடித்த குமாரி கிரிஜாவும்.

"பெரிய பண்ணையார்"

சென்ற ஞாயிறன்று ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஸ்ரீ கச்சாலீசுவரர் கான சபா ஆதரவில் சினிமா புகழ் டி.கே.ராமச்சந்திரன் குழுவினரால் "பெரிய பண்ணையார்" என்னும் நாடகம் நடைபெற்றது. கலப்பு மணத்தை வலியுறுத்தும் இந்நாடகத்திற்கான கதை வசனங்களை கதாநாயகன் உமாபதியாகவும், கான்ஸ்டேபிளாகவும் வரும் ஸ்ரீ ஜி. கே. ராஜன் எழுதியிருக்கிறார். கதையில் இருக்கும் விறுவிறுப்புக்குத் தக்க வண்ணம் சம்பவங்களை பின்னி ரசனை குறையாத கருத்துச் செறிந்த வசனங்களையும் புகுத்தி நாடகத்தைப் பொது மக்கள் அலுப்புத் தட்டாத வகையில் ரசிக்க வகை செய்திருக்கிறார் ஆசிரியர்.

திரைப்படத்தைப் போலவே இதிலும் டி. கே. ராமச்சந்திரன், உயர் ஜாதிப் பற்றுக் கொண்ட பஞ்சாயத்துத் தலைவர் வேடம் தாங்கி, ஹரிஜனப் பெண்ணைக் காதலித்து, கதாநாயகனைத் திண்டாடித் தெருவில் நிற்க வைக்கும்('வில்லனாகவே') தான் நடிக்கிறார். "ராமாயி" என்னும் ஹரிஜனப்பெண் வசிக்கும் சேரிக்கு வந்து, அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டு பயந்து பயந்து அவளிடம் காதல் மொழிகளை உதிர்க்கும் கட்டத்தில் டி. கே. ஆரின் நடிப்பு பிரமாதம். ஹரிஜனப் பெண் வள்ளியாக வரும் 'ஷண்முக சுந்தரியும்' அவள் தந்தை கந்தனாக நடிக்கும் எம். ஏ. கணபதியும் பாராட்டுதற்குரியவர்கள். பெரிய பண்ணையாராக நடிக்கும் எம். என். ராஜகோபாலின் தோற்றத்தில் தென்படாத பெரிய தனம் பேச்சில் இருக்கிறது. பெரிய பண்ணையில் வேலை பார்க்கும் முருகேசனாக நடித்து, கருத்துச் செறிந்த வசனங்களைக் கணீரென்ற குரலில் உபதேசித்த வண்ணம், நாடகம் முழுவதும் வில்லனையே வட்டமிட்ட எண்ணம் வரும், எம். என் ராம்ஜி, ரசிகர் உள்ளத்திலும் வட்டமிடுகிறார்.

எல்லாவற்றிற்கும் மேல் ஐந்து வயது அனுதைச் சிறுவன் வாசுவாக நடிக்கும் குட்டி நட்சத்திரம் ஒன்று, சிறியாக மேற்று பெரியவர்களையும் தட்டிச் சென்று விடுகிறது.

'பெண் படுத்தும் பாடு'

சென்ற சனி (6-12-58) அன்று மயிலாப்பூர் சாயி கலாமண்டபத்தில் "பெண்படுத்தும் பாடு" என்னும் நாடகத்தை யு. ஏ. ஏ. கோஷ்டியினர் நடித்தனர்.

ஒரு பணக்காரர் குடும்பத்தில் இரண்டு பெண்கள். மூத்தவள் சண்டி, அடங்காப்பிடாரி. அவள் புரியும் அட்டகாசம் அடேயப்பா! அவள் தாய் தந்தை தங்கை மட்டுமின்றி அண்டை அயலாரும் அஞ்சுகின்றனர். அவளுக்கு மணமுடிக்க பெற்றோர் பெரும்பாடுபடுகின்றனர். அவள் தங்கை இந்தியா, கல்லூரி நண்பனைக் காதலித்து தனக்குப் பிடில் வாத்தியாராகவும் அமர்த்திக்கொண்டு காதல் புரிகிறாள். அந்த வாத்தியாரின் நண்பன் ஒரு முரடன். சண்டியை வலுவில் வந்து மணந்து, அவள் கொட்டத்தைப் படிப்படியாக அடக்கிவிடுகிறான். இதுதான் கதை.

பாட்டு வாத்தியாராக வரும் பட்டுவின் நடிப்பு முதல் தரம். இயற்கையான நடிப்பு. சபையோரை குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறார். வித்யாவதியும், ராஜேசுவரியும் சண்டியாகவும், இண்டியாவுமாக வந்து போட்டி போட்டுக் கொண்டு நடிக்கின்றனர். ஒருவருக்கொருவர் சளைத்ததாகத் தெரியவில்லை. சண்டியாவின் கொட்டத்தை அடக்க, அளவுக்கு மீறி அட்டகாசம் புரிகிறார் பாட்டு வாத்தியாரின் சீர்திருத்த நண்பர்.

நடித்தவர் எல்லோருமே நன்றாக நடித்து நாடகத்துக்கு வெற்றியை அளித்தனர். ஆரம்பத்தில் சில சீன்கள் மாற்றத்தை இன்னும் துரிதப்படுத்தியிருக்கலாம். முதலில் ஒலி அமைப்பு சரியாக இல்லை. பின்னர் சரிப்படுத்திவிட்டனர். சீன் ஜோடனைகளும், ஒளி ஏற்பாடுகளும் கச்சிதமாக இருந்தன.

நகைச்சுவை நிறைந்த கதையாயினும், பெண்மையின் உண்மையைத் தொட்டுக் காட்டுகிறது கதையின் கருத்து. தற்காலத்தில் எங்கும் சகஜமாகிவிட்ட அடுக்குமொழி வசனங்களைப்புகுத்தி, கதைப் போக்கையும், கருத்துச் சுவையையும், தடுத்து நிறுத்தாமல், சரளமான இயற்கையான வசனங்களை அமைத்தது பாராட்டத்தக்கது.



தஞ்சை ஸ்ரீ கே. பி. சிவானந்தம், ஸ்ரீமதி ஸி. ஆர். ஸாரதா வீணை

மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையின் ஆதரவில் சென்ற ஞாயிறன்று, ஸ்ரீ. சிவானந்தம், ஸாரதா இவர்களின் வீணைக் கச்சேரி நடைபெற்றது. பைரவி அடதாள வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமாயிற்று. இரண்டாவதான "மாயதீ தஸ்வரு பிணி" என்னும் தஞ்சை பொன்னையா பிள்ளையின் கிருதியை அடுத்து விரிவாக வாசிக்கப்பட்ட அதில் ஹரி காம்போதி ராகமும், பெரியசாமி தூரன் இயற்றிய "நாம பஜனே" என்னும் கீர்த்தனையும் ஸ்வரமும் நன்றாக இருந்தது. "சாட்டிலே" என்னும் பூர்வி கல்யாணி கிருதியை அடுத்து விச்ராந்தியாக வாசிக்கப்பட்ட தோடிராகமும், "மூன்னு ராவண" என்னும் கீர்த்தனையும், கேட்போரைப் பரவசப்படுத்தியது. கல்யாணியில், "பிரான", "நெனருஞ் நானு" என்னும் மாளவி; ஆனந்த பைரவியில் "மரி வேறெ" "பரமாத் மூடு" என்னும் வாகதீஸ்வரி கீர்த்தனை ஆகிய எல்லாமே நன்றாக இருந்தன. கடைசியில் பல்லவி ராகமாக எடுத்துக்கொண்ட வராளியில் விரிவாக ஆலாபனை செய்து "முருகனே நினை மனமே" என்று ஸுரஸ்ர ஜம்பையில் அமைத்துக்கொண்ட பல்லவியும், ஸ்வரமாலிகையாக வாசித்துக்கொண்டு வந்த 'வராளி, பைரவி, ஸகானா, ஸ்ரீராகம்,' ஆகியவைகளும் மிக நன்றாக இருந்தது. அவர்களது வாசிப்பிலே நல்ல அழுத்தமும், சுமகமும் சாஹித்ய பாவமும், நிறைந்து விளங்குவதைக் காண முடிகிறது.

அன்று மிருதங்கம் வாசித்த ஸ்ரீ. காரைக்குடி முத்துஅய்யர் அவர்கள் தனி ஆவர்த்தனத்தில் சற்று விரிவாகவும், விவகாரமாகவும் வாசித்தார் - அதே சமயம், பக்க வாத்தியமாக வாசித்து வரும்போது மிகவும் அடக்கமாகவும், அநுசரணையாகவும், பொருத்தமாக வாசித்தார் -ஸ்ரீ. முத்து அய்யர் அவர்கள், பழம் பெரும் வித்வான். சிறந்த ஞானஸ்தர்-தந்தி வாத்தியங்களுக்கு, எவ்வளவு அடக்கமாய் வாசித்துக் கச்சேரியை சோபிக்கச் செய்ய முடியும் என்பதை நிரூபித்தார்.

கடைசியாக செஞ்சுருட்டியில் "சகிப்ராண" "வும், 'அடாணு' ராகதில்லானுவும்" கேதாரகௌளை, ஸாவேரி நாதநாமக்ரியா, ஆகிய ராகங்களில், பதங்களும் வாசித்து நிறுத்தியது நமக்கு அவர்களது பரம பரையை நினைவூட்டியது. ஸ்ரீ. முத்துஸ்வாமி தீக்ஷிதரது மாணுக்கரும், பரதக் கலையைக் கச்சேரி ரூபமாக அமைத்து, அதற்கு வேண்டிய, அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், பதவர்ணம், ராகமாலிகை, தில்லானு, முதலியவைகளை இயற்றிய வர்களுமான, தஞ்சை ஸ்ரீ. சின்னையா, பொன்னையா, சிவானந்தம் ஆகியவர்களின் மரபில் வந்த அவர்களது பேரனே ஸ்ரீ கே. பி. சிவானந்தம் ஆவார்.

பரதநாட்டிய அரங்கேற்றம்



புதுடில்லி பி. டபிள்யு. டி. ஹாலில் மத்திய உள் விவகார உதவி மந்திரி ஸ்ரீமதி வைலட் ஆல்வா தலைமையில் 8-12-58ல் குமாரி பிரேமா ராமஜனனின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது.

சாஸ்திரீய முறையில் நல்ல பயிற்சியை குமாரி பிரேமாவின் ஆட்டத்தில் காண முடிந்தது. ஜதிகள் சரியாக அமைந்து அடவுகள் அழகாயிருந்தன. அபிநயங்கள் ரசனைகளில் இன்னும் சிறிது பயிற்சி வேண்டும். அங்க அசைவுகள் தாளக் கட்டுடன் நன்றாக சோபித்தன. ரஸிகர்கள் மிகவும் பாராட்டினர்.

குமாரி பிரேமா நாட்டியக்கலாலய மாணவியும், ஸ்ரீ. கே. என். பக்கிரிசாமியின் சிஷ்யையுமாவார்.

பம்பாயில் 'தேரோட்டி மகன்'



'தேரோட்டிமகனில்' எஸ். வி. சஹஸ்ரநாமமும், எஸ். என். லக்ஷ்மியும்.

பம்பாய் தமிழ்ச் சங்க கட்டிட நிதிக்காக, பம்பாயில் ஏற்பாடு செய்த நாடக விழாவில் சென்னை "சேவா ஸ்டேஜி"ர் பல நாடகங்கள் நடைபெற்று, "தேரோட்டி மகன்" நாடகத்துடன் விழா பூர்த்தியடைந்தது.

கடைசி நாளன்று பம்பாய் மேயர் ஸ்ரீ. எஸ். எஸ். மிராஜ்கர் விழாவுக்குத் தலைமைவகித்து, தமிழ்ச் சங்கத்தையும், நாடக குழுவினரையும் பாராட்டினார்.

எஸ். வி. சஹஸ்ரநாமம் சேவா ஸ்டேஜ் சார்பில் தமக்களிக்கப் பட்ட, பாராட்டுதலுக்கும், ஆதரவுக்கும் நன்றி கூறினார். 'குலதெய்வம்' புகழ் ஸ்ரீ. வி. ஆர். ராஜகோபால் சங்கத்துக்கு ரூ. 501 நன்கொடை வழங்கினார். பம்பாய் மேயர், சஹஸ்ரநாமம், பண்டாரி பாய், மைனுவதி ஆகியோருக்கு, வெள்ளிக்கிண்ணம் பட்டுச் சால்வை, மெடல்களைப் பரிசாக வழங்கினார்.

சங்கத் தலைவர் ஸ்ரீ. வி. ஆர். சுப்ரமண்யம் மேயரையும் மற்றவரையும் வரவேற்றார். ஸ்ரீ. என். அண்ணாசாமி நன்றி கூறினார்.

தாராவியில் வரவேற்பு

பம்பாய் தாராவியில் காமராஜ் இளைஞர் நாடக சபையினர் சேவா ஸ்டேஜ் குழுவினருக்கும் ஸ்ரீ. எஸ். வி. சஹஸ்ரநாமத்துக்கும் திங்களன்று ஒரு வரவேற்பளித்தனர்.

ஸ்ரீ. பொன்னையா நாடார் வரவேற்றார். ஸ்ரீ அமிர்சுல்தான் மரைக்காயர் தலைமை வகித்தார். ஸ்ரீ. சஹஸ்ரநாமமும், ஸ்ரீ. வி. ஆர். ராஜகோபாலும் வரவேற்புக்கு நன்றி கூறி, சபைக்குச் சிறு நன்கொடையும் வழங்கினர்.

நாடக விழா மலர்

நாடக விழாவை யொட்டி பம்பாய்த் தமிழ் சங்கம் ஒரு அழகிய மலரையும் வெளியிட்டது. ஸ்ரீ. கி. வ. ஜ. ரா. ஸ்ரீ. தேசிகன், நா. பார்த்தசாரதி ஆகியோரின் கட்டுரைகளும், மற்றும் பிரபல எழுத்தாளர்களின் கதைகளும், கவிதையும், ஓவியங்களும் மலரைச் சிறப்பிக்கின்றன.

★

சிர்பூர் காகஸ் நகரில் சமீபத்தில் நடத்தப்பட்ட கலை விழாவின் போது, "பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடியார்" நடத்திய தேரோட்டி மகன் என்ற தமிழ் நாடகத்திலிருந்து ஒரு காட்சி.

★





ஜூபிலி பிலிம்ஸ் 'அன்பு எங்கே?'யில் ''கிளப் டான்ஸ்''. ஆடிப்பாடி மயக்கும் மாலாவாக சூர்யகலா.

"அன்பு எங்கே ?"

நாட்டுக்கேற்ற ஒரு நல்ல கருத்தைப் படமாக்கியிருக்கிறார்கள் ஜூபிலி பிலிம்ஸார்.

விவாகரத்து என்பது நமக்குப் புதுமையானது; பொருந்தாதது மட்டுமல்ல. தமிழ் மண்ணுக்கு, குடும்பப் பெண்ணுக்கு கற்பனைக்கும் கூடாத விஷயம். இலக்கியம், வாழ்க்கை இரண்டுமே ஏற்காத ஒன்று.

இதை மையமாக வைத்து, ஒரு குடும்பக்கதையை உருவாக்கி சுமார் பதினாயிரத்துச் சொச்சம் அடிகளில் படமாக்கியிருக்கிறார்கள். அந்தப் பணக்காரக் குடும்பத்தில் சுகத்தை நாடி, தாய் ஒரு வழி, தந்தை ஒரு பாதை, மூத்த மகன் ஒரு மார்க்கம், இளையவன் ஒரு வழி, மகள் ஒரு போக்கு என்று போகிறார்கள். அவர்கள் நாடிச் செல்லும் ஒரு வழியுமே, குடும்பத்துக்கு ஏற்றதன்று.

ஆசைக் காட்டி ஆடிப்பாடி மகிழ்விக்கும் மாலாவிடம் மனம் வைத்து, பட்டிக்காடென்று கட்டின பெண்டாட்டியைத் திண்டாட விடுகிறான் மூத்த மகன் ராமு. ஆனால் படித்த பெண்ணை அவளோ, தன் தாய் சொல்படி கணவனே கண்கண்ட தெய்வம் எனக் கருத்தில் இருத்தி, அவன் குடும்பத்துக்குள் தானே வலிந்து வந்து நுழைகிறாள். மூத்த வன் மனைவி. வந்தவள் குடும்பத்தில் ஒவ்வொரு வரையும், அவரவர் தவறான வழிகளிலிருந்து திருப்பியும் விடுகிறாள் திறமையாக.

சீட்டாடிப் பணமிழக்கும் மாமனாரை மாறு வேஷத்தில் சென்று திருத்துகிறாள்; மூட நம்பிக்கையில் மோசம் போகும் மாமியாரைத் தக்கபடி உணர்த்துகிறாள். குடிகாரனாகிவிட்ட மைத்துனனை மடக்கி விடுகிறாள். மைத்துனியின் போக்கைக் குடும்பப் பாங்கில் திருப்பியுக்தி பல செய்கிறாள். ஊதாரி வேலைக்காரர்களை வெளியே விரட்டுகிறாள். இவை அத்தனையும் விவாகரத்துக்குக் கணவன் விதித்த மூன்று மாத தவணைக்குள் நடக்கிறது. இறுதியில் கணவன் கருத்தையும் கவர்ந்து வெற்றி பெறுகிறாள், அந்தக் குடும்ப விளக்கு. இதுதான் கதை. குலதெய்வம் (ஹிந்தி 'பாபி') யில் வரும் ஒரு உத்தம அண்ணிதான் இந்த அண்ணியும். அதில் கணவன் நல்லவன்; கதையின் முடிவு சோகம். இதில் கணவன் கெட்டவன். பின்னர் திருந்தி முடிவில் சுபமாக, சுகமாக, சுகமளிக்கும் அன்பாக மாறுகிறது கதை.

வீட்டில் வேலைக்காரியாக நுழையும் ஒரு பெண் பின்னர் வீட்டுக் காரியாகவே மாறுவது, பக்குவமாக கதையில் நுழைக்கப்பட்டிருக்கிறது.

விமர்சனம்

'அன்பு எங்கே?' என்ற கேள்விக்குப் பதிலளிப்பதுபோல ஒரு குடும்ப சித்திரத்தைப் படமாக்கியிருக்கிறார்கள். புதுமை வெறி, நாகரீக மோகம் இவற்றைப் பற்றி அடிக்கடி எச்சரிப்பது அவசியமே. குடும்பப் பாங்கினர் வரவேற்பர். கதைக்கேற்ப வசனமும் தடங்கல் இல்லாமல் சரளமாக அமைந்திருக்கிறது.

'எல்லாரும் நன்றாக நடித்த ஒரு படம்' என்பதே இதற்கு ஒரு சிறப்புத்தான். பண்டரிபாய்க்காகவே ஒரு லட்சிய அண்ணி பாத்திரம் கதையில் அமைந்திருக்கிறதோ, இப்படி ஒரு கதாபாத்திரத்திற்காகவே அவர்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாரோ என்னும்படி அவ்வளவு பொருத்தம் வாய்த்திருக்கிறது.

மூத்த மகன் சோமுவாக பாலாஜி நல்ல தோற்றத்துடன் நன்றாகப் பேசி நடித்திருக்கிறார். மனந் திருந்திய கணவனாக அவரது நடிப்பு நன்றாக சோபித்திருக்கிறது. மனைவியிடம் பேசும்போது, வசன இலக்கண மிடுக்கைக் கொஞ்சம் வணக்கியிருக்கலாம். காதலியிடம் 'டுயெட்' பாடுமிடத்தில் குரல் மாற்றம் தெரியாமல் ஏதாவது செய்திருக்கலாம். அது அவர் குறையல்லவே!

தம்பி சோமுவாக எஸ். எஸ். ராஜேந்திரன் நடிப்பு, அவருக்கு வெற்றியைத் தந்திருக்கிறது. நன்றாக நடிக்கிறார்.

குடும்பத்துக்கு ஒரு அசட்டு மாப்பிள்ளையாக டி. ஆர். ராமச்சந்திரன் பிரமாதமாக நடிக்கிறார். குடும்பத் தந்தையாக எஸ். வி. ரங்கராவ் வயதானதற்கேற்ப, சாந்தமும், நிதானமும் தோன்ற பாத்திரமறிந்து கச்சிதமாக நடிக்கிறார்.

மாலாவின் (சூரியகலா) ஆட்டமும் பாட்டும், ஆடையும் சிலஇடங்களில் அருவருப்பளிக்கிறது. ராமு பொழுது போக்கும் டான்ஸ் கிளப்பை இந்திய பாணியிலேயே அமைத்திருக்கலாம்.

காமிராவைத் திறமையாகக் கையாண்டு, காட்சிகளில் புதிய அம்சங்களைக் காணச் செய்திருக்கின்றனர்.

யோகானந்த் டைரக்ட் செய்துள்ள, இந்தப் படம் சமூகத்துக்கு அவசியம், அறிமுகப்படுத்தப்பட வேண்டிய ஒரு நல்ல படம்.

சென்னையில் ஸ்ரீ கிருஷ்ணா, பிளாஸா, உமா, தியேட்டர்களில் டிச. 12உ முதல் இப்படம் ஓடுகிறது.

''ராம்''



''ராமன் புரொடக்ஷன்ஸ்' அதிசயப் பெண்ணில் ஜாவர் சீதாராமும். வைஜயந்தி மாலாவும்.

ஈஸ்ட்மான் கலரில் 'சிலப்பதிகாரம்'

சிலப்பதிகாரக் கதையான கோவலன்-கண்ணகி முழு ஈஸ்ட்மான் கலரில் எடுக்க முயற்சி செய்யப்பட்டிருக்கின்றது.

''பூம்புகார்'' என்ற தலைப்பில் இப் படப்பிடிப்பு ஜனவரியில் ஆரம்பமாகும் என்று பிரபல டைரக்டர் பஞ்சு கூறினார்.

இதற்கான ஏற்பாடுகள ஏவி. எம். ஸ்டுடியோவில் சென்ற இரண்டாண்டுகளாக செய்யப்பட்டது.

சிவாஜி கணேசன் கோவலன் பாத்திரத்தை ஏற்று நடிப்பார். சாவித்திரி, கண்ணகியாக நடிப்பார். இதர நடிகர்கள் பிறகு தெரியவரும். மு. கருணாநிதி இதற்கு கதையும்-வசனமும் எழுதியுள்ளார். கிருஷ்ணன்-பஞ்சு படத்தை டைரக்ட் செய்வார்கள்.

★

புதுப் பட ஆரம்ப விழா

''அன்பே தெய்வம்,, படத்தை தயாரித்த நடிகர் ஆர். நாகேந்திர ராவின் அடுத்த தயாரிப்பான ''மன்னனைக் காத்த மாவீரன்'' (தமிழ்), ராஜமுத்ரிகி (கன்னடம்) ஆரம்ப விழா சென்னை பாரமவுண்டில், புதனன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பூஜைக்குப் பின் ஆர். நாகேந்திரராவ் எல்லோரையும் வரவேற்றார். பிறகு எம். ஜி. ராமச்சந்திரன், பி. ஆர். என். ஆர். பிக்சர்ஸ் சார்பில் தலைமை வகித்து, சென்னை சபாநாயகரை காமிராவை முடுக்கி விடும்படிக் கேட்டுக் கொண்டார்.

பி. சரோஜாதேவி காமிரா முன் நிற்க, யு. கிருஷ்ணா ராவ் காமிராவை முடுக்கி வைத்தார்.

ஆர். நாகேந்திர ராவ் இதைத் தயாரித்து, டைரக்ட் செய்வது மட்டுமல்லாமல் வில்லன் பாகத்தில் நடிக்கவும் போகிறார்.

நாகேந்திரராவின் குமாரர் ஆர். என். ஜெயகோபால் எழுதியுள்ள இக் கதையில் இரு மொழிகளிலும்



பி. சரோஜாதேவி கதாநாயகியாகத் தோன்றுவார்.

தமிழ் பதிப்பில் எம். ஜி. ராமச்சந்திரன், டி. எஸ் துரைராஜ், காகா-ராதாகிருஷ்ணன், அங்கமுத்து முதலியோர் நடிப்பார்கள். கன்னடப் பதிப்பில் கல்யாண்குமார், உதயகுமார், லலிதா ராவ், பாலகிருஷ்ணா, நரசிம்மராஜு முதலியோருடன், கன்னட படத்தின் கதாநாயகனாக ஆர். நாகேந்திரராவ் குமாரர் ஆறு அடி உயரமும், இளமையும், அழகும் உடைய ஆர். என். சுதர்சன் நடிப்பார்.

தமிழ் வசனங்களை டி. எம். யு. பதியும், பாடல்களை சுந்தரக் கண்ணனும் எழுதுகிறார்கள்.



''அதிசயத் திருடனி''ல் ஜெமினி கணேஷ், நாகையா.



மாடர்ன் தியேட்டர்ஸ் ''தலை கொடுத்தான் தம்பி''யில் மாலினியைத் தாவிப் பிடித்து நிற்கிறார் கே. ஆர். ராமசாமி.

"Harry Black and the Tiger"

(ஹாரிபிளாக்கும் புலியும்)

டிச. 12-ந் தேதி முதல் 'நியூ குளோபி'ல் நடைபெறும் ''ஹாரி பிளாக் அண்ட் டைகர்'' முழுதும் இந்தியாவில் தயாரான ஒரு ஆங்கிலப் படம். புலி வேட்டை என்பது சாமானியமல்ல; அதிலும் மனித ரத்தத்தை ருசி பார்த்து விட்ட புலி, லேசில் விடாது. அறுபத்தேழு கிராமவாசிகள் ஏப்பம் விட்ட ஒரு புலியைச் சுடுவதற்கு ஹாரிபிளாக் படும் சிரமங்களை படம் சித்திரிக்கிறது.

ஹாரிபிளாக்கின் புலி வேட்டை ஒருபுறம்; அவரது காதல் வாழ்வு ஒருபுறம். இரண்டையும் இணைத்துக் கதை செல்கிறது. யுத்தக் கைதியாயிருந்து தப்புகையில் காலில் சுடப்பட்டு, ஒரு கணுக்காலையே இழந்து நொண்டியானவர் ஹாரிபிளாக். அவர் நொண்டிக் காலோடு புலி வேட்டையில் இறங்குவதே சாகஸம். அவரை புலி



வேறு நேராகத் தாக்குகிறது. எப்படியும் வேட்டையில் சளைக்காமல், குகைக்குள்ளேயே சென்று புலியைச் சுட்டுத் தள்ளுகிறார்.

புலி வேட்டையில் வெற்றிபெறும் அவர், காதலில் தோல்வியடைகிறார். நண்பனின் மனைவியைக் காதலித்து, ஆனால் நண்பனை விட்டுத் தன் காதலியைப் பிரிக்கமுடியாமல் தோல்விகாணுகிறார். இதுதான்கதை

மைசூருக்கு சுமார் ஐம்பது மைலுக்கு அருகே பண்டிபூர் என்னுமிடத்தில் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். அடர்ந்த காடுகள் வானளாவும் மலைகள், கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த இயற்கைச் சூழ்நிலையில் உருவான கலர்ப்படம்.

காட்டில் புலியின் அட்டகாசம் தத்ரூபமாகப் படமாக்கப்பட்டிருக்கிறது. கைக்குழந்தையுடன் நின்ற ஒரு கிராமத்துப் பெண்ணை புலி பாய்ந்து தூக்கிச் செல்வதும், செங்கல் அறுக்கு மிடத்திலிருந்து ஒரு சிறுமியைத் தட்டிச் செல்வதும் திடுக்கிடும் காட்சிகள்!

ஹாரிபிளாக்கைப் புலி தாக்கும் காட்சி பயங்கரமானது. புலியின் குகைக்குள் நுழைந்து அதைச் சுடும் நொண்டி ஹாரிபிளாக்கின் துணிச்சலை என்னென்பது!

ஸ்டீவர்ட் கிரான்ஜர், ஹாரிபிளாக்காக நொண்டிக் காலுடன் வெகு திறமையாக நடிக்கிறார். கிராமவாசிகளுக்கு உதவுவதில் அவருக்கு உள்ள உறுதியை அவரது முகத்திலேயே காண முடிகிறது. அவரது நண்பனாக ஆண்டனி ஸ்டீலும், நண்பனின் மனைவி-ஹாரிபிளாக்கின் காதலியாக பார்பாரா ரஷ்ஷும் கச்சிதமாக நடிக்கின்றனர். ஹாரிபிளாக்கின் உதவியாளாக வரும் ஐ. எஸ். ஜோஹரின் நடிப்பு முதல்தரம்.

20-வது சென்சுரி-பாக்ஸின் இக் கலர்ப் படம், இவ்வாண்டில் பார்பாராவின் இரண்டாவது பெரிய தயாரிப்பாகும்.

"மனித உரிமைகள்"

இந்திய சர்க்காரின் திரைப்படப் பிரிவினரால் தயாரிக்கப்பட்டுள்ள ''மனித உரிமைகள்'' என்னும் வரலாற்றுப் படம், மனித உரிமைகளின் பரிணம வரலாற்றையும், ''அடிப்படைச் சுதந்திரங்கள்'' பற்றிய ஐ.நா. சாஸனத்தில் அடங்கியுள்ள லட்சியங்களை வளர்ப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் ஐ. நா. ஸ்தாபனம் ஆற்றிவரும் பணியையும் சித்திரித்துக் காட்டுகிறது. உரிமைகளையும் பொறுப்புக்களையும் பிரிக்க முடியாது என்னும் அம்சத்தையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், மனித உரிமைகள் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதையும் இந்தப்படம் வற்புறுத்துகிறது.

பிரதம மந்திரி, ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு விடுத்துள்ள விசேஷ செய்தியொன்றும், இதில் அடங்கியிருக்கிறது. இந்த வரலாற்றுப் படம் நாடெங்கிலும் 1958 டிசம்பர் 12-ந் தேதியன்று திரையிடப்படுகிறது.

இந்த வார ராசி பலன்

★ (14-12-58 முதல் 20-12-58 முடிய) ★

கணித கலாநிதி
ஜோதிட வித்வான்
எஸ். ரங்கநாத ஜோஸ்யர்

ஞா	சனி		
	14-12-58 முதல் 20-12-58 முடிய நவக்கிரக நிலைகள் 14-12-58 இரவு மணி 12 முதல் தனுசு - சூரியன் 20-12-58 இரவு மணி 7 44 முதல் விருச்சிக - வியாழன்		
சுக்	சூரி புத சனி	வியா	சா

மேஷம்

(அசுவனி பரணி. கார்த்திகை 1-ம் பாதம் முடிய)

சிரமமான காரியங்களெனத் தோன்றினாலும் அவைகளைச் சுலபமுடன் நிறைவேற்றி விடலாம். சென்ற வாரத்திலிருந்த பணமுடைகள் மாறி, தனதி விஷயங்களில் போதிய அளவுக்கு வசதிகளைத் தரும். புதிய அலுவல்களை முன்னிட்டு ஒரு பிரயாணத்தை ஏற்க வேண்டிவரும். அவைகளின் முடிவு பெரும்பாலும் அனுகூலத்தையே தரும். எதிர்ப்புகள் குறைவுபட்டு, சமரஸ உடன்பாடும் ஏற்பட ஹேதுவுண்டு. உறவினர் மற்றும் நண்பர்களிடமிருந்து தக்க சமயங்களில் உதவிகளையடைய முடியும். தங்களுடைய சொத்தின் விற்பனையிலும், லாபங்களையடையலாம். சில்லறைக் கடனுபாதைகளிலிருந்தும், சாதாரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நோயிலிருந்தும் ஓரளவு நிவாரணமும் ஏற்படக்கூடும். தசாபுக்திகள் அனுகூலமான நிலையிலிருப்பவர்களுக்கு எதிர்பாராத வகையில் பழைய பாக்கிகள் வசூல் ஆவதும், தங்களுடைய தொழிலின் மூலம் எதிர் பார்ப்பதைவிட ஆதாயமும் உண்டாகும். புதிய வாகன யோகப் பிராப்திகளும் சிலருக்குக் கிடைக்கும்.

★

(கார்த்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

குடும்பங்களில் எதிர்பாராத வகையில் வரும் செலவுகளால் தனதி விஷயங்களில் பற்றுக்குறை ஏற்பட ஹேதுவுண்டு. பிறரிடம் பண உதவிகளை நாட வேண்டிய நிலையும் சிலருக்கு ஏற்படும். தங்களுடைய காரியங்களை முன்னிட்டு அலைச்சலும் செலவினங்களும் உண்டாகும். எதிர்பாராத வகையில் நோயினால் பாதிப்பும் சிலருக்கு உண்டாகலாம். கொடுக்கல் வாங்கலில் பண விஷயமாக வீணான மனஸ்தாபமும் சில இடங்களில் ஏற்பட ஹேதுவுண்டு. தொடர்புள்ள பழைய அலுவல்களைத் தவிர புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாமலிருப்பது நலம். இவ்வார பிற்பகுதியில் ஒப்பந்தம், காண்ட்ராக்ட் ஆகியவைகளில் நன்மைகளைத் தரும். வெளியூர்ப் பிரயாணங்களிலும் தாமத மேற்படும். உறவினர் அல்லது நண்பர்களால் தவிர்க்க முடியாத நிலையில் திடீரெனச் செலவினங்களும் ஏற்படும். தெய்வ வழிபாடுகளும், நூதன வஸ்துப் பிராப்திகளும் எதிர்பாராத நிகழ்ச்சிகளாக ஏற்பட்டு, செலவினங்களைத் தரும். பிறர் விவகாரங்கள், பஞ்சாயத்து விஷயங்கள் ஆகியவைகளில் தலையிடாமலிருப்பது நலம்.

★

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர் பூசம் 3-ம் பாதம் முடிய)

பெரிய மனிதர்களின் சந்திப்பிலும், புதிய முயற்சிகளிலும் எதிர்பார்த்தபடி நன்மைகளையடைய முடியும். சென்ற வாரத்தில் முடிவு பெறுத அலுவல்களைக் குறிப்பிட்டபடி நிறைவேற்றலாம். அரசியல் அலுவல்களை யும் அரசாங்க ஈடுபாடுகளையும் அதிகமான செலவினங்களின் பேரிலேயே முடிக்க முடியும். உறவினர் அல்லது நண்பர்களில் ஒருவரால் எதிர்பாராத வகையில் பெரிய நன்மைகளும் சிலருக்கு ஏற்படும். சகோதரர்களிடையே இருந்து வந்த மனஸ்தாபங்களும் மாறி, பரஸ்பரம் நல்ல மனோபாவங்களேற்படும். தோயிலிருந்தும், கடனுபாதைகளிலிருந்தும் நிவார ணமும் கிடைக்கும். மனதிலுள்ள கவலைகளும் மாறி தைரியம், சாமர்த்தியம் இவைகளில் நல்ல நிலைமை இருந்து வரும். தெய்வ வழிபாடுகளும், பெரிய மனிதர்களின் சந்திப்பும் எதிர்பாராத நிகழ்ச்சிகளாக சிலருக்கு சம்பவிக்கும். தசாபுக்திகள் சாதாரண நிலைமையிலிருப்பவர்களுக்குக்கூட இவ்வாரம் ஓரளவு நன்மையான பலன்களைத் தரக் காரணமுண்டு. இந்த ராசிக்காரர்களுக்கு, சந்திராஷ்டம தினங்கள் 13-12-58 பகல் மணி 12-21 முதல் 15-12-58 மாலைமணி 6-54 வரை உண்டு.

ரிஷபம்

★

(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

ஆத்ம நண்பர்களைத் தவிர மற்ற வர்களிடம் உதவிகளை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. கொடுக்கல் வாங்கலில் சிலரிடம் வீணான மனஸ்தாபங்களும் உண்டாகலாம். பிறர் விவகாரங்கள் பஞ்சாயத்து விஷயங்கள் ஆகிய வைகளில் ஈடுபடாமலிருப்பது நலம். பெரிய மனிதர்களின் சந்திப்புகளில் தாமதமேற்படும். அரசியல் அலுவல்களை முன்னிட்டு செலவினங்களும் அலைச்சலும் ஏற்படும். புதிய முயற்சிகளை சிரமத்தின் பேரிலேயே நிறைவேற்ற முடியும். உத்தியோகத் துறைகளில் இருப்பவர்களுக்குச் சுமாரான பலனையே தரும். சகோதரர்களிடையே தங்களுடைய சொத்தின் விஷயமாக சில இடங்களில் வீணான மனஸ்தாபமும் ஏற்படும். கணவன் மனைவி இவர்களிடையேயும் சாதாரண விஷயங்களை முன்னிட்டு, குட்டி மனஸ்தாபங்களும் உண்டாகலாம். மறைமுகமான எதிர்ப்புகளும், புறம் பேசுதலும் சிலருக்கு வீணான தொந்தரவுகளைத் தரும். இந்த ராசிக்காரர்களுக்கு சந்திராஷ்டம தினங்கள் 15-12-58 மாலை மணி 6-55 முதல் 17-12-58 இரவு மணி 3-56 வரை உண்டு.

மிதுனம்

★

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

பொருளாதார விஷயங்களில் போதிய அளவில் வசதிகளைத்தரும். மனதிலுள்ள கவலைகள் மாறி தைரியம் சாமர்த்தியம், இவைகளில் மேலான பலன்களைச் சொல்லலாம். சகோதரர்களிடையே இருந்து வந்த சில்லறை மனஸ்தாபங்கள் மாறி, பரஸ்பரம் வாழ்க்கைப் பகுதிகளில் ஒற்றுமையும் சந்தோஷ நிலையும் உண்டாகும். தூர தேசங்களிலிருந்தும் அனுகூலமான செய்திகள் சிலருக்குக் கிடைக்கும். அரசியல் அலுவல்களை ஓரளவு சிரமத்தின் பேரிலேயே நிறைவேற்றிவிடலாம். அரசாங்க ஈடுபாடுகளில் எதிர்பார்த்தபடி நன்மைகளை அடையலாம். பிறர் விவகாரங்களையும் சுலபமுடன் முடித்து விடமுடியும். நீடித்த பகைமாறி, சமரஸ உடன்பாடும் சில இடங்களில் ஏற்படும் லிகித விஷயங்களில் அனுகூலங்களைக் காணலாம். ஒப்பந்தம் காண்ட்ராக்ட் ஆகியவைகளிலும் எதிர்பார்த்ததைவிட லாபங்களைத் தரும். பெரிய மனிதர்களின் சந்திப்பும் தெய்வவழிபாடுகளும் எதிர்பாராத நிகழ்ச்சிகளாகச் சிலருக்கு சம்பவிக்கும். இந்த ராசிக்காரர்களுக்கு சந்திராஷ்டம தினங்கள் 17-12-58 இரவு மணி 3-57 முதல் 19-12-58 பகல் மணி 2-58 வரை உண்டு.

கடகம்

★

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய)

கொடுக்கல் வாங்கலில் சரளமான நிலைமை உண்டாகும். தனதி விஷயங்களில் போதிய அளவுக்கு வசதிகளைத் தரும். சில்லரைக் கடனுபாதைகளிலிருந்து, பூரணமான நிவாரணமும் ஏற்படும். செல்வாக்கு நாணயம் கீர்த்தி இவைகளில் மேலான நிலைமை இருந்துவரும். உத்தியோகத் துறையில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளிடமிருந்து அனுகூலமான செய்திகள் கிடைக்கும். புதிய முறையில் ஈடுபடும் அலுவல்களை குறிப்பிட்டபடி நிறைவேற்றிவிட முடியும். தகப்பனார் புதல்வர்களிடையே இருந்து வந்த மனஸ்தாபங்களும் மாறுபட ஹேதுண்டு. காண்ட்ராக்ட் ஒப்பந்தம் ஆகியவைகளில் எதிர்பார்த்தபடி நன்மைகளைத் தரும். தசாபுக்திகள், அனுகூலமான நிலையிலிருப்பவர்களுக்குத் தங்களுடையதொழிலின் மூலம் எதிர்பார்ப்பதை விட ஆதாயத்தைத்தரும். அரசியல் விஷயங்களிலும் அரசாங்க ஈடுபாடுகளிலும் நன்மையான பலன்களையே தரும்.

சிம்மம்

★

(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய)

தங்களுடைய காரியங்களை சிரமத்தின் பேரிலேயே முடிக்க முடியும். உறவினர் நண்பர்களிடம் கூட எதிர்பார்க்கும் உதவிகளில் தாமதமேற்படும். முடிவு பெறுத விஷயங்களால், மனதில் வீணான கவலைகளிருந்து வரும். கொடுக்கல் வாங்கலில் பண விஷயமாக வீணான மனஸ்தாபமும் சில இடங்களில் உண்டாகும். ஒப்பந்தங்களைத் தாமதத்தின் பேரிலேயே முடிக்க முடியும். அரசியல் அலுவல்களை இவ்வாரத்தில் ஒத்திப் போடுவது நலம். மறைமுகமான எதிர்ப்புகளால் பொதுப்பணிகளில் அதிகமான சிரமங்களும் உண்டாகும். தெய்வ வழிபாடுகளும் பெரிய மனிதர்களின் சந்திப்பும் எதிர்பாராத நிகழ்ச்சிகளாகச் சிலருக்கு சம்பவிக்கும். உத்தியோகத் துறையிலிருப்பவர்களுக்கு, இவ்வாரம் விசேஷமானவையல்ல. வெளியூர்ப் பிரயாணம் செய்பவர்கள் தங்களுடைய பொருள் பாதுகாப்புடன் கவனித்து வருவது நலம். பொதுவாக சகல காரியங்களையும் முன் யோசனையுடன் செய்து வருவது நலம்.

துலாம்

★

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம் கேட்டை முடிய)

தெய்வ வழிபாடுகளும் பெரிய மனிதர்களின் சந்திப்பும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளாக அமையும். தங்களுடைய சகோதரர் அல்லது புதல்வர்களில் ஒருவரால் எதிர்பாராத வகையில் பெரிய நன்மைகளும் சிலருக்கு ஏற்படும். முக்கியமான விஷயமாக வெளியூர்ப் பிரயாணம் ஒன்றைச் சிலர் ஏற்கவேண்டிவரும். அவைகளின் முடிவு பெரும்பாலும் நன்மைகளையே தரும். தங்களுடைய சொத்தின் விற்பனையிலும் குறிப்பிட்டபடி ஆதாயங்களையடையலாம். தூர தேசங்களிலிருந்தும் அனுகூலமான செய்திகள் சிலருக்குக் கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபாடும், பொதுக் காரியங்களில் குறிப்பிட்டபடி நன்மைகளையும் தரும். கண்டிராக்ட்டில் எதிர்ப்புகள் குறைவுபடும். அரசியல் அலுவல்களில் எதிர்பார்ப்பதைவிட அனுகூலத்தைத் தரும். இந்த வாரத்தில் முடிவடையும் பஞ்சாயத்து விஷயங்கள் மற்றும் வழக்குகளில் பெரும்பாலும் அனுகூலத்தையே தரும்.

விருச்சிகம்

★

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய)

குடும்பங்களில் சுபகாரியங்களை முன்னிட்டு, தலைவர்களுக்கு எதிர்பார்ப்பதைவிட செலவினங்கள் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்களிடம்கூட உதவிகளை தாமதத்தின் பேரிலேயே அடையமுடியும். உத்தியோகத்துறையிலிருப்பவர்களுக்கு மேலதிகாரிகளிடமிருந்து தாமதத்தின் பேரிலேயே உதவிகளேற்படும். தவிர்க்கமுடியாத நிலையிலுள்ள பிரயாணங்களைத் தவிர மற்றவைகளை மாற்றியமைப்பது நலம். தொழில் துறையிலிருப்பவர்களுக்கு இவ்வாரத்தில் போட்டிகள் அதிகமாகும். குடும்பங்களில் தங்களுடைய சொத்துக்கள் விஷயமாக சகோதரர்களிடையே சில இடங்களில் வீணான மனஸ்தாபங்களும் உண்டாகலாம். ஒப்பந்த விஷயங்கள், காண்ட்ராக்ட் ஆகியவைகளில் தாமதமேற்படும். தசாபுக்திகள் அனுகூலமான நிலையிலிருப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் சுமாரான பலனையே தரும். மறைமுகமான எதிர்ப்புகளும், புறம்பேசுதலும் வீணான தொந்தரவுகளை சிலருக்குக் கொடுக்கும்.

தனுசு

★

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய)

உறவினர் நண்பர்களிடமிருந்து எதிர்பாராத வகையில் சிலருக்கு பெரியதொரு நன்மையும் ஏற்படும். குடும்பங்களில் வரவு செலவுகள் சட்டுக் கடங்கியே இருக்கும். தகப்பனார் புதல்வர்களிடையே இருந்து வந்த சில்லறை மனஸ்தாபங்கள் மாறி, பரஸ்பரம் நல்ல மனோபாவங்கள் ஏற்படும். எதிர்ப்புகள் குறைவுபடும். அரசியல் விஷயங்கள், பொதுக் காரியங்கள் அரசாங்க ஈடுபாடுகள் ஆகியவைகளில் பெரும்பாலும் வெற்றியைக் கொடுக்கும். தெய்வ வழிபாடுகளும், பெரிய மனிதர்களின் சந்திப்பும், எதிர்பாராத நிகழ்ச்சிகளாக சம்பவிக்கும். கணவன், மனைவி இவர்களிடையே இருந்து வந்த குட்டி மனஸ்தாபங்கள் மாறி, பரஸ்பரம் சந்தோஷ நிலைமை உண்டாகும். பொது மக்களால் போற்றுதலையும், வெகுமதிகளையும் சிலரடைவார்கள். தசாபுக்திகள் சாதாரண நிலையிலிருப்பவர்களுக்குக்கூட, இவ்வாரம் ஓரளவு நல்ல பலன்களைத் தரும். தொழில் துறையிலிருப்பவர்களுக்கும் உத்தியோகத் துறையிலிருப்பவர்களுக்கும் மிகவும் நன்மையான பலன்களையே தரும்.

மகரம்

★

(அவிட்டம், 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

தங்களுடைய அலுவல்களை முன்னிட்டு அலைச்சலும் செலவினங்களும் ஏற்படும். சிலருக்குப் பிரதிகூல நிலையும் உண்டாகலாம். முன்னேற்றத்திலிருந்து தடைகளும் இருந்துவரும் ஆத்ம நண்பர்களைத் தவிர மற்றவர்களிடம் உதவிகளை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. தொடர்புள்ள காரியங்களைத் தவிர புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாமலிருப்பது நலம். ஒப்பந்த விஷயங்களில் தாமதமேற்படும். காண்ட்ராக்ட்டில் போட்டிகள் இருந்துவரும். இந்த வாரத்தில் முடிவடையும் வழக்குகள், பஞ்சாயத்து விஷயங்களை ஒத்திப்போடுவது நலம். அரசியல் அலுவல்களில் எதிர்ப்புகள் இருந்து வரும். அரசாங்க ஈடுபாடுகளில் தாமதமேற்படும். கொடுக்கல் வாங்கலில் பண விஷயமாகச் சிலரிடம் வீணான மனஸ்தாபங்களும் ஏற்படும். அதிகமான எதிர்ப்புகளைச் சமாளித்தே தங்களுடைய காரியங்களில் சிலருக்கு நன்மையைத் தரும். மறைமுகமான எதிர்ப்புகளும் புறம்பேசுதலும் சிலருக்கு வீணான தொந்தரவுகளைத் தரும். ஆகவே சகல காரியங்களிலும் முன் யோசனையுடன் நடந்துகொள்வது நலம்.

கும்பம்

★

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய)

குடும்பத் தலைவர்களுக்கு வரவு செலவுகள் கட்டுக் கடங்கியே இருக்கும். எதிர்ப்புகள் குறைவுபட்டு சமரஸ உடன்பாடும் உண்டாகும். சில்லறைக் கடனுபாதைகளிலிருந்தும் சாதாரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நோயிலிருந்தும், ஓரளவு நிவாரணமும் உண்டாகும். வெளியூர் அலுவல்களில் குறிப்பிட்டபடி நன்மைகளைக் கொடுக்கும். உறவினர் மற்றும் நண்பர்களிடமிருந்து தக்க சமயங்களில் உதவிகளையடையலாம். சொத்தின் விற்பனையிலும் குறிப்பிட்டபடி ஆதாயங்களைத் தரும். கணவன், மனைவி, இவர்களிடையே இருந்துவந்த குட்டி மனஸ்தாபங்களும் மாறி வாழ்க்கைப் பகுதிகளிலும் சந்தோஷ நிலைமை உண்டாகும். புதியமுயற்சிகளில் வெற்றியும், ஒப்பந்த விஷயங்களில் அனுகூலமும் உண்டாகும். பஞ்சாயத்து விஷயங்கள், அரசியல் அலுவல்கள், பொதுப் பணிகள், ஆகியவைகளில் குறிப்பிட்டபடி நன்மைகளைக் கொடுக்கும். உத்தியோகத் துறையிலிருப்பவர்களுக்கு தங்களுடைய மேலதிகாரிகளிடமிருந்து அனுகூலமான செய்திகள் கிடைக்கும்.

மீனம்

வியாபாரிகளுக்கு இவ்வார பலன்

★

14—12—58 முதல்
20—12—58 முடிய

மேஷம் - எதிர்பார்த்தை விட ஆதாயம்
ரிஷபம் - தொழில் மந்தம்
மிதுனம் - அரசாங்க அலுவலில் நன்மைகள்
கடகம் - காரிய தாமதம்
சிம்மம் - சுலபமாக நன்மைகள்
கன்னி - லாப வாரம்
துலாம் - எதிர்பாராத செலவுகள்
விருச்சிகம் - பழையபாக்கிகள் வசூலாதல்
தனுசு - பிற்பகுதியில் ஆதாயம்
மகரம் - எதிர்பார்த்தபடி நன்மைகள்
கும்பம் - செலவினங்கள்
மீனம் - முன்னேற்ற வாரம்

நவீன வங்க இலக்கியம், வசனம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திலே ஓர் புரட்சிப் புயல் வீசியது என்றுல் மைக்கேலின் காவியத்திலே புதுமையிலும் புதுமை மிளிர்ந்ததே காரணம். அதாவது அவரது காவியம் அகவற்பா முறையிலே அமைந்திருந்தது. ஆங்கில ஸான்னெட் (Sonnet) போல வங்க மொழியில் கவிதை எழுதும் வகையை முதன் முதலில் புகுத்திய பெருமை மைக்கேலுக்கே உரியது. அவரது காவியங்களிலே வீர ரசம் ததும்பி நிற்கும். வர்ணனைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். வீராங்கனை, திலோத்தமை, ராணி சர்மிஷ்டை, ராவணுயனம் ஆகிய காவியங்கள் புகழ் மிகுந்தவை. மைகேல் மதுசூதன தத்தர், வட மொழி, வங்காளி, ஜெர்மன், ப்ரெஞ்ச். ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் நற்புலமை வாய்ந்தவர். லேடி ஆவ் தி லேக் (Lady of the Lake) என்னும் அவரது ஆங்கிலக் காப்பியம் பிரபலமானது.

மைகேலின் சம காலத்தவர்களான ஹேம சந்திர பந்தோபாத்யாய் (பானர்ஜி) ரங்கலால்பானர்ஜி இவ்விருவரும் பெருங்காப்பியங்கள் எழுதி பேரும் புகழும் பெற்றவர்கள். விஹாரிலால் சக்ரவர்த்தி, நவீன சந்திர சென், கிருஷ்ண சந்திர முகர்ஜி, ஆகியோர் நிறைய சிறு காப்பியங்களும் சில பெரும் காப்பியங்களும் இயற்றியிருக்கின்றனர். பின்னரே எண்ணிறந்த கவிஞர்கள், தோன்றிப் புதுப் புது சந்தங்களில் புதுமை மிக்க கவிதைகள் எழுதி பெருமை அடைந்தனர். இவர்கள் கவிதைகள், காப்பியங்கள் மட்டுமல்ல; கதைகள், நாவல்கள், நாடகங்களும் எழுதியிருக்கின்றனர். என்றாலும் இவர்கள் பெரும்பாலும் கவிதைகள்-காப்பியங்கள் மூலமே பிரபலமடைந்தவர்கள். இப்படியாக வங்க மொழி வளர்ச்சி பெற்று வந்தது; வங்க இலக்கிய சிருஷ்டிகளும் பெருகிக் கொண்டே வந்தன.

(தொடரும்)

வெல்லிங்டனை வென்ற திப்பு

★(என், பி. ஹரிஹரன்)★

எழும்பூரில் காமாண்டர் இன்சிப் (சேனுதிபதி ரஸ்தா) என்ற ரஸ்தாவும், வெல்லிங்டன் என்ற பெயடைய ஓர் பெரிய பங்களாவும் இருக்கின்றன. இப்பொழுது அங்கு தளமும் இல்லை தளபதியும் இல்லை. சேனையின் ஒரு சின்னம்கூட இல்லை. ஆயினும் சுமார் நூறு வருடங்களுக்குமுன், சென்னையில் பிரிட்டிஷ் தளபதிகள் வசித்து வந்த இடத்தைத்தான் இந்த ரஸ்தாவும், பங்களாவும் குறிக்கின்றன. அதுவும் வெல்லிங்டன் என்ற ஸ்தாபனம் குறிப்பிடுவது அந்தப் பெயருடைய (வெல்லிங்டன் பிரபு) பெயரைத்தான். அவர் சென்னையில் தளபதியாய் இருக்கும் சமயம் இங்குதான் தங்கி இருந்தார்.

வெல்லிங்டனின் காலத்தில் இந்த இடம் புகழுக்குப் பாத்திரமாய் இருந்தது. திப்புசுல்தான் பிரிட்டிஷாருக்குத் தொந்தரவு செய்யாமலிருப்பதற்காக பிணையாய்க் கொடுத்த அவருடைய இரண்டு மக்களையும் இங்குதான் முதன் முதலாக கொண்டு வந்தனர். அக்காலத்தில் நடைபெற்ற பிரிட்டிஷாரின் பல வெற்றிகளும் இங்கு கொண்டாடப்பட்டது. வெல்லிங்டன் பங்களாவிலிருந்து கிழக்குப் பக்கம் நோக்கி சிறிது தூரம் நடந்தால் ஆங்கிலேயர் கூடும் கிளப். மேற்கு கேட்டைத் திறந்தால் காயது பாத்தியன். அக் காலத்தில் நாடகங்கள் நாட்டியங்கள், கூட்டங்கள், ஐரோப்பிய ரீதியிலுள்ள விருந்துகள் முதலியவைகள் இங்குதான் நடைபெறுவது வழக்கம் நீலகிரியிலுள்ள வெல்லிங்டன் பட்டினமும், காண்டிலா துறை முகத்தின் அருகிலுள்ள டீக்ஸ் நோஸ் என்ற குன்றும், வெல்லிங்டன் பிரபுவின் ஞாபகார்த்தமாக வைத்த பேர்களே. இவ்வளவு புகழும் பெற்ற வெல்லிங்டன் பிரபு திப்புசுல்தான் கையால் ஒரு காலத்தில் படுதோல்வி அடைந்தார்.

தமக்கு கிடைத்த வெற்றியைத் திப்புசுல்தான் பலப்படுத்திக் கொண்டு, எதிரியை துரத்திச் சென்றிருந்தால், இந்தியாவின் வரலாறு வேறு விதமாகமாறி இருக்கலாம். நம் நாட்டில் நடந்த இத்தகைய செய்திகளை ஆராய்ச்சி செய்து பார்க்கும்பொழுது, வெல்லிங்டன் பிரபு ஒரு யுத்த வீரன் அல்ல என்று தெரியவருகிறது. ஆனல் அதிருஷ்ட தேவதையின் கடாட்சம் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் பின் பலமும் தான் அவருடைய வெற்றிக்குக் காரணம். 1797-ல் லார்ட் வெல்லஸ்லி இந்தியாவுக்குகவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார், அவருடைய தம்பி ஹென்றி வெல்லஸ்கி கவர்னர் ஜனரலின் பிரைவெட் செகரட்டிரியும் ஆனர். அவருடைய (வெல்லஸ்லி) மூன்றுவது தம்பி கேனல் வெல்லெஸ்லி மதராஸ் தளபதியாய் உத்தியோகம் செய்யும் காலம். இவர்தான் சில வருடங்களுக்கு பிறகு வெல்லிங்டன் பிரபு ஆனர்.

திப்புவின்மீது படையெடுப்பு

மைசூர் வேங்கைப் புலியான திப்புசுல்தான் பிரென்சுக்காரர்களுடன் சினேகம் வைத்திருப்பதாகவும் அவர்களுடைய பலத்தை உபயோகித்து பிரிட்டிஷாருக்கு படு நஷ்டம் உண்டாக்க எண்ணுகின்றார் என்றும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு செய்தி கிடைத்தது. திப்பு சுல்தானின் பலத்தை வளரவிடாமல் பிராட்டிஷார் முன்னேற வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தனர். ஜெனரல் ஹாரிஸ் என்பவரை தளபதியாக நியமித்து மைசூர் நோக்கி அனுப்பினர்கள். மைசூர் படை வீரத்துடன் போராடின போதிலும் அவர்களுக்கு வேண்டிய பின்பலம் கிடைக்காததினுல் வெற்றி ஆங்கிலேயர் பக்கமே திரும்பியது. இரண்டாவதுவருஷம் கழிந்தது. 1799-ல் பிரிட்டிஷார் திப்புசுல்தானுக்கு நேராக மறுபடியும் படையெடுத்தனர். அந்த படையின் ஒரு பாகத்துக்கு தலைவனுக கேனல் ஆர்தர் வெல்லெஸ்லி என்பவரை நியமித்தனர். அவருக்கு அப்பொழுது வயது மூப்பத்து மூன்று இங்கிலாந்திலுள்ள ஒரு உயர் குடும்பத்தின் அங்கத்தினர் என்பதைத் தவிர, அவருக்கு ராணுவ விஷயமாக வேறெரு யோக்கியதையும் கிடையாது. அந்தக் காலத்தின் நீலை அப்படித்தான் பிரபு குடும்பருகளில் பிறந்த மக்களுக்கு, யோக்கியதை இருந்தாலும் இல்லாவிடினும் ராணுவத்திலும், கப்பற் படையிலும் பெரிய உத்தியோகங்கள் அளிப்பது ஆங்கிலேயரின் சம்பிரதாயம். தன் கீழ் உள்ள படையை ஸ்ரீரங்க பட்டணத்தை நோக்கி அனுப்பிவிட்டு, கேணல் வெல்லெஸ்லி, குதிரை மேல் புறப்பட்டார். அவருடைய படை எதிரியை ஸ்ரீரங்க பட்டணத்திற்கு அருகில் சந்திப்பதாகத்தான் கருதியிருந்தனர். ஆனல் ஒற்றர் மூலம் செய்தி அறிந்த சுல்தானின் படைகள் பிரிட்டிஷாரை சுல்தான் பேட் என்ற ஸ்தானத்தில் ஒரு சிறு ஆற்றின் கரையில் சந்தித்து, போர் நடத்தினர். அப்பொழுதுகூட கேனல் வெல்லெஸ்லி தன்சேனையோடுவந்து சேரவில்லை. கோர யுத்தம் நடைபெற்றது. வெல்லெஸ்லியின் படைகளில் பலரும் சுல்தானின் பீரங்கிகளுக்கு இறையாயினர். எஞ்சிய வர்கள் பயந்து பிரிட்டிஷ் ராணுவ காம்பை நோக்கி ஒட்டமெத்தனர். வெல்லெஸ்லி வழி தப்பி எங்கெங்கேயோ சுற்றி இறுதியில் காம்பை அடைந்தார். அங்கு அவருக்கு முழு விவரமும் அறிய முடிந்தது. சுல்தானின் படைகள் பிரிட்டிஷாரை துரத்திக்கொண்டு தங்களுக்குக் கிடைத்த வெற்றியை ஸ்திரப்படுத்தி இருந்தால், நம் நாட்டுச் சரித்திரம் எவ்வாறு மாறியிருக்கும் என்று இப்பொழுது சொல்ல முடியாது. அக்காலத்திலுள்ள ராணுவ சம்பிரதாயப்படி வெல்லெஸ்லியின் குற்றம் மன்னிக்க முடியாத்தே. அப்படி இருந்தும்கூட அதிருஷ்ட தேவி அவரைக் காட்டிக் கொடுக்கவில்லை.

ஜெனரல் பேர்டு

ஜெனரல் பேர்ட் வேறெரு சைன்யத்துடன் ஸ்ரீரங்கப்பட்டணத்தை அடைந்தார். மத்தியான வேளையில் 900 அடி அகலமுள்ள காவேரி ஆற்றைக் கடந்து திப்புவின் கோட்டைக்குள் நுழைந்தார். அங்குநடந்த போரில் திப்புசுல்தான் வீர சுவர்க்க மடைந்தார். கொள்ளையும், அட்டூழியமும் தாண்டவமாடிற்று ஜெனரல் பேர்டின் பராக்கிரமத்தை பிரிட்டிஷ் அதிகாரிகளி பாராட்டின போதிலும் அவரை ஸ்ரீ ரங்க பட்டிணத்திற்கு தளபதி ஆக்கவில்லை. அப்படி ஆக்கியிருந்தால் கேனல் வெல்லெஸ்லியின் கதி என்னவாகும் என்று அவர் தமையனுய கவர்னர் ஜெனரல் லார்ட் வெல்லெஸ்லி பயப்பட்டார். ஏதோ சில அரசியல் தில்லு முல்லு காரணமாக கேனல் வெல்லெஸ்லியை திப்பு சுல்தானின் தலைநகரத்திற்குச் சேனுதிபதியாக்கினர்கள். அதற்குக்காரணமாக அதிபர்கூறியது இவ்வாறும். ''ஒரு போரை வெல்லுவதற்குள்ள சாமர்த்தியம் ஜெனரல் பேர்டுக் இருந்த போதிலும் கிடைத்த வெற்றியை சமாளிப்பதற்கு வீரத்தனம்மட்டும் போதாது அரசியல் ஞானமும்கூட வேண்டும் அந்த குணம் வெல்லெஸ்லிக்கு இருப்பதினுல் அவரே தளபதியாக இருப்பது, நன்று.

அதிருஷ்டக்காரவெல்லிங்டன்

சில வருடங்கள் ஸ்ரீரங்கபட்டண அதிபராய் வேலை பார்த்த பிறகு வெல்லெஸ்லி சென்னைக்கு திரும்பினர். அங்கிருந்து பம்பாயுக்குச் சென்று மராட்டா யுத்தங்களில் பங்கு கொண்டார். அதற்கப்புறம் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

இங்கிலாந்தில் அவர் நீனைத்த படி வரவேற்பாவது, அரசியல் பாராட்டுதலாவது அவருக்குக் கிடைக்கவில்லை. பிரிட்டிஷாருக்கு வேண்டி இந்தியாவில் போராடின ஆங்கிலேய தளபதிகளை சிப்பாய் ஜெனரல் என்று துச்சமாகச் சொல்லுவது வழக்கம். அவர்களுடைய வெற்றி யெல்லாம் வீரத்தினுல் மட்டும் சம்பாதித்ததல்ல என்றுதான் ஆங்கில மக்களின் எண்ணம். அந்தக் கூட்டத்தில்தான் வெல்லெஸ்லியையும் சேர்த்தனர். ஆனல் அந்த வேளையில்கூட அதிர்ஷ்ட தேவன், அவரை (வெல்லெஸ்லியை) கை விடவில்லை. 1809-ல் வெல்லிங்டனை ஆங்கிலேய படைகளின் சேனுதிபதியாக நியமித்து ஐரோப்பிய தேசங்களுக்கு அனுப்பினர். தான் இந்தியாவில் சேர்ந்த ராணுவ அனுபவங்களை அவர் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார். வெற்றி மேல் வெற்றியும் கிடைத்தது. அங்கிருந்து வாட்டர் லூ என்ற பட்டணத்தை அடைந்து, நெப்போலியனை வென்று, அழியாப் புகழ் பெற்றார். அதற்குப் பிறகு அவரை வெல்லிங்டன் பிரபு என்ற ஸ்தானத்திற்கு உயர்த்தினர். வெல்லிங்டனும், நெப்போலியனும் போரில் எதிரிகளாய் இருந்த போதிலும் அவர்கள் பந்துத்வம் உள்ளவர்களாய் இருந்தனர். அது வெறெரு விஷயம். மதராசிலுள்ள வெல்லிங்டன் பங்களாவும், சேனுதிபதி ரஸ்தாவும் வெல்லிங்டனுடைய புகழுக்கு சின்னமாக விளங்குகின்றன.

அப்பால் என்ன?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பவதி ஹ்ரீயதே அர்த்தாத்ய உட்ரேயேக
வ்ருணீதே

''நன்மை தருவன, இனியவை- இவ்விரண்டும் ஒவ்வொரு மானிடனுக்கும் வருகின்றன; இரண்டினையும் முழுவதும் ஆய்ந்து தெளிந்தோன் அறிஞன்; அத்திட முடையோன் இனியவை தம்மை விட்டு, நன்மை தருவனவையேஏற்கின்றான். அறிவிலான், அடைவதும், காத்தலும் உன்னி, இனியவை தம்மையே விரும்பி வேண்டுகின்றான்.

ச்ரேய: ச ப்ரேய:ச மனுஷ்யமேதஸ்தௌ
ஸம்பரீத்ய விவிநக்தி தீர:
ச்ரேயோஹி தீரோ அபிப்ரேயஸோ
வ்ருணீதே
ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத்
வ்ருணீதே

''இனியவாகி, இனியவையாய்த் தோன்றும், ஆசைகளையெல்லாம் ஆய்ந்து, நீ விலக்கி விட்டனை,நசிகேதஸே! தாங்காமல் பலர் அழுந்தும் செல்வமாம் மாலையை நீ ஏற்கவில்லை! 'மெய் அறிவு' 'அறியாமை' எனும் இவ்விரண்டும் முற்றிலும் வேறுபட்டவை; தொடர்பு அற்றவை; அறிவு வேட்கைக் கொண்ட உன்மீது ஆசைகள் கிறிடவும் இல்லை. அறியாமையில் சீக்கியவர், கேள்வி ஞானம் இலாது, தானே அறிஞனெனக் கொண்டு, இங்குமங்கும் அலேவர்; குருடன் ஒருவன் வழி காட்டச் செல்லும் பல குருடர் போல் அவர்கள் வழி தவறிச் சுற்றுவர்.''

தினத்துச் சிறு கதை:

ஓநாய்க்கு உதவலாமா?

முன்னெரு காலத்தில் ஒரு ஊரில் துங்கூ என்ற ஒரு அறிஞர் வசித்து வந்தார். அவர் மிகுந்த இளகிய மனம் உடையவர்.

ஒரு நாள் இவர் சுங்ஷான் மலே யடிவாரத்தில் கழுதைமேல் சவாரி செய்து கொண்டு செல்லுகையில் சில வேடர்களைக் கண்டார். அதற்குப் பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ஓநாய் நடுங்கிக் கொண்டே வேகமாக ஓடி வந்தது ''இளகிய மனமுடைய அறிஞரே என்னைத் தயவு செய்து காப்பாற்றுங்கள்; நான் உங்கள் பைக்குள் சிறிது நேரம் ஒளிந்துகொள்கிறேன், இப்பொழுது எனக்கு வந்துள்ள அபாயத்திலிருந்து நான் உயிர் தப்பினுல் உங்களுடைய உதவியை ஒரு பொழுதும் மறவேன்'' என்று அது கெஞ்சியது.

இதைக் கேட்டு மனமுறுகிய அறிஞர் தனது பையிலிருந்த புத்தகங்களை அப்புறப் படுத்தி, அதற்குள் ஓநாயைநுழைத்துவிட்டு, பிறகு புத்தகங்களை அதற்குள் அடுக்கினர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சில வேடர்கள் அங்கு ஓடி வந்தார்கள். ஓநாயைக் காணுததால்வந்தவழியே திரும்பிப் போய் விட்டார்கள்.

பிறகு ஓநாய்தன்னை, வெளியே எடுத்து விடும்படி வேண்டியது. அறிஞரும் அவ்வாறே செய்தார்.

பையிலிருந்து வெளிவந்தது தான் தாமதம். ஓநாய் தனது பற்களை நரநர வென்று கடித்துக் கொண்டே ''அறிஞரே அயோக்கியர்கள் என்னைத் துரத்தி வந்தார்கள். நீங்கள் எனது உயிரைக் காப்பாற்றினீர்கள். அதற்கு எனது நன்றி; ஆனல் இப்பொழுது நான் பசியால் துடிக்கிறேன்; உண்ண எதுவும் கிடைக்காவிட்டால் நான் மடிந்து போவேன். எனவே என்னை நீங்கள் காப்பாற் விரும்பினுல் உங்களை நான் அடித்துத் தின்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு சொன்னதுடன் நிற்காமல் திடீரென்று அவர் மீது பாய்ந்து தாக்கவும் ஆரம்பித்தது அறிஞர் தன்னுல் முடிந்த மட்டும் ஓநாயை எதிர்த்துத் தன்னை தற்காத்துக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக ஒரு கிழவனுர் வந்தார். ஒரு நொடி ஓநாயிடமிருந்து விடுபட்டு, கிழவனுரிடம் ஓடி, தன்னைக் காப்பாற்றும் படி கெஞ்சினுர்.

''ஏன்! என்ன விஷயம்?'' என்றார் பெரியவர்.

இந்த ஓநாயை வேடர்கள் துரத்தி வந்தனர் உதவி செய்யுமாறு என்னை அது கேட்டது. நான் அதன் உயிரைக் காப்பாற்றினேன். ஆனல் இப்பொழுது அது என்னை அடித்துத் தின்ன விரும்புகிறது தயவு செய்து ஓநாயிடம் பேசி அது செய்வது தவருனது என்று புத்திமதி சொல்லுங்கள்'' என்றார்.

ஆனல், ஓநாய் ''இவர் என்னை மறைத்து வைத்த போது என் காலில் கட்டி, பைக்குள் அழுத்தி புத்தகங்களை என் மீது வைத்துக் கட்டினுர். நான் எவ்வளவுதான் உடம்பைச் சுருட்டிக் கொள்ள முடியும்? என்னுல் மூச்சுக் கூட விட முடியவில்லை. அது மட்டுமல்ல, என்னைத் துரத்திவந்த மற்ற வேடர்களுடன் இவர் நீண்ட நேரம் பேசிக் கொண்டே இருந்தார். இவ்வாறு நான் வெளியே வர முடியாமலும் அவதிப்பட்டு செத்து விட வேண்டும் என்பது இவரது விருப்பம். எனவே, இவரை நான் அடித்துத் தின்பதில் தவறு என்ன'' என்று கேட்டது.

''நீ ஒன்றுமில்லாத விஷயத்திற்குக் காது மூக்கு வைத்துப் பேசுகிறுய். என்று எனக்குத் தோன்றுகிறது. நான் நம்ப வேண்டுமானுல் என்னநடந்ததுஎன்பதை அப்படியே தத்ரூபமாகச் செய்து காட்டு பார்க்கலாம்'' என்றார் கிழவனுர்,

ஓநாய், மகிழ்ச்சியிடன் இதற்கு இணங்கிப் பைக்குள் புகுந்துகொண்டது.

''உன்னிடத்தில் கத்தி இருக்கிறதா?'' என்று கிழவனுர் துங்கூவைப் பார்த்து ரகசியமாகக் கேட்டார்.

அறிஞர் தன் இடுப்பில் இருந்த கத்தியை வெளியே எடுத்தார். ஓநாயை, அதனுல் குத்தும்படி கிழவர் ஜாடைகாட்டினுர்.

''ஐயோ பாவம் அதற்கு வலிக்காதா?'' என்ற துங்கூ பச்சாதபத்துடன் முணுமுணுத்தார்.

கிழவர் சிரித்தார். ''இது நன்றி கெட்ட மிருகம்! ஆயினும் இதைக் கொல்ல உனக்கு மனம் வரவில்லை! நீ உண்மையில் அன்புள்ளம் கொண்டவனே. ஆனல் நீ ஒரு வடிகட்டிய முட்டாளும் ஆவாய்''

பிறகு ஓநாயைக் குத்திக் கொன்று விட்டார் துங்கூ என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கவிதை பொழியும் விந்தை மாநிலம்

ஷுசான் மேற்கு சீனுவைச் சேர்ந்த செழிப்பு மிக்கதோர் மாநிலம். இதன் ஜனத்தொகை (1953 கணக்குப்படி) 6 கோடிக்கும் அதிகமாகும். இங்குள்ள ''எல்லா மக்களும் கவிதை எழுதுகிறுர்கள், எல்லா மக்களும் கானம் இசைக்கிறுர்கள்.'' பொருளுற்பத்தித் துறையில் முன்னேற்றத்தைக் காண்பதென்ற இயக்கத்தைப் பின்பற்றி, இங்கு இலக்கியத் துறையிலும் விரிவான வெகுஜன இயக்கம் துரிதமாக வளர்ந்தோங்கி வருகிறது. தமது மாநிலத்தின் நிலையை அம்மக்கள் எவ்வளவு பெருமிதத்துடன் வருணிக்கின்றனர் என்பதை பின்வரும் பாட்டிலிருந்து காணலாம்.

கவிதை களில்லா இல்லங்களில்லே
கான மிசைக்கா பண்ணேகளில்லே
பாடுகிறேம் நாளெல்லாம்;
கழனிகளிலே
பாடு படுகிறேம் உற்பத்தி
யோங்கிடவே

கவிதைகள் முத்தான அரசியாயின கானங்கள் தானிய மணிகளாயின. கவிதைகளிலும் பாட்டுகளிலும் இங்குள்ள பொதுமக்கள் கொண்டுள்ள பேரார்வத்திற்கு ஈடிணே இல்லே எனலாம். இங்கு வரும் விருந்தினர்கள் அனேவரையும் அவர்கள் அன்பு நிறைந்த கவிதைகள் பாடி வரவேற்கின்றனர். சாதாரணத் தொழிலாளர்களாயினும் சரி, விவசாயிகளாயினும் சரி, கவிதைகளின் மூலமே வரவேற்புரை நிகழ்த்துவர். விருந்தினர்கள் விடை பெற்றுச் செல்லும்போது, கவிதை மூலம் ஏதாவது செய்தி கூற வேண்டும் என்று இவர்கள் வேண்டுவதும் வழக்கம். இதனுல் பல விருந்தினர்கள் நிலே பெரும் திண்டாட்டமாகி விடுவதும் உண்டு! கருத்துக்களைப் பரிமாறி சர்ச்சை செய்யும்போதும், சுவரொட்டிகள் எழுதும்போது கூட அவர்கள் கவிதைகளையே கையாளுகின்றனர்; சில ஸ்தல சர்க்கார் அதிகாரிகள், அதிகாரபூர்வமான கூட்டங்களில் கவிதைகள் மூலமே தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனர்!

தெற்கு ஷுசானில் லுலனி, சுயுங் ஹோசியாங் இம்மூன்று தாலுகாக்களிலும், அநேகமாக எல்லா வீடுகளிலுமே அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இயற்றும் கவிதைகளைப் பொறிப்பதற்கு என்று பிரத்யேகமாக சுவர்கள் எழுப்பியுள்ளனர்!

சாதாரண பாட்டுகளை எழுதி வந்தவர்கள் இப்பொழுது கதைகளையும் நாடகங்களையும் கவிதைகளில் இயற்றி வருகின்றனர். குலான் தாலுகாவில் நான்போ விவசாயிகள் கூட்டுறவு கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஒருசில மாதங்களில் 10,000 கிராமீயப் பாடல்களையும், 60 கவிதை நாடகங்களையும், 30 கவிதைகளையும், 10 நாட்டியப் பாடல்களையும் இயற்றியுள்ளனர்.

ஷுசான் மாநிலத்தின் கலாச்சாரக் குழுவின் பிரதிநிதி ஒருவர் அம்மாநில நிலேமையை விவரிக்கையில், அங்கு 40 லட்சத்திற்கு மேற்பட்ட அமெச்சூர் எழுத்தாளர்களும் 86,700 எழுத்தாளர் குழுக்களும் உள்ளதாகக் கூறுகிறுர். இதுவரையில் 7 கோடியே, 84 லட்சத்து, 50 ஆயிரம் இலக்கியப் படைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன என்றும், (பெரும்பாலானவை கிராமீயப் பாடல்கள்), 3700 கவிதைத் தொகுப்பு நூல்கள் வெளியாகியுள்ளன என்றும் அவர் விவரிக்கிறுர்.

இந்த மக்கள் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை வெளிப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு, பலகைகள், கதவுகள், பாறைகள், ஒலிபெருக்கிகள், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் முதலிய தகல சாதனங்களும் பயன் படுத்தப்படுகின்றன. இதன்றி மக்கள் எழுத்தாளர்களின் படைப்புகளை விளம்பரப்படுத்தும் கண்காட்சிகளும், போட்டி விழாக்களும், விவாதக் கூட்டங்களும் நடத்தப்படுகின்றன.

இப்பொழுது இம்மாநிலம் 100,000 கலாச்சார கிளப்புகளையும், 1300 கலாச்சாரக் கேந்திரங்களையும் பெற்றுள்ளது. இலட்சக் கணக்கான கலாச்சார ஊழியர்கள் இவற்றில் பணியாற்றுகின்றனர்.



தென்னிந்தியக் கால்நடைகள்

கே. வேதகாந்தம்

காங்கயம் ஜாதிக் காளைகள் கடின வேலைக்கு மிகவும் ஏற்றவை. தென்னிந்தியாவில் இவ்வளவு சக்தி வாய்ந்த காளைகள் வேறு கிடையா. குறைந்த தீவனச் செலவில் அவற்றைப் பராமரிக்க முடியுமாதலால் அவற்றைப் பராமரிக்கும் செலவு மிகக் குறைவு. அவை உடல் வலிமையோடு காணப் படுவதுடன், பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும் இருக்கின்றன. திறந்த வெளியில் வெகுகாலம் யதேச்சையாகத் திரிய விடுவதால் அவற்றைக் கட்டுப் படுத்தி, வேலைக்கு வசப்படுத்துவது சற்று கடினம். ஆனால் சரியாக வசப் படுத்திய பிறகு அவற்றைப் பராமரிப்பதில் எவ்விதக் கஷ்டமும் கிடையாது.

சாதாரணமாக மூன்று வயதான பிறகுதான் காளைக் கன்றுகள் மாட்டுச் சந்தைகளுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். விற்பனைக்கு இரண்டு மூன்று மாதங்கள் முன்னதாகவே அவற்றுக்கு விசேஷ ஆகாரங்கள் வழங்கப் படும். கோயமுத்தூர் ஜில்லாவில் கண்ணபுரம், திருப்பூர் ஆகிய ஊர்களில் பிரதி வருஷமும் கோடையில் கால்நடைச் சந்தைகள் கூடுவது வழக்கம். இச்சந்தைகளில் கூடும் காளைகளிலிருந்துதான் பெரும் பாலும் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான காளைகளை வாங்குவது வழக்கம்.

காளைக் கன்றுகளில் விசேஷகுணங்களோடு கூடியவை, விசேஷ ஆகாரங்கள் அளிக்கப்பட்டு, பெரியவையான பிறகு பொலித் தொழிலுக்கு ஈடுபடுத்தப்படும். மற்ற கன்றுகளை யெல்லாம் காயடித்து, பிறகு விவசாய வேலைகளுக்கு உபயோகிக்கப் படும். காயடிப்பது என்பது ஒரு காலத்தில் ஒரு கஷ்டமான வேலையாக இருந்து வந்தது. காளைகளுக்கு இவ்வேலை அதிக கஷ்டத்தைக் கொடுத்து வந்தது. ஆனால் சென்ற சில ஆண்டுகளாக இந்த வேலைக்கு பதிலாக கால்நடை இலாகா ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறது. (Burdizzo's castrator) என்ற கருவியை உபயோகப்படுத்தி செய்யப்படும் இவ்வேலையில் காளைகளுக்கு எவ்வித தீங்கும் கஷ்டமும் ஏற்படுவதில்லை.

காங்கயம் காளைகள் சாதாரணமாக, சுமார் பதினேந்து வருஷகாலம் உழைக்கும். கபிலை இழுப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுத்தினால் அவற்றினால சுமார் பத்து வருஷம் தான் உழைக்க முடியும். இதே வேலையில் மற்ற ஜாதி மாடுகளை ஈடுபடுத்தினால் அவை சுமார் ஏழு வருஷம்தான் உழைக்க முடியும். இதிலிருந்து காங்கயம் ஜாதி காளைகளின் மேன்மையை நாம் உணர முடியும். ஒரு காங்கயம் காளையின் எடை சுமார் 1000 ராத்தலிலிருந்து 1400 ராத்தல்வரை இருக்கும். ஒரு காளையின் விலை சுமார் 150 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை இருக்கும்.

ஜாதிச் சிறப்பு

காங்கயம் ஜாதிப் பசுக்கள் மிகக் குறைவாகத்தான் பால் கறக்கும். அதனால் பால் பண்ணைகள் வைத்து நடத்துவோர்கள், இப் பசுக்களை வைத்துக் கொள்வதில்லை. காங்கயம் பசுக்கள் சாதாரணமாக 15-18 மாதங்களுக்கொருமுறை கன்று ஈன்றுவது வழக்கம். வருஷம் ஒரு முறை கன்று ஈன்றும் பசுக்கள் சிலஇருப்பதை நாம் காண்கிறோம். சரிவர ஈன்றுத பசுக்களையும் மிகக் குறைவாகப் பால் கறக்கும் பசுக்களையும் விவசாய வேலைகளுக்கு ஈடுபடுத்துகிறார்கள். தென்னாட்டில் வேறு எந்த ஜாதிப் பசுவையும் விவசாய வேலைக்கு ஈடுபடுத்துவதாகத் தெரியவில்லை.

பசுவின் தரம்

வளர்ச்சியடைந்த ஒரு காங்கயம் பசு சுமார் 600 பவுண்டு முதல் 750 பவுண்டு வரை எடை இருக்கும். முதல் முறையாகக் கன்று போடும் பசுவின் வயது சுமார் நான்கு வயதிருக்கும். ஒருமுறை கன்று ஈன்ற பிறகு, சுமார் மூன்று மாதம் கழித்து பசுவைப் பொலி காளையுடன் சேர்ப்பார்கள். ஒரு பசு தன் வாழ்நாளில் ஏழு அல்லது எட்டு கன்றுகளை ஈன்றக்கூடும். சென்னை ராஜ்யக் கால்நடைப் பண்ணையில் ஒரே ஒரு பசு மட்டும் 13 கன்றுகளை ஈன்றதாகக் கூறப்படுகிறது. காங்கயம் பசுக்களிடையே சற்று அதிகம் பால் கறக்கக்கூடியவற்றைத் தனியாகப் பராமரித்து, விசேஷ ஆகாராதிகள் கொடுத்தால், அவற்றின் தரத்தை உயர்த்த முடியுமென்று கால்நடை இலாகா நிரூபித்திருக்கிறது. இது



சம்பந்தமான ஆராய்ச்சிகள் பல கால்நடை ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் நடந்து வருகிறது.

பொலி காளைகள் தயாரிப்பு

சிறந்த ஜாதிக் காளைகளையும் பசுக்களையும் பெற வேண்டுமானால் சிறந்த ஜாதி பொலிக் காளைகள் தேவை. முன்சொன்ன பசுவைக் கோட்டை பட்டயக்காரர் விசேஷ கவனிப்புச் செலுத்தி மிகச் சிறந்த பொலிக் காளைகளை உற்பத்தி செய்து தமது பண்ணை உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளுகிறார். நாட்டில் பல இடங்களில் பொலித் தொழிலுக்கு, சிறந்த பொலிக் காளைகள் தேவைப் படுகிறதல்லவா? அந்தத் தேவையை உத்தேசித்தும் அவர் நல்ல ஜாதி பொலிக் காளைகளைத் தயாரித்து வருகிறார். ஒரு நல்ல காளையின் விலை 2000 ரூபாயாக இருந்துவருகிறது. இவற்றைத் தவிர நாட்டில் பல இடங்களில் உள்ள சர்க்கார் கால்நடைப் பண்ணைகளுக்கும் அவர் சிறந்த பொலிக் காளைகளை அவ்வப்பொழுது கொடுத்து வருகிறார். மொத்தத்தில் அவர் பண்ணையிலிருந்து ஒவ்வொரு வருஷமும் சுமார் 300 பொலிக் காளைகள் வெளிவருவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட பொது லக்ஷணங்களோடு கூடிய மாடுகளை யெல்லாம் ஒரே ஜாதி (Breed) மாடுகள் என்று அழைக்கிறோம். காங்கயம் பிரதேசத்தில் காணப்படும் மாடுகளுக்குக் குறிப்பிட்ட பல பொது லக்ஷணங்கள் இருப்பதால் அம்மாடுகளை யெல்லாம் காங்கயம் ஜாதி மாடுகள் (Kangayam Breedof cattle) என்று அழைக்கிறோம். காங்கயம் ஜாதி மாடுகளுக்கு என்னென்ன பொது லக்ஷணங்கள் இருக்கின்றன என்று இப்பொழுது கவனிப்போம்.

பொது லக்ஷணங்கள்

காங்கயம் மாடுகளின் நெற்றி அகலமாகவும் சமமாகவும் காணப்படும். முகம் சிறியதுதான். இருந்த போதிலும் அதில் எவ்வித வளைவையும் காண முடியாது. கண்களின் பளபளப்பை ஒரு விசேஷ லக்ஷணம் என்றே கூற வேண்டும். செவிகள் நீளம் குறைவு. ஆனால் அவை நிமிர்ந்தே காணப்படும். கொம்புகள் பிற்பாகத்தில் நன்கு பருத்திருக்கும். நுனியில் அவை ஒன்று சேருவது போன்ற தோற்றமளிக்கும். வயதான காளைகளின் கொம்பு நுனிகள் அநேகமாக ஒன்றுசேரும். கழுத்துகுட்டையாகவும்உறுதியாகவும் இருக்கும். காளைகளின் கொண்டை நல்லவளர்ச்சியடைந்திருக்கும் பொலி காளைகளின் கொண்டை எப்பொழுதுமே நிமிர்ந்து நிற்கும். தாடை மெல்லியது. நீளம் குறைவு. அதில் எவ்வித மடிப்புகளையும் (Fold's) காண முடியாது. கால்கள் குட்டை, நல்ல எலும்புகளோடு கூடியவை. சரீரத்துடன் அழகாக இணைக்கப் பட்டவை. உடல் நடுத்தர நீளம். விலா எலும்புகள் நல்ல நீளம். நன்கு விரிந்து காணப்படும். வால் சரீரத்துடன் அழகாக இணைக்கப் பட்டிருக்கும். வால் நுனியில் அடர்த்தியான கருப்பு ரோமம் காணலாம். பசுக்களின் பால் மடி சிறியது தான்; மடிக் காம்புகளும் சிறியவைதான். பால் தமனிகள் மங்கலாகத்தான் தென்படும். மடி அழகாகவும் மிருதுவாகவும் இருக்கும்.

காங்கயம் ஜாதி மாடுகள் இந்தியாவில் பெயர்போனவை. வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து போகும் கால்நடை நிபுணர்கள் இந்த ஜாதி மாடுகளை உலகத்திலுள்ள மற்ற சிறந்த ஜாதி மாடுகளுடன் ஒப்பிடலாம் என்று அபிப்பிராயப்படுகின்றனர். நம் நாட்டிலிருந்து சில காங்கயம் பொலிக் காளைகள் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதிலிருந்தே காங்கயம் ஜாதி மாடுகள் எவ்வளவு சிறந்தவை என்று நாம் தீர்மானிக்கலாம்.

சர்க்கார் பண்ணை

காங்கயம் பிரதேசத்தில் பட்டயக்காரரைத் தவிர வேறு சில விவசாயிகளும் ஜாதி மாடுகளை வளர்ப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. நாட்டிலுள்ள கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்க வேண்டியது சர்க்காரின் பொறுப்பல்லவா? அதனால் சர்க்காரே சேலம் ஜில்லாவில் காங்கயம் ஜாதி மாடுகளின் அபிவிருத்தி சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்துவதற்கென்று ஹோகூரில் ஒரு பெரிய கால்நடைப் பண்ணையை 1924-ம் வருஷம் ஆரம்பித்தார்கள். இப் பண்ணை இப்பொழுதும் மிகவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது. காங்கயம் பிரதேசத்திலுள்ள சீதோஷ்ண நிலையிலிருந்து மாறுபட்ட ஒரு சீதோஷ்ண நிலை ஹோகூரில் இருந்து வந்த போதிலும், காங்கயம் மாடுகள் அங்கும் நல்ல ஸ்திதியில் காணப்படுகின்றன. பண்ணை ஆரம்பித்ததன் நோக்கம் நாட்டில் தேவைப்படும் சிறந்த பொலிக்காளைகளை உற்பத்தி செய்வதற்கும், குடியானவர்களுக்குத் தேவைப்படும் சிறந்த காளைகளை உற்பத்தி செய்வதற்குமாகும். இந் நோக்கங்கள் அநேகமாக நிறைவேறி விட்டன. காங்கயம் பசுக்கள் பால் பண்ணைகளில் வைத்துக் கொள்ள ஏற்றவையல்ல என்ற ஒரு இழிவு இருந்து வருகிறது. இதைப் போக்க முயற்சிகள் நடந்து வருகின்றன. ஒரு கறவை காலத்தில் (Lactaion Period) 5,000 ராத்தலுக்குக் குறையாமல் பால் கறக்கும். சில பசுக்கள் ஹோகூர் பண்ணையில் இருந்து வருகின்றன. இவற்றின் சந்ததிகளை மேலும்-மேலும் விருத்தி செய்து, அதிகப்படி பால் கறக்கும் ஒரு தனிப்பிரிவு, காங்கயம் பசுக்களை உண்டு பண்ண முயற்சிகள் நடந்து வருகின்றன. முயற்சிகள் ஓரளவு வெற்றியளித்து வருகின்றன.

திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த புதுக்கோட்டையிலும் சமீபத்தில் ஒரு புதிய கால்நடைப் பண்ணையைச் சர்க்கார் ஆரம்பித்திருக்கிறார்கள். அங்கும் சிறந்த காங்கயம் ஜாதி மாடுகளைக் காணலாம்.

தென்னாட்டில் காணப்படும் மட்ட ரக கால்நடைகளுக்குப் பதிலாக எங்கு பார்த்தாலும் காங்கயம் ஜாதி கால்நடைகள் இருக்கவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கம்.

(தொடரும்)

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்



கையில் கண்ணாடிக் குவளையுடன் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனைப் படத்தில் காணலாம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாத தொரு சாதனம் விஞ்ஞான ஆராய்ச்சியாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்துதான், நாடு சுதந்திரமடைந்த உடனே விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிகோலும் பணியை முதல் கடமையாக நம் பிரதம மந்திரி மேற்கொண்டார். விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலே தாம் வெகு தூரம் முன்னேறியிருப்பதாகக் கருதிக்கொண்டிருந்த மேலை நாடுகளும், விஞ்ஞானிகளும் கண்டு வியக்கும் அளவுக்கு பல்வேறு துறைகளிலே அடிப்படை விஷயங்கள் பற்றிய ஆராய்ச்சியையும் பயன்துறை ஆராய்ச்சியையும் ஒருங்கே மேற்கொள்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும், சாதனங்களும் கொண்ட ஆராய்ச்சி நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதி விரைவில் நிர்மாணிக்கப்பட்டன. அடிமை ஆட்சியிலே ஒளிமங்கிக் கிடந்த பல "மாணிக்க விஞ்ஞானிகள்" ஒளி பெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கினர். இத்துணை விஞ்ஞானிகளின் ஆற்றலைக் கண்டும் கேட்டும் விஞ்ஞான உலகமே பிரமிக்கலாயிற்று. உலக விஞ்ஞானிகள் பூரணமான புகழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் பாத்திரமான விஞ்ஞானிகளின் பெயர் வரிசையிலே முதல் இடம் பெற்றவர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் என்று சொல்ல வேண்டும். டாக்டர் கிருஷ்ணன் ஆராய்ச்சித்திறன் இதற்கு முன்னுலே ஓரளவுக்கு உலகப் பிரசித்தி பெற்றிருந்தது என்றாலும், நாடு சுதந்திரமடைந்த பிறகுதான் அது முழு அங்கீகாரம் பெற்றுப் பிரகாசிக்கத் தொடங்கியது என்று சொல்லவேண்டும்.

ஸ்படிக பௌதிக ஆராய்ச்சி

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் ஸ்படிக பௌதிக ஆராய்ச்சித் துறையிலே பல அரிய விஷயங்களை வெளிப்படுத்தி, சர்வதேசப் பாராட்டுதலையும், புகழையும்பெற்றார். ஒலிச் சிதறல், "ராமன் விளைவு", மூலக்கூறு ஒளி யியல் ஆகிய விஷயங்கள் பற்றி, முக்கியமான பல ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிறார். உலோகங்களினின்றும் வெளிப்படும் மின் அணுக்களின் நிலையைப் பற்றியும், ஸ்படிகங்களுக்குள் அயனிகளின் ஊசல் பற்றியும் இவர் நடத்தியுள்ள ஆதார ஆராய்ச்சிகள் அதிக முக்கியத்வம் பெற்று விளங்குகின்றன. ஒளியியல் பற்றி அவர் நடத்தியுள்ள ஆராய்ச்சிகளைப் பாராட்டும் வகையில், லண்டனிலுள்ள ராயல் சொசைட்டி 1940-ல் இவரை ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டது. டாக்டர் கிருஷ்ணன் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் முக்கியமான பல விஞ்ஞானக் கழகங்களில் அங்கம் வகிக்கிறார். 1949-ல் இந்திய விஞ்ஞான காங்கிரஸின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; பின்னர் 1953-54 ல் இந்திய தேசிய விஞ்ஞானக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1955-ல் யுனெஸ்கோ விஞ்ஞான ஆலோசனைக் கமிட்டியின் அதிபராக பணிபுரிந்தார். சர்வதேச பௌதிக சங்கம் (1951-53), சர்வதேச விஞ்ஞான சங்கங்கள் கௌன்சில் (1955) ஆகியவற்றின் உப தலைவராகப் பதவி வகித்திருக்கிறார்.

பத்ம பூஷண விருது

1947-ல் இந்திய தேசிய பௌதிக ஆராய்ச்சி நிலையம் தோற்றுவிக்கப்பட்டதும், டாக்டர் கிருஷ்ணன் அந்நிலையத்தின் டைரெக்டராக நியமிக்கப்பட்டார். இப்பதவியை ஏற்பதற்கு முன், 1942-லிருந்து டாக்டர் கிருஷ்ணன் அலகாபாத் சர்வகலாசாலையில் பௌதிகப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். டாக்டர் கிருஷ்ணனின் தலைமையில் தேசிய பௌதிக ஆராய்ச்சி நிலையம் அரும் பணியாற்றி வருகிறது. பல விஷயங்கள் பற்றி அடிப்படை ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அந்த ஆராய்சிகளின் பயனாக, பலவகை உபயோகப் பொருள்கள் உருவாக்கப் பட்டுள்ளன. டாக்டர் கிருஷ்ணனின் தன்னலமற்ற அரிய சேவையைப்போற்றி ராஷ்டிரபதி ராஜேந்திரப்பிரசாத், 1954-ம் ஆண்டில் அவருக்கு "பத்மபூஷண" விருதை வழங்கினார்.

விஞ்ஞான ஆராய்ச்சியில் இவர் இடையறாது பாடுபட்டு வரும் பொருட்டு இந்திய சர்க்கார் 1958 ஆகஸ்ட் 15-ந் தேதியிலிருந்து டாக்டர் கிருஷ்ணனை தேசிய பேராசிரியராக நியமித்தனர். இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் விஞ்ஞானி டாக்டர் ஸி. வி. ராமன் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இலக்கியப் பணி

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் ஒரு சாதாரண விஞ்ஞானி மாத்திரமல்ல; அவர் பண்பு மிக்கப் பெரியார். தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே மிக்க ஆர்வம் கொண்டவர். டில்லி தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து, தலைநகரிலே தமிழ் மொழியையும், பண்பையும் வளர்ப்பதிலே அரும்பணியாற்றியிருக்கிறார். இவருடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழா சென்றவாரம்வெகு கோலாகலமாக புதுடில்லியிலே கொண்டாடப்பட்டது பலவகைகளிலே மிகவும் பொருத்தமாகும். இவரது அரிய சேவை பார்த்த நாட்டுக்கும் விஞ்ஞான உலகுக்கும் இன்னும் பல்லாண்டு காலம் கிடைத்துவர ஈசன் அருள் புரிவாராக.

பறக்கும் சைக்கிள்!

பிரிட்டனின் சிறந்த விஞ்ஞானிகள் மனித சக்தியாலேயே பறக்கும் விமானம் ஒன்றைத் தயாரிப்பதில் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளார்களாம். சைக்கிளைக் காலால் பெடலை அழுத்திச் சைக்கிளை இயக்குவதுபோல இப் புது விமானம் இயக்கப்படுமாம். ஆனால் ஒரே மனிதனால் விமானம் இயங்காது ஏழெட்டுப் பேர் உதவி தேவையாக இருக்குமாம்.

SHIVAJI
6 NP
TAMIL WEEKLY

சிவாஜி

ஞாயிறு வாரப்பதிப்பு

கிராம, சமுதாய நல, கலை, இலக்கியப் பத்திரிகை

டாக்டர் கிருஷ்ணன்



இன்று திருச்சியில் நடைபெறும் எழுத்தாளர் மாநாட்டின் தலைவர், உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்.

ஏழைகள் வாழ....

சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் நமது மாநில முதலமைச்சர் கனம் கே. காமராஜ் அவர்கள் நிகழ்த்திய சொற் பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.

ஏழைகளும், வாழ வழியில்லாதவர்களுமே காங்கிரசின் சொந்தக்காரர்கள். அவர்களை முன்னேற்றி வாழவைப்பதுதான் சர்க்கார் வேலையாக இருந்து வருகிறது என்றார். மேலும் பேசுகையில் இந்தப் பிரச்னையிலிருந்து பொது மக்களது கவனத்தையும், சர்க்கார் கவனத்தையும் வேறு பக்கம் திருப்பி பிரச்னைகளை அர்த்தமற்று குழப்ப எதிர்க் கட்சிகள் முயற்சிப்பதாகவும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

புதிதாக ஏற்பட்டுள்ள சுதந்திராகட்சி அரை குறை பணக்காரர்களுக்கும் மத்திய வகுப்பினருக்கும் 'புரியாத' பிரச்னைகளை பயங்கரமாகக் காட்டி குழப்ப முயல்வதாகவும், இவர்களைப் பார்த்து பாமர மக்களும் தங்கள் கட்சியில் சேருவார்கள் என்று எதிர் பார்ப்பதாகவும் தெரிவித்தார். இது கொக்கு தலையில் வெண்ணை வைத்து அது உருகி கண்ணை மறைத்ததும் பிடித்துக் கொள்ளலாம் என்று யாரோ சொன்னதாகக் கூறப்படும் கதையாகத்தான் இருக்கிறது என்றும் திரு. கே. காமராஜ் வர்ணித்தார்.

'இஷ்டம் போல் சம்பாதிக்க விடு' தர்மம் செய்கிறேன். என்று சுதந்திரா கட்சி சொல்லலாம் என்றும் ஆனால் இதுவரை 'ஏழையும் இல்லாதவனும்' 'கிழே இருந்து மேலே' உருப்படியாக உயர என்ன 'தர்மம்' செய்துவிட்டார்கள்? எப்படி நம்பிவிடுவது என்றும் அவர் கேட்டார்.

13—9—1959

கூட்டுறவுப் பண்ணை

டாக்டர் கைலாஸநாத்கட்ஜு

கூட்டுறவு விவசாயம் நாடு முழுமையும் சிந்தனையைத் தூண்டிவிட்டிருக்கிறது. "சிறு சிறு துண்டு நிலங்களில் விவசாயம் செய்வதால் மனித உழைப்பு வீணாகிறது; புதிய முறைகளைக் கையாளுவதையும் அது தடுக்கிறது. எனவே, கூட்டுறவு விவசாயத்தினால் உற்பத்தி அதிகரிக்கும்' என்றகருத்து ஒருபுறம், "நிலங்களை ஒரே பரப்பாகக் கூட்டுப்பண்ணையாக்குவதற்குரிய முதலாவது நடவடிக்கைதான் கூட்டுறவுப் பண்ணை என்பது; அது தனிநபரின் சொத்துடைமையையும், விவசாயத்தில் தனிப்பட்ட அக்கறையையும் அழித்துவிடும்" என்றவாதம் மறுபுறம். இந்த வாதத்தினிடையே, ஜனநாயகத்தின் அழிவு, பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற எல்லாவகையான பொய்யான கருத்துக்களும் எடுத்திரைக்கப் படுகின்றன. கூட்டுறவுப் பண்ணை என்றால் என்ன, அது எவ்வாறு செயல்படும் என்பது பற்றிப் பொதுமக்கள் மனதிலும் பலவிதமான குழப்பம் இருந்து வருகிறது.

கூட்டுறவு விவசாயத்தைப் பற்றிய வற்புறுத்தல் எந்த இடத்திலும் தொனிக்கவில்லை; விவசாயிகள் விரும்பினால் தாங்களாகவே ஒன்று சேர்ந்து, தங்கள் துண்டு நிலங்களை ஒன்று சேர்த்துப் பெரும் பண்ணைகளாக்கி கூட்டுறவு முறையில் சேர்ந்து பயிர் செய்யலாம், இவ்வாறிருந்தும் சிலர் "இது ஆப்பின் கூர்மையான பாகம் போன்றது; ஆரம்பத்தில் கட்டாயப்படுத்துதல் இல்லாவிட்டாலும், ஒருமுறை விவசாயி இதில் சேர்ந்துவிட்டால், அவனது சொத்துரிமை போய்விடுகிறது. பின்னர் அதிலிருந்து விலக நினைத்தாலும் அவனால் விலகிக்கொள்ள முடியாது" என்று கூறுகிறார்கள். "கூட்டுறவுப் பண்ணை என்பது சட்டப்பூர்வமான ஒரு அமைப்பு, அது ஆரம்பமாகிப் பதிவு செய்யப்பட்டு, அங்கத்தினர்கள் தங்கள் நிலங்களை அதனிடம் ஒப்படைத்தவுடன், நிலம் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்தாகிவிடுகிறது. பின்பு அங்கத்தினர்களின் தனிப்பட்ட சொத்தாக இராது, திரும்பக் கேட்பதனால் மட்டும் அது கிடைத்துவிடாது. நிலம் திரும்பக் கிடைக்க வேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி, சங்கத்தையே கலைத்துவிடுவததவிர வேறில்லை; அதற்கு எவ்வளவோ காலதாமதமும் செலவும் ஆகும்" எனவும் சொல்லப்படுகிறது.

கூட்டுறவு விவசாயம் ஒருமிக முக்கியமான அவசரமாக முடிவு காணவேண்டிய விஷயமாதலால் இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். இதைப் பற்றிய சவருன கருத்துக்களைப் போக்க வேண்டியதும் இன்றியமையாதது.

கூட்டுறவு விவசாயச் சங்கம் தோன்றி செயல்படத் தொடங்கியவுடனே, அதன் பலனை அனைவரும் நன்மையடைவது நிச்சயம். எனவே, சங்கத்தைக் கலைத்துவிடுவதென்றோ, அங்கத்தினர்கள் சங்கத்திலிருந்து பிரிந்து விடுவதென்றோ பிரச்னை எழவே செய்யாது. இருந்தபோதிலும், தனிப்பட்ட நபர்கள் தங்கள் நிலம் தங்களிடமே மீண்டும் விட்டுவிடப்பட வேண்டும் என்று கேட்டால், அவ்விதமே செய்வோமெனத் தெளிவாகத் தெரிவித்துவிடவேண்டியது அவசியம்.

இதைச்சாதிப்பதற்கு கூட்டுறவு விவசாயச் சங்கத்தின் அடிப்படை, சங்கத்தின் அங்கத்தினர்களுக்குச் சொந்தமான நிலத்தின் பேரில் அமைந்ததாக இருக்கக்கூடாது. இப்போதுள்ளது போலவே ரொக்கம் மதிப்பில் அவர்கள் பங்குத் தொகை போடவேண்டும். சாகுபடிச் செலவுகளுக்காக சங்கத்திற்குப் பணம் ஏராளமாகத் தேவைப்படும். நடப்பு மூலதனமும் கணிசமான அளவில் வேண்டும், இதை சாதாரணமாக மூன்று வழிகளில் பெறலாம்:—

(1) அங்கத்தினர்களே போடும் பங்குத்தொகை.

(2) அங்கத்தினர்களும் பிறரும் வட்டிக்காகப் போடும் நிர்ணய வைப்புத் தொகைகள்.

(3) கூட்டுறவு வங்கிகளிலிருந்து சங்கம் வாங்கும் கடன்.

இம்முறையில், சட்ட பூர்வ அமைப்பு என்ற வகையில் சங்கம் தனது நிதியை எற்படுத்திக் கொண்டு செயல்படலாம். ஒரு அங்கத்தினர் தனது பங்குத் தொகையைத் திரும்பக்கேட்கும் போது சட்டபூர்வமாக அதைப் பெற்றுக்கொள்ள வகை செய்யலாம்.

இருந்தபோதிலும், சங்கத்தின் பங்கு மூலதனத்தை அடிப்படையாகக்கொண்டு நிலத்தைப் பயன்படுத்தக் கூடாது. பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி அல்லது சங்கம் விலைக்கோ, குத்தகைக்கோ நிலத்தை வாங்குவதுபோலவே, சங்கமும் தனது அங்கத்தினர்களிடமிருந்து சாகுபடிக்காக நிலத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். அவர்களுக்கும் சங்கத்திற்குமிடையே தனித்தனியான ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். இந்த ஒப்பந்தத்தின்படி, நிலம் சங்கத்தின் உபயோகத்திற்கு விடப்படும் அங்கத்தினர் தமக்கு நிலம் தேவை என்று கோரினால், அறுவடைக் காலம் முடிந்தவுடன் அவரிடமே நிலத்தை ஒப்படைத்து விடுவதற்கான விதியும் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். சாகுபடி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே இத்தகைய கோரிக்கைகள் எழாமலிருப்பதற்காக குறிப்பிட்ட மாதத்தில்தான் அவ்வாறு நிலத்தை ஒப்படைப்பது என ஒரு நிர்ணயமும் செய்துகொள்ள வேண்டும். கூட்டுச் சாகுபடி, பயிர்கள், மகசூல் விற்பனை அவ்வவருக்குக் கிடைக்கவேண்டிய பங்குபற்றியும் ஒப்பந்தத்தில் தெளிவான விதிகள் இருக்கவேண்டியது அவசியம்.

ஒரு விஷயத்தை இங்கு தெளிவுபடுத்தவேண்டும், கூட்டுச் சாகுபடியால், மனித உழைப்பு வீணாவதைத் தடுக்கலாம் என்று கூறினோம். தனிப்பட்ட குடும்பங்கள் சிறு சிறு துண்டு நிலங்களைச் சாகு

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ், ஆங்கில
காந்தீய — சர்வோதய
பூமிதான — கிராமதான
இலக்கியத்திற்கும்
பத்திரிகைக்கும்
சர்வோதய பிரசுராலயம்
தஞ்சாவூர்.

போன்:37. தபால்பெட்டி.494. தந்தி:RELIABLE.
தங்கம், பவுன், நகைகள் & வெள்ளிப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்.
M/s. G. ராதாகிருஷ்ண செட்டியார் சன்ஸ்
பெரிய கடை வீதி... திருச்சிராப்பள்ளி-8.
SSK

காவற்படை விழா

சென்னை வானொலியில் முதலமைச்சர் காமராஜ் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு

சென்னை மாநில காவல் படையின் நூற்றாண்டு விழா, இந்த வாரம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. காவல் படையின் நூற்றாண்டு விழா என்று குறிப்பிடும்போது, நமது சிந்தனை அந்நியர்களுடைய ஆட்சிக் காலத்திற்குச் செல்கிறது. அந்நாட்களில் - குறிப்பாக, ஒத்துழையாமை இயக்கத்தின் போது - காவற்படையானது, அரசாங்க அமைப்பில் ஒரு முக்கிய இடத்தை வகித்து வந்தது. இப்படையினரிடம் குறிப்பிட்ட சில காரியங்கள் ஒப்படைக்கப்பட்டன. இக்காரியங்கள் மனத்திற்குப் பிடித்தவையாக இருந்தபோதிலும் சரி-இல்லாவிட்டாலும் சரி - கட்டுப்பாடான ஒரு படை என்ற முறையில் காவற் படையினர் இந்தக் காரியங்களைச் செய்து முடிக்க வேண்டியிருந்தது. அந்நியர்களிடமிருந்து ஆட்சி உரிமை நம் கைக்கு மாற்றப்பட்ட பின்னர், மக்களுக்கும் - காவல் படையினருக்கும் இடையே நல் உறவும் நம்பிக்கையும் வளரும் வகையில் பல காரியங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவைகளின் பயனும் மக்களிடையே இருந்த மனக்கசப்பும் படிப்படியாக நீங்கி வருகிறது.

காவற் படையின் நூற்றாண்டு விழாவில் அணிவகுப்புகளும், ஊர்வலங்களும், பாட்டு வேடிக்கைகளும், மற்றும் நாடகம், பொதுக் கூட்டம் போன்ற சுவையான அம்சங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பூரண வெற்றி அடையும் என்று நம்புகிறேன்.

கடந்த நூறு ஆண்டுகளில் சென்னை காவல் படையின் சரித்திரத்தில் பல விதமான மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த காலங்களில் உடை, வாகனம், கருவிகள் போன்ற முக்கியமான விஷயங்களில் ஏற்பட்ட மாறுதல்களையெல்லாம் இந்த விழாவின்போது பொது மக்களுக்கு எடுத்துக் காட்டவும் ஏற்பாடாகியிருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில் மற்ற அரசாங்கத் துறைகளில் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டு, அந்தத் துறைகள் அபிவிருத்தி அடைந்துள்ள நேரத்தில் - காவல் துறையிலும் அத்தகைய மாறுதல்களும், அபிவிருத்திகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் திறமையும் அதிகரித்திருக்கிறது.

ஆங்கில ஏகாதிபத்தியம் ஆரம்பமாவதற்கு முன்னால் - நம் நாட்டில் காவல் படை இருந்ததா? என்ற சந்தேகம் அடிக்கடி எழுகிறது. பழங்காலத்தில் நம் நாட்டில் திருடர்களைப் பிடிப்பதற்கும், ஊர்களில் காவல் புரிவதற்கும் சேவகர்கள் இருந்தார்கள் என்றும், இவர்கள் "ஊர்க்காவலர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரம் முதலிய சங்க இலக்கியங்களிலும் இது பற்றிய குறிப்புகள் காணப்படுவதாகவும் தமிழ்ப் புலவர்கள் ஆராய்ந்து சொல்கின்றனர். இவை தவிர, பொதுவாக வழங்கும் "தானை", "கொத்தவால்" என்ற சொற்களும் இச்சமயம் நமது நினைவிற்கு வருகின்றன. எனவே, காவற் படை அமைப்பு நமக்கு புதிதல்ல. ஆனால், இப்படையானது ஆங்கில ஆட்சிக்குப் பிற்பாடு, காலத்திற்கேற்ப மாறுதல் அடைந்து - அதே சமயத்தில் கட்டுக் குலையாமல் இருந்து வந்திருக்கிறது. இந்தியாவின் அரசாங்க அமைப்பிலும், அரசியல் சிந்தனையிலும் எவ்வாறு ஆங்கில முறை செல்வாக்குப் பெற்றிருந்ததோ அவ்வாறே இந்திய காவல் படையின் அபிவிருத்தியிலும் அம்முறைகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஆனால், சென்னை மாநில காவல் படை, ஆங்கில முறையில் இருந்த சில நல்ல அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டது. அது மட்டும் அல்லாமல், தானாகவே சில முறைகளில் தனது திறமையைப் பெருக்கி, இந்த மாநிலத்தில் நல்ல அபிவிருத்தி அடைந்து வந்திருக்கிறது.

நமது மாநிலத்தில் உள்ள காவற்படை அதிகாரிகளும் ஏனையோர்களும் மற்ற மாநிலங்களில் உள்ள காவற் படையினருக்குச் சமமாக இருக்கிறார்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லப் போனால், நமது காவற் படை உலகில் உள்ள ஏனைய படைகளோடும் ஒப்பிட்டுக் கூறக்கூடிய நிலையிலே மிகவும் திறமையுடையதாக உள்ளது. துப்புத் துலக்குவதிலும், கள்ளவு போன பொருள்களைக் கைப்பற்றுவதிலும், சட்டத்தையும் - அமைதியையும் நிலைநாட்டுவதிலும், சென்னை மாநில காவற் படையானது, மிக அற்புதமான முறையில் சேவை செய்திருக்கிறது. இதற்காக இப்படையினருக்கு என் மனம் உவந்த பாராட்டுதல்கள்.

வைத்திய முறைப்படி பரிசோதனை செய்து, விஞ்ஞான முறையில் துப்புத் துலக்குவதில் உதவியாக இருக்கக்கூடிய ஆராய்ச்சி நிலையம் ஒன்றை, நமது மாநிலத்தில் நிறுவ வேண்டுமென்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் யோசனை சொல்லி வருகிறார். துப்புத் துலக்குவதற்கு நவீன முறைகளைக் கையாள்வதில் காவற்படை அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் நிறைந்த அனுபவம் உண்டாகுமாறு செய்ய, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வதிகாரிகள் இவ்வகையில் மேலும் திறமையுடன் விளங்குவதற்காக மறுமுறை பயிற்சி அளிக்கும் திட்டம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இனி, போலீஸ் நாய்களைப்பற்றியும் - அவைகள் எப்படித் தமது காரியத்தை முடித்துக் காட்டுகின்றன என்பது பற்றியும், எப்படி பொது மக்களின் கவனத்தை அவைகள் கவர்ந்துள்ளன என்பது பற்றியும் அனைவரும் நன்றாக அறிவர். இந்தியாவில் இந்த சாதனையைப் பொறுத்த மட்டில் நமது மாநில காவற்படைதான் முன்னோடியாக விளங்குகிறது. அது மட்டுமன்றி இதுபோல் நாய்களைப் பயிற்றுவிப்பதில் நமது காவற் படையானது மற்ற மாநிலங்களுக்கு உதவியாக இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

ஆனால் இவைகளோடு மட்டும் காவற்படை திருப்தியடைந்துவிடவில்லை. மக்களுக்கும் காவற்படையினருக்கும் இடையே நல்லுறவு வளரவேண்டிய முறையிலே நம்முடைய செயல்கள் இருக்க வேண்டும். மக்களின் அன்பை எவ்வாறு பெறுவது என்பதற்கு லண்டன் காவற்படை ஒரு நல்ல

(11-ம் பக்கம் பார்க்க)

மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பது தங்க பஸ்பம் புகையிலை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படி செய்யும்போது, அவர்களது முழு நேரத்தையும் அந்த நிலங்களிலேயே பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் பெரும்பண்ணையில் கூட்டுச் சாகுபடி செய்யும்போது, மனிதர்களின் உழைப்பு மிஞ்சுகிறது, அதை வேறு வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இது அவரவர் விருப்பத்தை பொறுத்தது.

கூட்டுறவு விவசாய சங்க அங்கத்தினர் ஒருவர் தனது ஊரிலேயே இருந்துகொண்டு விவசாயம் செய்ய விரும்பினால் அவ்வாறே செய்யலாம். சங்கம், அவர் செய்த வேலைக்குத் தக்க வாறு ஊதியம் கொடுக்கும்; மகசூல் வந்த பின்பு, செலவினங்கள் போக எஞ்சியதை அங்கத்தினர்களிடையே பகிர்ந்து கொடுக்கும். இவ்வகையில் 30 பேருக்குச் சொந்தமான 300 ஏக்கர் நிலத்தை 20 நபர்களே லாபந்தரத்தக்க வழியில் சாகுபடி செய்யலாம். பத்துப்பேரின் உழைப்பு மிச்சமாகும்; அதை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். பண்ணைகள் பெரியனவாய் இருந்தால் நவீன முறைகளையும், கருவிகளையும் உபயோகிப்பது பற்றி மீண்டும் சொல்ல வேண்டியதில்லை.

கூட்டுறவுப் பண்ணையினால், விவசாயிகளின் நிலம் அப்படியே பறிபோய்விடும் என்பது சரியல்ல, இந்திய விவசாயிகள் மிகவும் மதி நுட்பம் படைத்தவர்கள்; விஷயத்தைத் தெளிவாக முழுமையாக எடுத்துரைத்தால் எளிதில் புரிந்து கொள்ளுவார்கள். இருந்த போதிலும், கூட்டுறவு விவசாயச் சங்கம் செயலாற்றும்போது ஏற்படும் சிற்சில இடையூறுகளைச் சமாளிப்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, அவரவர் தங்கள் தங்கள் நிலத்தில் சாகுபடி செய்யும் பரம்பரை வழக்கத்தை எடுத்துக்கொள்வோம். வயதுவந்தவர்கள் மட்டும் பாடுபடுகிறார்கள் என்பதில்லை. ஆறேழு வயது நிரம்பாத குழந்தைகள் உட்பட, குடும்பத்திலுள்ள அனைவருமே எதாவதொரு வழியில் விவசாய வேலையில் ஈடுபடுகிறார்கள். சின்னஞ் சிறுவர்கள் ஆடுமாடுகளை மேய்க்கிறார்கள். விவசாயிகள் ஒன்றுசேர்ந்தும், அவரவர் முன் முயற்சிக்குப் பதிலாக, ஊதியத்தைப் பற்றிய அக்கறையே மிஞ்சினால், சங்கத்தினால் சமாளிக்க முடியாத அளவுக்குச் செலவினங்கள் பெருகிவிடும். சின்னஞ்சிறு குழந்தைகளுக்குக்கூட அவர்களது வேலைக்காக எதாவது கொடுக்க வேண்டி நேரிடும். இத்தகைய பிரச்னைகளைத் தவிர்க்க வேண்டுமானால், ஒரு பெரும் பண்ணைக்குச் சொந்தக்காரர்களான ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்துடன் அனைவரும் பாடுபடவேண்டும்.

சங்கத்தின் மேற் பார்வையும், நிர்வாகமும் வேறொரு பிரச்னை. தனிப்பட்ட குடும்பங்களில் விவசாயத்தைப்பற்றிய கணக்குவழக்குகளே வைத்துக் கொள்வதில்லை; அவர்களுக்கு அது தேவையுமில்லை. விதைப்பிலிருந்து மகசூல் வீடு போய்ச்சேரும் வரை தாங்களே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறார்கள். ஆனால், ஒரு சங்கத்தைத் தொடங்கியவுடன், அதைக்கண்காணிக்கும் வேலை அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. விதைகளைப் பெருமளவில் வாங்கி சேமித்து வைக்கவேண்டும்; விவசாயக் கருவிகளும், உரங்களும் அப்படித்தான். மாட்டு வண்டிகளும் பிற போக்கு வரத்துச் சாதனங்களும் வைத்துப் பராமரிக்கவேண்டும். அறுவடைக்குப் பின்பு, மகசூலை விற்பனை செய்வது வேறு ஒரு சிக்கலான பிரச்னை. ஊதியங்களைக்கொடுப்பது, கணக்கு வைத்துக் கொள்வது, நிகர லாபத்தை பங்கிடுவது—எல்லாம் செய்ய வேண்டும். சங்கம் பெரியதாக இருந்தால், நடப்பு மூலதனமும் பல்லாயிரக் கணக்கில் இருக்க வேண்டும். உணவுத் தானிய விற்பனை ஏராளமாக இருக்கும். இவற்றையெல்லாம் கவனித்துக் கொள்வதற்கு நிர்வாகிகளும், கணக்கர்களும் பிறரும் தேவைபடுவார்கள். இவர்கள் அனைவருக்குமே சம்பளம் கொடுப்பதனால், மேற்செலவே ஏராளம் ஆகிவிடும். அங்கத்தினர்கள் தன்னலமற்ற முறையில் ஊதியமில்லாமல் பணியாற்றினால் தான் சங்கம் லாபகரமான முறையில் பணியாற்ற முடியும். இதற்கு அவர்களுக்கு உரிய பயிற்சி கிடைக்க ஏற்பாடுசெய்ய வேண்டும். கிராமத்திலுள்ள பள்ளியாசிரியர்களும், பிறரும் இவ்வேலையில் பகுதி நேர உதவியாளர்களாகப் பணியாற்றலாம். எனினும் அங்கத்தினர்களின் தன்னலமற்ற பணியும், தன்முயற்சியும், தன்னம்பிக்கையுமே கூட்டுறவு வாழ்க்கையின் சாரம்.

—கிராமராஜ்யம்



ரேடியோ சிலோன்

சில இந்தியத் திரைப் படங்கள் ரேடியோ சிலோனின் வர்த்தக ஒலிபரப்பு ஏற்பாட்டின் மூலமாக விளம்பரம் செய்யப்பட்டிருப்பது ரிசெர்வ் பாங்கின் கவனத்துக்கு வந்திருக்கிறது; ஆனால் அவ்வகைக்காக இந்தியப் படத் தயாரிப்பாளர்களுக்கு அன்னியச் செலாவணி எதுவும் விடுவிக்கப்படவில்லை; ரிசெர்வ் பாங்க் பொருத்தமான விசாரணைகளை நடத்தி வருகிறது; அவை இன்னும் பூர்த்தியாகவில்லை.

இத்தகவலை துணை நிதி மந்திரி ஸ்ரீ பி. ஆர். பகத் ராஜ்ய சபாவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

உபதேர்தல்

சட்ட சபையில் பதவி வகித்து வந்த அங்கத்தினர், ஸ்ரீ சுவாமி சகஜானந்தா மரணமடைந்ததனால் அந்த ஸ்தானத்திற்குரிய அபேட்சாப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசித் தேதி செப்டெம்பர் 14, பரிசீலனைக்கான தேதி செப்டெம்பர் 17. அபேட்சையை வாபஸ் பெறுவது செப்டெம்பர் 21-ந் தேதி வரையில் அனுமதிக்கப்படும்; உபதேர்தல் அக்டோபர் 26-ந் தேதிக்கு முன் பூர்த்தியாகிவிடும்.

கரூர் டி. மு. கோர்ட்
S. C. No. 251 | 59

வீரப்ப கவண்டர்—வாதி.
பெருமாயி அம்மாள்—பிரதிவாதி.

ஷெ நம்பரில் பிரதிவாதி ஒருவையாபுரி கவண்டருக்கு ரூ. 300/-க்கு எழுதி கொடுத்திருந்த புரோநோட்டுப்படி வாதி மேடோவர் பெற்று ரு. 385-62 nP.-க்கு தாவா தொடர்ந்து ஷெ தாவா 21-9-59 தேதி சமூகம் கோர்ட்டில் விசாரணை வாய்தா ஏற்பட்டிருக்கிறது. அன்று நீர் ஆஜராகாவிட்டால் ஒரு ஏகபக்கியாக நடவடிக்கை நடத்தப்படும். அறியவும்.

K. கிருஷ்ணசாமி அய்யங்கார்,
வாதி வக்கீல்.

11 | 3174 | 150

மாயவரம் டி. மு. கோர்.
S. C. No. 332 | 59

வாதி — N. கிருஷ்ணமூர்த்தி அய்யர், விஷ்ணுபுரம்.

பிரதிவாதி — அப்துல் அஜீஸ் ஸ்ரீகண்டபுரம்.

ஷெ நம்பரில் பிரதிவாதியால் வாதிக்கு எழுதி கொடுத்திருக்கிற பிராம்சரி நோட்டுபடிக்கு 272-10-0க்கு தாவா போடப்பட்டு பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பியும், சார்வு ஆகாதால், ஒட்டி சர்வு செய்ய உத்திரவு ஆகி 21-9-59 இல் ஈரங்கி போடப்பட்டிருப்பதால் ஷெ தேதியில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் எக்ஸ்பார்ட்டி டிகிரி செய்யப்படும்.

M. K. ராமமிருதய்யர்,
அட்வகேட்.

12 | 3175 | 151

பூமியின் கீழே!

விண்ணினைச் சாடி இயற்கையின் பரம ரகசியங்களை விஞ்ஞானிகள் அறிந்து வருகையிலே, பூமியைக் குடைந்து அதற்குள்ளே இருக்கும் பொருளின் தன்மையாது என்பதை அறிவதில் விஞ்ஞானிகள் இப்பொழுது மூனைந்திருக்கின்றனர். இது இந்த நூற்றாண்டின் வியப்பூட்டும் துணிகரமான விஞ்ஞானச் சாதனையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"மோஹோல்" திட்டம் என இதற்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. கடலுக்கடியில் "தரையிலிருந்து" துவாரம் செய்து பூமிக்குள்ளே உருகிய நிலையிலே குமுறிக் கொண்டிருக்கும் குழம்பை மூடியிருக்கும் மான்டில் என்ற பாறையின் மாதிரியை வெளியே கொணர்ந்து பார்க்கப் போகிறார்கள் விஞ்ஞானிகள்.

இது எவ்வளவு அபாயகரமான வேலை, இதற்கு எத்தகைய விஞ்ஞானக் கருவிகள் வேண்டும். எவ்வளவு பணம் செலவாகும் என்பதைக் கூற வேண்டியதேயில்லை.

கடலுக்கடியில் பூமியை என் குடையவேண்டும்? நிலத்திலிருந்து குடையக்கூடாதா? என்ற கேள்விக்கும் அமெரிக்க விஞ்ஞானிகள் விடை பகர்ந்துள்ளனர். மேலே சொன்ன மான்டில் பாறை பூமியின் நிலப் பரப்பிலிருந்து பூமிக்குள்ளே ஓரே ஆழத்தில் இருப்பதில்லை. இது சில இடங்களில் நிலப் பரப்பிலிருந்து 30 மைல் ஆழத்தில் இருக்கிறது. ஆனால் கடல்களின் 'தரைகளுக்கு' வெகு அண்மையில் இருக்கிறது. ஆயினும் ஓரிடத்திலாவது ஐந்து மைலுக்குக் குறைவாக இல்லை.

பூமியின் நிலப்பரப்பிலிருந்து குடைவதைவிட கடலுக்கு அடியிலிருந்து குடைவது சுலபமாக இருக்கும் என்பது இதிலிருந்து புலனாகும்.

சூரிய மண்டலமும் மனிதனும் தோன்றிய வரலாறு பற்றிய ஆராய்ச்சிக்கு பூமியைக் குடைந்து பார்க்கும் இந்த விஞ்ஞான முயற்சியும் பெரிதும் துணை புரியும் என்றும் இந்தத் துறைக்கு இது விண்வெளி ஆராய்ச்சியைவிட அதிக பலனுள்ளதாக இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

மான்டில் பாறையைக் குடையும் பணி மிகக் கடினமான பொறியியல் சாதனையாக இருக்கும்.

மிதக்கும் மேடை ஒன்றிலிருந்து இந்த ஆராய்ச்சி நடத்தப்படும். கொந்தளிக்கும் கடலில் இருந்து இதை நடத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. நீண்ட குழாய்கள் மேல் கணக்கில் இருக்கும் குழாய்கள், உடையாமல் காக்க வேண்டியது மிகக் கடினமான பணி. இதுவரை மனிதன் பூமியைக் குடைந்ததில்லை. ஆகையால் குடைவதற்கான விசேஷ கருவிகளும் தளவாடங்களும், நுண்கருவிகளும் கண்டு பிடித்துத் தயார் செய்தாக வேண்டும்.

பூமியை குடைந்து எடுக்கப்படும் பொருள்கள், பூமி புத்தம் புதிதாக இருக்கையில் இருந்த உயிர் இனங்களைப் பற்றி தகவல் தரும். லட்சக் கணக்கான ஆண்டுகளாக, பூமி ஏற்பட்ட காலத்திலிருந்து, படிப்படியாக அது குளிர்ந்து வந்தது வரை, இருந்து வந்த உயிரினம், பூமி அமைப்பு, தட்பவெட்ப நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள்; முதலியவற்றைப் பற்றிய வரலாறுகள் இந்தக் கசண்டுகளை ஆராய்வதால் புலனாகும்.

கடல் "தரைக்கு" அடியிலே காணப்படும் பூமி அமைப்பு, கடல்கள் ஏற்பட்டு பூமி தற்கால அமைப்பைப் பெறுகையில் இருந்த நிலையைக் காட்டுவதாக இருக்கும். இதன் தன்மை பூமி தோன்றிய வரலாற்றுக்குத் திறவுகோலாக அமையக்கூடும்.

புவி முகட்டின் அமைப்பு பற்றியோ, மான்டில் பாறை அமைப்பு பற்றியோ இதுவரை விசேஷ தகவல் கிடையாது. இப்பொழுது பூமியைக் குடைந்து எடுக்கப்படும் மாதிரிப் பொருள்கள், விஞ்ஞானிகளுக்கு பல விஷயங்களை உணர்த்துவதாக இருக்கும்.

பூமியைக் குடைவதற்குச் சிறந்த இடம் ஒன்றைக் கண்டு பிடிக்க 1959-ல் அமெரிக்க ஆராய்ச்சிக் கப்பல்களில் ஒரு பிரிவு அட்லாண்டிக், பசிபிக், கரீபியன் கடல்களில் ஆராய்ச்சி நடத்தியது. பல இடங்கள் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. மான்டில் பாறைக்கும் கடலடிக்கும் சுமார் 6 மைல் உள்ள இடங்கள் தான் இவை.

இந்த "மோஹோல்" திட்டம் விஞ்ஞான ரீதியிலே செம்மையானது என்றும் தொழில் நுட்ப ரீதியிலே நிறைவேற்றக்கூடியது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் பத்து மைல் ஆழத்திற்கு குடையலாம் என்று இன்ஜினியர்கள் நம்புகின்றனர். பரீட்சார்த்தமாகக் குடையும் வேலைக்கும், தேவையான கருவிகளைத் தயார் செய்வதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்க தேசிய விஞ்ஞானங்கள் கழகத்தில் விசேஷ குழு ஒன்றுதான் இந்த 'மோஹோல்' திட்டத்தை நடத்துகிறது. 1962ம் ஆண்டு வாக்கில் குடையும் வேலையைப் பூர்த்தி செய்ய இக்குழு தற்காலிகத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இந்த முக்கிய விஞ்ஞானப் பணியை நிறைவேற்றி வைக்கவும், செலவை ஏற்கவும் அரசாங்கத்தின் பல்வேறு இலாகாக்களும், பல்கலைக் கழகங்களும், தனியார் ஸ்தாபனங்களும் ஒத்துழைக்கும்.



அமுத வாக்கு

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே ஜாதி இரண்டொழிய வேறில்லை என்ற பழந் தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

அசோகா பாக்கு



கரூர் P.S. ராமசர்மாவின்
சக்தி சஞ்சீவி

ஈரல் குலைக் கட்டிகளுக்கு நிகரற்றது. எங்கள் சுற்றுப் பிரயாண விபரத்திற்கு எழுதுக.


தங்கபஸ்பம் புகையிலை

சிவாஜி

ஊன்றிய கொள்கையும் ஒன்றே கணந்தொறும்
தோன்றும் கடமைகள் ஆற்றுதல் நன்றே

வே 24] 13-9-1959 [வாரம் 40

வருக, வருக.

இன்று திருச்சி தேவர் மன்றத்தில் தமிழ் எழுத்தாளர் சங்க நான்காம் ஆண்டுவிழாவும் இலக்கிய மாநாடும் நடைபெறுகின்றன. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைமை தாங்குகிறார்.

உலகப் புகழ் பெற்ற பௌதிக விஞ்ஞானி, பாரத நாட்டின் பௌதிக ஆராய்ச்சி சாலையின் நெறியாளர், சிறந்த தமிழ்ப் புலவர், வட மொழி நிபுணர், இன்றைய உலகின் ஆழ்ந்த சிந்தனையாளர் நமது டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் ஜனதிபதியின் பத்ம பூஷண் விருது பெற்றவர். அறுபதாண்டுகள் அண்மையில் நிறைவுற்ற பெரியவர். இத்தகு சிறப்புகள் அமையப்பெற்ற புலவர் திருச்சிக்கு வருகிறார். அவரது வருகையை மகிழ்ந்து திருச்சி திருவரங்க நகர் மன்றங்கள், மக்கள் சார்பாகப் பொது ராஜரீக வரவேற்புக்கள் அளிக்கின்றன. கல்லூரிகள் பலவும் அவரை அழைத்துப் போற்றுகின்றன. டாக்டர் கிருஷ்ணன் அவர்களுக்கு "சிவாஜி" தனது வரவேற் புக்களையும் போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறன்.

திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம் சென்ற நான்கு ஆண்டுகளாக மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வந்திருக்கிறது. ஆண்டு விழாக்கள் அருமையான முறையில் நடைபெற்று வந்திருக்கின்றன. சங்கத்தார் ஆண்டு தோறும் அரிய இலக்கியச் சிறப்பு மலர்கள் வெளியிடுகிறார்கள். திருச்சி நகரப் பொது மக்களும், அரசியல் தலைவர்களும், வர்த்தகப் பிரமுகர்களும், அறிஞர் உலகமும் எழுத்தாளர் சங்கத்திற்கு ஆர்வத்துடன் தங்கள் ஆதரவை அளித்துப் பாராட்டி வருகின்றனர்.

மாநாட்டுக்கு ஆண்டுதோறும் வெளியிடங்களிலிருந்தும் பல எழுத்தாள அன்பர்கள் வருகை தந்து மகிழ்ச்சியில் பங்கு பெறுகிறார்கள். அரசியல், சமய, சாதி இன வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டு எழுத்தாளர் ஒரு குடும்பத்தாராக சமூகத்தொண்டர்களாக சிந்தனைச் சிற்பிகளாக விளங்குவதே எழுத்துக்கலையின் பண்பு. இதனை உணர்ந்து உழைத்துவரும் திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம் சாதிக்கக்கூடிய நலங்கள் மிகப்பல.

இன்று நடைபெறும் மாநாட்டை, செம்பொருட் காட்சியர் வித்வான் திரு. ஐயன்பெருமாள் கோனார் திறந்து வைக்கிறார். மதுரை திரு. ராமகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றுகிறார். பட்டி மன்றத்தில் தமிழ் வளர்ச்சிக்குப் பிறமொழி வளர்ச்சி தேவையா என்பது பற்றிச் சுவையான ஆராய்ச்சி அரங்கம் ஒன்றும் நடைபெறுகிறது. பாரதியாக ஆசிரியர் திருலோகசீதாராம், ஷேக்ஸ்பியராக பேராசிரியர் சி. எஸ். கமலபதி இருவரும் வேடம் புனைந்து மேடையில் தோன்றிக் கவிப் பொழிவு செய்கிறார்கள்.

மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், பிரதிநிதிகள், வெளியூர் அங்கத்தினர், பொதுமக்கள் அனைவர்க்கும் நமது வரவேற்பு.

செம்பொருட் காட்சியர், வித்துவான்

திரு. டி. ஐயன்பெருமாள் கோனார்.



இன்று திருச்சியில் நடைபெறும்
எழுத்தாளர் மாநாட்டின் திறப்பாளர்.

திருச்சித் தமிழ்ச்சங்கம்

திருச்சித் தமிழ்ச்சங்கத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, மேலரண்சாலை கெயிட்டி டாக்கீஸுக்கு முன்புறம் உள்ள காலி இடத்தை அரசாங்கம் இலவசமாக வழங்கியிருக்கிறது. கட்டடக் கல்கோள் விழா நாளது 17—9—59-ல் சென்னை முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்களால் நடைபெறும்.

தங்க பஸ்பம் புகையிலை

நியாயவிலைக் கடைகள்

சென்னை ராஜ்யத்தில் தற்சமயம் 1,750 நியாய விலைக் கடைகள் இருப்பதாகவும் இதனை 2,240 வரை அதிகரிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது என்றும் ராஜ்ய உணவு மந்திரி திரு. எம். பக்தவத்சலம் சட்டசபையில் நடைபெற்ற சர்க்கார் உணவு நிலைமை பற்றிய வெள்ளை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசியபோது அறிவித்தார்.

தென் உணவு மண்டலம் தொடர்ந்து நீடிக்கும் நிலைமை ஏற்பட்டால், நியாயவிலைக் கடைகளைத் தொடர்ந்து நடத்த மத்திய சர்க்காரிடமிருந்து ஆண்டு தோறும் 2 லட்சம் டன் அரிசி பெறுவது சிரமம் இராது என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையை தனி உணவு மண்டலமாக்குவதில் மத்திய சர்க்காருக்கு உள்ள தாக்கச் சொல்லப்படும் சங்கடங்களைத் தவிர்க்க வழி சொல்லி திருப்திப்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு அளவுக்காவது கட்டுப்பாடின்றி உணவு விற்பனையைத் தாராளமாக்கி கட்டுக்கு விட முடியாது என்றும் அப்படி விட்டால் விலை மூன்று மடங்கு அதிகரித்து விடும் என்றும் மந்திரி அறிவித்தார்.

சர்க்கார் கொள்முதல் கொள்கை தோல்வியடையவில்லை என்றும் அவர் சொன்னார்.

கேரளாவுக்கு அரிசி போவதால் மட்டுமே விலைவாசி உயர்ந்து விட்டதாக சர்க்கார் கூறவில்லை என்றும் இடையில் வியாபாரிகள் புகுந்து பெருத்த லாப நோக்குடன் உணவு வியாபாரத்தில் 'சூதாட்ட பேரம்' நடத்துவதால் தான் விலையுயர்ந்தது என்றும் திரு. பக்தவத்சலம் கூறினார்.

'லெவி முறை' மூலம் உணவு தானியம் கொள்முதல் செய்வதில் 5 ஏகர் வரை உள்ள விவசாயிகளுக்கு விதிவிலக்கு தரப்படும் என்றும் அதற்கு மேல் உள்ளவரிடம் ஏகருக்கு லெவி மூலம் கொள்முதல் செய்தாலும் 1 லட்சம் டன்

(8-ம் பக்கம் பார்க்க)

வந்தனை செய்திடுவோம்.

வந்தனை செய்திடுவோம் — தெய்வ
மாகவி பாரதியை! - புதுச்
சந்தக் கவிபுனைந்தான் – எங்கள்
தண்டமிழ் நாட்டினரே
வந்தவர் அன்னியர்கள் — விரித்த
மாய வலைவிழுந்தே –
நொந்தே அழிந்தநிலை – கண்டு
சிந்தை வருந்தினன் காண்!

விட்டு விடுதலையே — ஆக
வீரக் கவிமுரசை
தட்டி முழக்கிவிட்டான் – எங்கள்
தண்டமிழ்ப் பாரதியே! – தொன்று
தொட்டு விளங்கிவரும் – நல்ல
தூய இலக்கியங்கள் – யாவும்
கற்று முடித்தபின்னர் — புதுக்
காவிய மாலைசெய்தான்!

புத்தம் புதுநடையில் — இசை
பொங்கிக் குதித்துவர
சித்துக ளேதுமின்றி – பொருட்
செல்வமும் கற்பனையும்
ஒத்துச் சிறப்புத்தர – எங்கள்
ஒண்டமிழ் நாடுயர
பத்தரை மாற்றுத்தங்கம் – நிகர்
பாடல் பல புனைந்தான்!

பல்லுடைக் கும்கவிதை — பல
பார்த்துச் சலித்தவர்கள் — இவன்
சொல்லில் சுகமிருக்கக் – கண்டு
துள்ளிப் படிக்கலுற்றார் – நம்
வெல்லத் தமிழ்மொழியும் — புது
மேன்மைகள் பெற்றேங்க — நல்ல,
நல்ல பணிபுரிந்தோன் - கவி
நாயகன் பாரதிதான்!

நாட்டிற் பகைவளர்க்கும் — பல
நாசச் சிறுமைகளை
ஓட்டத் துடிதுடித்தான் — எங்கள்
உத்தமன் பாரதியே – சொந்த
வீட்டின் நிலைஉயர – இந்த
மேதினி தானுயர – அருட்
பாட்டுப் புகன்றவனை – இன்று
பாடிப் பரவுவமே!

சே. கனகசபை.

ஸ்ரீராமகிருஷ்ண குடிலுக்கு நேருஜி அன்பளிப்பு ரூ. 5000

திருச்சி ஜில்லா திருப்பராய்த் துறையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண குடில் தமிழ் நாட்டின் தனிப் பெரும் தர்மஸ்தாபனமாய் விளங்கி இக்கற்றஅனுதைக்குழந்தைகளுக்கு புகலிடம் அளித்து வருவது தமிழ் நாடு அறிந்ததே. ஷை ஸ்தாபனத்தில் இது சமயம் 164 மாணவர்கள் கல்வியும், பயிற்சியும் பெற்று வருகிறார்கள்.

ஷை ஸ்தாபனத்திற்கு இந்தியப் பிரதமர் நேருஜி அவர்கள் ரூ. 5000/- நன்கொடை அனுப்பி வைத்திருக்கிறார், என்கிற மகிழ்ச்சியான செய்தியை பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

ஷை தொகையை பூஜ்யவிஞே பாஜி அவர்களால் அஸ்திவார மிடப்பட்டு சுமார் 34000 ரூபாய் எஸ்டிமேட்டில் இந்த ஸ்தாபனத்தில் கட்டப்பட்டுவரும் ஸீனியர் ஆதாரப்பள்ளிக் கட்டடத்திற்குப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஷை கட்டடம் அடுத்த ஆண்டில் கட்டி முடிவடையும். அக்கட்டடத்தைத் திறந்து வைக்க தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தின் போது குடிலுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று நேருஜி அவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது, என்பதையும் பொதுமக்களுக்கு அன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உற்பத்தியாளர்கட்கும் வாங்குவோருக்கும் நியாய விலையும் போதிய உணவும் கிடைக்கவே கட்டுப்பாடு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நியாயவிலைக் கடைகளை அதிகரிக்க வேண்டுமென்றும் மேலும் அதிக அரிசியை மேலும் குறைந்த விலையில் தரவேண்டும் என்றும் கோரி திரு. ஜகந்நாதன் (ஜ. கா) கொண்டுவந்த திருத்தமும் திரு எஸ். எம். அண்ணாமலை (தி. மு. க.) கொண்டுவந்த திருத்தமும் தோல்வியுற்றன.

சர்க்கார் உணவு நிலைமை பற்றிய அறிக்கையை சபை அங்கீகரித்தது.

ஆளில்லாத தபால் நிலையம்

இயந்திரங்களைக் கொண்டே பல பணிகள் செய்யும் புரட்சிகரமான புதிய தபால் நிலையம் ஒன்று நிறுவப்படுமென்றும், அதனால் செம்மையாகவும் விரைவாகம் பணிகள் நடைபெறும் என்றும் அமெரிக்க போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் அறிவித்துள்ளார். "புராஜக்ட் கேட்வே" என்பது அந்தத் திட்டத்தின் பெயர். அதன்படி சலிபோர்னியாவில் ஒரு தபால் நிலையம் அமைக்கப்படும். தபால்கள் சீக்கிரம் வந்து சேரவும், சீக்கிரம் போக வேண்டிய இடங்களுக்குப் போகவும் அது நிறுவப்படுகிறது. தபால் தலைகள் விற்கும் இயந்திரம், விலாசங்களைக் கண்டு கொள்ளும் இயந்திரம், பார்சல்களைப் பிரிக்கும் இயந்திரம் ஆகிய பல இயந்திரங்கள் அமைக்கப்படும்.

பழங்குடி மக்கள் கல்வி



ஓரிஸ்ஸாவில் பழங்குடி மக்கள் வாழும் கிராமமொன்றிலிருந்து வந்துள்ள கடாபா குடியினத்தைச் சேர்ந்த சிறுமியொருத்தி அக்ஷரங்களைப் பயிலும் காட்சியைப் படத்தில் காணலாம். இச்சிறுமியும், அவளைச் சேர்ந்த மக்களும் நவீன வாழ்க்கை பற்றி அறிந்து கொள்வதில் முதல்படியாக அக்ஷரங்களைப் பயிலுகின்றனர். பழங்குடியினர் வாழும் இப்பிரதேசங்களில், அவர்கள் பல்லாண்டு காலமாக தனித்து வாழ்ந்து வந்தமையால், உலக வாழ்க்கை பற்றிச் சிறிதும் அறியாது இருளில் மூழ்கியுள்ளனர். சமீப வருஷங்களாகத்தான் கல்வி, ஜாகை வசதி, வைத்தியப் பராமரிப்பு போன்ற சில நவீன ஆதார வசதிகள் அவர்களுக்குக் கிடைத்து வருகின்றன. பல்வேறு ராஜ்யங்களில் பழங்குடியினர் வாழும் பிரதேசங்களில் தீவிர அபிவிருத்திக்காகப் பெருந்தொகைகள் இப்பொழுது செலவிடப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஷெட்யூல்ட் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோருக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள விசேஷ சலுகைகளையும், சௌகரிய வசதிகளையும் அவர்கள் பெற்று வருகின்றனர்.

★ ★

உலக விஷயங்களுக்குக் காதுகொடாதிருந்து பழகுபவன் இறைவனுடைய ஆணையைக் கேட்கிறான். ஊனக் கண்ணினின்று ஒதுங்கியிருந்து பழகுபவன் ஞானக்கண்ணைப் பெறத் தகுதியுடையவனாகிறான்.

— அருள் வாக்கு



அமிர்தாஞ்சனம்

சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம்
லிமிடெட்
சென்னை, பம்பாய்.

தங்கபஸ்பம் புகையிலை

தெரிந்துகொள்வீர்

பனி மனிதன் மர்மம்

இமயமலையில் வசிப்பதாகக் கூறப்படும் 'பனி மனிதன்' மர்மத்தை அறிவதற்கு வைமன்கரோல் என்ற அமெரிக்கர் முயற்சி செய்து கொண்டுள்ளார். இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள இருவருக்கும் சிக்கிம் சர்க்கார் சகல வசதிகளையும் அளிக்க சம்மதித்துள்ளது.

இக்கோஷ்டி சிக்கிம் பிரதேசத்தின் அடர்ந்த வனங்களிலும், உயர்ந்த மலைகளிலும் பனிமனிதனைத் தேடி ஆராய்ச்சிகள் நடத்தும். நேபாள இமாலயத்தில் இதற்கு முன் பனிமனிதனைக் காண பன்முறை முயற்சி செய்தும் பயனில்லை.

பனிமனிதனைப் பற்றி வைமன் கரோல் கூறியதாவது. பனி மனிதன் வாலில்லாக் குரங்கின் ஒரு புதிய விதமாக இருக்கலாம். மிருக இன ஆராய்ச்சி அனுபவத்தைக் கொண்டு நான் இவ்விதம் அனுமானிக்கிறேன். இத்தகைய ஜந்து பலவருடகாலம் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதில் வியப்பில்லை. கொரில்லாவைப் போலவே பனிமனிதனும் கூரிய பார்வையும், மோப்ப சக்தியும் உடையது. புதிய மோப்பம் எதையும் உணர்ந்த உடனேயே ஓடிவிடும்.

மேற்கு இந்தியத் தீவுகளில் நான் பல கொரில்லாக்களைப் பிடித்திருக்கிறேன். என்னுடைய உடம்பின் வாடை, இமயமலையில் குகைக்குள் பதுங்கியிருக்கும் பனிமனிதனுக்குப் படாதபடி சில விசேஷ முறைகளைக் கையாள நான் உத்தேசித்திருக்கிறேன்.

பனிமனிதனைக் காணும் போது உபயோகிப்பதற்கான ஒரு விசேஷ ரகமான துப்பாக்கியைக் கொண்டுபோவேன். இத்துப்பாக்கி உடலுக்குள் ஊசிகளாக ஊடுருவி நெகோடைன் என்ற மயக்க மருந்தைச் செலுத்தும். இது இரத்தத்தில் கலந்த உடன் அந்த ஜந்து தூக்கத்தில் ஆழ்ந்து விடும். பிறகு அதைப் பிடித்து விடலாம் என்று கூறுகிறார்.

சிக்கிம் பிரதேசத்தின் மேற்குப்பகுதியில் நேப்பாள எல்லைகளுக்கும் மேற்கு வங்க எல்லைகளுக்கும் அருகில் பனிமனிதனைத்தேடும் முயற்சிகள் நடைபெறும்.

பறவைத் தீவு

வடமேற்கு சீனாவில் சின்ஹை மாநிலத்திலுள்ள மிகப் பெரிய உப்பு நீர் ஏரியான சின்ஹை ஏரியின் மேற்குப் பகுதியில் ஒரு சிறு தீவு உள்ளது. சுமார் 2 கிலோமீட்டர் நீளமுள்ள இத்தீவு, அற்புதமானதோர் பறவைகளின் உலகாக விளங்குகிறது. இத்தீவில் எங்கு சென்றாலும் சர்வ ஜாக்கிரதையாக நடக்க வேண்டும். இல்லையேல் ஏதாவது சில பறவைகளின் முட்டைகளை நீங்கள் மிதித்து நசுக்கிவிடக் கூடும், அல்லது பறவைக் கூடுகளை மிதித்துவிடக்கூடும்.

இங்கு, அன்னத்தையொத்த வாத்துகளும், கோர்மாரண்டஸ் என்ற கடல் பறவைகளும், கொக்குகளும், மீன் கொத்திப் பறவைகளும் மற்றும் பலப்பல வினோதப் பறவைகளும் உள்ளன. கோடைதோறும் பல்வேறு வகைப்பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து வந்து, ஒன்றோடொன்று சண்டை சச்சரவின்றி, இங்கு குடியேறி வருகின்றன. அன்னப் பறவை - வாத்துக்களின் முட்டைகள், சாதாரண வாத்து முட்டைகளைவிட பெரியவையாயும் வெண்மையாயும் உள்ளன. மீன் கொத்திப் பறவைகளின் முட்டைகள் சாதாரண வாத்து முட்டைகளின் அளவில் உள்ளன; ஆனால் அவை பழுப்பு நிறமாகவும் புள்ளிகள் நிறைந்தவையாகவும் உள்ளன. கோர்மாரண்ட்ஸ் என்ற கடற் பறவையின் முட்டை கோழி முட்டையின் அளவில், வெண்மையாகவோ அல்லது பழுப்பாகவோ உள்ளன. இந்தப் பறவைகள் ஒவ்வொரு பருவத்திலும் கூடு கட்டும்போது, பழைய கூடு இருந்த இடத்திலேயே, அதற்குச் சற்று உயரத்தில் கூடு கட்டிக்கொள்ளும் விசித்திரப் பழக்க முடையவை. எனவே, இங்கு அடிக்கடிக்காக, ஒன்றன்மேல் ஒன்றாக, கூடுகள் நிறைந்திருப்பதிலிருந்து இப்பறவைகள் வெகு காலமாகவே இங்கு வந்துகொண்டிருக்கின்றன என்பது புலனாகிறது.

கடந்த காலத்தில் சின்ஹை ஏரியில் படகுப் போக்குவரத்து இருந்ததில்லை. பனி காலத்தில் ஏரி உறைந்துவிடும் போதுதான் இப்பிரதேச மக்கள் இத்தீவிற்குச் செல்ல முடிந்தது. இவ்வாண்டு, இந்த ஏரியில் மீன் பிடிக்கும் தளம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பொழுது இங்கு படகுகள் நிறைந்துள்ளன. எனவே கோடையிலும் பறவைத் தீவிற்கு மக்கள் செல்ல முடிகிறது.

இந்தியக் கைத்தறி

பொருள்களில் தரத்தையும் வேலைப்பாட்டையும் விரும்பும் நாகரீக உணர்வுள்ள அமெரிக்க பெண்கள் நாகரீகத்துக்கு இசைந்த இந்தியத் துணிகளை வாங்குவார்கள்.

அமெரிக்க உற்பத்தியாளர் ஒருவர் தாமே அமைத்த அமைப்புக் குறிப்புகளையும், மாதிரிகளையும் புதுடில்லி உற்பத்தியாளர் ஒருவருக்கு அனுப்பியிருப்பதாக "நியூயார்க் டைம்ஸ்" அறிவிக்கிறது. கைத்தறித் துணிகளைக் கொண்டு இந்தியத்தொழிற்சாலை அவற்றைச் செய்து விற்பனைக்கு அமெரிக்காவுக்கு அனுப்புகிறது. ஆண்டு முழுவதும் உற்பத்தி வேலை நடைபெறும் என்று "டைம்ஸ்" சொல்கிறது. நியூயார்க்கிலுள்ள லார்ட் அண்டு டாய்லர் என்னும் ஒரு நாகரீக உடைக் கடையில் மூவகை நாகரீக உடைகள் இப்பொழுது கிடைக்கின்றன.

"அவை அனைத்தும் நல்ல நிறமுள்ளவை; கைத்தறியில் நெய்யப்பட்டத் துணிகள்; விலையேறப் பெற்ற உடைகளுக்குள்ள அழகுகள் அவற்றிற்கு உள்ளன. உதாரணமாக, மெல்லிய பட்டு அவற்றில் அடியில் முழுவதும் இணைத்துள்ளது" என்று "டைம்ஸ்" எழுதுகிறது.

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, முதலியவைகளை போக்கவல்லது.
எல்லிஸ்பாம்
தயாரிப்பாளர்கள்:
தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி
மதுரை.

ஹோமியோபதி
வைத்திய சாஸ்திரத்தை மிகக் குறைந்த செலவில் தங்கள் வீட்டில் இருந்தபடியே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ படித்து சிறந்த முறையில் டாக்டராகத் தொழில் நடத்தலாம். முழு விபரங்களையும் இலவசமாகவே அனுப்பித் தருகிறோம்.
பாரதத்தின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனம்
இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட் கும்பகோணம்

கைத்தறி மில் ஜவுளிகள் B & C பேன்ஸி ஸில்க்குகளுக்கு
ஸ்ரீ கணேசன் ஸ்டோர்ஸ்
நேதாஜி ரோடு, சைனுபஜார், திருச்சி-2


தங்கபஸ்பம் புகையிலை

சூரிய சக்தி

சென்னையில் அமெரிக்கச் சிறு தொழில்கள் கண்காட்சியிலுள்ள சூரிய சக்திப் பிரிவில் பல புதுமைப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் நமது வீட்டு உபயோகக் கருவிகள் சூரிய சக்தியால் குறைந்த செலவில் வேலை செய்ய முடியும் என்பதை அவை புலப்படுத்துகின்றன.

காட்சி மைதானத்தில் வெயில் நன்கு படும் இடத்தில் சூரிய சக்தித் துறையில் புகழ்பெற்ற விஞ்ஞானி டாக்டர் ஜான் ஒய். எல்லட், சூரிய சக்திப் பிரிவை அமைத்துள்ளார். இப்பிரிவில் சூரிய சக்தி உலை முதல், சூரிய சக்தி பாட்டரியால் இயங்கும் ரேடியோக்கள் வரைக் காட்சியில் வைத்துள்ளார்.

சூரிய சக்தி ரேடியோ கேட்கும் நிலையம் ஒன்றிருக்கிறது. மின்விசை வசதி இல்லாத இந்தியக் கிராமங்களுக்கு இது போன்ற நிலையங்கள் மிகவும் பயனுள்ளவை. நிலையத்திலுள்ள ரேடியோ, சூரிய சக்தியால் இயங்குவது. மேலே விழும் வெயிலிலிருந்து சூரிய சக்தி கிடைக்கிறது. எல்லா வானொலி நிலையங்களையும் இங்குள்ள ரேடியோவில் கேட்க முடியும். பகலில் அடிக்கும் வெயிலிலிருந்து மின்விசையைச் சேகரித்து வைத்துக் கொள்ளக்கூடிய மின்கலங்களும் இங்கு இருப்பதால் ரேடியோ பகலிலும், இரவிலும் வேலை செய்யும்.

சூரிய சக்திப் பிரிவில் பொது மக்களைக் கவரக்கூடிய மற்றொரு பொருள், அமெரிக்கப் பெண் விஞ்ஞானி ஒருவர் செய்துள்ள சூரிய சக்தி குமுட்டி அடுப்பு. சூரியன் இருக்கும் திசையை நோக்கி இதனைத் திருப்புவதன் மூலம் சமைப்பதற்கு வேண்டிய அளவு வெப்பம் பெற முடியும்.

சூரிய சக்திப்பிரிவில் ஒரு உலை ஒன்றிருக்கிறது. அதில் சாதாரண பிளாஸ்டிக் பில்லை (லென்ஸ்) ஒன்றைப் பயன்படுத்தி தங்கம் போன்ற உலோகங்களை உருக்க முடியும். எனில் தங்கம் போன்ற உலோகங்களை உருக்கும் அளவு வெப்பம் கிடைக்கிறது.

சூரிய சக்திப் பிரிவிலுள்ள மற்றப் பொருட்கள்: சூரியசக்தி உலை சூரிய சக்தி அடுப்பு, நெருப்புப் பொறி திரட்டும் கருவி. இதன் உதவியால் தொலைவிலுள்ள பொருட்கள்மீது சூரியக் கிரணங்கள் படும்படிச் செய்யலாம். சமையல் அறைக்கும், குளிக்கும் அறைக்கும் வேண்டிய வெந்நீர் தயாரிக்கும் சூரியசக்தி வெந்நீர்த் தவலை, சூரிய சக்தி வாலை, சூரியசக்தி கடிகாரம் முதலியனவும் குறிப்பிடத்தக்கவை.

இந்தியாவிலும் மற்றும் வெப்ப நாடுகளிலும் வேண்டிய அளவு கிடைக்கும் சூரிய சக்தியை எவ்வாறு சமையல், வீட்டு வேலை, வர்த்தகக் காரியங்கள் முதலிய வற்றிற்குப் பயன்படுத்த முடியும் என்பதை சூரியசக்திப் பிரிவு விளக்குகிறது.

சூட்டிங், ஷர்ட்டிங் ரகங்களும் எங்களிடம் பார்க்கத் தகுந்தவை.
எல்லா விதமான ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் ஒரே இடம்.
பி. ரா. நாராயணசாமி அய்யர்
ஜவுளி வியாபாரம்
பெரியகடை வீதி, ★ திருச்சிராப்பள்ளி.
பிராஞ்சு:— 'பான்ஸி ஹால்' சைனுபஜார், திருச்சி.
மில் ஜவுளிகள் எங்களிடம் சில்லரை வியாபாரிகளுக்கு மொத்தமாகக் கிடைக்கும்.



டாக்டர் சுப்பராயன்

டாக்டர் பி. சுப்பராயன் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த சேலம் ஜில்லாவிலுள்ள திருச்செங்கோடில் 1889 செப்டெம்பர் மாதத்தில் பிறந்தார். அவர் சென்னை, ஆக்ஸ்போர்ட், லண்டன் சர்வகலாசாலைகளிலும், டப்ளின் டிரினிட்டி கல்லூரியிலும் கல்வி பயின்றார். சென்னை உயர் நீதி மன்றத்தில் அவர் ஒரு வழக்கறிஞராகத் தொழில் நடத்திவந்தார். 1926-லிருந்து 1930 வரையில் அவர் சென்னை முதல் மந்திரியாகப் பதவி வகித்து வந்தார். அவர் 1937-லிருந்து 1939 வரையில் சென்னையில் சட்ட மந்திரியாகவும், 1947-48-ல் உள் விவகார மந்திரியாகவும் இருந்தார். 1949 டிசம்பரில் டாக்டர் சுப்பராயன் இந்தோ-னேஷியாவுக்கு இந்தியாவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார்; அவர் அப் பதவியை 1951 ஜூன் மாதம் வரையில் வகித்துவந்தார்.

டாக்டர் சுப்பராயன் 1921 லிருந்து 1936 வரையில் 15 வருஷ காலம் சென்னை மேல் சபையில் (லெஜிஸ்லேட்டிவ் கௌன்சில்) ஒரு அங்கத்தினராக இருந்து வந்தார். 1936-லும் மீண்டும் 1947-லும் அவர் சென்னை சட்ட சபையில் ஒரு அங்கத்தினராக ஆனார். இந்திய அரசியல் நிர்ணய சபையிலும் அவர் ஒரு அங்கத்தினராக இருந்தார். 1954-ல் அவர் ராஜ்ய சபா அங்கத்தினராக ஆனார்; 1957-ல் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த திருச்செங்கோடு தொகுதியிலிருந்து லோக் சபா அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

டாக்டர் சுப்பராயனுக்கு இந்தியாவிலுள்ள மத்திய கிரிக்கெட் போர்டுடன் நீண்டகாலத் தொடர்பு; அவர் அனேக வருஷங்கள் அந்த போர்டின் தலைவராக இருந்தார். அவர் தமிழ் நாடு ஹரிஜன் சேவக் சங்கத்தின் தலைவராக இருந்தார். திருப்பூர் அகில இந்திய நூற்பாளர்கள் சங்கத்துடனும் அவர் தொடர்பு கொண்டிருந்தார்.

இப்பொழுது மத்திய சர்க்காரில் போக்கு வரத்து-செய்திப் போக்குவரத்து அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.

நிதி உதவி

தி. தா. அசவத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பாளயம் கிராமத்தில் சமீபத்தில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக வீடு இழந்த ஏழை கிராம மக்களுக்கு வீடு ஒன்றுக்கு (பத்து) 10/- ரூபாய் வீதம் (இருபத்திரண்டு) 22 வீடுகளுக்கு தொகுதி சென்னை சட்ட சபை அங்கத்தினர் திரு. ஜி. அண்ணாமலை முத்துராஜா எம். எல். ஏ. அவர்கள் நிவாரண உதவி அளித்துள்ளார் என்பதை மண்டல காங்கிரஸ் கமிட்டி காரிய தரிசி திரு. ஆர். எஸ். மணி அறிவிக்கிறார்.

மனிதனுடைய ஒவ்வொரு அங்கத்திலும் அவனுடைய சொரூபம் இருப்பதுபோன்று இயற்கையினுடைய ஒவ்வொரு பகுதியிலும் இறைவனுடைய சொரூபம் இருக்கிறது.

— அருள்வாக்கு.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணம். அப்படையினர், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கும் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் குழந்தைகளுக்கும் உறுதுணையாய் இருந்து அவர்களைப் பத்திரமாக ஆங்காங்கே கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். இதனால் அக்காவற் படையினர் தங்கள் கடமையை உணர்ந்து செய்கிறார்கள் என்பதோடு - இவ்வாறு செய்வதின் மூலம் "அவர்கள் மக்களின் பொது நல ஊழியர்கள்-என்ற நல்ல எண்ணம் சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிடுகிறது. எனவே நாளாவட்டத்தில் அங்கு மக்களுக்கும் காவற்படையினருக்கும் இடையே ஒரு நல்லுறவு ஏற்பட்டு வலுப் பெறுகிறது. இதே போல் நமது மாநிலத்திலும் காவற் படையினர் சேவை செய்து, அதன் மூலம் மக்களது பரிபூரணமான அன்பையும் நம்பிக்கையையும் பெற வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

நேர்மையும் திறமையும் மன உறுதியும்தான் காவற் படையினருக்குத் தேவையான குணாதிசயங்களாகும். இனவையிருந்துவிட்டால் புகழும் பெருமையும் தானாகவே வந்துசேரும். ஒரு காவல் நிலையத்தில் பணியாற்றும் சப்-இன்ஸ்பெக்டர் அல்லது கான்ஸ்டேபிள் ஆகியவர்களின் நட்த்தையை வைத்தே ஒரு சாதாரண கிராமவாசி காவற் படையையும் அரசாங்கத்தையும் மதிப்பிடுகின்றார். இதை என்றும் மறக்காமல் நாம் சேவை செய்யவேண்டும். நல்ல காரியங்கள் பொதுமக்களால் என்றென்றும் பாராட்டப்படும். சில ஆண்டுகளுக்கு முன், தஞ்சாவூர் முதலிய மாவட்டங்களில் புயல் வீசிய சமயங்களில் காவற்படையினர் செய்த அருமையான சேவையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பொதுமக்களும் அரசாங்கமும் இத்தகைய காரியங்களை நன்கு உணர்ந்து பாராட்டுகின்றனர்.

காவற் படையில் உள்ள கெஜட் பதிவில்லாத அதிகாரிகளுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். அவர்களது வேலை கடினமானது. அவர்களுடைய பொருளாதாரக் கஷ்டங்களை நன்கு அறிவேன். அவர்களது வாழ்க்கையில் அபிவிருத்தி காண்பதற்கு அரசாங்கம் தன்னால் இயன்ற வரையில் பாடுபடும் என்பதை இச்சமயத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

காவற்படையினரின் குடும்ப வருமானம் உயர வேண்டும் என்பதற்காக எல்லா மாவட்டங்களிலும் க்ஷேம நலத் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் இத்திட்டங்களுக்கு உதவி செய்து வருகிறது. ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல், தமக்கிருக்கும் இதர வேலைகளுடன் போலீஸ் படையின் கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களது க்ஷேம நலனைக் கவனிக்கும் வேலையையும் செய்து வருவார். இத்தகைய திட்டங்கள் இவர்களது குடும்ப வருமானத்தை மேலும் உயர்த்தும் என்று நம்புகிறேன்.

சென்னை காவற்படையானது கலை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளிலும் பெரும் பங்கு வகித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். சமீபத்தில் நடந்த அகில இந்திய கலை விழாவின்போது சென்னை காவற் படையினர் தமது திறமையைக் காட்டியுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களுக்கும் காவற் படையினருக்கும் இடையே உள்ள நல்லுறவை மேலும் பலப்படுத்த வேண்டும். மேலும் இக்காரியங்கள் அவர்களது குடும்பத்தினரின் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்த உதவவேண்டும்.

ஈரோடு டி. மு. கோர்ட்
S. C. 233 | 59

S. R. சாமி — வாதி
சேலம் ஜில்லா, ராசிபுரம் தாலூக்கா, அல்லாபட்டி P. O. நடுபட்டியில் இருக்கும் செல்லப்ப கவுண்டர் மகன் S. கொமாரக் கவுண்டர் — பிரதிவாதி

பிரதிவாதிக்கு சம்மன்.

நீர் 6—12—57 தேதியில் வாதியிடமிருந்து கைமாத்தாக ரூ. 25-0-0-ம், அதே தேதியில் நீர் மஞ்சள் அனுப்புவதாக ரூ. 150 மதிப்புள்ள 200 சாக்குப் பைகள் பெற்றுக் கொண்டதற்கும் வாதி உம் பேரில் தாவா செய்து 15—9—59-ந் தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது.

அன்று நீர் ஆஜராகாவிடில் ஒரு கக்ஷி தீர்ப்புச் செய்யப்படுமென்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

S. C. சுப்பிரமணியன்,
வாதி அட்வகேட்.

7 | 3168 | 146

ஒரு நாட்டிற்குப் பண்பாட்டுடன் கூடிய முன்னேற்றம் மிகவும் அத்தியாவசியமானது. ஒரு நாடு அமைதியான சூழ்நிலையில் இருந்தால்தான் பண்பாடும் முன்னேற்றமும் வளருவது சாத்தியமாகும். இந்த அமைதியையும், முன்னேற்றத்தையும் காண்பதற்கு அரசாங்கமும் பொதுமக்களும் முழுக்க முழுக்க ஒத்துழைக்கவேண்டும். இத்தகைய திட்டத்தில் காவற் படைக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. கடந்த நூறுண்டுக் கால வெற்றிச் சரித்திரமும் இனி வரப்போகும் எதிர்காலமும் காவற் படையின் கைகளில் இருக்கிறது. இப்படை முழு வெற்றியும் அடைய என் மனப் பூர்வமான வாழ்த்துக்கள்.

வணக்கம்.

திருவையாறு
டி. மு. கோ.
S. C. 228 | 1959

சாமிநாத மூப்பனார்—வாதி
கலியன் சாம்பான்—பிரதிவாதி

ஷி நெம்பரில் வாதிக்கு பிரதிவாதியால் 11-7-56-ல் ரூ. 40க்கு எழுதிக்கொடுத்திருக்கிற பிராமிசரி நோட்டுப்படிக்கும் வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கவேண்டிய குத்தகைபாக்கி ரூ. 47-8-0க்கும் கூடிய வட்டி முதல் தொகை ரூ 102--8-0--க்கு தாவா செய்து அது விஷயமாய் 15—9—59ல் ஈரங்கி போடப்பட்டிருப்பதால் ஆஜேஷபணை இருந்தால் ஷி தேதி காலை 10 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

P. சுந்திரமய்யர்
அட்வகேட்.

9 | 3172 | 148

திருவையார் டி. மு. கோர்.
I. A. 276 | 59 in
O. S. 88 | 58

M.C.T. முத்தைய்யா செட்டியார் குடும்ப தர்மம் by Managing Trustee M. C. T. முத்தைய்யா செட்டியார் by Power Agent K. S. வெங்கட்ரமய்யர்—வாதி.

மைனர் நடராஜன்-6-ம் பிரதிவாதி ஷியான் தகப்பனார் வடிவேல் நாட்டார்—கார்டியன்.

ஷி நம்பரில் பைனல் டிக்ரி பிறப்பிக்க வேண்டுமென்று வாதியால் மனுக் கொடுக்கப்பட்டுமனு 25—9—59-ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆட்சேபணை யிருந்தால் அன்று பகல் 10 மணிக்கு கோர்ட்டில் ஆஜராகி தெரிவிக்கவும்.

P. Sundaram
Advocate

10 | 3173 | 149

கைத்தறி பட்டு, நூல் & மில் ஜவுளிகளுக்கு
M. N. நாகேந்திரம் சன்ஸ்
மலிவாசல் :: திருச்சி.

கோர்ட் விளம்பரங்கள்

விழுப்புரம் டி. மு. கோர்.
O. S. 267 | 59

கூடலூர் தாலூக்கா திருப்பாப் புலியூர் தங்கவேலு செட்டியார் குமாரர் மணிக்கண்ணு செட்டியார் — வாதி

கூடலூர் தாலூக்கா திருப்பாப் புலியூர் வள்ளிமோட்டான் வீதியில் இருக்கும் தங்கவேலு செட்டியார் பாரியாள் ராஜமாணிக்கம்மான் 4. கஸ்பா சேர்காழியில் இருக்கும் பிடாரி வடக்கு வீதியில் இருக்கும் தங்கவேலு செட்டியார் குமாரர் தண்டபாணி செட்டியார் 5. விழுப்புரம் தாலூக்கா சிறுவர்தாட்டில் இருக்கும் தங்கவேலுசெட்டியார் குமாரர் திரைக்கண்ணு செட்டியார் 6.

— 4, 5, 6, பிரதி வாதிகள்

ஷெ 4 to 6 பிரதி வாதிகள் என்பவருக்கு இந்த நெம்பர் வாதி தனக்கு சேரவேண்டிய ⅓ பாக சொத்து பிரிவினை செய்து கொடுக்கவும், கமிஷன் நியமித்து பாகப்பிரிவினை செய்து கொடுக்கவும் தாவா செய்தி நாளது 25-9-59வ ஈரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அது விஷயமாய் உமக்குள்ள ஆட்சேபணையை ஷெ தேதியில் பகல் 10 மணிக்கு நேரிலாவது வக்கீல் மூலமாயாவது ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும். தவறினால் எக்ஸ்பார்டி செய்து மேல் நடத்தப்படும் என்பதை அறியவும்.

பி. எஸ். வெங்கடேசய்யர்,
அட்வகேட்.

5 | 3166 | 144

அரியலூர் டி. மு. கோர்.
S. C. 644 | 59

வெங்கடாஜலக்கோனூர் — வாதி

ஆறுமுகம் — பிரதிவாதி

வாதிக்கு, பிரதிவாதி, 2-5-53 தேதியில் எழுதிக்கொடுத்திருக்கும் புரோநோட்டுப்படி ரூபாய் 195—0—0க்கு, தாவா செய்தி, தாவா ஈரங்கி 21-9-59வல் போடப்பட்டிருக்கிறது. அன்று ஆஜராகத்தவறினால் எக்ஸ்பார்டி தீர்ப்பு ஏற்படும்.

ஆர். ராமச்சந்திரய்யர்,
வாதி அட்வகேட்.

6 | 3167 | 145

விழுப்புரம் டி. மு. கோர்.
O. S. 240 | 59

திண்டிவனம் தாலூக்கா வட கோடிப்பாக்கம் ரொமத்திலிருக்கும் ராமசாமி செட்டியார் குமாரர் தாதாசெட்டியார். — வாதி

சென்னை பழயமாம்பலம் ரகுநாத அய்யங்கார் தெரு 5 A, வீட்டிலிருக்கும் சுப்பரமணிய அய்யர் குமாரர் M. S. நாகேஸ்வரய்யர் 1. விழுப்புரம் தாலூக்கா கஸ்பா விழுப்புரத்திலிருக்கும் கோவிந்த சாமிநாயடு குமாரர் G. வேணு கோபால் நாயடு 2.

— பிரதி வாதிகள்

பிரதிவாதிகள் வாதி பேருக்கு 19—6—1956வல் ரூ. 650-0-0 அறுநூற்றி ஐம்பதுக்கும் எழுதிக்கொடுத்திருக்கும் பிராமிசரி நோட்டின் பேரில் ஷெ கோர்ட்டில் தாவா செய்து அந்த தாவா 22—9—59யில் வைக்கப்பட்டிருக்கிறது. முதல் பிரதிவாதி மேற்படி தேதியில் ஷெ கோர்ட்டில் காலை 10 மணிக்கு ஆஜராய் தன் ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளலாம். தவறினால் எக்ஸ்பார்டியாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை பிரதிவாதிகள் அறியவும்.

பி. எஸ். வெங்கடேசய்யர்,
அட்வகேட்.

4 | 3165 | 143

திருவையாறு டி. மு. கோர்ட்
S. C. 281 | 59

அய்யம்பேட்டை மேலபேட்டைத் தெரு முனியபிள்ளை — வாதி

பாப்பானுசோழம் குடிக்காடு குழந்தைசாமி மாதாரார் — பிரதிவாதி

புரோநோட்டுப்படி ரூ. 232-75 கிடைக்கவேணுமென்று வாதியால் பிரதிவாதி பேரில் தாவா தொடரப்பட்டு 21-9-59 பகல் 10 மணிக்கு விசாரணை ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி ஆஜராகத் தவறினால் தாவா ஒரு தலை பக்ஷமாக முடிவு செய்யப்படும்.

G. சுந்தரம்,
வாதி வக்கீல்.

2 | 3163 | 141

மாயூரம் டி. மு. கோர்.
O. S. 202 | 59

அன்பனுதபுரம் வகையரா தர்ம பாகம் by its மேனேஜர் M. A. ஜெகனுதபிள்ளை — வாதி

மாயூரம் டவுன் திருவிழந்தூர் நடேசய்யர் குமாரர் சுந்தரேசய்யர் — பிரதிவாதி

இதன் பிரதி வாதி பேரில், வீடு வகையரா சுவாதீனத்திற்கு தாவா கொடுத்த பிரதி வாதிக்கு சம்மன் போனதில் சர்வாகாதினால், சம்மனை ஓட்டிச் சர்வு செய்ய உத்திரவாகி 17—9—59 தேதி கெடி போடப்பட்டிருக்கிறது. ஆகேஷபணையை ஷெ தேதி பகல் 10 மணிக்கு ஷெ கோர்ட்டில் தெரிவித்து கொள்ளாவிடில், ஒரு தலைபக்ஷமாக முடிவு செய்யப்படும் என்பதை அறிவிக்கப்படுகிறது.

A. S. வெங்கடராம அய்யா,
& S. ஆறுமுகம்,
அட்வகேட்கள்.

1 | 3162 | 140

புதுக்கோட்டை டி. மு. கோர்ட்
S. C. 906 | 59

குமாரசாமி பிள்ளை — வாதி

சூரக்காபட்டியிலிருக்கும் சின்னத் தம்பி உடையார் மகன் கோவிந்த உடையார் — பிரதிவாதி

ஷெயார் பிரதிவாதிக்கு தெரிவிக்கிறதாவது புரோநோட்டு பாபத்தில் ரூ. 266-59 N. P. கிடைக்க வாதி தாவா செய்து விசாரணைக்காக 25—9—1959ல் டயம்யேற்பட்டிருக்கிறது. அறியவும்.

S. பாலசுப்ரமணியன்,
வாதி அட்வகேட்.

3 | 3164 | 142





துறையூர் டி. மு. கோர்.
O. S. 145 | 51

பொன்னம்மாள் — வாதி

M. R. சொக்கலிங்கம் பிள்ளை — பிரதிவாதி

ஷெ நம்பரில் E.A. 347 | 59ல் மதிப்பை குறைக்க நோட்டீஸை ஓட்டி சர்வு செய்ய 28-9-59-ல் கெடி ஏற்பட்டிருப்பதால் ஆகேஷபணையை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம்.

V. S. நரசிம்மய்யர்,
அட்வகேட்.

8 | 3170 | 147

தங்க பஸ்பம் புகையிலை

Edited Printed and Published by Thiruloka Sitharam for the Shivaji Private Limited., at S. N. Printers Tiruchy-2.

SHIVAJI
6 NP
TAMIL WEEKLY

சிவாஜி

ஞாயிறு வாரப்பதிப்பு

கிராம சமுதாய ஈவ. கலை, இலக்கியப் பக்கிரிகை

சோலையாகும் பாலை



ராஜஸ்தானில் வரட்சி மிகுந்த பிரதேசத்துக்கிடையே, ஹனுமான்காருக்கருகே ஆரம்பமாகும் ராஜஸ்தான் கால்வாய்த் திட்டம், உலகத்தில் பாசனத் திட்டங்களுக்குள்ளே மிகப் பெரியதும், மிகவும் நீளமானதுமாக அமைந்திருக்கும். இக் கால்வாய்த் திட்டம், பஞ்சாபில் பக்ரா அணை மூலம் உருவாகியுள்ள கோபிசந்த்சாகர் நீர்த் தேக்கத்திலிருந்து ஜல சப்ளையைப் பெறும்.

இது இந்தியாவில் பாலைவனப்பிரதேசத்தை கோதுமைக் களஞ்சியப்பிரதேசமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கையாகும். இந்த பாசனத் திட்டம் பூரண உருப்பெற்ற பின்னர், அதன் மூலம் அதிகப்படியாக இருபது லட்சம் டன் விளைபொருள்கள் கோதுமை, பருத்தி, கடலை ஆகியவை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ராஜஸ்தான் கால்வாய்த் திட்ட அமைப்பில், நீர்த்தேக்கங்கள், ரஸ்தாக்கள், ரயில்வேக்களின் விஸ்தரிப்பு ஆகிய வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பிரதான கால்வாயின் அமைப்பில், படகுப் போக்குவரத்து வசதிக்கான அம்சங்களையும் சேர்த்துக் கொள்வதற்குள்ள தோதுக்கள் பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது.

இப்பாலைவனப் பிராந்தியம் தற்போதுள்ள நிலைமையைப் படம் சித்திரிக்கிறது.

நமது

முதலமைச்சர்

மற்ற ராஜ்யங்களில் காங்கிரஸ்சில் தகராறுகள், பூசல்கள் இருப்பதுபோல் தமிழ்நாட்டில் இல்லாமல் காங்கிரஸ் ஒன்றுபட்டு இருப்பதற்குக் காரணம் திரு காமராஜ்தான் என்று மத்திய மந்திரி டாக்டர் சுப்பராயன் கூறினார்.

சென்னையிலுள்ள மகாஜன சபை ஹாலில் டாக்டர் சுப்பராயன் திரு காமராஜின் படத்தைத் திறந்து வைத்துப்பேசியதாவது.

சென்ற முப்பது வருஷங்களாக திரு. காமராஜை எனக்குத் தெரியும். தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஒன்றுபட்டிருப்பதற்கு திரு காமராஜ்தான் காரணமென்றால் அதை யாரும் மறுக்க முடியாது. மற்ற ராஜ்யங்களில் பூசல்கள் இருப்பது போல் தமிழ்நாட்டில் இல்லை. பொறுப்புடனும் தீர்க்க திருஷ்டியுடனும் திரு காமராஜ் நடந்து கொள்ளுகிறார். அவர் பொறுமையை இழக்கமாட்டார். மனிதர்களின் எண்ணமறிந்து நடப்பவர் அவர். காங்கிரஸ் ஊழியர்கள் உள்பட எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் அவர் நன்மை செய்பவர்.

'ஆகட்டும் பார்க்கலாம்' என்று அவர் சொல்வதெல்லாம் எதையும் அவசரப்பட்டு வாக்குக் கொடுத்து விட்டு பிறகு அதைச்செய்ய சந்தர்ப்பமில்லாமல் போய் விடக்கூடாதென்பதற்காகத்தான். ஆனால் அவர் அப்படிச் சொன்னாலும் கஷ்டப்பட்டாகிலும் அந்தக்காரியத்தை முடிக்க யத்தனிப்பார். செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுக்காமல் காரியத்தைச் செய்வது எவ்வளவு சிறந்தது? தேசத் தொண்டு செய்து மக்களுக்கு நன்மை செய்யும் திரு காமராஜ் நீடூழி வாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

31—1—1960

புதிய உலகம்

பழமையும் புதுமையும்

— கே. கே. துக்கால்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் வான் முட்டும் கட்டடங்கள் இங்கு இல்லை. சட்டசபை மாளிகையை விட உயரமான கட்டடம் எதுவும் இருக்கக் கூடாது என்பது அரசாங்கக் கட்டளை. இவ்விதிக்குப் புறம்பாக உள்ளது வாஷிங்டன் நினைவுச் சின்னம் ஒன்றுதான். இதன் உயரம் 555 அடி. டில்லியிலுள்ள குதுப்மினார் உயரத்தை விட இது இரண்டு மடங்குக்கும் அதிகமாகும்.

இந்தக் கோபுரத்தின் உச்சியிலிருந்து நகரின் முழுவதையும் கண்டு களிக்கலாம். ஜனநெரிசல் மிகுந்த கடைவீதிகளையும் தண்ணீரை வாரி வீசும் அதன் பூ நீரூற்றுக்களையும், லிங்கன் நினைவு மண்டபம், ஜெபர்ஸன் நினைவு மண்டபம் ஆகியவற்றையும் காணலாம். லிங்கன் சிலையைக் கண்டேன், நான் பள்ளிக்கூடப் பாடப் புத்தகத்தில் அவரைப் பற்றிப் படித்தபோது அவர் தோற்றம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டேனே அப்படியே அவர் தோற்றம் இங்கு அமைதியாக வளங்கக் கண்டேன். சிலையை நோக்கும் போது, "ஒரு வரிடத்திலும் பகைமை வேண்டாம்; அனைவரிடத்திலும் அன்பு கொள்க" என்று அவர் வாய் திறந்து சொல்லப் போவது போல் தோன்றுகிறது.

ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்ஸன், பெஞ்சமின் பிராங்ளின் இவர்களது காலடி பட்டுப் புனிதமான தெருக்களிலும் சந்து பொந்துகளிலும் நடந்து வர விருப்பமா? என்னோடு வாருங்கள். பிலடெல்பியா நகரிலுள்ள "இண்டிப் பெண்டன்ஸ் ஹால்" என்னும் விடுதலைமண்டபத்துக்கு இங்கு வராத அமெரிக்க ஜனாதிபதிகளே இல்லை எனலாம்.

இந்த மண்டபத்தில் தான் பெயர் பெற்ற "விடுதலை மணி" தொங்குகிறது. அதன் எடை இரண்டாயிரம் ராத்தலுக்குமேல். "நாடெங்கிலும் அதில் வாழும் மக்களுக்கெல்லாம் விடுதலை, விடுதலை என முழங்கு" என்னும் வாசகம் பொறித்த மணி அது. அதுவே அதன் பெயருக்கும் காரணம்.

இந்த மண்டபத்தில் தான் 1776ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் தேதி அமெரிக்காவின் விடுதலை பிரகடனம் நிறைவேறியது. 'படைப்பால் மக்கள் அனைவரும் ஒன்றே; அவர்களைப் படைத்தவர் அவர்கள் இயற்கையோடு ஒன்றிய உரிமைகள் சிலவற்றை அவர்களுக்கு வழங்கியுள்ளார்.

அவை உயிர் வாழ்தல், விடுதலைப் பேறு, இன்ப நாட்டம் என்பதும் பிறவுமாம்" என்று பறை சாற்றிய அப் பிரகடனம் மனிதனது சுதந்திரம் பற்றிய தத்துவத்தை விளக்கிற்று. வரலாற்றுச் சிறப்பமைந்த இந்த மொழிகளின் எதிரொலியை இந்திய அரசியல் சட்டத்திலும் காணலாம். உயிர் வாழும் உரிமை, விடுதலை உரிமை, இவற்றை முதன்மையாக வைத்துப் போற்றுகிறது மேற்படிச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பற்றிய பகுதி.

அமெரிக்க விடுதலைப் பிரகடனம் நிறைவேறி 13 ஆண்டுகள் கழித்து, பிரான்ஸ் நாட்டில் பாஸ்டில் சிறையைச் சூழ்ந்து நின்ற பலாத்காரப் புரட்சிக் கூட்டத்தின் வாயிலாக "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என எழுந்தது அதன் மற்றோர் எதிரொலி. பாஸ்டில் சிறைக்கும் விடுதலை மண்டபத்துக்கும் இடையே சில ஆயிரக் கணக்கான மைல் வேறுபாடு. ஆயினும் என்ன? கருத்துக்களுக்குத் தூரம் ஒரு தடையா? நாட்டு வேறுபாடு தான் உண்டா? ஜெட் விமானத்திலும் விரைந்து செல்பவை அவை. ஜார்ஜ் வாஷிங்டன் படையிலே சேர்ந்து பிரிட்டிஷ் படையை எதிர்த்துச் சண்டை செய்த பிரெஞ்சுப் போர் வீரர்கள் அங்கு அமெரிக்க நாட்டின் புதிய கொள்கையையும் கற்றுக் கொண்டார்கள். "... யாதொரு அரசாங்கமும் அழிக்கப் புறப்படுமானால், மக்கள் அதனை மாற்றியமைக்கலாம் அல்லது அழித்து விடலாம்; இது அவர்கள் உரிமை" என்பதே அவர்கள் கற்றுச் சென்ற கொள்கை. அதன்படி யதேச்சாதிகார மன்னர் ஒருவரது ஆட்சியை அமெரிக்கர்கள் ஒழித்தது போல, பிரெஞ்சு வீரர்களும் தங்கள் நாட்டில் செய்து விட்டார்கள்.

ஜெபர்ஸனும் திலகரும்

விடுதலை மண்டபத்தைச் சுற்றிப் பார்க்கையில், இங்கு ஜெபர்ஸன் தமது கொள்கைக்காக எவ்வாறு பொறுமையாக வாதாடியிருப்பார் என்று எண்ணிப் பார்த்தேன். பிரிட்டனிடமிருந்து முற்றும் விலகிவிட வேண்டும் என்பது அவரது கொள்கை. ஆனால் அங்கு குழுமியிருந்த பலர் அவ்வாறு ஒரேயடியாக விலகிக் கொள்ள விரும்பவில்லை. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" என முழங்கிய பால கங்காதர திலகரும் சரி, ஜெபர்ஸனும் சரி, கோகலே முதலிய மிதவாதிகளை எதிர்த்துத் திலகர் பூரண சுயராஜ்யம் வேண்டும் என்றார். போர் புரிந்தே எதிரியைத் தோற்கடிக்க வேண்டும் என்றால் அதுவும் செய்தே தீர வேண்டும் என்று திலகர் கூறியதை மேற்கோள் காட்டிப் பேசுவது வழக்கம். "சுதந்திரம் என்னும் பரத்துக்கு இடைக் கிடையே தேசாபிமானிகள், கொடுங்கோலர்கள் ஆகியோருடைய இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கப்படுத்த வேண்டும்" என்ற ஜெபர்ஸன் கொள்கை திலகருடைய கொள்கையோடு ஒப்பு நோக்கற்பாலது.

பிலடெல்பியா நகரில் பிறந்தவர்கள் தங்கள் நகரின் பழம் பெருமையை நினைந்து பாராட்டுபவர்கள். அவ்வூரில் எல்பிரெத் சந்து என்று ஒரு பழைய தெரு இருக்கிறது. ஊருக்குப் புதிதாய் வந்தவர்களுக்கு அவ்வூர்க்காரர்கள் கட்டும் பழைய இடங்களில் இதுவும் ஒன்று. ஜார்ஜ் வாஷிங்டன், பிரெஞ்சு மன்னர் சபையில் அமெரிக்காவின் முதல் தூதராக இருந்த பெஞ்சமின் பிராங்ளின் இவர்கள் வழிபட்ட கோயில் ஒன்றும் அங்கே இருக்கிறது. முதல் அமெரிக்கக் கொடியைத் தைத்துக் கொடுத்த பெட்ஸிராஸ் என்ற அம்மையார் வாழ்ந்த இல்லத்தையும் அவர்கள் காட்டுவார்கள்.

தார், சிமெண்ட் போடாமல் கல் தாம் பதித்த பிலடெல்பியாவின் தெருக்கள் இன்றைய அமெரிக்க நிலையில் பழம் பொருட் சின்னங்களாக இருக்கலாம். இருந்தாலும் 1492-ல் தானே கொலம்பஸ் புது உலகம் கண்டார்; யாத்திரிகர்களை ஏற்றி வந்த கப்பல் 'மே பிளவர்' 1620-ல் தானே அமெரிக்கக் கரை வந்து சேர்ந்தது. அக் காலம் டில்லியில் சுல்தான்கள் ஆட்சி புரிந்த காலம். நாளை ஹரப்பா மொஹஞ்சதாரோ ஆகிய இடங்களில் பண்டை நாகரீகச் சின்னங்களிடையே உலவினவன். சாஞ்சி ஸ்தூபத்தின் அடியிலே அமர்ந்தவன்; மாபாரதப் போர் நடந்த

(10-ம் பக்கம் பார்க்க)



அமிர்தாஞ்சனம்

சகல வலி நோவுகளுக்கும்
கைகண்ட மருந்து
எங்கும் கிடைக்கும்.

அமிர்தாஞ்சனம்
லிமிடெட்
சென்னை, பம்பாய்.

உண்மையை உணர்ந்து செய்க

கைத்தறி நிலைமை பற்றி எம். பி. நாச்சிமுத்து பி. ஏ., பி. எல்.

விவசாயத்துக்கு அடுத்த படியாகக் கைத்தறியே நமது நாட்டின் உயிர் நாடி. 80 லட்சம் நெசவாளர்களும் அவர்களைச்சார்ந்து வாழும் 150 லட்சம் மக்களுக்கும் பிழைப்புத்தருவது கைத்தறி. நாட்டின் துணித் தேவையில் கால்வாசியை உற்பத்தி செய்து வருகிறது கைத்தறி. நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கம் கைத்தறி வளர்ச்சிக்கு ஒதுக்கியது.

இரண்டாவது திட்டம் தீட்டும்போது நமது மக்களுக்குத் தேவையான துணி தலா 18½ கெஜம் என்று அளவிட்டு ஜனப் பெருக்கத்தையும் மனதில் கொண்டு 40 கோடி மக்களுக்கு 740 கோடி கெஜம் என்று கணக்குப் போட்டார்கள். இது தவிர ஏற்றுமதிக்கு 100 கோடி கெஜம் தேவைப்படும் என்றும் கணிக்கப்பட்டது. திட்டம் போட்ட காலத்தில் மில்களின் உற்பத்தி 500 கோடி கெஜமாகவும் கைத்தறி உற்பத்தி 150 கோடி கெஜமாகவும் 20 கோடி கெஜம் பவர்லூம் உற்பத்தியாகவும் இருந்தது. எனவே பாக்கித் தேவையாகிய 170 கோடி கெஜம் துணியைப் பின்வருமாறு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது.

மில் நூலில் கைத்தறி உற்பத்தி 70 கோடி, அம்பர் சர்க்கா நூலில் கைத்தறி உற்பத்தி 30 கோடி, மில்களில் நேரிடையாக 35 கோடி, கூட்டுறவு முறையில் பவர்லூம் உற்பத்தி 20 கோடி என்பது உத்தேசத் திட்டம். பாக்கி 15 கோடியை மேற்கண்ட விகிதாசாரத்தை முடித்துவிட்டவர்கள் உற்பத்தி செய்ய அனுமதிப்பது என்று கொள்கை.

ஆனால் மில் காரர்கள் இந்தக் கணக்கு விபரத்தை ஒப்புக் கொள்ளாமல் துணித் தேவை தலா 18½ கெஜம் என்பதை 22 கெஜமாகவும் மொத்தத்தேவை 740 கோடி என்பதை 760 கோடி கெஜமாகவும் உயர்த்துமாறு கிளர்ச்சி செய்தார்கள். இல்லாவிட்டால் துணிப் பஞ்சம் ஏற்படுமென்று பயமுறுத்தினர்கள். இதைக் கேட்டு சில அரசியல் வாதிகளும் பயந்துபோனார்கள்.

ஆனால் இந்த அச்சத்திற்குக் காரணமேயில்லை யென்பதும், அப்படித் தேவையிருந்தாலும் கைத்தறி உற்பத்தியைக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடியும் என்றும் கைத்தறியாளர் சார்பில் எடுத்து விளக்கப்பட்டது. மில்கள் விரும்புவது போல் தலைக்கு 22 கெஜம் என்பது தேவையற்றதென்பதையும் மில்களின் உற்பத்தியை 400 கோடி கெஜமாக்கக் கட்டுப்படுத்தினாலே போதும் என்றும் விளக்கப்பட்டது. தவிர ஏற்றுமதிக்கு எவ்வளவு தேவை என்பதை வரையறுக்க வேண்டியதில்லை யென்றும், ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும் சரக்கை உள்நாட்டில் விநியோகிக்காமல் தடுத்து விடுவதே போதுமென்று ஆலோசனை கூறப்பட்டது.

இரண்டாவது திட்டப்படி படிப்படியாக வளர்ந்து 1961 வாக்கில் மில்களின் உற்பத்தி எல்லை 535 கோடி களுமாகும். ஆனால் 1957 முடிவிலேயே மில்கள் தங்கள் உற்பத்தியை 530 கோடியே 60 லட்சம் கெஜமாக்கி விட்டார்கள். தவிர ஏற்றுமதிசெய்திருக்கவேண்டிய 100 கோடிக்குப்பதிலாக 82.0 கோடியே 80 லட்சம் கெஜம் மட்டும்தான் ஏற்றுமதி செய்தார்கள். இதில் மிஞ்சிய 17 கோடியே 20 லட்சம் கெஜம் துணியும் தங்கிப் போய்விட்டது. இதனால் உள்நாட்டில் கைத்தறித் துணிக்கு நல்ல சந்தை இல்லாமல் ஜவுளி வர்த்தகம் மந்தநிலை அடைந்து விட்டது.

மந்தநிலையின் காரணத்தை இதன்பின்னர் ஆராய்ந்த ஜோஷி கமிட்டியார் கண்டு பிடித்த உண்மை என்ன வென்றால் துணித்தேவை தலைக்கு 18½ கெஜம் என்ற கணக்கு மிக அதிகமென்பதும் 16¾ கெஜம் போதுமென்பதும் தான். எப்படியும் 1961-ம் ஆண்டில் தலைக்கு 17½ கெஜத்துக்கு மேல் தேவைப்படாது என்பது இந்தக் கமிட்டி ஆராய்ந்து கூறிய கருத்து. அகில இந்திய கைத்தறி போர்டு நியமித்த கமிட்டியாரும் இதே சமயத்தில் நன்கு ஆராய்ந்து பார்த்து, ஏற்றுமதி உட்பட மில்களின் உற்பத்தி சக்தி 500 கோடிக்கு வரையறுக்கப் படுவது தான் ஜவுளி வர்த்தக மந்த நிலைக்கு மாற்று என்று கூறினர்கள்.

1958-ல் இந்தச் சூழ்நிலையில் கைத்தறி உற்பத்தி 180 கோடி கெஜம் தான் முடிந்தது. சர்க்காருடைய பாதுகாப்புக்களின் காரணமாக இந்த சக்தி படிப்படியாக உயர்ந்து வந்தபடியால்தான் இந்த அளவாவது சாத்தியமாயிற்று. 1955-ல். 148 கோடியாக இருந்த கைத்தறி உற்பத்தி பின்னர் 150.9 கோடி, 164.3 கோடியாகி 1958-ல் 179.8 கோடி கெஜமாக வளர்ந்தது. இந்த வளர்ச்சியைக்கூட சில பொருளாதார நிபுணர்களும் அரசியல் வாதிகளும் மிக குறை வென்றுகூறி, உற்பத்திப் பெருக்கத்திற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினர்கள்.

1958-ல் நமது ஏற்றுமதியில் 13.8 சதவிகிதம் குறைந்துபோயிற்று. காரணம் சைனுவுடன் நாம் ஏற்றுமதியில் போட்டிப்போட முடியவில்லை. சைனு அரசாங்கம் ஏற்றுமதிக்கு மானியம் கொடுத்து அங்கே ஏற்றுமதியாளரின் நஷ்டத்திற்கு ஈடுசெய்து உதவியதுதான். நமது நாட்டின் ஏற்றுமதியோ 1957ல் 82.8 கோடியாக இருந்தது 1958ல் 62.5 கோடி கெஜமாகக் குறைந்துவிட்டது. நமது கைத்தறித் துணியை வாங்கிக் கொண்டிருந்த வாடிக்கைக்கார நாடுகளில் அங்கங்கே உள்நாட்டு உற்பத்திக்கு அந்தந்த சர்க்கார் பாதுகாப்புக்கொடுத்து உதவியதால் நமது துணியை வாங்கிவந்தவர்களுடையகிராக்கியும் நமக்குக் குறைந்துபோய் 1953ல் 3.3 கோடி கெஜமாக இருந்த கைத்தறி ஜவுளி ஏற்றுமதியானது 1958ல் 5.2 கோடி கெஜமாகிவிட்டது.

வெளிநாடுகளுக்கு வர்த்தகத் தூது கோஷ்டிகள் அனுப்பி அங்கெல்லாம் நமது கைத்தறித்துணிக்குச் சந்தை கண்டு பிடிப்பதுடன் பழைய வாடிக்கைக்கார நாடுகளுடன் நமது கைத்தறித் துணி வர்த்தகம் பெருகுவதற்குள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், பிறநாடுகளுடன் செய்து கொள்ளும் வர்த்தக ஒப்பந்தங்களில் கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு இடம் காண வேண்டுமென்றும் இதன் மூலம் கைத்தறி ஜவுளி ஏற்றுமதிக்கு ஊக்கம் தரவேண்டுமென்றும், கைத்தறி முன்னேற்றத்திற்கென்றே ஒரு அபிவிருத்திக் கௌன்சில் நிறுவவேண்டுமென்றும் அரசாங்கத்துடன் வாதாடினர்கள் கைத்தறித் துறையினர்

அமெரிக்காவிலும் மேற்கு ஜர்மனியிலும் நமது கைத்தறித் துணிக்கு நல்ல கிராக்

5-ம் பக்கம் பார்க்க

பூமியின் கீழே...

— டி. மேத்தா

பூமிக்கு அடியில் உள்ள நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்காகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. பூனியன் உணவு-விவசாயமந்திராலயத்தைச்சேர்ந்த பரிசோதனைத்திட்டக் குழாய்க் கிணறுகள் ஸ்தாபனம் இந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இதுவரையில் 282 குழாய்க் கிணறுகளைத் தோண்டி முடித்திருக்கிறது.

அமெரிக்க ஸ்தாபனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத்திட்டம் ஆசியாவிலேயே மிகப்பெரியதாகும். இதுவரை கிடைத்துள்ள பலன்கள் ஊக்கமளிக்கக் கூடியவையாக இருந்தபோதிலும், அவை முற்றிலும் வெற்றியளித்து விட்டதாகக் கூறுவதற்கில்லை.

முன்னேட்டத் திட்டத்தில் வெற்றி கிடைத்துள்ளதைத் தொடர்ந்து இந்திய சர்க்கார் இரண்டாவது திட்டமொன்றை இப்போது ஆரம்பித்திருக்கின்றனர்; இந்த இரண்டாவது திட்டவேலை எந்த வெளிநாட்டினரின் உதவியுமின்றி, இந்திய பூகர்ப்ப சர்வே ஸ்தாபனத்தின் ஆலோசனையுடனும், உதவியுடனும் இந்திய என்ஜினீயர்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது.

ஒரு தேசத்துக்கு சுபிட்சத்தைக் கொண்டு வருவது தண்ணீரேயாகும்; ஒரு நாட்டின் பொருளாதாரம் விரிவடைந்து அபிவிருத்தி அடைவதற்கு தண்ணீரே கேந்திரமாக விளங்குகிறது. இந்தியாவில் விவசாயத்தை அபிவிருத்திக்கும், தொழில் வளர்ச்சிக்கும், திருப்திய பொது சுகாதார நிலைமைகளுக்கும் மேலும் மேலும் அதிக அளவில் தண்ணீர் தேவைப்பட்டு வருவதால், கூடிய சீக்கிரத்தில் நாட்டில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுமோ என்று கூடத் தோன்றுகிறது. தரை மட்டத் தண்ணீர் ஆதாரங்கள் மிகப்பெரிய அளவில் உள்ளன என்பது உண்மையேயாயினும் — இவ்வகையில் மொத்தம் 135.6 கோடி எக்கர அடி கிடைப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது — பருவகாலத் தேவைகளைச் சமாளிப்பதற்கேற்ற முறையில் தண்ணீரைச் சேமித்துவைப்பது எப்போதும் சாத்தியப்படுவதில்லை. ஆகையால் அத்தண்ணீரில் பெரும் பகுதி வீணாக ஓடி கடலில் சேர்ந்துவிடுகிறது. ராஜஸ்தான் போன்ற பிராந்தியங்களில் தரை மட்டத்தில் போதிய அளவு தண்ணீர் கிடைக்காததால், அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதில் இது மிகக் கடினமான தொரு பிரச்னையாக இருந்து வருகிறது; இது ஒருபுறமிருக்க வேறு சில பிரதேசங்களில், ஆண்டுதோறும் 100 அங்குலத்துக்கும் அதிகமாக மழை பெய்த போதிலும், வருஷத்தில் எட்டு மாத காலத்துக்கு அங்கு தண்ணீரே கிடைப்பதில்லை; கோடை காலத்தில் வீட்டு உபயோகத்துக்குகூட தண்ணீர் போதிய அளவு கிடைப்பதில்லை.

அனேக அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிற இந்தச் சந்தர்ப்பத்தில், தரைக்கு அடியிலுள்ள நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்த வேண்டியது அதிக முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும்.

முன்னேட்டத் திட்டத்தின் கீழ் தெரிக்தெடுக்கப்பட்ட 15 ஸ்தலங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அப்பரிசோதனை வேலைகள், இந்திய பூகர்ப்ப சர்வே ஸ்தாபன நிபுணர்களின் ஆலோசனைகளின்படி, நதிப் பள்ளத்தாக்குகளிலும், கடற்கரையோரப் பிராந்தியங்களிலும், டெல்டாப் பகுதிகளிலும் அவ்வளவு கெட்டிப்படாத பாறைகள் உள்ள ஸ்தலங்களிலும் நடத்தப்பட்டன. கெட்டியான பாறைகள் நிறைந்த பகுதிகள் ஒதுக்கப்பட்டு விட்டன; ஏனென்றால் நமது முதல்முயற்சியின் மூலமே தரிதமாகப்பலன் கிடைப்பதற்கு அதில் தோதி இருக்கிறது.

ராஜஸ்தான் பாலைவனத்தில் தோண்டப்பட்ட ஒரு குழாய்க் கிணறில் ஏற்பட்ட நீர்ப்பெருக்கானது பிரமிப்பூட்டக்கூடியதாக இருந்தது; மணிக்கு 51,000 காலன் வீதம் அக்கிணற்றில் நீர் பெருகி வந்தது. இக்கிணறு ஜெய்ஸால்மர் ஜில்லாவைச் சேர்ந்த சண்டன் என்னுமிடத்தில் அமைந்திருக்கிறது. அதன் அண்டைப் பிரதேசங்களில் கூடிய விரைவில் ஏற்படுத்தப் படவிருக்கும் குழாய்க் கிணறுகளுக்கு அந்தக் கிணறு ஒரு முன்னோடியாக விளங்குகிறது. அந்தக் கிணற்றுக்கு அடியிலே பெரிய ஏரியோ அல்லது அடித்தரை ஆருவியோ இருக்கக்கூடுமென்று ஊகிக்கப்படுகிறது. சுமார் 80,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள அப்பாலைவனப் பகுதியின் இதர ஒன்பது இடங்களில் மேற்கொள்ளப்பட்டு முயற்சிகள் எமாற்றத்தை அளித்திருக்கின்றன; சில இடங்களில் 1000 அடி ஆழம் வரையில் தோண்டப்பட்டுங்கூட தண்ணீரைக் காண முடியவில்லை.

சென்னையிலும் உத்தரப் பிரதேசத்திலும் அடித்தரை நீர் வரானமாகக் கிடைக்கக் கூடிய பகுதிகள் இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜான்பூர், பைஸாபாத், சுல்தான்பூர் ஆகிய இடங்களில் மிகவும் பொருத்தமாகவும் ஏராளமாகவும் ஜலப் பிடிப்பு உள்ள ஆதாரங்கள் தரை மட்டத்திற்குக் கீழே 500 அடி முதல் 600 அடி ஆழத்தில் அமைந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதிகள் அடித்தரை நீர் ஆதார அபிவிருத்திக்கு லாயக்கற்றவை என்று உத்தரப் பிரதேச சர்க்காரின் பரசன இலாகா கைவிட்டு விட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை; ஏற்கெனவே இருது வருகிற கிணறுகளே 300 அடிக்கு மேல் அவர்களால் தோண்ட முடியவில்லை. எனவே இந்த விதமான சூழ்நிலையில், இப்புதிய நீர் ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதானது, அங்குள்ள விவசாயிகளுக்கு ஒரு கம்பிக்கையை அளித்திருக்கிறது.

பம்பாய் ராஜ்யத்தில் பூர்ணா, தப்தி ஆகிய நதிப் பள்ளத்தாக்குகளிலும் சௌராஷ்டிரா, கட்ச் ஆகியவிடங்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டன; அவை

(9-ம் பக்கம் பார்க்க)

m/s. G. RADHAKRISHNA CHETTIAR SONS,
JEWELLERS, TIRUCHY-8.
பவுன் நகைகள்
வெள்ளிப்பாத்திரங்களுக்கு
m/s. G. ராதாகிருஷ்ண செட்டியார் சன்ஸ்
ஜுவல்லர்ஸ், பெரியக்கடை வீதி, திருச்சி-8
PHONE: 37 TEL: RELIABLE
மானேஜிங் பார்ட்னர்: R. ஜெயதேவன்.

தமிழ், ஆங்கில
காந்தீய — சர்வோதய
பூமிதான — கிராமதான
இலக்கியத்திற்கும்
பத்திரிகைக்கும்
சர்வோதய பிரசுராலயம்
தஞ்சாவூர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கியிருக்கிறது. தரமுள்ள நல்ல துணி ரகங்களை உற்பத்தி செய்து காலாகாலத்தில் அவர்களுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் நமக்குள்ள நல்ல சந்தையை பயன் படுத்தக் கைத்தறி நெசவாளர்கள் முன்வர வேண்டும். இந்தப் புதிய வாடிக்கைக்காரர்களுடைய வியாபாரத்தை நாம் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

இப்பொழுது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகின்ற நேரம் இது. இந்த சமயத்தில் மில்காரர்கள் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்திருக்கிற திட்டத்தைப் பார்த்தால், இரண்டாவது திட்டகாலத்தில் இவர்கள் போட்ட தப்புக்கணக்கைப் போலவே இப்பொழுதும் தப்புக் கணக்குப் போட்டு ஜவுளி உற்பத்தித் தொழிலுக்கு கேடு சூழ்கிறார்களென்ற கவலை நமக்கு உண்டாகிறது. இவர்கள் கொடுக்கின்ற திட்டம் இதுதான்.

(1) 1966-முடிவில் இந்தியாவில் துணித் தேவை தலைக்கு 20·3 கெஜம்.

(2) 1966-ல் ஜனத் தொகை 43·4 கோடியாக இருக்கலாம்.

(3) 1966-ல் மொத்தத் துணித்தேவை உள்நாட்டில் 880 கோடி கஜமாக இருக்கும்.

(4) 1966-ல் நமது ஏற்றுமதித்தேவை 80 கோடி கஜத்தையும் சேர்த்து மொத்த உற்பத்தியை 960 கோடி கஜமாக நிர்ணயிக்க வேண்டும்.

(5) மில் உற்பத்தி 630 கோடி, கைத்தறி உற்பத்தி 250 கோடி, பவர்லூம் 50 கோடி, அம்பர் சர்க்கா நூல் துணி 30 கோடி ஆக 960 கோடிகளும் இந்த விகிதத்தில் உற்பத்தி செய்ய அனுமதிக்கலாம்.

இரண்டாவது திட்டத்தில் இவர்கள் போட்ட கணக்கு எப்படித் தவறுகி விட்டதென்பதை நினைவில் கொண்டு இந்தப் புதிய புள்ளி விபரத்தை நாம் பார்க்க வேண்டும். தலைக்கு 20·3 கெஜம் தேவையென்பதும் மொத்தத் தேவை 960 கோடி கெஜம் என்பதும் இவர்கள் எதிர்பார்ப்பது சரியல்ல. ஒவ்வொருவருடைய சராசரித் தேவையும் அதிகரிக்குமென்பதற்குச் சரியான காரணம் கிடையாது. தவிர 80 கோடி கெஜம் தான் 1966-ல் நமது ஏற்றுமதிச் சக்தி என்று மில்காரர்கள் போடுகின்ற கணக்கு ஏமாற்றம் தருவதாக இருக்கிறது. அரசாங்கத்தார் கொடுக்கின்ற ஒத்தாசைகளுடன் நமது ஜவுளி ஏற்றுமதி நிபுணர்கள் நமது ஜவுளிக்கு வெளிநாட்டுச் சந்தையில் அதிகக் கிராக்கியைக் கண்டுபிடித்து வருவதுடன் புதிய சந்தைகளை உண்டாக்க முயற்சித்து வருகிறார்கள். இதனால் நமது ஏற்றுமதி நாடுகளின் பரப்பு அதிகமாகிறது.

இப்படியெல்லாம் ஏற்றுமதி அதிகரிப்பதற்கு வேண்டிய சூழ்நிலையெல்லாம் சாதகமாக இருந்து வருகின்ற நிலையில், ஏதோ 1958-ல் ஏற்றுமதி குறைவாயிருந்தது என்ற ஒரே காரணத்தை வைத்து அதே அடிப்படையில் 8 வருடங்களுக்குப் பிறகு 1966-லும் அதே கணக்கைப் போடுவது எப்படி சரியாகும்? தவிர கைத்தறித் துணி உற்பத்திச் சக்தியை இவர்கள் கணக்கிடுவதும் உண்மை நிலையை மதிக்காமல் போடுகின்ற கணக்காகத் தான் இருக்கிறதே அல்லாமல் வேறல்ல. மிகவும் சுலபமாக 400 கோடி கெஜம் துணியை நமது கைத்தறிகள் உற்பத்தி செய்யக் கூடிய சக்தியைப் படைத்திருக்கின்றன. இதைக் கைத்தறித் துறையின் நிபுணர்கள் நன்கு விளக்கியிருக்கிறார்கள்.

கைத்தறி வளர்ச்சியை முன்னிட்டு மில்களின் உற்பத்தியை மூன்றுவது திட்டத்தில் உள்நாட்டுத் தேவைக்கு 400 கோடி கெஜமாகத்தான் கட்டுப்படுத்த வேண்டும். ஏற்றுமதிக்குத் தேவையானபடி எவ்வளவு வேண்டுமானாலும் மில்கள் தயாரித்துக் கொண்டு போகட்டும் என்பதுதான் நாம் கூறுவது.

ஜவுளி உற்பத்தி சாதனங்களில் உதவி தேவைப்படுகின்ற கைத்தறித் துறைக்குத் தான் பாதுகாப்பும் ஊக்கமும் கொடுபட வேண்டுமென்பதை உலகில் எல்லா அரசாங்கங்களும் உணர்ந்து ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நமது இந்திய அரசாங்கமும் இதை ஓளவு ஏற்றுக் கொண்டு 1950 முதலே குறிப்பிட்ட சில ரகங்களை கைத்தறியில் தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று செய்து அவற்றை மில்கள் உற்பத்தி செய்யக் கூடாதென்றும் வைத்திருக்கிறார்கள். புடவைகளும் வேஷ்டிகளும் கைத்தறிகள் தான் தயார் செய்ய வேண்டுமென்று கட்டுப்பாடு செய்தாக வேண்டுமென்றுதான் கைத்தறித் துறையிலுள்ளவர்கள் இன்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். அப்படிச் செய்து விட்டால் கைத்தறித் துணி விற்பனையில் கழிவு கொடுத்து சர்க்கார் அளித்து வரும் மான்ய உதவியைக் கூட நிறுத்திக் கொண்டு விடலாம்.

கைத்தறிக்கு மற்றுமொரு புதிய இடையூறு முளைத்து வருகிறது. அதுதான் பவர் லூம்கள். 35 ஆயிரம் பவர் லூம்களை அமைக்கலாமென்று கனுங்கோ கமிட்டி செய்த சிபார்சுகளை நிறைவேற்ற வேண்டுமென்றும், இரண்டாவது திட்டகாலத்திலேயே கைத்தறியாளர்கள் சர்க்காருடன் மன்றாடிக் கேட்டுக் கொண்டது,

(11-ம் பக்கம் பார்க்க)



அமுத வாக்கு

அறிவே வலிமை. கல்வியே செல்வத்தின் தாய். ஆதலால் கல்விப் பயிற்சி பெறுங்கள். உங்கள் மக்களுக்கு கல்வி யறிவு புகுவதற்கு வழிவகை செய்யுங்கள்.

அசோகா பாக்கு



சிவாஜி

ஊனைய கொள்கையும் ஒன்றே கணந்தொறும்
தோன்றும் கடமைகள் ஆற்றுதல் நன்றே

வது 25] 31-1-1960 [வாரம் 13

கைத்தறி வாரம்

இன்றுமுதல் ஒருவாரம் கைத்தறி வாரவிழா நடை பெறுகிறது. அழிந்து கொண்டிருந்த இந்தத தொழி லுக்குப் புதிய வளம் உண்டாகி வருவது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியது. விவசாயத்துக்கு அடுத்தபடி யாக மிகவும் முதன்மையான கைத்தறித் தொழிலுக்கு, ஆலைகளாலும், பவர்தறிகளாலும் ஆபத்து ஏற்படா மல் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

இன்று நமது கைத்தறி ஜவுளிக்கு உள்நாட்டில் நல்ல மதிப்பு ஏற்பட்டு வருகிறது. இதைப் பாது காக்க வேண்டுமென்று அரசாங்கமும் உதவி செய் கிறது. தவிர வெளி நாடுகளில் நமது கைத்தறித் துணிகளுக்கு நல்ல கிராக்கி வளர்ந்து வருகிறது. இந்த நிலையில் கைத்தறியின் மேன்மையை மக்கள் உணர்ந்து ஆதரவு காட்டும்படிச் செய்வதற்கு ஆண்டு தோறும் கைத்தறி வாரவிழாக்கள் நடைபெற்று வருவது மிகவும் நல்ல பயன் தருகிறது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களும் தங்கள் தங்கள் வளர்ச்சிக்கு ஏற்ற திட்டங்களையும் தங்களுக்குச் சாதகமான புள்ளி விப ரங்களையும் அரசாங்கத்தாரிடம் கூறி உதவி தேடுவது இயல்புதான். அதேபோல ஜவுளி ஆலைகள் சார்பில் சில புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் புள்ளி விபரங்கள் சரியல்ல என்ற உண் மையை, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத் தில் அவர்கள் போட்ட கணக்கு எவ்வளவு தூரம் தப்பிப் போய் விட்டதென்ற உண்மையின் அடிப் படையில் ஆராய்ந்து, கைத்தறித்துணி உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டிய அவசியத்தை வற் புறுத்திக் கூறும் அரிய கட்டுரை ஒன்றைப் பிறிதொரு பக்கத்தில் காணலாம். சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து அவர்களின் கட்டுரையே அது. அவர் கூறுகின்ற காரணங்கள் மிகவும் சரியாகவும் அனுப வபூர்வமாகவும் இருக்கின்றன.

கைத்தறித்துறை தானே வளர்ச்சியடைந்து உலகச் சந்தையிலும் உள்நாட்டுத் தேவையிலும் உயர்ந்த இடம் பெற உதவி செய்தால் இப்பொழுது சர்க்கார் கொடுத்துவரும் ரிபேட் உதவியைக் கூட நிறுத்திவிடலாமென்ற அவர் கருத்து கவனிக்கத் தக்கது.

மூன்றுவது திட்டத்தில் இந்தியக் கைத்தறி தனது நிலையில் ஊன்றி வளர்ந்து சிறப்புற விளங்கு மென்று விரும்புவோம்.

★

திருச்சி நகரசபை

1960-ம் ஆண்டின் வரவு செல வுத்திட்டம் பற்றிச் சிந்தித்து முடிவு செய்ய நடைபெற்ற திருச்சி நகர்மன்றக் கூட்டத்தில் புதிய ஆண்டில் புதிய வரிகள் எதும் போடுவதில்லை என்று முடிவாயிற்று. நகர்மன்றம் இவ் வாண்டு புதிதாக இரண்டு ஆரம் பப்பள்ளிகளை மேற்கொண்டிருப் பதால், நிதிப்பற்றாக்குறை ஏற் பட்டிருக்கிறது. மூலதனச் செலவும் பொருகியிருப்பதால் வரிகளை உயர்த்த வேண்டியிருப் பதாக ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த கருத்தை நகர்மன்றம் ஏற்கவில்லை. சைகிள் வரியை நீக்கி விடுவது பற்றி ஆட்சியாளருடன் விவாதித்து வருவதாக மன்றத்தலைவர் திரு. ஜார்ஜுசாமிப்பிள்ளை அறிவித் தார்.

★

தூத்துக்குடி தேர்தல்

தூத்துக்குடித் தொகுதிக்கு நடைபெற்ற சென்னை சட்ட மன்ற இடைத் தேர்தலில் காங் கிரசு ஊழியர் சுந்தர்சிங் தம்மை எதிர்த்த திராவிட முன்னேற் றக்கழகத்தவரான எம். எஸ். சிவ சாமியைவிட 829 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி யடைந்தார். முன்னர் இந்தத் தொகுதியின் சட்டசபையாளராக இருந்த சாமுவேல் என்ற காங் கிரசுக்காரர் இறந்ததனால் விளைந்த இடைத் தேர்தல் இது. முன் தேர்தலில் சாமுவேலை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சியும் தி. மு. க. வும் தனித்தனியாக நின்று தோல்வியுற்றன. அப் பொழுது காங்கிரசுக்குக்கிடைத்த வாக்குகள் 21,678. எதிர்த்து நின்ற கம்யூனிஸ்டுக்கு 17,609. தி. மு. க. வுக்கு 14 416 கிடைத் தன. எதிர்ப்பாளர் இருவருக் கும் சேர்ந்து கிடைத்த வாக்கு கள் காங்கிரசுக்குக் கிடைத்த வாக்குகளைவிடக் கூடுதலாக இருந்தும், தனிப்பட்ட முறை யில் காங்கிரசுக்காரர் பெற்ற வாக்கே முதலிடம்பெற்றிருக்கிறது. இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டு கள் விலகிக்கொண்டு, தி. மு. க. சார்பாக உதவி செய்து நேரி டைப்போட்டி நடத்தியும் காங் கிரசு 32,281 வாக்குகளும் மற்ற வர்க்கு 31,452-ம் தான் கிடைத் திருக்கின்றன. கேரளத் தேர்தல் தருணத்தில் வெளியான இந்தத் தேர்தல் முடிவு காங்கிரசுக்கு அதிக வலிமை தரவல்லது.

★

திருக்குறளார்

திருக்குறள் மேன்மையைப் பரப்பும் சொற்பொழிவாளர் திருக்குறளார் முனுசாமி அவர் கள் பெரம்பலூரில் நிகழ்த்திய தொடர் உரைகளின் இறுதியில் அவருக்குப் பொன்னாடையணி வித்துப் பாராட்டி மகிழ்ந்தனர் பொதுமக்கள். பல தமிழ் அறி ஞர்கள் பாராட்டுரை பகர்ந்தனர். குன்றக்குடியடிகளாரும் கலந்து கொண்டார்.

★

சர்வோதயச் சுடர்

மனிதன் எந்த நாட்டிற் பிறந்தவனாயினும், எம்மொழியி னனாயினும், எவ்வினத்தானாயினும், உயிர்த் தத்துவமும் மானிடப் பண்பும் பொதுவாகும். அறிவி லும் அன்பிலும் ஆன்மநேய ஒரு மைப் பாட்டிலிலையிலும் உலகி லுள்ள மக்கள் யாவரும் உடன் பிறந்தவரே என்ற உயர்ந்த கருத்து வெளிப்படவும் அவ் வொளியில் உலகப் பேரன்பும் பேரமைதியும் பேணி வளர்க்கக் கூடியவையே என்பதை உணரச் செய்வதும்தான் சர்வோதயம் என்ற கலை. இவ்வரிய கலையை உலகுக்கு உணர்த்திய காந்தி யடிகள் பூதவுடல் நீத்து இன்று பனிரண்டு ஆண்டுகள் முடிகின் றன. அடிகளார் எந்திய ஆன் மீகச் சுடர் அணையாமல் மனித குலத்துக்கு வழி காட்டுமாக.

நம்பிக்கை ஒளி

ரஷ்ய ஜனாதிபதியை கௌரவிப்பதற்காக 20—1—60-ல் புது டெல்லியில் நடத்தப்பட்ட அரசாங்க விருந்து வைபவத்தில் நமது ஜனாதிபதி நிகழ்த்திய சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது.

:—:

உங்களையும் உங்களுடைய சிறப்பு மிக்க சகாக்களையும் எங்களிடையே காண்பதாவது மிக்க மகிழ்ச்சியூட்டுகிற ஒரு விஷயமாகும். இன்று காலையில் நான் கூறியதுபோல், இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் மிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். தன் முயற்சியின் மூலம் மனித சமுதாயத்தினை ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்துவைத்த ஒரு மாபெரும் நாட்டின் தலைவர் என்ற முறையில் உங்களை நாங்கள் வரவேற்கிறோம் என்று மீண்டும் நான் கூறத்தேவையில்லை. யுத்தத்தின் கஷ்ட நஷ்டங்கள் இருந்தபோதிலும் உங்கள் தேசமானது விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் பிரம்மாண்டமான முற்போக்கு அடைந்திருக்கிறது. உங்களுடைய விஞ்ஞானிகளை வான வெளியைக்கடந்து வெற்றி கண்டிருக்கிறார்கள். அடையவே முடியாதென்று கருதப்பட்டுவந்த ஒன்றை மனிதனின் கைக்கு எட்டும்படி செய்திருக்கிறார்கள். கலாசாரம், கல்வி ஆகிய துறைகளில் நீங்கள் உலகம் முழுவதிலும் பாராட்டப்படக்கூடிய உன்னத சிறப்பை தொடர்ந்து காப்பாற்றி வருகிறீர்கள்.

நாங்கள் எங்களுடைய புரட்சியை வேறொரு பாணியில் உருவாக்கி இருந்த போதிலும் நம்மிரு நாடுகளுக்குமிடையே பல விஷயங்கள் ஒருப்போல இருக்கின்றன. சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் யூனியன் இருப்பதைப் போலவே நாங்களும் பல்வேறு மக்கள், இனங்கள், கலாசாரங்கள், மொழிகள் ஆகியவைகளின் சுமுகமான இணைப்பாக விளங்குகிறோம். எங்களுடைய விசாலமான தேசத்தில் எங்கள் மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத்தரம் நிச்சயமாய் கிடைக்குமாறு செய்ய நாங்கள் கடமைபூண்டிருக்கிறோம். உலக சமாதானத்துக்கும், தேசங்களிடையே நல்லுறவுக்கும் வழி செய்வதற்கான முயற்சியில் நாங்கள் உங்களோடு ஒருபொதுவான நோக்கத்தைக் கொண்டிருக்கிறோம். நாசகரமான யுத்த பீதி ஒழிக்கப்பட்டு மனிதனின் திறமை மதிநுட்பம் ஆகியவை உன்னத காரியங்களுக்கும் பயன்படும்படி ஈடுபடுத்தப்படுகிற நிரந்தர சமாதானத்தை அடைவதில் எல்லா முயற்சிகளும் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று மேன்மை தங்கிய உங்கள் தேசத் தலைவர்கள் கருதுவது போலவே நாங்களும் கருதுகிறோம்.

அனேகமாய் ஐந்து வருஷங்களுக்கு முன் எங்கள் பிரதம மந்திரி சேலியத் யூனியனுக்கு விஜயம் செய்தார்; அதற்கு சில மாதங்களுக்குப்பின் உங்கள் தலைவர்களை நாங்கள் வரவேற்றோம். நம்மிரு நாடுகளுக்கிடையேயுள்ள உறவின் சரித்திரத்தில் அது ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பக் கட்டமாக அமைந்தது. இப்போது நம்முடைய பாஸ்பர உறவு பல்வேறு துறைகளுக்கு, தொழில்துறை, தொழில்நுட்பத் துறை, கலாசாரத்துறை முதலிய வைகளுக்கு வியாபித்திருக்கிறது. உங்கள் நாட்டிலிருந்து தொழில் நுட்ப ஊழியர்களும், தொழில் நுட்ப எஞ்சினீயர்களும் எங்கள் நாட்டின் தொழில்நுட்ப ஊழியர்கள், எஞ்சினீர்கள் ஆகியோருடன் கூட்டுறவு கொண்டு உழைத்து பிரம்மாண்டமான உருக்குத் தொழிற்சாலையான பிலாயை இப்போது கட்டிமுடித்திருக்கிறார்கள். பிலாய் தொழிற்சாலை இந்திய-சோவியத் கூட்டுறவின், ஒத்துழைப்பு முயற்சியின் சின்னமாக விளங்குகிறது. சோவியத் யூனியன் எங்களுக்கு அளித்துள்ள பொருளாதார தொழில் நுட்ப உதவிக்கு நாங்கள் நன்றி பாராட்டுகிறோம்; இன்னும் சிறந்த மகிழ்ச்சிகரமான இந்தியாவை நிர்மாணிக்க நாங்கள் வகுத்துள்ள திட்டங்களுக்கு இந்த உதவி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை பூரணமாக உணருகிறோம். பிலாய் திட்டம் இன்னும் இதுபோன்ற பல திட்டங்கள் ஆகியவை இரு நாட்டின் மக்களையும் நெருங்கித் தொடர்பு கொள்ளவும் ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளவும் இன்னும் அதிகமாய் புரிந்துகொள்ளவும் வழி செய்யும். இந்தியாவில் இருந்து உங்கள் நாட்டுக்குச் சென்று வந்துள்ள பல கலாசார கோஷ்டிகளும் பிறகோஷ்டிகளும் அங்கு கிடைத்த அனுபவத்தால் வளம் பெற்று வந்திருக்கின்றன. எங்கள் மாணவர்கள் உங்களுடைய சர்வகலாசாலைகளிலும் கல்வி நிலையங்களிலும் கலாசார முயற்சிகளிலோ அல்லது விஞ்ஞான தொழில்துறை முற்போக்கு வேலை முறைகளைக் கற்பதிலோ ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவுக்கு உங்கள் ராஜதந்திரிகள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள், பல்வேறு தொழில் துறையினர், பல வாழ்க்கை நிலையில் உள்ளவர்கள் ஆகியோரை வரவேற்கும் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் நம்முடைய தொடர்புகளையும் நம் மக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றொருவர் மீது கொள்கிற அக்கறையையும் விரிவுபடுத்த முடிந்திருக்கிறது.

மேன்மை தங்கிய நீங்கள் நாங்கள் உலக சமாதானத்திக்கு எவ்வளவு ஆழ்ந்த முக்கியத்துவம் அளித்துவருகிறோம் என்பதை அறிவீர்கள்; அந்த லட்சியமானது உங்கள் நாடும் அதேபோல் ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பதாகும். நம் இரு சர்க்கார்களும் அகில உலக சமாதானத்துக்கு ஆயுதக் குறைப்பு தான் திறவுகோல் என்பதை உணருகிறோம். யு. எஸ். எஸ். ஆர். பாதுகாப்புப் படைகளில் சமீபத்தில் செய்யப்பட்டுள்ள வெகு கணிசமான குறைப்பு குறித்து விசேஷ திருப்தியடைகிறோம். சமீபத்தில் நடக்கவிருக்கிற வல்லரசுகள் பேச்சுவார்த்தைக்கு இது சுப சகுனமாக விளங்குகிறது. அந்தப் பேச்சுவார்த்தைகள் விஷயத்தில் உங்கள் சர்க்காரும் எங்கள் சர்க்காரும் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம். உலகத்தில் பல விஷயங்கள் அந்தப் பேச்சுவார்த்தைகளையே பொருத்திருக்கின்றன. அவை மூலம் எற்படுகிற நல்லுணர்வு காரணமாய், தொழில் அபிவிருத்தியும் முற்போக்கும் அடைந்துள்ள நாடுகளின் விஞ்ஞான அறிவு; திறமை, ஆகியவை ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் வராளமான பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்குமென்று நாங்கள் எதிர் பார்க்கிறோம். எங்களுடைய எல்லா விஷயத்தில் துரதிஷ்டவசமாய் எங்களுக்குப் புதிய பிரச்சனைகள் தோன்றியுள்ளன; ஆனால் நாங்கள் திட சங்கற்பத்துடனும் உறுதியுடனும் எங்கள் பரம்பரை மரபை அனுசரித்து பேச்சுவார்த்தை சமரசப் பைசல் ஆகியவை மூலம் அவைகளுக்கு சமாதான தீர்வு காண உறுதிகொண்டிருக்கிறோம் என்று மேன்மை தங்கிய உங்களுக்கு நான் உறுதி கூற விரும்புகிறேன்.

ஐய, போர் வீரரும் ராஜதந்திரியும், கண்ணியமும் கீர்த்தியும் மிக்க தேச பக்தருமாகிய, நீங்கள் முதல் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறீர்கள். என்னுடைய நாட்டில் உங்களுடைய குறுகிய காலச் சுற்றுப்பிரயாணத்தின் போது, இந்நாட்டின் அனேக வாழ்க்கை அம்சங்களையும் எங்கள் தொழில்துறைத் திட்டங்களையும், விவசாயத்துறைத் திட்டங்களையும், சிறப்பும் பிரகாசமும் மிக்க எதிர்காலத்தை நிர்மாணிப்பதற்கான எங்களுடைய முயற்சிகளையும் நீங்கள் காண்பீர்கள்; ஆனால், இதையெல்லாம்விட, எங்களுடைய நாட்டு மக்களுக்கு நிலத்த சமாதானமும் சந்தோஷமும் கிடைக்கும்படி செய்வதற்காக நாங்கள் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருப்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். மேன்மை தங்கிய நீங்களும் உங்களுடைய கீர்த்தி மிக்க சகாக்களும் எங்கள் மக்கள் உங்கள் மீது, உங்கள் நாட்டின் மீதும் கொண்டுள்ள நேசம். அன்புணர்ச்சி ஆகியவைகளில் ஓர் அளவையாவது ஞாபகத்தில் கொண்டு செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

வெட்டுக்காயம், சொரி சிரங்கு வேனல் கட்டி, கரப்பான், தீப்புண், முகப்பரு, சேற்றுப்புண் முதலிய வியாதிகளைப் போக்குவதில் கைகண்ட களிம்பு.

சைபால்

தயாரிப்பாளர்கள்:
தி சௌத் இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி
மதுரை

புத்தகக் கண்காட்சி

இந்தியாவிலும் அமெரிக்காவிலும்

புது டில்லியில் நடைபெற்று வரும் உலக விவசாயக் கண்காட்சியில் விஞ்ஞான மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேஷ புத்தகக் கண்காட்சியில் இந்நாட்டில் 1920-லிருந்து 1959 வரையுள்ள காலத்தில் ஆங்கிலத்திலும் இந்திய மொழிகளிலும் வெளியான சுமார் 3000 விஞ்ஞான, தொழில் நுட்பப் புத்தகங்கள் காட்சியில் வைக்கப்படும். இப் புத்தகங்களில் கிட்டதட்ட 2900 புத்தகங்கள் இந்திய மொழிகளில் எழுதப்பட்டவையாகும்.

இக்கண்காட்சி 1960 பிப்ரவரி மாத இரண்டாவது வாரத்தில் திறந்து வைக்கப்படும்.

புது டில்லியில் உள்ள விஞ்ஞான தொழில் துறை ஆராய்ச்சிக் கௌன்சில் இக்கண்காட்சிக்குஏற்பாடுசெய்துள்ளது. காட்சியில் வைக்கப்படும் வெளியீடுகளின் விவரங்களும், சம்பந்தப்பட்ட புத்தகங்களின் விவரங்களும் அடங்கிய விவரணப் புஸ்தகமொன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் விஞ்ஞான வெளியீடுகளை ஒன்று சேகரித்து காட்சியில் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வெளியீடுகளில், இந்தியாவில் வெளியான கலைக் களஞ்சியங்கள், பொருள் விஷய காட்டுரை வெளியீடுகள். உரைக்கோவை நிகழ்ச்சி விவரங்கள், அறிக்கைகள், விவரநுட்ப பரிசீலனைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியீடுகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இம்முயற்சியில் பிரசுரகர்த்தாக்கள், அவர்களுடைய சங்கங்கள், சர்கலா சாலைகள் கல்விச் சங்கங்கள், தொழில் நுட்ப கல்வி ஸ்தாபனங்கள், விவசாய, மிருக வைத்திய, வைத்தியக் கல்லூரிகள், ஆராய்ச்சி ஸ்தாபனங்கள், நிலையங்கள், தொழில் துறை, ஆய்வுக்கூடங்கள், விவசாயம், வனத்துறை, தொழிலியல், கல்வி போதனை ஆகியவை உள்பட மத்திய ராஜ்ய சர்க்கார் இலாகாக்கள், மற்றும் பிரபல விஞ்ஞானிகள் ஆகியோரிடமிருந்து ஒத்துழைப்பு கோரப்பட்டது. இக்கண்காட்சியில் கலந்து கொள்வதற்காக சென்ற ஜூலை மாதத்தில் 4000 அமைப்புகள் பல்வேறு தரப்பினருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இச்சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும் விவரணப் புஸ்தகம் அவ்வினத்தில் முதலாவதாகும். அது விஞ்ஞான வெளியீடுகளின் துறையில் தேசிய முயற்சிகளை எடுத்துக் காட்டும் அட்டவணையாக அமைந்திருக்கும்.

அப்புஸ்தகத்தில் ஒவ்வொரு புஸ்தகம் பற்றிய விவரத்திலும், சம்பந்தப்பட்ட புஸ்தகத்தின் பெயர், ஆசிரியரின் பெயர், வெளியிடப்பட்ட வருஷம் தேதி விவரம், பிரசுரகர்த்தரின் பெயர், அதில் அடங்கியுள்ள பக்கங்களின் எண்ணிக்கை, விலை முதலிய தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கும். இந்திய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள புஸ்தகங்களுக்கான விவரங்களை ரோமன் லிபியில் மாற்றி எழுதப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவில்
நமது ஓலைச்சுவடிகள்

"இந்தியாவின் நூல்" என்னும் கண்காட்சி ஒன்று முதல் தடவையாக நியூயார்க் பொது நூலகத்தில் காட்சிபெறுகிறது. அக்கண்காட்சியில் முப்பது இந்திய ஓலைச் சுவடிகளும், தணியிலும் காகிதத்திலும் எழுதியவைகளும் உள்ளன.

பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் எழுதப்பட்ட கையெழுத்துச் சுவடிகள் அங்கு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. நியூயார்க் பொது நூலகத்தின் ஸ்பென்ஸர் தொகுப்பில் அண்மையில் சேர்க்கப்பட்டவை அவை. மார்ச் 31-ம் தேதி முடிய இச்சுவடிகள் காட்சியில் இருக்கும். அதன்பின் அவை அறிஞருக்கும் ஆராய்ச்சி செய்வோருக்கும் கிடைக்கும்.

நியூயார்க் டைம்ஸ் என்னும் பத்திரிகை இக்கண்காட்சி பற்றி எழுதியுள்ளது. இந்தியாவின் பண்பாடு, வற்றாத நீரூற்றாய் விளங்கி வந்திருப்பதற்கு இந்தியக் கையெழுத்துச் சுவடிகள் சான்று என்றும், சுவடிகளில் பொருள் வளத்துக்குக் குறைவே இல்லை என்றும் இது பற்றி எழுதியிருக்கிறது.

சுவடிகளின் ஆசிரியர்களது சற்பனைத்திறனை இந்தக் கண்காட்சி காட்டும்.

இந்தக் கண்காட்சியிலுள்ள மிகப் பழய சுவடியில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஓலையில் சமஸ்கிருதத்தில் எழுதப் பெற்ற பௌத்த பிரார்த்தனை ஒன்று உள்ளது. 19-ம் நூற்றாண்டு வரையுள்ள ஜெயினச் சுவடிகளும், ராஜபுதன ஓவியங்களும், மூலவாயுச் சுவடிகளும் அக் காட்சியில் உள்ளன. இந்தியக் கையெழுத்துச் சுவடிகள் பொதுப் பொருள்களையும், தெய்வங்களையும், தேவதைகளையும். இலக்கியத்திலும் புராணங்களிலும் சொல்லப்பட்டவர்களையும் பற்றியவை.

மேன்மையான சமஸ்கிருத இதிகாசமாகிய இராமாயணமும் கிருஷ்ணன் கதையாகிய கிருஷ்ணலீலாவும், சிவ சரிதமாகிய சிவலீலாவும், மஹாபாரதத்திலுள்ள பக்திப் பாடல தொகுப்பாகிய பஞ்சரத்னமும் அந்தப் பழஞ் சுவடிக் கண்காட்சியில் உள்ளன.

பழஞ் சுவடிகளின் எழுத்து வடிவம் 'பாலா' மாதிரியைச் சேர்ந்தவை என்றும், அவற்றிற்கும் பம்பாய் ராஜ்யத்தில் அஜந்தாக் குகைகளின் மிகப் பழய சுவர்ச் சித்திரங்களுக்கும் தொடர்பு உண்டு.

ஓலைச் சுவடிகள் பாட்னாவுக்கு அருகே இருந்த நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் பௌத்தத் துறவிகள் எழுதியவை.

முஸ்லீம் படையெடுப்புக்குச் சில ஆண்டுகளுக்குமுன் பௌத்த நெறியைப் பரப்பியது நாளந்தாப் பல்கலைக்கழகம்.

★

இந்தியாவில் முதன் முதலில் வெளிவந்த பத்திரிகை (1780-ல்) பெங்கால் கெஜட்.



(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் கிடைத்துள்ள பலன்கள் உற்சாக மூட்டக்கூடியவையாக இருந்தபோதிலும், அவை எதிர் பார்த்த அளவுக்கு இல்லை; ஆயிரம், கட்சில் ஒரு பெரிய நிலப் பிரதேசம் அடித்தரை நீர் ஆதார அபிவிருத்தி நடவடிக்கைக்குச் சொரிசு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோலவே சென்னை, ஆந்திரா, பீகார், ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் நடத்தப்பட்டுள்ள பரிசோதனைகள் நல்ல பலன்களை அளித்துள்ளன; இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்ட பிரதேசங்களில் எராளமான குழாய்க் கிணறுகளைத் தோண்டி பாசன வசதிகளைப் பெருக்கி நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கமுடியும்.

உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவிடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள் நூற்றுக்கு நூறு திருப்தியளிக்கக் கூடியவையாக அமைந்துள்ளன. சோளாவில் ஆராய்ந்துள்ள மூடிவுகள் அவ்வளவு ஊக்கமளிக்கக் கூடியவை யாக இல்லை. பஞ்சாபில் ஓரளவு தான் பலன் கிட்டியிருக்கிறது. அஸ்ஸாமில் பிரம்மபுத்திராப் பள்ளத்தாக்கில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன; இதுவரை கிடைத்துள்ள பலன்கள் திருப்தி அளிக்கக் கூடியவை யாக இருக்கின்றன.

அடித்தரை நீர் ஊற்றுக்கள் பயன்படுத்தப் படுகிற இடங்களில், அபரிமிதமாக தண்ணீர் சப்ளை ஆகிவிடாதபடி பருவ காலங்களில் கண்காணிப்புச் செய்து வரவேண்டியது மிகவும் முக்கியமாகும். அடித்தரை நீர் ஆதாரங்களும் ஏரி நீர் ஆதாரங்களைப் போலவே தகுந்த முறையில் வினியோகிக்கப்படுவதும், சிக்கனமான முறையில் பயன்படுத்தப்படுவதும், திட்டமிட்ட நீதியில் பாதுகாக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

அடித்தரை நீர் ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் நுட்பமுறை விஞ்ஞான நீதியில் நன்கு முன்னேற்ற மடைந்துவிட்டிருக்கிறது. நமது கண்ணுக்குத் தெரியாமல் தரைக்கு அடியில் ஏராளமான நீர் ஆதாரங்கள் மறைந்திருக்கின்றன. பூபௌதிக சாதனங்களின் உதவியைக் கொண்டு அடித்தரை நீர் ஆதாரங்களை அனேகமாய் நிச்சயமாகக் கண்டுபிடித்துவிட முடிகிறது. இந்த ஆதாரங்களைத் தங்களுடைய சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறவர்களுக்கும் இந்த ஸ்தாபனம் உதவியளிக்கத் தயாராக இருக்கிறது. டாலவளங்களுக்குக் கீழே புதைந்துள்ள பெரிய வரிகளையும், வரண்ட பிரதேசங்களின் அடியில் பெரிய ஆறுகளையும் ஒரு நாள் நாம் கண்டுபிடித்துவிடமுடியும் என்று நம்பப்படுகிறது; ஏனெனில் எல்லையற்ற ஏராளமான நீர் நிலைகளை கெட்டியான தரை மூடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இமயமலையிலிருந்து வரும் ஆடி முழுவதும் பெருக்கெடுத்து தரையில் ஊறிக்கொண்டே வருகிற தண்ணீர் தரைக்கு அடியில் சேர்ந்துகொண்டே இருக்கும்.

இமயத்தின் மீது!

எவரெஸ்டு சிகரத்திற்கு மேல், கிளாடரில் பறக்க (விசையில்லாத விமானம்) பிரிட்டிஷ் கிளைடர் நிபுணர் குழு நேபாள சர்க்காரிடம் அனுமதி பெற்றிருக்கிறார்கள். டாக்டர். டி. பிரென்னிங் ஜேம்ஸ் தலைமையில் செல்லும் இந்தக் குழுவில் ஓர் பல்வைத்தியர், ஓர் விஞ்ஞானி, ஓர் வானிலை நிபுணர் ஆகியோர் உண்டு.

எவரெஸ்டு மீது பறந்து புகழ் பெறும் விருப்பத்துடன் டாக்டர் ஜேம்ஸ் இந்த முயற்சியில் ஈடுபடவில்லை. வேறு முறைகளால் சேகரிக்க முடியாத விஞ்ஞானத் தகவல்களைச் சேகரிக்கவும், அதிஉயரத்திலுள்ள காற்றழுத்தத்தின் வேகம், திசை முதலியன பற்றித் தெரிந்து கொள்ளவும் இந்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

டாக்டர் ஜேம்ஸ் குழுவினர் அடுத்த இளவேனிற் காலத்தில் விஞ்ஞான சாதனங்களுடன் நேபாளத்திற்கு வந்து சேருவார்கள். காட்மாண்டு, போகாரா விமான நிலையங்களிலிருந்து, விமானங்களின் உதவியால், கிளாடர்களை வானத்தில் பறக்கவிட அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். முதலில் அவர்கள் அன்னபூர்ணா சிகரத்தின் மீது பறந்து சோதனைக் குறிப்பு எடுத்துக்கொள்வார்கள்.

மேற்காற்றில் கிளாடர் நிமிடத்திற்கு ஆயிரம் அடி உயரம் எழும்புமாம். ஆங்கில விமானி ஒருவர் விசையில்லாத விமானத்தில் 46,000 அடி உயரத்தில் பறந்திருக்கிறார்.

கைத்தறி பற்றி

இந்தியாவெங்கிலும் பரவலாக அமைந்துள்ள இத்தொழிலுக்கு முனைப்பான பிரசாரம் தேவை என்பதாக அகில இந்தியக் கைத்தறி போர்டு உணர்ந்தது. சகல விதமான விளம்பர — பிரசார சாதனங்களையும் உபயோகித்துக் கொள்வதற்கான திட்டமொன்றை அந்தப் போர்டு வகுத்து, இப்போது நிறைவேற்றி வருகிறது.

கைத்தறித் தொழிலின் நடைமுறைத் திறமை அதிகரிக்க வேண்டுமானால், முதலில் தங்களுடைய தொழிலை லாபகரமாகச் செய்வதற்கேற்றபடியும், நாளடைவில் மற்றவர்களுடன் போட்டியிடுவதற்கேற்ற நீதியில் திறமையை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடியபடியும் வழிதுறை காட்டும் உதவிகளையும் நிதி உதவியையும் அளிக்கக்கூடிய ஸ்தாபனமொன்றின் கீழ் நெசவாளர்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்பது உணரப்பட்டது. கூட்டுறவு முயற்சியின் மூலம் மட்டும் தான் இதைச் சாதிக்க முடியும்.

ஆகையால், மத்திய, ராஜ்ய சர்க்கார்கள், நெசவாளர்கள் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களை போட்டாப் போட்டி விலை விதிதங்களில் பெறுவதற்கும், தங்களுடைய பொருள்களை லாபகரமான விலைகளில் விற்பதற்கும், தொழில் நுட்ப உதவியையும் இதர உதவிகளையும் பெறுவதற்கும் ஏற்றபடி, எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு அதிகமான எண்ணிக்கையுள்ள நெசவாளர்களைக் கூட்டுறவு சங்கங்களின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.

மொத்தமுள்ள நெசவாளர்களில் நாற்பது சதவிகிதத்துக்கு மேற்பட்டவர்கள் ஏற்கெனவே கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டனர்.

சூட்டிங், ஷர்ட்டிங் ரகங்களும் எங்களிடம் பார்க்கத் தகுந்தவை.

எல்லா விதமான ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் ஒரே இடம்.

பி. ரா. நாராயணசாமி அய்யர்

ஜவுளி வியாபாரம்

பெரியகடை வீதி, திருச்சிராப்பள்ளி.

பிராஞ்சு:— 'பான்ஸி ஹால்' சைனுபஜார், திருச்சி.

மில் ஜவுளிகள் எங்களிடம் சில்லரை வியாபாரிகளுக்கு மொத்தமாகக் கிடைக்கும்.



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குருக்ஷேத்திரத்தினருகே யுள்ள தந்தையின் வீரை நிலத்துக்குச் சென்றவன்; இந்திய வரலாற்றில் சீக்கியர் காலம் முதல் நிற்கும் ஒரு வீட்டில் வளர்ந்தவன். எல்பிரெத் சந்து எனக்கு அவ்வளவு பழமையாய்த் தெரியவில்லை.

சேரி ஒழிப்பு

பழைய சேரிகளை ஒழித்து நகருக்குப் புதுமைத் தோற்றம் கொடுக்க இவ்வூர்க்காரர்கள், அடேயப்பா, எவ்வளவு மும்முரமாகப் பாடுபடுகிறார்கள். இங்கு நான் இருக்கும் வீடுநிக்கு அருகே பாழடைந்த பல வீடுகள் அடுக்கடுக்காய் இடித்துத் தள்ளப்பட்டுப் புத்தம் புதுக் கட்டிடங்கள் எழுகின்றன. இந்தச் சேரி ஒழிப்பு இயக்கம் 1930-ம் ஆண்டு வாக்கில் ஆரம்பமாயிற்றும். இதுவரை 18,000 வீடுகள் குடியிருக்கத் தகுதியில்லாததால் இடித்துத் தள்ளப்பட்டு விட்டனவாம்.

சேரி ஒழிப்புக்கு ஒரு போரே நடத்துகிறார்கள் என்று சொல்லலாம். இதற்கென்று தொண்டர் படைகள் பல இருக்கின்றன. மக்கள் தாமாகச் சேர்ந்து அமைத்திருக்கும் இக்குழுக்கள் சேரி ஒழிப்பின் தலன்களை எடுத்து விளம்பப் பல விளம்பரத் நிட்டங்களைத் நிறம்பட வகுத்து நடத்துகின்றன. பிலடெல்பியாவின் கண்கொள்ளாக் காட்சி என்பது ஒரு பத்து நிமிடப் படம். 1980-ல் நகர் எவ்வாறு காட்சி வழங்கும் என்ற நகரத் திட்ட அதிகாரிகள் வகுத்துள்ள திட்டத்தை விளக்கும் திரைப் படம் இது. சேரி வாழ்வின் தீமைகளையும், சிதைந்த பெரிய நகரத்தை அமைப்பதன் மிழ்ச்சியையும் இப்படம் தெளிவாகக் காட்டுகின்றது. டில்லி நகர சபைக்கு இந்தப் படம் ஒரு பாடமாக உதவும்.

சேரிகள் மறைந்து மட்மெல்ல பல அடுக்குகள் உள்ள புதிய வீடுகளும் உருவாகின்றன. நகரத்தைச் சுற்றிப் புதுப்புது நகர்ப்புறங்களும் தோன்றுகின்றன. நகர்ப் புறங்களில் வீடுகள் தவணைக் கடனுக்கு கிடைக்கும். 12,000 டாலர் பெறும் புதிய வீடுகளை இவ்வாறு கடனுக்கு வாங்கித் தவணை தவணையாகக் கடனைக் கட்டித் தீர்க்கலாம்.

அமைதி நிறைந்த இடம்

இத்தகைய நகர்ப்புறம் ஒன்றை காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. டெம்பிள் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொடுக்கும்



பிலடெல்பியா நகரிலுள்ள விடுதலை மண்டபம்

அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் அங்கு வாழ்கிறார். அவர் எனக்கு தம வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தார். எட்வின் ஸ்மித் என்பது இவர் பெயர். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இவர் புல்பிரைட் நிட்டத்தின் டி இந்தியாவுக்கு வந்து ஒஸ்மணுரிப் பல்கலைக் கழகத்தில் சமூக இயல் கற்றுக் கொடுத்தவர். இவருடைய வீட்டில் மூன்று படுக்கை யறைகளும் டட்டசாலையும், சாப்பாட்டறையும் உள்ளன. நகரிலிருந்து வீட்டுக்கு வரக்குறைய 20 மைல் தொலைவு. எனினும் பாதை ஓரே ஒழுங்கான வழியே தவறாமல் நேரத்தில் அலுவலகம் சென்று விடலாம்.

இங்கு பஸ்கள் கிடையா. டிராம் வண்டிகள் கிடையா. புகை சக்கும் தொழிற்சாலைப் புகை போக்கிகள் கிடையா; நெருக்கடிப்படும் கார் நடமாட்டமும், நிறுத்தி வைப்பதற்கு இடமெங்கே என்னும் தொல்லையும் கிடையா. அமைதி நிறைந்த சூழ்நிலை. திறந்த வெளியில் பிள்ளைகள் விளையாடலாம். கார் வந்து மோதி விடுமோ என்ற கவலையே வேண்டாம். பெரியவர்கள் அக்கம் பக்கத்தாரனோடு அளவளாவி வாழ்கிறார்கள். பட்டணவாசிகள் போல் தல்லாமல் ஒருவர் ஒருவர் இன்ப துன்பங்களை அறிந்து ஒன்றாய் இருக்கிறார்கள். இத்தகைய வீடுகள் புது டில்லியின் மத்திய தர மக்களுக்கு அவசியம் தேவை.

பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தையும் சிறிது பார்த்தேன். அமெரிக்காவின் பழமையான பல்கலைக் கழகங்களில் இது ஒன்று. 1740-ல் பெஞ்சமின் பிராங்ளின் இதை நிறுவினார். இங்கு இந்தியப் பேராசிரியர் ஒருவர் இந்திய நாட்டு வரலாறு கற்பிக்கிறார். மற்றும் பல பல்கலைக் கழகங்களும் இந்திய நாட்டு வரலாற்றை கற்றுக் கொடுக்கத் தொடங்கு கிறதனவாம். இந்திய அமெரிக்க கலாசார சிறந்து விளங்க இது ஒரு நல்ல அறிகுறியாகும். அமெரிக்க மாணவர்கள் இனிது காலமாகத் தான் இந்தியாவைப் பற்றிப் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

யார் இந்த லபாயட்?

பிலடெல்பியாவின் சாலைகள், தெருக்கள், பூங்காக்கள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில் மாறி மாறி பிராங்ளின், லபாயட் என்னும் இருவர் பெயர்கள் அடிக்கடி தென்படும். பல தலைகளில் புலமை மிக்க அமெரிக்கா பெஞ்சமின் பிராங்ளைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் யார் இந்த பொயட் என்று நீங்கள் யோசிக்கலாம். இவர் ஒரு பிரெஞ்சுத் தளபதி. இவர் வாஷிங்டனது படையில் சேர்ந்து பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து ஜனநாயகம் இல்லாவல் சண்டை செய்தவர். இத்தப் பிரெஞ்சு வீரரை அமெரிக்க நாடு முழுவதும் நன்றியோடு நினைத்து பாராட்டுகிறது. பிலடெல்பியர்கள் மட்டும் குறைந்தவர்களா என்ன? இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கக் கடற்படையினர் பிரான்ஸ் மண்ணில் கரை யிறங்கியதும், "லபாயட், நாங்கள் வந்து விட்டோம்" என்றார்களாம்! "நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி என்றதருங்கொல் என வேண்டா என்றுசொல்லவும்வேண்டுமோ?"

அமெரிக்காவின் சிந்து கங்கைச் சமவெளி

ஸ்காச் — ஐரிஷ் மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து குடியேறுவதற்குத் தலை வாயிலாக இருந்தது பிலடெல்பியா நகரம் 17-வது நூற்றாண்டில் அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை ராஜ்யங்கள் இருந்த நிலை கி. மு. 200க்கும் கி. பி. 100க்கும் இடையில் வட மேற்கு இந்தியா இருந்த நிலையைப் போன்றது. ஜெர்மக்காரும், சிந்தியரும், பார்த்தியரும் – படையெடுத்தல் — கூட்டம் கூட்டமாக இந்தியாவுக்குள் நுழைந்த காலம் அது. அதே போல் ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறினர். ஜெர்மக்காரும் சிந்தியரும் இந்தியப் பண்பாட்டோடு இணைந்து போனது போல், ஐரோப்பியரும் அமெரிக்காவில் அனைவரோடும் இணைந்து வாழலாயினர். மாஸச்சூசெட்ஸ், கனக்டிக்கட், நியூஜெர்வி, பென்சில்வேனியா, நியூயார்க், மேரிலாந்து, வொர்ஜீனியா ஆகிய ராஜ்யங்கள் உள்ள அமெரிக்கப் பகுதியை நான் அமெரிக்காவின் சிந்து கங்கைச் சமவெளி என்பேன்.

இக்கு வந்த ஐரோப்பியர்கள் தங்களுக்கு ஒத்த பருவ நிலை நிலவக் கண்டார்கள், சிந்து, கங்கைச் சமவெளியில் குடியேறிய ஆரியரும் அவர்களுக்குப் பிறகு வந்தவர்களும் அங்கு தக்க வாணிலையைக் கண்டது போல. ஐரோப்பியர் கடல் வாணிபம் செய்வதற்கு ஏற்ற இயற்கை வசதியும் இக்கு இருந்தது. பென்சில்வேனியா ராஜ்யத்தைப் பற்றி அதனை நிறுவிய வில்லியம் பென் "இன்ப பூங்காற்று வீசுகிறது. வானலை அமைதி சார்ந்து விளங்குகிறது" என எழுதி வைத்தார். அவை அப்படியே ஒப்புக் கொள்ளத்

(அடுத்த பக்கம் பார்க்க)

பூமிதான இயக்கம்

திருச்சி-தஞ்சை ஜில்லா மூன்றுவது சர்வோதய-பூமிதான இயக்க மகாநாடு திருச்சி பிஷப்ஹீபர் உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் சர்வோதயப் பொருட்காட்சிக் கலையரங்கில் சென்ற மாநில பூமிதான யக்ஞ போர்டு தலைவர் திரு. க. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஜனவரி 11-ந் தேதி நடைபெற்றது.

மகாநாட்டை திரு. பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் துவக்கி வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். மகாநாட்டில் தமிழ் நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு. ச. ஜெகந்நாதன், பூதான போர்டு செயலாளர் திரு. அ. அவையன், திரு. எஸ். ஆர். சுப்ரமணியம், திருமதி. ஏ. எஸ் பொன்னம்மாள், எம். எல். ஏ., ஆகியோர் கலந்துகொண்டு பூமிதான, கிராமதான இயக்க வளர்ச்சி பற்றியும், வருங்கால வேலைத்திட்டம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

அன்று காலை 9-மணிக்கு சர்வோதயப் பொருட்காட்சி மைதானத்தில் இருந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட வினோபா படத்துடன் நீண்டதொரு ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களின் வழியாக பூமிதான கிராமதான கோஷங்களை முழங்கிக் கொண்டு 10-மணிக்கு சர்வோதயப் பந்தலை வந்து அடைந்தது.

நூற்பு வேள்விக்குப் பிறகு இறைவணக்கத்துடன் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர்களையும், பொது மக்களையும், திருச்சி ஜில்லா நிவேதக் (பொறுப்பாளர்) திரு. எம். ஆர். பழனிசாமி வரவேற்று மகாநாட்டின் முக்கியத்துவம் பற்றிக் கூறினார்.

காந்தியடிகள் கூறிய தர்ம கர்த்தா தத்துவம் தனியுடைமையை ஆதரிப்பது அல்ல. திருவள்ளுவர் கூறியபடி எல்லாவற்றையும் கொடுக்கும் பெருந்தகையாரைக் குறிப்பதே இத்தத்துவம் இவ்வாறு திரு. க. அருணாசலம் அவர்கள் தமது தலைமையுரையில் கூறினர். 'சர்வோதய சமுதாயம் அமைப்போம் வாரீர் என்கிறோமே, அதன் பொருளை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்' என்று தொடங்கி மிக விரிவாக ஆராய்ச்சி பூர்வமான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினர்.

'நிலச்சுவான்தார்களை, நிலமற்ற விவசாயிகளே நேரடியாக அணுகி தானம் பெறும் முறையில் இயக்கம் மாறுதலடைய வேண்டியது அவசியம்' எனவும், இதைப் பற்றி அகில பாரத சர்வ சேவா சங்கம் காசியில் கூடி செய்துள்ள தீர்மானம் பற்றியும் திரு. ச. ஜெகந்நாதன் அவர்கள் விளக்கினர்.

'மனிதத் தன்மையை, பண்பாட்டை வளர்ப்பது முதல் கடமை; இதற்கு பூமிதான இயக்கம் வேலை செய்கிறது. இவ்வுலக வாழ்வும் மக்கள் நலனடைய வேண்டுவது முக்கியம் தைச்சாதிப்பது இந்த இயக்கத்தினால்தான் இயலும்' என்று விளக்கி திரு. குன்றக்குடி அடிகளார் கூறினர்.

திரு. எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் காந்தியடிகள் கனவு கண்ட குறிக்கோளிலிருந்து இந்த நாடு தவறிவிடக் கூடாது. இன்று நாம் முன்னேற்றம் என்று எதைக் கருதுகிறோமோ அது காந்திஜியின் கருத்துப்படி முன்னேற்றம்தானை என்பதைக்கவனிக்கவேண்டும்' என்று கூறி, 'என்று குருஷ்சேவும், ஐஸன்ஹோவரும் கூடிப் பேசி யுத்த பயத்தைப் போக்கி உலகில் சமாதானம் நிலவச் செய்கிறார்களோ அன்று காந்தியடிகளின் அஹிம்சைத் தத்துவம் பூரண வெற்றியடையும்' என்று குறிப்பிட்டார்.

★

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பவர்லூம் வளர்ச்சியினால் கைத்தறி பாழாகி விடுமென்ற காரணத்தினால் தான். இருந்து வருகின்ற பவர்லூம்களுக்குச் சலுகைகள் எதையும் காட்டாமல் நிறுத்திக் கொள்வதுடன் கணக்கில் வராமல் தான் தோன்றியதாக இயங்கும் பவர்லூம்களைப் பறிமுதல் செய்துவிட வேண்டுவதும் மிகவும் அவசியமென்றுதான் நாம் சர்க்காருக்கு வற்புறுத்திச் சொல்லிவிடுகிறோம்.

இந்த முறையில் அரசாங்கம், வர்த்தகர்கள், மில்காரர்கள் ஆகியோர் கொண்ட முக்கூட்டு மகாநாடு கூட்டி இன்றைய ஜவுளித் தொழில் நிலை பற்றி சூழ்ந்து ஆராய வேண்டியது மிகவும் அவசியம். தனித்தனியாக அவரவர் தங்கள் நலனுக்கு ஏற்ற படிப் போட்டுக்காட்டுகிற புள்ளி விபரங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு உண்மையாக நமது நாட்டின் ஜவுளித் தேவை எவ்வளவு, யார் யார் எவ்வளவு உற்பத்திசெய்வது சரியாக இருக்கும் என்ற சரியான கணக்கைக் கண்டறிந்து நமது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன் படி நாம் செயல் படவேண்டும். நமது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான தொரு இடத்தைப் பெற்றுள்ள ஜவுளித் தொழிலை அவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து முடிவு செய்வது மிகவும் இன்றியமையாத தாகும்.

★

(முன் பக்கத் தொடர்ச்சி)

றேன். இங்கு இப்போது டில்லியில் டிசம்பர் மாதிரி இருக்கிறது. வெப்ப நிலை 60 டிகிரி தான். இனிமையானதோர் குளிர்ச்சி நிலவுகிறது. வெம்மை கண்ட வாஷிங்டனை விட்டு வந்த எனக்குக் குளிர் காலம். இங்கு எப்படியிருக்கும் என்பதை பிலடெல்பியா தான் முதன் முதல் காட்டியது.

கிழக்கத்திய ராஜ்யங்களில் ஆதியில் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள் தமக்கு ஒத்த சூழ் நிலையைக் கண்டார்கள் என்றேன். இன்றும் இங்கு பல மாநகர்களில் ஜெர்மனியர், பிரெஞ்சுக்காரர், போலந்து மக்கள், ஹங்கேரியர், இத்தாலியர், ஸ்பெயின் நாட்டார் முதலியோர் கூட்டம் கூட்டமாக ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் பேட்டைகளைக் காணலாம். இவர்கள் தமக்குள் தத்தம் மொழிகளையே பேசுகிறார்கள். நான் பிலடெல்பியாவில் இருந்த போது இத்தாலிய மக்கள் பெருந்திரளாகக்கூடிக்கொலம்பஸ் தினத்தைக் கொண்டாடக் கண்டேன்.

பல்வேறு மக்கள் ஒரு சேர வாழும் பண்புடைய அமெரிக்காவில் பல பல மொழிகள் வழங்கும் தன்மையை நன்கு காண வேண்டுமானால் நியூயார்க் நகருக்குச் செல்ல வேண்டும். உலகின் எண்டிசையிலுமிருந்து வந்தவர்களின் வழித் தோன்றல்கள் வாழும் நகரம் இது. இங்கு 80 லட்சம் பேர இருக்கிறார்கள். சீனர், இந்தியர், ஜப்பானியர், இந்தோனேசியர், அரபியர், ஐரோப்பியர், ரஷ்யர், தென் அமெரிக்கர் அனைவரையும் இங்கு எளிதில் காணலாம்.

இம்மாபெரும் நகரின் தன்மையை எடுத்துரைக்க இங்கு இடம் இல்லை. அதை அடுத்த கட்டத்தில் பார்ப்போம்.

(தொடரும்)

ஈரோடு டி. மு. கோர்ட்
S. C. 836 | 59
முத்துசாமி கவுண்டர் — வாதி
ராமசாமி கவுண்டர் — பிரதிவாதி
ஷெட்யூல் நம்பர் வாதி பிராம்சரிப்படி ரூ. 313-00 கிடைக்க வேண்டியும் பிரதிவாதி பேரில் தாவா தொடர்ந்திருப்பதாலும் வாதி 6 — 2 — 60-தேதிக்கு பேட்டிருப்பதால் அன்று பிரதிவாதி ஆஜராகத்தவறினால் எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு பிறப்பிக்கப்படும்.
C. ரங்கசாமி,
வாதி அட்வகேட்.
7 | 3461 | 252

ஜனவரி 31 முதல் பிப்ரவரி 7 வரை
கைத்தறி வார விழா கொண்டாடுங்கள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குருக்ஷேத்திரத்தினருகே யுள்ள தந்தையின் விளை நிலத்துக்குச் சென்றவன்; இந்திய வரலாற்றில் சீக்கியர் காலம் முதல் நிற்கும் ஒரு வீட்டில் வளர்ந்தவன். எல்பிரெத் சந்து எனக்கு அவ்வளவு பழமையாய்த் தெரியவில்லை.

சேரி ஒழிப்பு

பழைய சேரிகளை ஒழித்து நகருக்குப் புதுமைத் தோற்றம் கொடுக்க இவ்வூர்க்காரர்கள், அடேயப்பா, எவ்வளவு மும்முரமாகப் பாடுபடுகிறார்கள். இங்கு நான் இருக்கும் விடுதிக்கு அருகே பாழடைந்த பல வீடுகள் அடுக்கடுக்காய் இடித்துத் தள்ளப்பட்டுப் புத்தம் புதுக் கட்டிடங்கள் எழுகின்றன. இந்தச் சேரி ஒழிப்பு இயக்கம் 1930-ம் ஆண்டு வாக்கில் ஆரம்பமாயிற்றாம். இதுவரை 18,000 வீடுகள் குடியிருக்கத் தகுதியில்லாததால் இடித்துத் தள்ளப்பட்டு விட்டனவாம்.

சேரி ஒழிப்புக்கு ஒரு போரே நடத்துகிறார்கள் என்று சொல்லலாம். இதற்கென்று தொண்டர் படைகள் பல இருக்கின்றன. மக்கள் தாமாகச் சேர்ந்து அமைத்திருக்கும் இக்குழுக்கள் சேரி ஒழிப்பின் நலன்களை எடுத்து விளம்பப் பல விளம்பரத் திட்டங்களைத் திறம்பட வகுத்து நடத்துகின்றன. பிலடெல்பியாவின் கண்கொள்ளாக் காட்சி என்பது ஒரு பத்து நிமிடப் படம். 1980-ல் நகர் எவ்வாறு காட்சி வழங்கும் என்று நகரத் திட்ட அதிகாரிகள் வகுத்துள்ள திட்டத்தை விளக்கும் திரைப் படம் இது. சேரி வாழ்வின் தீமைகளையும், சிறந்த பெரிய நகரத்தை அமைப்பதன் மகிழ்ச்சியையும் இப்படம் தெளிவாகக் காட்டுகின்றது. டில்லி நகர சபைக்கு இந்தப் படம் ஒரு பாடமாக உதவும்.

சேரிகள் மறைவது மட்டுமல்ல பல அடுக்குகள் உள்ள புதிய வீடுகளும் உருவாகின்றன. நகரத்தைச் சுற்றிப் புதுப்புது நகர்ப்புறங்களும் தோன்றுகின்றன. நகர்ப் புறங்களில் வீடுகள் தவணைக் கடனுக்கு கிடைக்கும். 12,000 டாலா பெறும் புதிய வீடுகளை இவ்வாறு கடனுக்கு வாங்கித் தவணை தவணையாகக் கடனைக் கட்டித் தீர்க்கலாம்.

அமைதி நிறைந்த இடம்

இத்தகைய நகர்ப்புறம் ஒன்றை காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. டெம்பிள் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொடுக்கும்



பிலடெல்பியா நகரிலுள்ள விடுதலை மண்டபம்

அமெரிக்கப் பேராசிரியர் ஒருவர் அங்கு வாழ்கிறார். அவர் என்னை தம வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தார். எட்வின் ஈம்ஸ் என்பது இவர் பெயர். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இவர் புல்பிரைட் திட்டத்தின் படி இந்தியாவுக்கு வந்து லக்ஷ்மணபுரிப் பல்கலைக் கழகத்தில் சமூக இயல் கற்றுக் கொடுத்தவர். இவருடைய வீட்டில் மூன்று படுக்கை யறைகளும் பட்டசாலையும், சாப்பாட்டறையும் உள்ளன. நகரிலிருந்து வீட்டுக்கு ஏறக்குறைய 20 மைல் தொலைவு. எனினும் பாதாள இருப்புப் பாதை வழியே அரை மணி நேரத்தில் அங்கு போய் விடலாம்.

இங்கு பஸ்ஸுகள் கிடையா. டிராம் வண்டிகள் கிடையா. புகை கக்கும் தொழிற்சாலைப் புகை போக்கிகள் கிடையா; நெருக்கடிப்படும் கார் நடமாட்டமும், நிறுத்தி வைப்பதற்கு இடமெங்கே என்னும் தொல்லையும் கிடையா. அமைதி நிறைந்த சூழ்நிலை. திறந்த வெளியில் பிள்ளைகள் விளையாடலாம். கார் வந்து மோதி விடுமோ என்ற கவலையே வேண்டாம். பெரியவர்கள் அக்கம் பக்கத்தார்களோடு அளவளாவி வாழ்கிறார்கள். பட்டணவாசிகள் போல் அல்லாமல் ஒருவர் ஒருவர் இன்ப துன்பங்களை அறிந்து ஒன்றாய் இருக்கிறார்கள். இத்தகைய வீடுகள் புது டில்லியின் மத்திய தர மக்களுக்கு அவசியம் தேவை.

பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தையும் சிறிது பார்த்தேன். அமெரிக்காவின் பழமையான பல்கலைக் கழகங்களில் இது ஒன்று. 1740-ல் பெஞ்சமின் பிராங்ளின் இதை நிறுவினார். இங்கு இந்தியப் பேராசிரியர் ஒருவர் இந்திய நாட்டு வரலாறு கற்பிக்கிறார். மற்றும் பல பல்கலைக் கழகங்களும் இந்திய நாட்டு வரலாற்றை கற்றுக் கொடுக்கத் தொடங்குகின்றனவாம். இந்திய அமெரிக்க நல்லுணர்வு சிறந்து விளங்க இது ஒரு நல்ல அறிகுறியாகும். அமெரிக்க மாணவர்கள் சிறிது காலமாகத் தான் இந்தியாவைப் பற்றிப் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

யார் இந்த லபாயட் ?

பிலடெல்பியாவின் சாலைகள், தெருக்கள், பூங்காக்கள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவற்றில் மாறி மாறி பிராங்ளின், லபாயட் என்னும் இருவர் பெயர்கள் அடிக்கடி தென்படும். பல துறைகளில் புலமை மிக்க அமெரிக்கா பெஞ்சமின் பிராங்ளினைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் யார் இந்த லபாயட் என்று நீங்கள் யோசிக்கலாம். இவர் ஒரு பிரெஞ்சுத் தளபதி. இவர் வாஷிங்டனது படையில் சேர்ந்து பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து ஊதியம் இல்லாமல் சண்டை செய்தவர். இந்தப் பிரெஞ்சு வீரரை அமெரிக்க நாடு முழுவதும் நன்றியோடு நினைந்து பாராட்டுகின்றது. பிலடெல்பியர்கள் மட்டும் குறைந்தவர்களா என்ன? இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கக் கடற்படையினர் பிரான்ஸ் மண்ணில் கரை யிறங்கியதும், "லபாயட், நாங்கள் வந்து விட்டோம்" என்றார்களாம்! "நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந் நன்றி என்று தருங்கொல் என வேண்டா என்று சொல்லவும்வேண்டுமோ?"

அமெரிக்காவின் சிந்து கங்கைச் சமவெளி

ஸ்காச் — ஐரிஷ் மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து குடியேறுவதற்குத் தலை வாயிலாக இருந்தது பிலடெல்பியா நகரம் 17-வது நூற்றாண்டில் அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரை ராஜ்யங்கள் இருந்த நிலை கி. மு. 200க்கும் கி. பி. 100க்கும் இடையில் வட மேற்கு இந்தியா இருந்த நிலையைப் போன்றது. கிரேக்கரும், சிந்தியரும், பார்த்தியரும் — படையெடுத்தல் — கூட்டம் கூட்டமாக இந்தியாவுக்குள் நுழைந்த காலம் அது. அதே போல் ஐரோப்பியர் அமெரிக்காவில் குடியேறினர். கிரேக்கரும் சிந்தியரும் இந்தியப் பண்பாட்டோடு இயைந்து போனது போல், ஐரோப்பியரும் அமெரிக்காவில் அனைவரோடும் இயைந்து வாழலாயினர். மாஸச்சூசெட்ஸ், கனக்டிக்கட், நியூஜெர்ஸி, பென்சில்வேனியா, நியூயார்க், மேரிலாந்து, வெர்ஜீனியா ஆகிய ராஜ்யங்கள் உள்ள அமெரிக்கப் பகுதியை நான் அமெரிக்காவின் சிந்து கங்கைச் சமவெளி என்பேன்.

இங்கு வந்த ஐரோப்பியர்கள் தங்களுக்கு ஒத்த பருவ நிலை நிலவக் கண்டார்கள், சிந்து, கங்கைச் சமவெளியில் குடியேறிய ஆரியரும் அவர்களுக்குப் பிறகு வந்தவர்களும் அங்கு தக்க வானிலையைக் கண்டது போல. ஐரோப்பியர் கடல் வாணிபம் செய்வதற் கேற்ற இயற்கை வசதியும் இங்கு இருந்தது. பென்சில்வேனியா ராஜ்யத்தைப் பற்றி அதனை நிறுவிய வில்லியம் பென் "இனிய பூங்காற்று வீசுகிறது. வான அமைதி சார்ந்து விளங்குகிறது" என எழுதி வைத்தார். அவ அப்படியே ஒப்புக் கொள்ளு

(அடுத்த பக்கம் பார்க்க)

கோர்ட் விளம்பரங்கள்

குளித்தலை டி. மு. கோ.
Triuchy D. M. C.
S. C. 1448 | 58, E. P. 1261 | 59.

கருப்பண்ண முத்திரியன் — வாதி.

வன்னியப்ப கவுண்டர் — பிரதிவாதி.

ஷெ நம்பரில் எல இஸ்தியார் விஷ்காரிஷை செய்ய 9—2—60-ந் தேதி நோட்டீசு ஏற்பட்டிருப்பதால் ஷெ தேதியில் உமக்குள்ள ஆக்ஷேபணையை தெரிவித்துக் கொள்ளாவிடில் ஒருதலை பக்ஷமாக தீர்மானிக்கப்படும் அறியவும்.

R. Varadarajan,
Advocate.

1 | 3440 | 246

அரியலூர் டி. மு. கோ.
S. C. 1787 | 59

சாரங்கபாணி படையாச்சி — வாதி

கோவிந்தபடையாச்சி, பிச்சமுத்து படையாச்சி — பிரதிவாதிகள்

முதல் பிரதிவாதியால் வாதிக்கு 26—11—53-ல் எழுதிக் கொடுக்கப்பட்ட பிராமசரி நோட்டின்படி ரூ. 250 - 0 - 0 கிடைக்க இந்த தாவா தொடரப்பட்டு ஈரங்கி 2-2-60-ல் வைக்கப்பட்டிருக்கிறது.

R. Ramaswami,
வாதியின் அட்வகேட்.

2 | 3441 | 247

சிதம்பரம் டி. மு. கோ.
S. C. 720 | 1959

சௌரிராஜலு நாயுடு — வாதி

சிதம்பரம் தாலூகா, பூதராயன் பேட்டை பிச்சமுத்து படையாச்சி குமார். நாராயணசாமி படையாச்சி — பிரதிவாதி

ஷெ பிரதிவாதிக்கு தெரிவிப்பதாவது. வாதிக்கு, ஷெயார் 20-7-58-ல் எழுதிக் கொடுத்த குத்தகை சீட்டுப்படி ரூ. 214-00 கிடைக்க தாவா செய்தி பல தடவைகளில், சம்மன்கள் போயும், ஒட்டு சாவு செய்தும், அஜராகாத தால், கடைசியாக, பப்ளிகேஷனுக்காக 10—2—60-ல் ஈரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. எதேனும் ஆக்ஷேபணையிருந்தால் ஷெ தேதி காலை 10 மணிக்கு, ஷெ கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும். தவறினால், ஒருதலை பக்ஷமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

S. Arunachala Iyer,
Advocate for Plaintiff.

3 | 3442 | 248

மாயூரம் டி. மு. கோர்ட்
O. P. 7 | 1960

வடஆற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா, பால்நாட்டகரத்திலிருக்கும், வெங்கட்டரமணய்யர் பாரியை, வெங்கநாயகி — மனுதாரி

Nil — எதிர்மனுதார்

ஷெ நம்பரில், ஷெ மனுதாரி, ஷெயாள் தாயாரான 5-4-59-ல், காலஞ்சென்ற லெக்ஷிமி அம்மாளுக்குச் சேர வேண்டிய, போஸ்டாபீஸ் நாஷனல் லேவிங்ஸ் சர்டிபிகேட்டுகளின் தகை ரூ. 1000. (ஆயிரத்தையும்), வருவிப்பதற்கு ஷெயாளுக்கு, வாரிசு சர்டிபிகேட்டு கொடுக்க வேண்டுமென்று மனு செய்து கொண்டிருக்கிறபடியால், ஷெ நம்பர் விசாரணை கெடுவாகிய 4—2—60-ல் பகல் 11 மணிக்கு, அதில் ஐம்பந்தமாக ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஷெ கோர்ட்டில் ஆஜராகி ஷெயார்கள் ஆக்ஷேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

T. Ramanujam,
Advocate.

4 | 3443 | 249

சிதம்பரம் டி. மு. கோ.
O. P. 4 | 1960

தாயாரம்மாள் — மனுதாரி.

1. விஜயலக்ஷிமியம்மாள், 2. எத்திராஜம்மாள், 3. சுந்தரராஜுலு — எதிர்மனுதார்கள்

இறந்த கோவிந்தசாமிப் பிள்ளைக்கு பச்சயப்பாஸ் Trust Board-ல் வரவேண்டியதாக உள்ள ரூ. 1531-79 nP. யும் ஷெயாரின் வாரசான சம்சாரமான மனுதாரியும், பெண்களான 1, 2, எதிர்மனுதார்களும் குமாரனான 3-வது எதிர்மனுதாரரும் அடைய வேண்டி வாரிசு சர்டிபிகேட் Issue செய்ய வேண்டும் என்று மனுதாரரால் மனு கொடுக்கப்பட்டும் நோட்டீசுக்காக 8—2—60-ல் வைக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணை உள்ளவர்கள் பகல் 10 மணிக்கு ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபக்ஷமாக தீர்மானிக்கப்படும் என்பதை தெரிவிக்கப்பட்டது.

S. Arunachala Iyer,
மனுதார் அட்வகேட்.

5 | 3444 | 250

சீர்காழி டி. மு. கோர்ட்
I. P. 2 | 53

R. பாலகிருஷ்ணன் — இன்ஸால் வெண்ட் மனுதார்.

S. சாமுசாமி தூதித்திராவிடர்.

11. H. V. பேடா. — 8, 11, எதிர்மனுதார்கள்.

ஷெ 8 & 11 எதிர்மனுதார்களுக்கு.

ஷெ நம்பரில் மனுதாரரால் தன் மேல் Final discharge செய்ய வேண்டும் என்று மனுக் கொடுத்து ஷெ 8 and 11 எதிர் மனுதார்களுக்கு நோட்டீஸ் போய், சர்வகாலம் ஒட்டி சர்வு செய்யப்பட்டு, 6—1—60-வ யில் Publication-க்கு உத்திரவாகி 6—2—60-ம் தேதியில் ஈரங்கு கெடு போடப்பட்டிருக்கிறது. அதில் ஆக்ஷேபணை உள்ளவர்கள் ஷெ தேதியில் பகல் 10 மணிக்கு ஷெ கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒரு தலைபக்ஷமாக தீர்மானிக்கப்படும்.

R. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
மனுதார வக்கீல்.

6 | 3445 | 251





ஹோமியோபதி

வைதீய சாஸ்திரத்தை மிகக் குறைந்த செலவில் தங்கள் வீட்டில் இருந்தபடியே தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ படித்து சிறந்த முறையில் டாக்டராகத் தொழில் நடத்தலாம். முழு விபரங்களையும் இலவசமாகவே அனுப்பித் தருகிறோம்.

பாரதத்தின் பிரதான ஹோமியோபதி ஸ்தாபனம்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட் கும்பகோணம்

கரூர் P. S. ராமசர்மாவின்
சக்தி சஞ்சீவி

ஈரல் குலைக் கட்டிகளுக்கு நிகரற்றது. எங்கள் சுற்றுப் பிரயாண விபரத்திற்கு எழுதுக.

கைத்தறி பட்டு, நூல் & மில் ஜவுளிகளுக்கு

M. N. நாகேந்திரம் & சன்ஸ்

மலைவாசல் :: திருச்சி.

Edited Printed and Published by Thirulokachandaram for the Shivaji Private Limited, at S. N. Printers, Trichy-2.

பூமிதான இயக்கம்

திருச்சி-தஞ்சை ஜில்லா மூன்றுவது சர்வோதய-பூமிதான இயக்க மகாநாடு திருச்சி பிஷப்ஹீபர் உயர் நிலைப் பள்ளி மைதானத்தில் சர்வோதயப் பொருட்காட்சிக் கலையரங்கில் சென்னை மாநில பூமிதான யக்ஞ போர்டு தலைவர் திரு. க. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஜனவரி 11-ந் தேதி நடைபெற்றது.

மகாநாட்டை திருப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் துவக்கி வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். மகாநாட்டில் தமிழ் நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு. ச. ஜெகந்நாதன், பூதான போர்டு செயலாளர் திரு. அ. அவையன், திரு. எஸ். ஆர். சுப்ரமணியம், திருமதி. ஏ. எஸ் பொன்னம்மாள், எம். எல். ஏ., ஆகியோர் கலந்துகொண்டு பூமிதான, கிராமதான இயக்க வளர்ச்சி பற்றியும், வருங்கால வேலைத்திட்டம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

அன்று காலை 9-மணிக்கு சர்வோதயப் பொருட்காட்சி மைதானத்தில் இருந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட வினோபா படத்துடன் நீண்டதொரு ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களின் வழியாக பூமிதான கிராமதான கோஷங்களை முழங்கிக் கொண்டு 10-மணிக்கு சர்வோதயப் பந்தலை வந்து அடைந்தது.

நூற்பு வேள்விக்குப் பிறகு இறைவணக்கத்துடன் மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர்களையும், பொது மக்களையும், திருச்சி ஜில்லா நிவேதக் (பொறுப்பாளர்) திரு. எம். ஆர். பழனிசாமி வரவேற்று மகாநாட்டின் முக்கியத்துவம் பற்றிக் கூறினார்.

காந்தியடிகள் கூறிய தர்ம கர்த்தா தத்துவம் தனியுடைமையை ஆதரிப்பது அல்ல. திருவள்ளுவர் கூறியபடி எல்லாவற்றையும் கொடுக்கும் பெருந்தகையாரைக் குறிப்பதே இத்தத்துவம் இவ்வாறு திரு. க. அருணாசலம் அவர்கள் தமது தலைமையுரையில் கூறினார். 'சர்வோதய சமுதாயம் அமைப்போம் வாரீர் என்கிறோமே, அதன் பொருளை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்' என்று தொடங்கி மிக விரிவாக ஆராய்ச்சி பூர்வமான ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினர்.

'நிலச்சுவான்தார்களை, நிலமற்ற விவசாயிகளே நேரடியாக அணுகி தானம் பெறும் முறையில் இயக்கம் மாறுதலடைய வேண்டியது அவசியம்' எனவும், இதைப் பற்றி அகில பாரத சர்வ சேவா சங்கம் காசியில் கூடி செய்துள்ள தீர்மானம் பற்றியும் திரு. ச. ஜெகந்நாதன் அவர்கள் விளக்கினர்.

'மனிதத் தன்மையை, பண்பாட்டை வளர்ப்பது முதல் கடமை; இதற்கு பூமிதான இயக்கம் வேலை செய்கிறது. இவ்வுலக வாழ்வும் மக்கள் நலனடைய வேண்டுவது முக்கியம். இதைச் சாதிப்பது இந்த இயக்கத்திலேதான் இயலும்' என்று விளக்கி திரு. குன்றக்குடி அடிகளார் கூறினர்.

திரு. எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் 'காந்தியடிகள் கனவு கண்ட குறிக்கோளிலிருந்து இந்த நாடு தவறிவிடக் கூடாது. இன்று நாம் முன்னேற்றம் என்று எதைக் கருதுகிறோமோ அது காந்திஜியின் கருத்துப்படி முன்னேற்றம்தானை என்பதைக் கவனிக்கவேண்டும்' என்று கூறி, 'என்று குருஷ்சேவும், ஜஸன்ஹோவரும் கூடிப் பேசி யுத்த பயத்தைப் போக்கி உலகில் சமாதானம் நிலவச் செய்கிறார்களோ அன்று காந்தியடிகளின் அஹிம்சைத் தத்துவம் பூரண வெற்றியடையும்' என்று குறிப்பிட்டார்.

★

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பவர்லூம் வளர்ச்சியினால் கைத்தறி பாழாகி விடுமென்ற காரணத்தினால் தான். இருந்து வருகின்ற பவர்லூம்களுக்குச் சலுகைகள் எதையும் காட்டாமல் நிறுத்திக் கொள்வதுடன் கணக்கில் வராமல் தான் தோன்றியதாக இயங்கும் பவர்லூம்களைப் பறிமுதல் செய்துவிட வேண்டுவதும் மிகவும் அவசியமென்றுதான் நாம் சர்க்காருக்கு வற்புறுத்திச் சொல்லிவிடுகிறோம்.

இந்த முறையில் அரசாங்கம், நெய்தறியாளர்கள், மில்காரர்கள் ஆகியோர் கொண்ட முக்கூட்டு மகாநாடு கூட்டி இன்றைய ஜவுளித் தொழில்நிலை பற்றி சூழ்ந்து ஆராய வேண்டியது மிகவும் அவசியம். தனித்தனியாக அவரவர் தங்கள் நலனுக்கு ஏற்ற படிப் போட்டுக்காட்டுகிற புள்ளி விபரங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டு உண்மையாக நமது நாட்டின் ஜவுளித் தேவை எவ்வளவு, யார் யார் எவ்வளவு உற்பத்திசெய்வது சரியாக இருக்கும் என்ற சரியான கணக்கைக் கண்டறிந்து நமது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன்படி நாம் செயல் படவேண்டும். நமது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான தொரு இடத்தைப் பெற்றுள்ள ஜவுளித் தொழிலை அவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து முடிவு செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

★

(முன் பக்கத் தொடர்ச்சி)

றேன். இங்கு இப்போது டில்லியில் டிசம்பர் மாதிரி இருக்கிறது. வெப்ப நிலை 60 டிகிரி தான். இனிமையானதோர் குளிர்ச்சி நிலவுகிறது. வெம்மை கண்ட வாஷிங்டனை விட்டு வந்த எனக்குக் குளிர் காலம். இங்கு எப்படியிருக்கும் என்பதை பிலடெல்பியா தான் முதன் முதல் காட்டியது.

கிழக்கத்திய ராஜ்யங்களில் ஆதியில் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்கள் தமக்கு ஒத்த சூழ்நிலையைக் கண்டார்கள் என்றேன். இன்றும் இங்கு பல மாநகர்களில் ஜெர்மனியர், பிரெஞ்சுக்காரர், போலந்து மக்கள், ஹங்கேரியர், இத்தாலியர், ஸ்பெயின் நாட்டார் முதலியோர் கூட்டம் கூட்டமாக ஒரே இடத்தில் சேர்ந்து வாழும் பேட்டைகளைக் காணலாம். இவர்கள் தமக்குள் தத்தம் மொழிகளையே பேசுகிறார்கள். நான் பிலடெல்பியாவில் இருந்த போது இத்தாலிய மக்கள் பெருந்திரளாகக்கூடிக்கொலம்பஸ் தினத்தைக் கொண்டாடக் கண்டேன்.

பல்வேறு மக்கள் ஒரு சேர வாழும் பண்புடைய அமெரிக்காவில் பல பல மொழிகள் வழங்கும் தன்மையை நன்கு காண வேண்டுமானால் நியூயார்க் நகருக்குச் செல்ல வேண்டும். உலகின் எண்டிசையிலுமிருந்து வந்தவர்களின் வழித் தோன்றல்கள் வாழும் நகரம் இது. இங்கு 80 லட்சம் போ இருக்கிறார்கள். சீனர், இத்தியர், ஜப்பானியர், இந்தோனேசியர், அராபியர், ஐரோப்பியர், ரஷ்யர், தென் அமெரிக்கர் அனைவரையும் இங்கு எளிதில் காணலாம்.

இம்மாபெரும்நகரின் தன்மையை எடுத்துரைக்க இங்கு இடம் இல்லை. அதை அடுத்த கட்டத்தில் பார்ப்போம்.

(தொடரும்)

ஈரோடு டி. மு. கோர்ட்
S. C. 836 | 59
முத்துசாமி கவுண்டர் — வாதி
ராமசாமி கவுண்டர் — பிரதிவாதி
ஷெட்யூல் நம்பர் வாதி பிராம்சரிப்படி ரூ. 313-00 பிடைக்க வேணுமாய் பிரதிவாதி பேரில் தாவா தொடர்ந்ததில் வாதா 6 — 2 — 60-தேதிக்கு பேட்டிருப்பதால் அன்று பிரதிவாதி ஆஜராகத்தவறினால் எக்ஸ்பார்ட்டியாக தீர்ப்பு பிறப்பிக்கப்படும்.
C. ரங்கசாமி,
வாதி அட்வகேட்.
7 | 3461 | 252

ஜனவரி 31 முதல்
பிப்ரவரி 7 வரை
கைத்தறி
வார விழா
கொண்டாடுங்கள்!